No. 570

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை
# நடவடிக்கைகள் செயலக வெளியீடு

தொகுதி - 15 எண் - 4

திங்கட்கிழமை பிப். - 10

1992

I
V211, 31 N92
N92.15.4
162235

வெளியீடு 20-8-1992 Issued 20-8-1992

570

26 அக் 92

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES

## OFFICIAL REPORT

திங்கட்கிழமை பிப்ரவரி 10, 1992 - தொகுதி 15 - எண் 4

Monday the 10th February, 1992 - Volume 15 - No. 4

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009

Legislative Assembly Secretariat,
Madras-600 009

விலை ரூ. 3-00] [Price Rs. 3-00

## உள்ளடக்கம்

**10-2-1992**

பக்கங்கள்

1. வினாக்கள்-விடைகள்—

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள் .. .. 405—452

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் .. .. 453—546

2. சிறப்புக் குறிப்பு—

கோவை மாவட்டத்தில் அரசு வழக்கறிஞர்கள் இல்லாத காரணத்தால் பொது மக்கள் பாதிக்கப்பட்டுள்ளது குறித்து. 547—548

3. கவன ஈர்ப்பு—

(அ) தோல் தொழிற்சாலையிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுநீரால் பம்மல் நகர் பகுதி மக்கள் பாதிக்கப் பெறுவது குறித்து. 548—553

(ஆ) ராதாபுரம் தொகுதி நம்பியாற்று அணையில் ரிவிட்மெண்ட் சரிந்து கிடப்பதால் ஏற்பட்டுள்ள பாதிப்பு குறித்து. 553—556

(இ) பரமக்குடியில் பால் தட்டுப்பாட்டால் ஏற்பட்டுள்ள நிலை குறித்து. 556—559

(ஈ) சென்னை மற்றும் சுற்றுப்புறங்களில் கறவை மாடுகளுக்கு ஊசி போட்டு பால்கறக்கும் நிலை இருப்பது குறித்து. 559—561

(உ) ஜெகந்நாதப்பட்டினத்திலிருந்து சென்ற மீன்பிடி படகுகள் திரும்பாதது குறித்து. 561—563

4. அறிக்கைகள் அளித்தல்—

(அ) பொதுக் கணக்குக் குழு .. .. 563—564

(ஆ) பொது நிறுவனங்கள் குழு .. .. 564—565

5. சட்டமுன்வடிவுகள்-ஆய்வு செய்தல்—

(அ) எதிர்பாராச் செலவு நிதிய (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1992. 565—569

V211, 31 ஏப்ரல் 1992-15-4
162335
600 008.

5. சட்டமுன்வடிவுகள்-ஆய்வு செய்தல்—தொடர்ச்சி


| | பக்கங்கள் |
|---|---|
| (ஆ) பச்சையப்ப அறக்கட்டளை மற்றும் பட்டியல் பொதுப் பொறுப்பாட்சியமைப்புகள் மற்றும் நிலைக் கட்டளைகள் (மேலாண்மையை மேற்கொள்ளுதல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 1992. | 569—571 |
| (இ) பல்கலைக் கழகங்கள் சார்ந்த சட்டங்களின் (திருத்த) சட்டமுன்வடிவு, 1992. | 572—593 |
| (ஈ) டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகம், சென்னை (திருத்த) சட்டமுன் வடிவு, 1992. | 594—595 |
| (உ) சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்றல் (திருத்த) சட்டமுன்வடிவு, 1992. | 595—601 |
| (ஊ) வேளாண் விளைபொருள் வாணிப (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன் வடிவு, 1992. | 602—614 |
| (எ) வீட்டுவசதி வாரிய (திருத்தம் மற்றும் செல்லத்தக்கதாக்குதல்) சட்டமுன்வடிவு, 1992. | 615—628 |

6. அறிவிப்புகள்—

| | |
|---|---|
| (அ) டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகத்திற்கு உறுப்பினர்கள் தேர்வு. | 601 |
| (ஆ) நில மேம்பாட்டுக் கழகத்திற்கு உறுப்பினர்கள் தேர்வு. | 601 |

7. விதி 110 இன் கீழ் கல்வி அமைச்சரின் அறிக்கை—

| | |
|---|---|
| கிறித்துவ நிறுவனங்கள் நடத்தும் பள்ளிகளை 13 ஆம் தேதி மூட வேண்டுமென சிலர் தெரிவித்துள்ளது குறித்து. | 629—632 |

8. அரசினர் தீர்மானம்—

| | |
|---|---|
| பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாது ஒத்திவைக்கப் பெறுதல். | 632—633 |
| 9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் | 633—636 |


## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

**தை 27, பிரஜோற்பத்தி—திருவள்ளுவர் ஆண்டு 2023.**

**1992, பிப்ரவரி 10, திங்கட்கிழமை.**

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் பேராசிரியர் க. பொன்னுசாமி அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :

''குற்றம் இலனாய்க் குடிசெய்து வாழ்வானைச்
சுற்றமாச் சுற்றும் உலகு.''

குற்றம் இல்லாதவனாய்க் குடி உயர்வதற்கான செயல் செய்து வாழ்கின்றவனை உலகத்தார் சுற்றமாக விரும்பிச் சூழ்ந்து கொள்வர்.

### 1. வினாக்கள்-விடைகள்.

### அ. உடுக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண். 101, பின்னர் எடுத்துக் கொள்ளப்படுகிறது.

வினா எண் 102, திரு. ஆ. சுப்புரத்தினம், மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர்.

102—

### மாநில சட்டக் கமிஷன்.

*வினா எண். 3434 திரு. ஆ. சுப்புரத்தினம் : மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாநில சட்டக் கமிஷன் அமைக்கும் செயற்குறிப்பு தற்போது எந்நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

மாநிலச் சட்டக் கமிஷன் (Law Commission) அமைப்பது பற்றிய செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இருக்கிறது. விரைவில் அமைக்கப்படும்.

[1992 பிப்ரவரி 10

திரு. ஆ. சுப்புரத்தினம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டங்கள் சமுதாய மாற்றத்தின் கருவிகளாக இயங்க வேண்டும், அந்த அளவிற்குச் சட்டங்களை, மாறிவரும் சமுதாய அமைப்பிற்கு ஏற்ப, கூர்மைப்படுத்தவும், ஏற்கனவே உள்ள சட்டங்களில் உள்ள குறைபாடுகளை நீக்கவும், இப்பேர்ப்பட்ட சட்ட ஆணையம் மிக அவசியமாகிறது. மேலும், நேற்றைக்கு முன்தினம் நடைபெற்ற உயர்நீதிமன்ற புதிய வளாகத் திறப்பு விழாவில் போற்றுதலுக்குரிய நம்முடைய தமிழக முதல்வர், மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், பெரிய அளவில் நீதித்துறையில் சீர்திருத்தம் தேவை என்பதை சமூக நலனில் அக்கறை கொண்டு சுட்டிக்காட்ட விரும்புகிறேன் என்று அழுத்தந்திருத்தமாக குறிப்பிட்டு இருக்கிறார்கள். அந்த நோக்கத்தை நிறைவேற்றும் வகையில், அதற்குத் துணை செய்யும் சட்ட ஆணையத்தை, வெகு விரைவில் அமைக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே மிகத் தெளிவாக நான் சொல்லியிருக்கிறேன். அது, மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்களுடைய பரிசீலனையில் இருக்கிறது. விரைவில், அந்தச் சட்டக் கமிஷன் அமைக்கப்படும்.

திரு. ஆ. சுப்புரத்தினம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட ஆணையம் அமைப்பதற்கான செயற்குறிப்பு மிக நீண்டகாலமாக, அதாவது இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் முதல்வராக இருந்த காலந்தொட்டே தீவிர ஆய்வில் இருப்பதாக அறிகிறேன். எனவே, இதை மிக விரைவில் அமைக்க அரசு ஆவன செய்யுமா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கண்ணியத்திற்குரிய உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போல, 2 நாட்களுக்கு முன்பு, சென்னை உயர்நீதிமன்ற வளாகக் கட்டிடத்தை 130 ஆண்டுகளுக்குப் பிறகு 5 கோடி ரூபாயில் தொடங்கி வைத்து, மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் மிக மிகத் தெளிவாக, சட்டத்துறையில் மிக நல்ல மாறுதல்கள் எல்லாம் அவசியம் வேண்டும், அதனை விரிவாக்க வேண்டும் என்று அழுத்தந்திருத்தமாகச் சொல்லி, எல்லா உதவிகளையும் சட்டத் திருத்தத்திற்கு மட்டுமல்ல, கோர்ட்டுகள் அமைப்பதற்கும், மற்ற மற்ற பணிகளுக்கும் விரைவில், justice for all— நீதி எல்லோருக்கும் கிடைக்க ஆவன செய்வேன் என்று உறுதி கூறியிருக்கிறார் என்பதை மாண்புமிகு உறுப்பினருடைய மேலான கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.



1992 பிப்ரவரி 10]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. டி. எம். ரங்கராஜன்.

திரு. டி. எம். ரங்கராஜன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டக் கமிஷன் அமைக்கப்படும் என்று சொன்ன மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியை முதற்கண் தெரிவித்துக் கொள்கிறேன். நடைமுறைக்கு ஒவ்வாத பல சட்டங்கள் இன்றைக்கு இயங்கி வருகின்றன. குறிப்பாகச் சொல்ல வேண்டும் என்றால், குதிரை வண்டிகள் சட்டம் என்று ஒன்று இருக்கிறது. அதேபோன்று, டிஸ்ட்ரிக்ட் முனிசிபாலிட்டிஸ் ஆக்ட்ஸ், சிட்டி முனிசிபல் கார்ப்பரேசன் ஆக்ட்ஸ்.....(குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மூலக்கேள்வி, சட்டக் கமிஷன் அமைப்பது பற்றியது.

திரு. டி. எம். ரங்கராஜன் : 1924—லே இயற்றப்பட்ட சட்டங்களாகும். ஆனால், அந்தச் சட்டத்திலே கொடுக்கப்பட்டு இருக்கிற லீகல் பொசிசன்களை இன்றைக்குப் பார்க்கிற போது, அவற்றை நாம் நடைமுறைப்படுத்த முடியாத நிலையில் இருக்கிறோம். அதேபோல், தமிழ்நாடு அர்பன் லேன்ட் சீலிங் ஆக்டும், 1976—லே கொண்டுவரப்பட்டாலும், இன்று வரை, நாம் அதைச் செயல்படுத்த முடியவில்லை. அதிலேயிருக்கிற குறைபாடுகளை எல்லாம் களைந்து, மிக விரைவில், அவற்றைச் சீர்படுத்துவதற்கு, சட்டக் கமிஷன் மிகவும் முக்கியமாகிறது. ஆகவே, கேட்டதைக் கொடுக்கின்ற நம்முடைய ஒப்பற்றத் தலைவியாம், டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் காலத்திலே அந்தச் சட்ட கமிஷன் உடனடியாகச் செயல்பட, அதுவும் 2 மாதத்திற்குள்ளாக அந்தச் சட்ட கமிஷன் அமைக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பினர் திரு. ரங்கராஜன் அவர்கள் எடுத்துச் சொன்னதைப் போல, இது அவசியமான நடவடிக்கை, உடனடியாக செய்ய வேண்டிய நடவடிக்கை. எனவேதான் விரைவில், போற்று தலுக்குரிய முதல் அமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் சட்டக் கமிஷனை, (Law Commis.ior) அமைப்பார் கள். ஏற்கெனவே, மத்திய அரசாங்கத்தில் இத்தகைய ஆணையம் இருக்கிறது. Union Law Commission செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. மத்திய அரசாங்கத்தினுடைய சட்டங் களை எல்லாம், அவ்வப்போது, அது ஆய்ந்து வருகிறது. அதைப்போலவே, வேறு சில மாநிலங்களில், அதாவது,

1)) மத்தியப் பிரதேசம், (2) அஸ்ஸாம், (3) ஒரிசா, (4) வெஸ்ட் பெங்கால், (5) மகாராஷ்டிரா, (6) சிக்கிம் போன்ற மாநிலங்களில், இன்றைக்கு State Law Commission இருக்கின்றன. அந்த வகையில், நம்முடைய மாநிலத்திலே லா கமிஷன் அமைக்கப்படும். இந்த மாநிலங்களுக்குத் தமிழக அரசு எழுதிக் கேட்டிருக்கிறது, எந்த வகையிலே செயல்படுகிறது என்று. அப்படி வருகிறபோது, 7 வழிகாட்டுகின்ற நோக்கங்களை (7 Guidelines) அந்த லா கமிஷன் கொண்டிருக்கும்.

(1) மாண்புமிகு உறுப்பினர் ரங்கராஜன் அவர்கள் மிகத் தெளிவாகச் சொன்னதைப்போல, ஏற்கனவே வெள்ளைக்காரன் காலத்துச் சட்டங்கள் மற்றும் சுதந்திரம் பெற்ற பிறகு, நாம் இயற்றிய சட்டங்களிலே பல குறைபாடுகள் இருக்கின்றன. அந்தக் குறைபாடுகளைப் போக்க, இந்தக் கமிஷன் ஆயும்.

(2) சுப்ரீம் கோர்ட், இன்றைக்கு தீர்ப்பு சொல்லியிருக்கிறது. சில சட்டங்களில் குறை இருக்கிறது, அரசியல் சட்டத்திற்கு மாறுபட்டு இருக்கிறது, Ultra vires the constitution என்று எல்லாம் சொல்லியிருக்கிறது—அவைகளையும் மேற்சொன்ன சட்டங்கள் யாவற்றையும் இந்தச் சட்ட கமிஷன் (Law Commission) பரிசீலனையில் எடுத்துக் கொள்ளும்.

முற்பகல் 9-35

(3) தற்போது நடைமுறைகளில் இருக்கும் சட்டங்களிலுள்ள தப்பித்துக்கொள்ளும் வழிகளை அடைக்கும்பொருட்டு தக்க மாறுதல்களை, திருத்தங்களை செய்வது குறித்தும் ஆலோசனை சொல்லும். நீங்கள் சொல்வது போல, அர்பன் லேண்ட் ஆக்டிலேயும் மற்ற சட்டங்களிலேயும் ஓட்டைகள் இருக்கிற காரணத்தினாலே அதிலே சில சந்துகள் இருக்கிற காரணத்தினாலே, செல்வாக்கு மிக்கவர்களும், பணம் படைத்தவர்களும் தப்பித்துக்கொள்கிறார்கள். அந்தக் குறைகளைப் போக்குவதற்கும் இந்தச் சட்ட கமிஷன் முயற்சி எடுத்துக் கொள்ளும்.

(4) தக்க சமூகப் பொருளாதார சட்டம் இயற்ற நடவடிக்கை எடுக்க ஆலோசனை வழங்குதல்—சோஷியோ எக்கனாமிக் சேஞ்ஜஸ். சட்டம் என்பதே சமூக மாறுதல்களுடைய கருவி. ஆகவே, அந்தக் கருவியை வலிவுள்ள படைக்கலனாக ஆக்க, சமூக மாறுதல், பொருளாதார மாறுதல்— சோஷியல் ஜஸ்டிஸ், எக்கனாமிக் ஜஸ்டிஸ்— என்று அரசியல் சட்டம்



உருவாக்கினால் கூட, செயல்படாமல் இன்னும் அது மந்தமாக இருக்கிறது. அதைத் துரிதப்படுத்த, இந்த ஸ்டேட் லா கமிஷன் முயற்சி செய்யும்.

(5) மாநிலங்களுக்கிடையே உள்ள உறவுகளுக்கும் மைய மாநில உறவுகளுக்கான வழிவகைகள் குறித்தும், இது முக்கியமானது. இன்றைக்கு மத்திய அரசாங்கம், மாநில அரசாங்கம், அதாவது சென்டிரல் ஸ்டேட் ரிலேஷன்ஸ் இஷ்யூவிலே இன்றைக்கு இம்பேலன்சாக இருக்கிறது. மத்திய சர்க்காரிலே அதிகாரங்கள் குவிந்து இருக்கின்றன. மாநிலங்களிலே அதிகாரங்கள் இல்லவே இல்லை என்ற ஒரு குறைபாடு இன்றைக்கு ஒரு விவாதமாக தமிழ்நாட்டிலே இருக்கிறது. குறிப்பாக மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டுமென்று சர்க்காரியா தலைமையிலே டெல்லி ஒரு கமிஷன், அதாவது இண்டர் ஸ்டேட் கவுன்சிலைப் போட்டு அதன்மீது இன்றைக்கு விவாதித்து இருக்கிறார்கள். அதிலே ஒரு பெருமை என்னவென்றால் 8 உறுப்பினர்கள் அந்த சப் கமிட்டியிலே இருக்கிறார்கள். அந்த 8 உறுப்பினர்களில் ஒரு உறுப்பினராக போற்றுதற்குரிய நம்முடைய மாநில முதலமைச்சர், டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் 4 மாநிலங்களைப் பிரதிநிதித்துவப் படுத்துகிறார்கள். ஒன்று தமிழ்நாடு ; இரண்டாவது, கேரளா ; மூன்றாவது ஆந்திரப் பிரதேஷ் , நான்காவது கர்நாடகா, அந்த 8 பேர்கள் குழுவில் இன்றைக்கு நம்முடைய போற்றுதற்குரிய புரட்சித் தலைவி அவர்கள் உறுப்பினராக இருக்கிறார்கள் என்பது ஒரு தனிச் சிறப்பு. மூன்று கூட்டங்கள் நடைபெற்றன. அவர்கள் சார்பிலே நான் கலந்து கொண்டு அவர்களுடைய கருத்துக்களை மத்திய அரசாங்கத்திற்குச் சொல்லியிருக்கிறேன். அதையும் இந்த கமிஷன் விவாதிக்கும். சென்டிரல்-ஸ்டேட் உறவுகளிலே இருக்கின்ற இம்பேலன்ஸ், டிஸ்ட்டார்ஷன், சிதைவுகள், இவைகளையெல்லாம் சீராக்கி, உண்மையான ட்ரூ ஃபெடரலிஸம் மலர்ந்து, மத்திய மாநில அரசாங்கம் ஒரு பங்காளி போல, சம பங்காளி போல ஆக்குகின்ற ஒரு தத்துவத்தை உருவாக்க இந்தச் சட்டக் கமிஷன் முயற்சி செய்யும்.

அடுத்து, நீதி நிர்வாகம். 6-வதாக, நீதி நிர்வாக சீர்திருத்தங்களைப் பற்றி சிறந்த விரிவான நடைமுறைகளைக் குறித்து, நேற்றைக்கு முன்தினம் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் நீதிமன்ற வளாகத்தில், நீதிபதிகளுக்கு முன்னாலேயே சொன்னார்கள்; இங்கே இருக்கின்ற சட்டங்கள் பழுதுபட்டிருக்கின்றன; நீங்கள் நீதி கொடுப்பது தாமதமாக இருக்கிறது; அதிலே மாற்றம் வேண்டுமென்று உச்சநீதி மன்ற,

[1992 பிப்ரவரி 10

சுப்ரீம் கோர்ட் ஜட்ஜுக்கு முன்னாலேயே அவர்கள் சொன்னார்கள். ஆக, அந்தப் பிரச்சினைகளையெல்லாம் இந்தக் கமிஷன் பரிந்துரைக்கு எடுத்துக் கொள்ளும்.

முற்பகல் 9.40

கடைசியாக மாநிலச் சட்டங்கள் மட்டுமின்றி இந்த மாநிலத்திற்குப் பொருந்தும் மத்தியச் சட்டங்களுக்கும் தேவைப்படும் மாறுதல்களை அல்லது திருத்தங்களைச் செய்யும். இன்றைக்கு கண்கரன்ட் லிஸ்ட் என்று ஒரு லிஸ்ட் இருக்கிறது. இதன்கீழ் ஒரு சட்டத்தை மாநிலமும் உருவாக்கலாம், மத்திய அரசும் உருவாக்கலாம். அதில் தற்போது பொதுவாக மத்திய அரசினுடைய கை ஓங்கி இருக்கிறது. அந்தக் கண்கரன்ட் லிஸ்ட்டிலே உள்ள முரண்பாடுகளையும், பாரபட்சங்களையும், டிஸ்டார்ஷன்களையும், லேப்சஸ்-ஐயும், இன்-ஈக்குவிட்டியையும் களைவதை ஒரு கொள்கையாக லா கமிஷன் எடுத்துக்கொண்டு, இந்த 7 கொள்கைகளுக்காக மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் விரைவில் அமைத்தார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர்களின் மேலான கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இவ்வளவு நீண்ட விடைக்குப் பிறகு துணைக் கேள்விகள் இராதென்று நினைக்கிறேன்.

வினா எண் 103, திரு. மா. சுந்தரதாஸ், மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்.

103—

## வெள்ள நிவாரண நிதி

*வினா எண். 3908— திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் தற்போது ஏற்பட்ட வெள்ளப்பெருக்கத்திற்கு நிவாரண நிதி ஒதுக்கப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டுள்ளது ?



1992 பிப்ரவரி 10]

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

(ஆ) ரூ. 56 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் துணை தலைவர் : வினா எண். 104, திரு. தி. சாத்தையா, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

104—

## மகளிருக்கென தொழிற்பயிற்சிப்பள்ளி

*வினா எண். 5289 திரு. தி. சாத்தையா : மாண்புமிகுதொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

மகளிருக்கென தனியாக தொழிற்பயிற்சிப்பள்ளி (ITI) சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருச்சி போன்ற பெருநகரங்களில் அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சென்னை கிண்டியிலும், கோயம்புத்தூரிலும், திருச்சி மாவட்டம் புள்ளம்பாடியிலும் ஏற்கனவே மகளிருக்கென தனியாக அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்கள் இயங்கி வருகின்றன.

மதுரையில் மகளிருக்கென தனியாக ஒரு அரசின் தொழிற் பயிற்சி நிலையம், 1992 ஆகஸ்ட்டில் துவங்கப்படவுள்ளது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்.

திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு ஜில்லாவிலும் நிறைய பெண்கள் படித்து விட்டு, கலியாணமும் ஆகி, குழந்தைகளோடு வேலையில்லாமல் அலைகிறார்கள். இப்படிப்பட்ட பெண்கள் எல்லாம் ஐ.டி.ஐ. படிக்கும் ஒரு நிலையை உருவாக்கிக் கொடுத்தால், பல பேர்கள் படித்து, சுயமாகத் தொழில் துவங்க வாய்ப்பாக இருக்கும். எனவே மதுரையில் மட்டும் வரக்கூடிய ஆண்டில்

தொடங்குவதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். ஒவ்வொரு ஜில்லாவிலும், திண்டுக்கல் போன்ற பின்தங்கிய பகுதிகளிலும் பெண்களுக்கான தொழிற் பயிற்சி நிலையங்களை ஆரம்பிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவை உறுப்பினர் மாண்புமிகு திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள் அவர்கள் கூறிய யோசனை மிகவும் அருமையான, சிறப்பான யோசனை. ஆனால் அதைச் செயற்படுத்தப் போதுமான நிதி ஆதாரம் அரசிடம் இல்லை என்பது அவர்களுக்குத் தெரியும். ஆனால் அதற்காக அவர்கள் வருத்தப்பட வேண்டியதில்லை. தனியார் துறையைச் சேர்ந்தவர்கள் யாராவது இந்த ஐ.டி.ஐ. ஆரம்பிக்க முன் வந்தால், அதை அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திருமதி ஜீனத் சர்புதீன்.

திருமதி ஜீனத் சர்புதீன் : மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் ஒரு மைனாரிட்டி இன்ஸ்ட்டிடியூஷனிடம் கட்டிடம் இருக்கிறது, இடமும் இருக்கிறது. பணமும் வைத்திருக்கிறார்கள், தொழிற் பயிற்சிப் பள்ளி ஆரம்பிப்பதற்காக, தங்கள் பெர்மிஷன் ஒன்று தான் வேண்டும். அதைத் தருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவர்கள் விண்ணப்பித்தால் அது பற்றிப் பரிசீலித்து, முடிவெடுக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண். 105, திரு. எம். ஆண்டி அம்பலம், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**105—**

## தொழில் நுட்ப வேலை வாய்ப்பு அலுவலகம்

*வினா எண். 5690—திரு. எம். ஆண்டி அம்பலம் :

மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ;—

பட்டதாரிகள், முதுநிலைப் பட்டதாரிகள் மற்றும் தொழில் நுட்ப பட்டதாரிகளுக்கான ஒரே ஒரு வேலை வாய்ப்பு அலுவலகம் சென்னையில் மட்டும் இருப்பதால், தமிழ் நாட்டின்





தென் பகுதியில் உள்ளோருக்கு பதிவிற்காகவோ, நேர்முகத் தேர்வுக்காகவோ சென்னை வந்து செல்வதால் மிகுந்த பணச் செலவும் கால விரயமும் ஏற்படுவதால் மதுரை மற்றும் கோயம்புத்தூரிலும் கிளை அலுவலகம் அமைக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

உயர் கல்வித் தகுதி பெற்றோருக்கான தொழில் மற்றும் செயல் வேலை வாய்ப்பு அலுவலகங்களைப் பிற மாவட்டங்களில் தொடங்கும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. மெ. ஆண்டி அம்பலம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பட்டதாரிகள், முதுகலைப் பட்டதாரிகள், தொழில் நுட்பப் பட்டதாரிகளுக்கான ஒரே ஒரு வேலை வாய்ப்பு அலுவலகம் சென்னையில் மட்டும் இருப்பதால், தமிழ் நாட்டில் தென் பகுதியிலுள்ளோருக்கு பதிவிற்காகவோ, நேர்முகத் தேர்வுக்காகவோ சென்னை வந்து செல்வதால் மிகுந்த பணச் செலவும் கால விரயமும் ஏற்படுவதால், மதுரை மற்றும் கோயம்புத்தூரில் கிளை அமைக்க அமைச்சரவர்கள் முன்வருவார்களா ?

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதற்காக சென்னைக்கு வர வேண்டிய அவசியமில்லை. மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகங்களில் அவர்கள் விவரங்களைத் தருவார்களானால், அவர்கள் சென்னை அலுவலகத்தோடு தொடர்பு கொண்டு தேவையான உதவிகளைச் செய்வார்கள்.

முற்பகல் 9-45

திரு. மெ. ஆண்டி அம்பலம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சர்விஸ் கமிஷன் போன்ற தேர்வுகள் எழுத வேண்டும் என்றால், சென்னைக்குத்தான் வர வேண்டும். ஆகவே அதை மதுரையிலும், கோவை போன்ற இடங்களிலும் அமைப்பதற்கு அமைச்சர் உறுதியளிப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இது குறித்து கேள்வி தனியாகக் கேட்டால் அதற்குரிய அமைச்சர் பதில் தெரிவிப்பார்.

[1992 பிப்ரவரி 10

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திருமதி ரமணி நல்லதம்பி.

திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, எல்லாத் துறைகளைச் சேர்ந்த முதுநிலைப் பட்டதாரிகளும் சென்னையில் பதிவு செய்வதற்காக வந்து விடுகிறார்கள். அந்தந்த மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகங்களில் விபரங்களைக் கேட்டுத் தெரிந்து கொள்ளும் வாய்ப்பு இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அவர்களுடைய அந்தப் பதிவு எந்த நிலையில் உள்ளது, அவர்களுடைய முன்னுரிமை எப்படி இருக்கிறது என்ற விபரங்களைத் தெரிந்து கொள்வதற்கு சென்னையை நோக்கி வர வேண்டிய நிலை இருக்கிறதே, இந்த விஷயத்தில் அந்தந்த மாவட்டத்திலேயே தங்களுடைய பதிவு நிலைகளைப் பற்றி தெரிந்து கொள்ள வாய்ப்பு அளிக்கின்ற வகையில் ஏதாவது நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பதிவு செய்வதற்கான வாய்ப்பு, அந்தந்த மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகங்களில் இருந்து கொண்டிருக்கின்றன. மற்ற விபரங்களைத் தெரிந்து கொள்ள வேண்டுமென்றால் இங்கேதான் வந்து தெரிந்துகொள்ள வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : டாக்டர் வெ. புருஷோத்தமன்.

டாக்டர் வெ. புருஷோத்தமன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வேறு மாநிலங்களில் இருப்பவர்கள் அருகாமையில் உள்ள வேலை வாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்து விட்டு, தமிழ்நாட்டில் இருப்பவர்களுடைய மூப்பு நிலையைப் பார்க்காமல் வேறு மாநிலத்தவர் தேர்வு செய்யப்படும் ஒரு துர்பாக்கிய நிலைமை பெருவாரியான மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகங்களில் இருப்பதை அரசு அறியுமா ?

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அது பற்றி தனியாகக் கேள்வி கேட்டால் விளக்கமாக பதில் சொல்லப்படும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண். 101 எடுத்துக் கொள்ளப்படுகிறது. திரு. ம. சின்னசாமி—மாண்புமிகு நிதியமைச்சர்.



1992 பிப்ரவரி 10]

101—

## மாநில அரசு ஐந்தாண்டுத் திட்டம்.

*வினா எண் 6267— திரு. ம. சின்னசாமி :

மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) மத்திய அரசைப் போல் மாநில அரசும் ஐந்தாண்டுத் திட்டம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) எட்டாவது ஐந்தாண்டுத் திட்டம் (1992–97) பரிசீலனையில் உள்ளது.

திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய கேள்வி மாநிலத்திற்கென்று தனியாக ஐந்தாண்டுத் திட்டம் போடுகின்ற ஒரு கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா என்பதுதான். நம்முடைய அமைச்சர் அவர்கள் மத்திய ஐந்தாண்டுத் திட்டத்தைப் பற்றிச் சொன்னார்கள் என்று கருதுகிறேன். நமது மாநிலத்திற்கு என்று தனியாக ஐந்தாண்டுத் திட்டம் போடுவதற்கான செயற்குறிப்பு உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எட்டாவது ஐந்தாண்டுத் திட்டம் என்பது மத்திய அரசுக்கும் மாநில அரசுக்கும் பொருந்தி வருகின்ற ஒன்று. இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதில் மத்திய அரசு இந்தியா முழுவதும் தழுவிய வகையில் திட்டங்களைத் தீட்டி நிறைவேற்றி வருகிறது. ஒவ்வொரு மாநிலத்திலும் அந்த மாநிலத்தைப் பொறுத்து நிறைவேற்ற வேண்டிய திட்டங்கள் தனியாக எட்டாவது ஐந்தாண்டுத் திட்டம் என்ற தலைப்பின்கீழ் வருகிறது. அதுதான், அண்மையில்கூட ஒவ்வொரு மாநிலத்தைச் சேர்ந்த முதலமைச்சர்களும் மற்றவர்களும் போய் திட்டக் குழுவின் துணைத் தலைவரிடம் பேசி, அந்தத் திட்டத்தை இறுதி செய்கிறார்கள். அந்த வகையில் தான் தமிழ்நாடு மாநிலத்தைப் பொறுத்த வரையிலும் இந்த

[1992 பிப்ரவரி 10

1992—93-ம் ஆண்டுக்கான திட்டம் ரூ. 1751 கோடிக்கு
நாம் நிறைவேற்ற வேண்டியிருக்கிறது. ஆகவே அது இந்த
மாநிலத்தைப் பொறுத்த திட்டங்கள்தான்.

திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு துணைத் தலைவர்
அவர்களே, மத்திய அரசு போடுகின்ற ஐந்தாண்டுத் திட்டத்திற்கு
மத்திய அரசின் திட்டக்குழு உதவி செய்கிறது.
போலவே மாநிலத் திட்டக் குழு இங்கேயே இருக்கிறது. அதைப்
மாநிலத்திற்கான ஐந்தாண்டுத் திட்டங்களை மத்திய அரசிடம்
தனியாகப் போட்டு, மாநில அரசின் திட்டக் குழுவின் உதவி
யோடு சிறப்பான முறையில் செயல்படுத்துவதற்கு அரசு முன்
வருமா? நம்முடைய மாநிலத்தில் இருப்பதைப்போல, மற்ற
மாநிலங்களில் ஐந்தாண்டுத் திட்டங்கள் போடப்பட்டிருக்கிறதா
என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு
பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஐந்தாண்டுத் திட்டம்
மாநிலத்தின் சார்பாக நிறைவேற்றப்பட வேண்டிய திட்டங்கள்,
மத்திய அரசின் சார்பாக நிறைவேற்றப்பட வேண்டிய திட்டங்
கள் என்று இரண்டும் சேர்ந்ததுதான் எட்டாவது ஐந்தாண்டுத்
திட்டம். ஒரு மாநிலத்தைப் பொறுத்த வரையிலும் என்
னென்ன திட்டங்களை ஏற்றுக் கொள்ளலாம், எந்த எந்தத்
திட்டங்களைப் பரிந்துரைக்கலாம் என்பதற்காகத்தான் மாநிலத்
தில் திட்டக்குழு ஒன்று வைத்திருக்கிறோம். அந்த அடிப்படை
யில் சென்றுதான் மத்திய அரசிடம் நாம் விவாதித்து ஒப்புதல்
பெறவேண்டிய அவசியம் ஏற்படுகிறது. அந்த வகையில்தான்
திட்டக்குழுவின் துணைத் தலைவராக மத்தியில் இருக்கின்ற
டாக்டர் பிரணாப் முகர்ஜியிடம் போய் பேசிவிட்டு வரவேண்டிய
அவசியம் ஏற்படுகிறது. ரூ. 1751 கோடிக்கு இந்த 1992—93
வது ஆண்டுக்கான ஐந்தாண்டுத் திட்டத்தை நாம் நிறைவேற்று
கிறோம் என்றால், இதிலே மத்திய அரசின் பங்கு ரூ. 471
கோடியை மத்திய அரசு நமக்கு உதவியாகத் தருகிறது. மீதி
ரூ. 1,280 கோடியை இந்த மாநில அரசு பல்வேறு நிதியாதாரங்
களைச் சேர்த்து அதை நிறைவேற்ற வேண்டிய கடப்பாட்டில்
இருக்கிறது. ஆகவே ஐந்தாண்டுத் திட்டம் என்பது மாநில
அரசும் மத்திய அரசும் சேர்த்து நிறைவேற்ற வேண்டியதுதான்.

முற்பகல் 9-50

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. கு.
லாரன்ஸ்.

திரு. கு. லாரன்ஸ் : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, மாநில அளவில் திட்டங்கள் நிறைவேற்றப்
படுகிற வேளையில் ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட



1992 பிப்ரவரி 10]

அபிவிருத்திக் கவுன்சில் போன்றவைகளில் பேசுவதைக் குறிப்பெடுத்து அதனுடைய அடிப்படையில் திட்டங்கள் மாவட்ட அளவில் நிறைவேற்றப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாநில அளவிலே திட்டங்கள் பொதுவாக வகுக்கப்படுகின்றன. அதற்குப் பிறகு ஒவ்வொரு மாவட்டத்தையும் பொறுத்த வரையில் எந்தெந்த வகைகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்வது, எதையெதை எந்தெந்த மாவட்டத்திலே ஏற்றுக் கொள்வது என்று மாவட்ட அளவிலே நம்முடைய திட்டக் குழு நிறைவேற்றுகிறது. உதாரணத்திற்கு ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே ரூ. 176 கோடி மின் சக்திக்காக ஒதுக்கப்பட்டது என்று சொன்னால் மாநிலத்தில் பல்வேறு மாவட்டங்களைத் தழுவிய வகையிலேதான் நிறைவேற்றப்படுகிறது. அதைப் போலவே எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 2550 கோடி என்று நாம் நிர்ணயித்திருக்கிறோம். இந்த ரூ. 2550 கோடியை இந்த மாநிலத்தினுடைய பல்வேறு மாவட்டங்களுடைய தேவையைக் கருதி, அவசியத்தைக் கருதி ஆங்காங்கே எவ்வளவு ஒதுக்கீடு செய்வது என்பதை மாநில திட்டக் குழு மனதிலே வைத்துக் கொண்டுதான் திட்டங்களை நிறைவேற்றுவதிலே ஈடுபட்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண் 106. திரு. ம. தனபால். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

106—

திருப்போரூர் ஆரம்ப சுகாதார நிலையம்

*வினா எண் 413—திரு. ம. தனபால் :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்போரூர் பேரூராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையமாக செயல்படும் மருத்துவ மனையை அரசினர் பொது மருத்துவ மனையாக மாற்றும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது முதல் செயல்படத் துவங்கும்?

[1992 பிப்ரவரி 10

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) திருப்போரூர் ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு மருத்துவ மனையாக மாற்றும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 107, திரு. பே. தர்மலிங்கம், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

107—

பச்சையாற்றின் குறுக்கே பாலம்.

*வினா எண் 1317—திரு. பே. தர்மலிங்கம் :

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாளையங்கோட்டை தொகுதியிலுள்ள கிழத்திடியூர் அருகே பச்சையாற்றின் குறுக்கே பாலம் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது வேலை ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு.எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. பே. தர்மலிங்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பாளையங்கோட்டை தொகுதியில் கிளியூர் கிராமத்திற்கும், மேலத்தூர் கிராமத்திற்கும் இடையில் பச்சையாறு ஓடுகிறது. மழைக் காலங்களில், வெள்ளப் பெருக்கு ஏற்படுவதால் இது ஒரு தனி தீவாகக் காட்சியளிக்கிறது. அந்த நேரத்தில் பள்ளி மாணவ, மாணவியர்கள் பள்ளிக்குச் செல்ல முடிவதில்லை. குறிப்பாக தாய்மார்கள் மகப்பேறு காலத்தில் மருத்துவ உதவிக்குச் செல்ல முடியாமல் தவிக்கிறார்கள். எனவே, தாய் உள்ளம் கொண்ட நமது இதய தெய்வம் புரட்சித் தலைவியின் அரசு இப்பகுதி மக்களின் குறைகளைப் போக்க அங்கே ஒரு பாலம் அமைக்க ஆணையிடுமா என்பதை அறிய விரும்புகிறேன்.



1992 பிப்ரவரி 10]

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல தருவி சிங்கைகுளம் ஓடியாறு என்று சொல்லுகிற இதர பணிச் சாலைகளைச் சார்ந்த அந்தச் சாலையின் குறுக்கே இந்தப் பாலம் கட்டப்பட வேண்டியதாகும். இதற்கான மதிப்பு ஏறத்தாழ் ரூ. 35 இலட்சம் ஆகின்றது. இப்போது இருக்கின்ற நிதி நிலையை அனுசரித்து இந்த ஆண்டு செயல்படுத்த முடியாவிட்டாலும், 'செல்ஃபா' புராஜெக்டில் இந்த திட்டம் சேர்க்கப்படுகிறது. ஆகவே இது குறித்து அந்தத் திட்டத்திலே அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பே. தர்மலிங்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண். 108, திரு. கே. சிங்காரம், மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர்.

108

பொதியன்பள்ளம் அணைக்கட்டுத் திட்டம்.

*வினா எண் 3565—திரு. கே. சிங்காரம் :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தர்மபுரி மாவட்டம், அரூர் வட்டம் கடத்தூர் அருகே 18 ஏரிகளுக்குத் தண்ணீர் வரத்து அளிக்கும் பொதியன்பள்ளம் அணைக்கட்டுத் திட்டத்தைச் செயல்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இத்திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. கே. சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொதியன்பள்ளம் அணைக்கட்டுத் திட்டம் ஆய்வு செய்யப்பட்டு சுமார் 25 ஆண்டுகள் ஆகின்றன. இந்தத் திட்டம் ஆய்வு செய்யப்படுகிற சமயத்திலே சுமார் ரூ, 20 இலட்சம் மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டது. இன்றைக்கு ரூ. 43 இலட்சம் அளவிலே அரசின் பகுதி-2 திட்டத்தில் சாங்ஷன் செய்யப்படுகிற பட்டியலில் இருப்பதாக நான் அறிகிறேன்.

[1992 பிப்ரவரி 10

இந்தத் திட்டம் நிறைவேற்றப்படும்போது, மொரப்பூர் தொகுதியில் மொரப்பூர் ஒன்றியத்தில் உள்ள 35 ஊராட்சிகள் பயன் அடையக் கூடிய வகையிலே ஆயக்கட்டுகள் பயன்படுவதோடு, குடிநீர்ப் பிரச்சினையும் தீர வாய்ப்புள்ளது. மேலும் காஸ்ட்-பெனிபிட் ரேஷியோ என்று சொல்லக்கூடிய பயனீட்டு விகிதமும் பொதுப் பணித் துறையின் வரம்பை விட அதிகமாக உள்ளது. மேலும் தொடர்ச்சியாக 5 சட்டமன்ற உறுப்பினர்கள் முயற்சித்தும் நிறைவேற்றப்படாமல் நிலுவையில் உள்ள இத்திட்டத்தை, தர்மபுரி மாவட்டத்தை தத்து எடுத்துக் கொண்டு பல கோடி ரூபாய் வளர்ச்சித் திட்டங்களை அள்ளித் தந்து கொண்டிருக்கிற வள்ளலுக்கு எல்லாம் வள்ளலாகத் திகழ்கின்ற தாய் உள்ளம் கொண்ட மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவியினுடைய ஆட்சியிலே, வருகின்ற நிதியாண்டிலாவது இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-55

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டம், அரூர் வட்டம், அஸ்தகிரி கிராமத்தில் பொதியன்பள்ளத்தின் குறுக்கே அணை கட்டி ஏறத்தாழ 18 கிராமங்கள் அதன் மூலம் பாசன வசதி பெறுவதற்குரிய திட்டம்தான் இந்தக் கேள்வியிலே குறிப்பிடப்பட்டு இருக்கிற திட்டம். இந்தத் திட்டத்தினால் 166 ஏக்கர் பாசன வசதி கிடைக்கப்பெறும் என்பதை இந்த அரசு அறியும். ஏற்கெனவே 1989-90 ஆம் ஆண்டு இதற்காக திட்ட மதிப்பீடு ரூ. 32 இலட்சத்திற்குத் தயாரிக்கப்பட்டது என்பது உண்மை. இப்போது நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் கூறியதுபோல், தர்மபுரி மாவட்டத்தில் மட்டுமல்லாமல், நம்முடைய தமிழகத்தையே தத்து எடுத்துக் கொண்டிருக்கிற மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய உத்தரவின் பேரிலே இதனுடைய பணிகள் விரைவாக முடிக்கப்பட வேண்டும் என்று ஆணையிடப்பட்டு அதற்கான பொதுப் பணித் துறையும் முனைப்பான நடவடிக்கையில் இறங்கி, இன்றைக்கு அந்தத் திட்டத்தினுடைய மதிப்பீடு ஏறத்தாழ 39 இலட்ச ரூபாய் என்றாலும் அந்தத் திட்டத்தை உடனடியாக அங்கீகரிக்க வேண்டுமென்ற எண்ணத்தோடு, 1991-92 ஆம் ஆண்டு ஏற்பளிப்புப் பட்டியலில் அந்தத் திட்டம் இடம் பெற்றுள்ளது என்பதை நான் உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. சிங்காரம் : மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண் 109. மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

---



1992 பிப்ரவரி 10]

109—

புதுக்கோட்டை மாவட்டத்தில் துணைமின்நிலையம்.

*வினா எண் 4341—திரு. எஸ். சண்முகநாதன் ;

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

புதுக்கோட்டை மாவட்டத்தில் 230 கிலோ வாட் துணை மின்நிலையம் நிறுவும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. எஸ். சண்முகநாதன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டத்திலே துணை மின்நிலையம் இல்லாத காரணத்தினாலே சில நேரங்களில் குறைந்த மின் அழுத்தம் வருகின்ற காரணத்தாலே, குறிப்பாக ஆலங்குடி, மரமடை, கொத்தமங்கலம் பகுதிகளில் அதிக அளவில் விவசாயிகள் மின் இணைப்பைப் பெற்று இருக்கின்ற காரணத்தினால், அந்தக் குறைந்த அளவு மின்சாரம் வருகின்ற போது அவர்களுடைய மின் மோட்டார்கள் பழுதடைகின்ற ஒரு சூழ்நிலை இருக்கின்றது. மோட்டார்கள் புகையும் சூழ்நிலையும் இருக்கின்றது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ‘ இல்லை’ என்ற பதிலை அளித்து இருக்கின்றார்கள். இருப்பினும் அப் பகுதிவாழ் விவசாயப் பெருமக்களினுடைய கோரிக்கையை ஏற்று வருகிற நிதியாண்டிலாவது அத்திட்டத்தை அரசு பரிசீலிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டத்தைப் பொறுத்தமட்டில், புதுக்கோட்டை மின் பகிர்மான வட்டத்தில் மூன்று 110 கிலோ வாட் துணை மின் நிலையங்களும், ஒன்பது 66 கிலோ வாட் துணை மின் நிலையங்களும், இரண்டு 33 கிலோ வாட் துணை மின்நிலையங்களும் ஏற்கெனவே இயங்கி வருகின்றன. மேலும், 8-வது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் கொடிக்குளத்தில் ஒன்றும், கரம்பக்குடியில் ஒன்றும் ஆக 66 கிலோ வாட் துணை மின் நிலையம் நிறுவப்பட உள்ளன. ஆவுடையார் கோயிலில் தற்போது தற்காலிகமான அடிப்படையில் இயங்கி வரும் 66 கிலோ வாட் துணை மின் நிலையத்தை ஒரு நிரந்தர துணை மின் நிலையமாக மாற்றுவதற்கான ஏற்பாடு நடந்து கொண்டிருக்கிறது. இவ்வாறு ஏற்கெனவே இயங்கி வரும் துணை மின் நிலையங்களும்,

புதிதாக நிறுவப்பட இருக்கின்ற துணை மின் நிலையங்களும் புதுக்கோட்டை மாவட்டத்தினுடைய மின் பகிர்மான மேம் பாடு தேவையை அபிவிருத்தி செய்வதற்கான சூழ்நிலை தற்போது நிலவி வருகின்ற காரணத்தினாலே இந்தத் திட்டம் தேவை இல்லை என்று அரசு கருதுகிறது.

திரு. எஸ். சண்முகநாதன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மின் அழுத்தம் குறைந்து வருகின்ற காரணத்தினாலே என்னுடைய ஆலங்குடி தொகுதியிலும், புதுக்கோட்டை மாவட்டத்திலும் இருக்கிற தொழிற்சாலை களானாலும் சரி, விவசாயிகள் வைத்து இருக்கிற மின் மோட் டார்களானாலும் சரி, அவை அடிக்கடி பழுதடைகின்ற ஒரு சூழ்நிலை இருக்கின்றது. அப்படி பழுதடைகின்றவைகளுக்கு அரசு நிவாரணம் ஏதேனும் அளிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மின்சாரம் குறைந்த அழுத்தத் திலே வருவதற்காக அந்த மாதிரி ஒரு சலுகை அளிப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை. எந்தப் பகுதியில் மின்சாரம் குறைந்து வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் குறிப் பிட்டு இந்த அரசுக்குத் தெரிவிப்பாரேயானால், உடனடியாக அந்தப் பகுதியில் இருக்கின்ற துணை மின் நிலையமானாலும் சரி, டிரான்ஸ்பார்மர் என்று சொல்லப்படுகின்ற மின் மாற்றி களானாலும் சரி அவைகளை எல்லாம் உடனடியாகச் சீர் செய்து மின் அழுத்தம் குறையாமல் பார்த்துக்கொள்வதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10—00

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. செ. ரகுபதி.

திரு. செ. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எதையும் இல்லை என்று சொல்லாது வாரி வழங்குகின்ற புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில் நம்முடைய மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் புதுக் கோட்டை மாவட்டத்திலே சில புதிய துணை மின் நிலையங் யங்கள் வர இருக்கின்றன என்பதை அறிவித்தார்கள். அதிலே ஒன்றை 230 கிலோவாட் செயல்திறன் கொண்ட புதிய துணை மின்நிலையமாக அமைப்பதால் புதுக்கோட்டையில் இருக்கிற சிப்காட் தொழில் பேட்டைக்கு மின்சாரம் வழங்க முடியும். அதைப்போல புதுக்கோட்டையில் குறைந்த மின் அழுத்தம் வருகிற காரணத்தால், லோ-வோல்டேஜ் கரண்ட் வருவதால், நிறைய மோட்டார்கள் எரிந்து போகிற சூழ் லையையும் தடுக்க முடியும். ஆகவே, மாண்புமிகு அமைச்சர்





அவர்கள் புதியதாக அமைக்க விருக்கிற 110 கிலோவாட் துணை மின் நிலையங்களில் ஏதாவது ஒன்றை 230 கிலோவாட் துணை மின் நிலையமாக அமைத்துத தர முன்வருவாரகளா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொதுவாக ஒரு 230 கிலோவாட் மின் நிலையமானது மின் சக்தியை அதிக அளவில் 230 கிலோவாட் மின் அழுத்தத்தைப் பெற்று தன் னைச் சுற்றியுள்ள 110 கிலோவாட் துணை மின் நிலையங் களுக்குப் பகிர்ந்து அளிக்கும் பொருட்டு நிறுவப்படுகிறது. ஆனால், இந்த அடிப்படையில் பார்க்கிறபோது, தற்போது புதுக் கோட்டை மாவட்ட தேவைகளை கணக்கிடுகிறபோது, இன்றைக்கு இருக்கிற துணை மின் நிலையங்களும், இனிமேல் அமைக்கவிருக்கிற துணை மின் நிலையங்களும் போதுமானது என்ற கருத்தை தான் நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிற காரணத்தால், அதை வைத்துக் கொண்டு இந்தப் பகுதிக்கு மின்சக்தியை உரிய அளவில் வழங்க இயலும் என்பதை மின் வாரியமும் தெரிவித்துள்ளது. ஆகவே, இருக்கிற துணை மின் நிலையங்களையும் இனிமேல் அமைக்கப்பட இருக்கிற துணை மின் நிலையங்களையும் சரியான முறையில் பரா மரித்தால் அந்தப் பகுதியினுடைய மின் மேம்பாட்டை சரி செய்ய முடியும் என்ற காரணத்தால், புதியதாக 230 கிலோ வாட் துணை மின்நிலையம் அமைக்கும் சாத்தியக்கூறு தற்போது இல்லையென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : புதுக்கோட்டை மாவட்டத்தில் துணை மின் நிலையம் அமைப்பது பற்றி திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டம் பற்றி மட்டும் நான் கேட்கவில்லை. எங்கெங்கே மாவட்டங் களில் துணை மின் நிலையங்கள் அமைக்க நாம் முயற்சி யெடுக்கிறோமோ அங்கெல்லாம் அமைக்க வேண்டும். அப்படி அமைக்காவிட்டால்—பல இடங்களில் மின்சார அழுத்தம் குறைவாக வருகிற காரணத்தால் மோட்டாரை தட்டிவிட்ட உடனே காயில் பர்ன் ஆகிவிடுகிறது. ஏற்கெனவே ஒரு மோட்டார் என்ன விலைக்கு வாங்கினோமோ அந்த விலை கொடுத்து தான் அதைச் சீர் செய்ய வேண்டியிருக்கிறது. 1,500 ரூபாய், 2,000 ரூபாய் கொடுத்து வாங்கினோம் என் றால் அந்த அளவுக்குக் கொடுத்து தான் அதனை சீர்செய்ய வேண்டியுள்ளது. ஆகவே, இந்தத் துணை மின் நிலையங் களை எந்தெந்த மாவட்டங்களில் ஏற்படுத்த வேண்டுமென்று முயற்சியெடுக்கிறோமோ அத்தனை இடங்களிலும் அதற்கு

[1992 பிப்ரவரி 10

முன்னுரிமை கொடுத்து, விவசாயிகளுடைய கண்ணீரைத் துடைக்கக்கூடிய அளவில், இந்தத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கையெடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இது சம்பந்தமாக நம்முடைய அரசு பொறுப்பேற்றுக் கொண்டவுடனே மாண்புமிகு உறுப்பினர் கேட்ட கேள்விக்குப் பதிலாக எத்தனை இடங்களில் துணை மின் நிலையங்கள் அமைக்கவிருக்கிறோம் என்பதை பட்ஜெட் விளக்கவுரையில் சென்ற ஆண்டு சொல்லியிருக்கிறேன். இந்த ஆண்டு எங்கெங்கே புதியதாக துணை மின் நிலையங்கள் அமைக்கப் போகிறோம் என்பதை வருகிற நிதியாண்டில் சொல்லயிருக்கிறோம். இதற்கிடையில் எங்கெங்கே லோ-வோல்டேஜ், குறைந்த அழுத்தம் வருகிறது என்று எங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வரப்படுகிறதோ, அதையெல்லாம் உடனடியாக சரி செய்வதற்கு முனைப்பான நடவடிக்கைகளை இந்த அரசு எடுத்திருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நன்றாக அறிவார்கள். ஆகவே, தேவைக்கு ஏற்றளவில் துணை மின நிலையங்கள் இந்த அரசால் அமைக்கப்படும், உரிய நடவடிக்கையெடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இவ்வளவு விளக்கங்களுக்குப் பிறகும் ஒரு துணைக் கேள்வி, திரு. ஆர். சிங்காரம்.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டத்தைச் சார்ந்தவன் அல்ல என்றாலும் கூட, புதுக்கோட்டை பாராளுமன்றத் தொகுதியில் இருக்கிறவன் என்ற முறையில் கேட்கிறேன். புதுக்கோட்டை மாவட்டம் என்பது தமிழகத்திலே வறட்சி மிகுந்த மாவட்டம் என்பது அனைவருக்கும் தெரியும். அதே நேரத்தில் அதனால் தொழில் துறையில் அதிகப்படியான மானியம் கொடுக்கிற காரணத்தால் அந்த மாவட்டத்தில் நிறைய பேர்கள் தொழில் செய்கிறார்கள். இதற்கு மின் சார உதவி அதிகமாகத் தேவைப்படுகிறது. ஆகவே, இந்த நிலையைக் குறித்தும், புதுக்கோட்டை மாவட்டத்தினுடைய பரிதாப நிலை குறித்தும், வறட்சி நிலை குறித்தும், நிறைய பேர் தொழில் செய்கிற நிலை குறித்தும் கவனத்தில் எடுத்துக் கொண்டு அங்கே 250 கிலோவாட் துணை மின் நிலையம் நிறுவுவதற்கு அரசு மீண்டும் பரிசீலிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.



1992 பிப்ரவரி 10]

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டையை விட வறட்சியான மாவட்டமெல்லாம் இருக்கிறது. அதை உறுப்பினர் அவர்கள் மறுக்க இயலாது. இன்றைக்கு அவர்கள் சொல்கிறபோது இன்று இருக்கிற தேவையின் அடிப்படையில், இன்று இருக்கிற தொழிற்சாலைகள் ஆதாரங்களை வைத்துக் கொண்டு, இன்றைக்கு இருக்கிற நம்முடைய துணை மின் நிலையங்களை வைத்து மின்தேவையை பூர்த்தி செய்ய முடியும் என்றுதான் நான் சொன்னேன். எதிர்காலத்தில் தொழில்கள் புதுக்கோட்டையில் வளர்ச்சியடைந்து தொழிற்சாலைகள் தொடங்குகிறபோது, தேவைகள் அதிகமாக இருக்குமானால் அதை இந்த அரசு பரிசீலித்து, தேவைகளுக்கு ஏற்ற வகையில் துணை மின் நிலையங்களை எந்த அளவுக்கு சக்தியோடு அமைக்க முடியுமோ அதை அமைக்க இயலும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண். 110, டாக்டர் சு. மணிமேகலை, மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

110.—

## விலைப் பட்டியல் தகவல் பலகை

* வினா எண். 1132—டாக்டர் சு. மணிமேகலை :

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ;

கடைகளிலும், உணவு விடுதிகளிலும் எடை, அளவு, விலைப் பட்டியல் ஆகிய விவரங்கள் அடங்கிய தகவல் பலகையைத் தவறாது வைக்க வேண்டுமென அரசு அறிவுறுத்துமா ?

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழ்நாடு இன்றியமையாப் பொருட்கள் (இருப்பு மற்றும் விலைப் பட்டியல் காட்சிப்படுத்தல் மற்றும் கணக்குகள் பராமரித்தல்) ஆணை, 1977-ன்படி அதாவது Tamil Nadu Essential Commoditi s order 1977 வணிகர்கள் கடைகளில் விலைப்பட்டியல் மற்றும் இருப்பு அடங்கிய தகவல் பலகையைத் தவறாது வைத்தல் வேண்டும். இது உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையில் செயலாக்கப்படுகிறது. ஆனால், உணவு விடுதிகளில் விற்கப்படும் உணவுப் பண்டங்களின் விலை, எடை அளவு ஆகிய விவரங்களை அறிவிக்கக் கோரும் சட்டம் எதுவும்

நடைமுறையில் இல்லை. எனவே உணவு விடுதி உரிமையாளர்கள் சங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தி உணவுப் பண்டங்களின் விலைப்பட்டியல் பார்வைக்கு வைக்குமாறு கேட்டுக் கொள்ளப் பட்டுள்ளனர்.

முற்பகல் 10.05

டாக்டர் சு. மணிமேகலை: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் விலைப் பட்டியல் இருக்கிறதென்று சொன்னார்கள். ஆனால் கிராமங் களிலுள்ள கடைகளில் விலைப் பட்டியல் வைக்கப்படுவதில்லை. ஆகவே விலைப் பட்டியல் வைக்கப்படுவதைக் கட்டாயமாக்கி அதனைக் கண்காணிக்கின்ற அளவில் அரசு நடவடிக்கை எடுக் குமா? அதே சமயங்களில் சில கடைகளில் விலைப் பட்டியல் இருக்கும். ஆனால் அவர்கள் விற்கும் விலை வேறாக இருக்கும். போர்டிலுள்ள விலை வேறாக இருக்கும். ஆகவே அரசு நட வடிக்கை எடுக்குமா? மூன்றாவதாக பொருட்களில் கலப்படம் செய்வதைத் தடுக்கவும் தீவிர நடவடிக்கையை அரசு எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு இருக்கின்ற சட்டப் படி, அவர்கள் விற்கும் விலை மட்டுமல்ல, அவர்கள் வாங்கிய விலையைக் கூட எழுதி வைக்கவேண்டும். அந்தச் சட்டத்தை நகரமாக இருந்தாலும், கிராமமாக இருந்தாலும், பராமரிப்பதில் அரசாங்கம் தீவிரமாக இருக்கின்றது. குறிப்பிட்ட இடங்களில் அப்படிப்பட்ட பட்டியல் வைக்கப்படவில்லை என்ற புகார் வருமேயானால், தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. வி. கே. சின்னசாமி :

திரு. வி. கே. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடைகளில் பட்டியல் நிச்சயமாக வைக்கப் படுவதில்லை. இருப்பினும் மாண்புமிகு அமைச்சரவர்களை நான் பணிவன்போடு கேட்டுக் கொள்வது, சினிமா தியேட்டர் களில் சிலைடுகளைப் போடுகின்ற நேரங்களில் பல விளம் பரங்களைப் போடுகின்றோம். அதேமாதிரி அரசாங்கத்தின் வாயி லாகக் கூட அரிசி என்ன விலை, பருப்பு என்ன விலை, எண் ணெய் என்ன விலை என்ற பட்டியலை அந்த சிலைடின் மூலமாக ஒளிபரப்பினால் பொதுமக்களுக்கு அவற்றைப் பற்றி தெரிந்து கொள்வதற்கு ஒரு வாய்ப்பாக இருக்குமென்று கருதுகின்றேன். அதேபோன்று உணவு விடுதிகளைப் பொறுத்தமட்டில், 29-ஆம் தேதி அசெம்பிளி ஆரம்பித்து, இன்றுவரையில் 4 கிலோ எடைக் குறைந்திருக்கின்றேன். ஒரு கடைக்குப் போனால், டம்ளர்



காப்பி மிகவும் சிறிய அளவில் இருக்கிறது. அது இன்றைக்கு மட்டுமல்ல, தொடர்ந்து இருந்து கொண்டிருக்கின்றது. (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கேள்வியாகக் கேளுங்கள்.

திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு அமைச்சரவர்களைக் கேட்டுக் கொள்வது, காப்பி ஒரே அளவில் வைக்கப்படுவதற் கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். முன்பு கண்ணாடி டம்ளர் இருந்தது. இப்போது எவர்சில்வர் டம்ளர் என்பது மிகவும் சிறியதாக இருக்கின்றது. அதிலுள்ள காப்பி ஒரே ஒரு முழுங்கிற்கு உள்ளே போய் விடுகிறது. ஆகவே ஒரே அளவிலான காப்பி எல்லா இடங்களிலும் கொடுக்கப்படுவதற் கான நடவடிக்கை எடுக்கப்படுமா ? அதேமாதிரி இட்லியை எடுத்துக் கொண்டால் உடுப்பி ஓட்டலில் ஒரு மாதிரியாக இருக்கிறது. எம்.எல்.ஏ., ஹாஸ்டலில் ஒரு மாதிரியான இட்லி இருக்கிறது. அதே மாதிரிதான் வடை, பொங்கல், எல்லாம். ஆகவே அதற்கு என்ன காரணம் ? (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் விளக்கம் கொடுத்துக்கொண்டே இருக்கிறீர்கள். வினாவைக் கேட்டு தயவு செய்து அமருங்கள்.

திரு. வி. கே. சின்னசாமி: நான் அமைச்சரவர்களைப் பணி வன்போடு கேட்டுக் கொள்வது எனக்கே இப்போது 4 கிலோ எடை குறைந்து போயிருக்கிறது. மெட்ராசிற்கு வந்து 10 நாட் கள் சாப்பிட்டதினால். ஆகவே அவற்றை நிவர்த்தி செய்வ தற்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுக்க முன் வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த விதிகளின்படி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. 1990-ல் 756 இனங்களிலும், 1991 ஜூலை முடிய 1348 இனங்களிலும் தகவல் பலகை வைக்கப்படா மல் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது. ஆனாலும் மாண்பு மிகு உறுப்பினரவர்கள் கேட்பதைப் போல உணவு விடுதிகள், ஹோட்டல்களைப் பொறுத்த மட்டில் அவைகளைக் கட்டுப் படுத்துகின்ற சட்டமோ, ஆணையோ தற்போது இல்லை. அப்படிப்பட்ட சட்டத்தைக் கொண்டு வந்தால்தான் தகுந்த நட வடிக்கை எடுக்கப்படும். அதனால்தான் பேச்சுவார்த்தைகள் நடத்தி, என்னென்ன செய்யவேண்டுமென்பதைப் பற்றி இப் போது அவர்களிடம் வலியுறுத்திக் கொண்டிருக்கிறோம்.

[1992 பிப்ரவரி 10

முற்பகல் 10.10

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்.

திரு. ஏ. கே. சி. சுந்தரவேல் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுக் கடைகளிலே மது பானங்களைக் குறிப்பிட்ட விலையை விட அதிக விலைக்கு விற்கிறார்கள். அதை அரசு அறியுமா? அதன் மீது நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ** நான் உடனடியாக அதை விசாரித்து, எந்த ஊரில் அப்படி விற்பனை செய்யப்படுகிறதோ அது அவர் தொகுதியிலேயே இருக்குமானாலும் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலில் ** என்று சொன்னதை எடுத்து விடலாம் என நினைக்கிறேன். அது எடுக்கப்படுகிறது. திரு. த. ரத்தினவேல்.

திரு. த. ரத்தினவேல் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இருப்பையும் விலைப்பட்டியலையும் பல கடைகளில் வைக்காத காரணத்தினால் கள்ள மார்க்கெட்டில் பொருட்கள் விற்கப்படுவதற்கு ஏதுவாகிறது. இவ்வாறு தகவல் பலகை வைக்காதவர்கள் மீது குண்டர் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்க அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விலைப் பட்டியல் வைக்காதவர்கள்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்று சட்டத்திலே ஏற்கனவே குறிப்பிடப்பட்டிருக்கிறது. அந்தச் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதை விடத் தீவிரமாக தண்டனை அளிக்க வேண்டுமென்று விரும்புகின்றார்கள். சட்டத்திற்கு உட்பட்டுத்தான் இந்த அரசு நடக்கும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



1992 பிப்ரவரி 10]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. ஜெ. பாலகங்காதரன்.

திரு. ஜெ. பாலகங்காதரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசு நடத்தும் நியாய விலைக் கடைகளிலே விலைப் பட்டியல் வைக்காத காரணத்தினால் என் தொகுதியான சிவகாசி தொகுதியில் நாரணாபுரம் என்ற கிராமத்திலே அரிசி அந்த நியாய விலைக் கடைகளில் என்ன ரேட் விற்கப்பட வேண்டுமோ அதை விட 50 பைசாக்கள் அதிகம் வைத்தும், மண்ணெண்ணெய் விலையை 15 பைசாவிற்கு அதிகம் வைத்தும் விற்பனை செய்து வருகிறார்கள். அதை நானும் சொல்லியும், அந்தக் கிராம மக்கள் சொல்லியும் அந்தக் கூட்டுறவுக் கடையில் ஸ்பெஷல் ஆபீசர் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. கலெக்டர் அவர்களிடத்திலே புகார் சொல்லியும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த நியாய விலைக் கடைகளில் பணி புரிகின்றவர்கள் மீது நடவடிக்கை எடுப்பாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் அவர்களே, இது சம்பந்தப்பட்ட கடையில் பணிபுரிகின்றவர்கள் மீதும் அந்தக் கடையிலே மேற்பார்வையாளராக இருக்கிற தனி அலுவலர் மீதும் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் சொன்ன குற்றச்சாட்டின்படி தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திருமதி ரமணி நல்லதம்பி.

திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த ரேஷன் கடைகளிலே வாங்குகின்ற பொருட்களை மீண்டும் வீட்டிலே போய் நிறுத்துப் பார்க்கிறபோது எடை குறைவாக இருக்கிறது என்று தாய்மார்கள் கூறுகிறார்களே, அவர்கள் அந்த ரேஷன் கடைகளிலேயே பொருட்களை வாங்கியவுடனே எடை சரியாக இருக்கிறதா என்று வெரிஃபை பண்ணுவதற்கு வாய்ப்பை ஏற்படுத்துகிற வகையிலே ஒரு எடைக் கருவியை அங்கே அவர்களுக்காக ஏற்பாடு செய்வதற்கு அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே எடை போட்டுத்தான் அவர்களுக்குக் கொடுக்கப்படுகிறது. அப்படி ஏதாவது குறை இருக்குமானால் அந்தக் குறையைத் தீர்க்கும் வகையில், தமிழ்நாடு முழுவதும் இருக்கிற 22 ஆயிரம் கடைகளுக்கும் உத்திரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அந்தக் கடைகளின்

சேல்ஸ்மேன் மட்டுமல்ல, அதற்குப் பொறுப்பேற்றிருக்கிற ஸ்பெஷல் ஆபீசராக இருந்தாலும் அல்லது கோவாப்பிரேடிவ் சப்-ரிஜிஸ்டிரார் ஆக இருந்தாலும், யாராக இருந்தாலும் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று முனைந்து நம்முடைய புரட்சித் தலைவியினுடைய அரசு தீவிரமாக நடவடிக்கை எடுத்து வருகிறது. நம்முடைய மாண்புமிகு உறுப்பினருடைய தொகுதியில் ஏதாவது கடைகள் அப்படி இருக்குமானால் அவர் எழுதிக் கொடுத்தால் அதன் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. கே. செல்வராஜ்.

திரு. கே. செல்வராஜ் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொருட்களை வாங்குவதற்கு கடைகளுக்குச் செல்லுகிறபோது விலைப் பட்டியல் இல்லாவிட்டாலும், படித்தவர்களுக்கு ஒரு விலையும் படிக்காதவர்களுக்கு ஒரு விலையும் கொடுக்கப்படுகிற காரணத்தால் விலைப்பட்டியல் வைப்பதோடு தராசுகளில் படிக்கற்களை வைத்து எடை போடுவதை விட, எண்ணிக்கை வருகின்ற நவீன எலக்ட்ரானிக் தராசுகளை வைத்தால் எல்லோரும் புரிந்து கொள்வதற்கு வசதியாக இருக்கும். எனவே அத்தகைய தராசுகளை நியாய விலைக் கடைகளில் வைக்க அரசு உத்திரவிடுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எலக்ட்ரானிக் தராசு வைப்பதற்கு நிறைய செலவாகும். நம்முடைய நிதித்துறை அந்த அளவுக்கு நமக்கு இடம் கொடுக்காது. நிதிநிலை அப்படி இருக்கிறது. ஆகவே இருக்கிற தராசுகளை ஒழுங்குபடுத்தி தவறு ஏதும் நடக்காமல் இந்த அரசு பார்த்துக் கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இறுதியாக திரு. கே. பி. ராஜூ.

திரு. கே. பி. ராஜூ ; மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ரேஷன் கடைகளிலே இருக்கிற பொருள்களுடைய எடை குறைவாக இருப்பதனால், நானே சென்று அதைப் பார்த்தபோது அவர்களைக் கேட்டபோது, சிவில் சப்ளைஸ் கார்ப்போரேஷனிலே இருந்து எடுத்துக் கொண்டு வரும்போதே எடை குறைவாக கொடுக்கிறார்கள். நாங்கள் என்ன செய்வது என்று சொல்லுகிறார்கள். அதை அரசு அறியுமா? அப்படிக் குறைத்துக் கொடுக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.





மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த புகாரைப் பற்றி என்னிடத்திலே கூட விற்பனையாளர்கள் கூறினார்கள். ஆகவே சிவில் சப்ளைஸ் கார்ப்பொரேஷன் அதிகாரிகளை அழைத்து அவர்களுக்குக் கொடுக்கிற பொருட்கள் எடை குறையாமல் பார்த்துக் கொள்ளவேண்டும், அப்படிப் பொருள் எடை குறையுமானால் எந்தக் கிடங்கிலே இருந்து எடுத்துக் கொண்டு வந்தார்களோ அந்தக் கிடங்கினுடைய சூப்பிரன்டென்டெண்ட் அல்லது அதற்குப் பொறுப்பாளர் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்து இருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 111 திரு. நா. சா. பழனிசாமி, மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர்.

111—

## பண்ணைசாரா தொழிலுக்குக் கடன்.

* வினா எண். 4438—திரு. நா. சா. பழனிசாமி:

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

நிலவளவங்கி என்ற பெயரில் இயங்கி வரும் வங்கி பண்ணைசாரா தொழிலுக்கு எவ்வாறு கடன் வழங்குகிறது.?

முற்பகல் 10–15

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சிக்கான தேசிய வங்கியின்-நபார்டு-மறுநிதி உதவியுடன் பிரதம நிலவள வங்கிகள் மூலம் பண்ணை சாரா கடன்கள் வழங்கும் திட்டம் இப்போது அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்படி கிராமப்புற கலைஞர்கள், கைவினைஞர்கள் மற்றும் சிறு தொழில் புரிவோர் ஆகியவர்களுக்கும், சின்னஞ்சிறிய கிராமத் தொழில்கள் உட்பட சிறு தொழில் வளர்ச்சி ஆணையரால் ஒப்புதல் அளிக்கப்பட்ட பல்வேறு தொழில்களுக்கும் பிரதம நிலவள வங்கிகள் இப்பொழுது கடன் வழங்கிக் கொண்டிருக்கிறது. இது எவ்வாறு கடன் வழங்குகிறது என்பது குறித்த நிபந்தனைகள் மிக நீளமான நிபந்தனைகளாக இருக்கின்றன. இவைகளை நான் தெரிவித்தால் விடை ஒரு பேருரையாக அமையும். துணைத் தலைவர் அவர்களே, இந்த நிபந்தனைகளுக்கு உட்பட்டு இந்தக் கடன்களை இப்போது வழங்கிக்கொண்டிருக்கிறோம்.

[1992 பிப்ரவரி 10

திரு. நா. சா. பழனிசாமி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நிலவள வங்கிகள் முன்பு நில அடமான வங்கிகளாக நிலத்தை அடமானமாக வைத்து பழைய கடன்களைத் திருப்பிச் செலுத்துவதற்குக் கொடுத்துக் கொண்டிருந்த வங்கிகளை நிலவளத்தை மேம்படுத்த வேண்டும் என்பதற்காக அதற்கு நிலவள வங்கிகள் எனப் பெயரிடப்பட்டு, கிணறு வெட்டுவதற்காக, நிலங்களைச் சமன்படுத்துவதற்காக இன்னும் பல்வேறு வேளாண்மைப் பணிகளுக்காக கடன் கொடுத்த வங்கிகள் இப்போது பண்ணை சாரா தொழில்களுக்குக் கடன் கொடுக்க முனைவதால் இந்த விவசாயத்திற்கென்று கடன் கொடுத்து வந்த ஒரே வங்கியும் தொழில் துறைக்குக் கடன் கொடுக்கின்ற வங்கியாக மாறி வருகிறது. எனவே அப்படிப்பட்ட மாறுதல்கள் இந்த வங்கியில் செய்வதன் மூலம் விவசாயத் தொழில் பாதிக்கப்படுகிறது. விவசாயத் தொழில் முன்னேற்றத்திற்குக் கடன் கிடைப்பது அரிதாக இருக்கிறது. இதை அமைச்சர் அறிவாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதிலே விவசாயிகளுக்குத்தான் அதிகமாக கடன் கொடுக்கின்றோம். அதிகபட்சம் 50,000 ரூபாய்தான் ஒருவருக்கு விவசாயத்திற்கு அல்லாத பண்ணை சாரா தொழிலுக்குக் கடன் வழங்கப்படுகிறது. இதனால் விவசாயிகளுக்குக் கொடுக்கின்ற எந்தவிதமான கடனும் பாதிக்கப்படுவதில்லை, பாதிக்கப்பட்டு இருப்பதற்குக் காரணமே வாங்கிய விவசாயிகளிலே பெரும்பாலோர்— வசதியான விவசாயிகள் கூட—இன்னும் அந்தக் கடனை திருப்பிக் கட்டாமல் இருக்கிறார்கள். அப்படிக் கட்டினால் எந்தவிதமான பிரச்சினையும் இல்லாமல் எல்லாவித கடன்களும் திருப்பிக் கொடுக்கப்படும்.

திரு. நா. சா. பழனிசாமி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருப்பூர் போன்ற நகரங்களிலே நிலவள வங்கி நிலத்தை அடமானமாகப் பெற்று பனியன் தொழிலுக்குக் கடன் கொடுத்துக்கொண்டு இருக்கிறார்கள். திருப்பூர் நகரத்திலேயே பனியன் தொழில் செய்ய கடன் கொடுக்கிறார்கள். அதுகூட கிராமப் பகுதிகளிலே கொடுப்பதில்லை. கிராமப்புறத்திற்குத் தான் கடன் கொடுக்கப்படுகிறது என்று அமைச்சர் அவர்கள் சொல்லியும்கூட, நகரத்திலே அந்தத் தொழிலைச் செய்வதற்குத்தான் கடன் கொடுக்கிறார்கள். அப்படி திருப்பூரில் பனியன் தொழிலுக்குக் கடன் கொடுப்பதற்கு என்று ஏராளமான வங்கிகள் நாட்டுடமையாக்கப்பட்ட வங்கிகள் எல்லாம் இருக்கின்றபோது விவசாயத்தைச் செய்கின்ற, விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட தொழில்களைச் செய்கின்றவர்களுக்குக் கடன் கொடுத்தால் அதனால் விவசாயத் தொழில் முன்னேறுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. எனவே அந்த விவசாயத் தொழிலைச் சார்ந்த தொழில்களைத் துவங்குவதற்கு அதுவும் கிராமப்புறங்களிலே துவங்குவதற்கு நிலவள வங்கிகள் கடன் கொடுக்க அமைச்சர் நடவடிக்கை எடுப்பாரா என்பதை அறிய விரும்புகிறேன்.



1992 பிப்ரவரி 10]

(மாண்புமிகு பேரவைத் தலைவர்—தலைமை)

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே.................(சிரிப்பு),.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அப்போதைக்கப்போது அமைச்சர்களும், உறுப்பினர்களும், பேரவைத் தலைவர் இருக்கையை நோக்கிப் பேச வேண்டும் என்று சொல்வது இதற்காகத் தான். நீங்கள் உறுப்பினர்களைப் பார்த்தே பேசிக்கொண்டிருக்கிறீர்கள்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மன்னிக்க வேண்டும். நான் விடையிலேயே மூழ்கி விட்ட காரணத்தினால் தங்களைக் கவனிக்கவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்கள் சொன்னதைப் போல, என்னென்ன தொழிலுக்குக் கடன் கொடுக்க வேண்டும் என்று ஏற்கெனவே சொல்லப்பட்டிருக்கிறது. குறிப்பாக நபார்டு வங்கியில் விதிக்கப்பட்டிருக்கின்ற நிபந்தனையின்படி கருமார் தொழில், காலணி தயாரித்தல், மண் பாண்டங்கள் தயாரித்தல், காகிதப் பொருட்கள் தயாரித்தல் போன்ற 22 வகையான குடிசைத் தொழில் மற்றும் சிறு தொழில்களுக்குக் கடன் வழங்கப்பட வேண்டும் என்று இருக்கிறது. அதை மீறி எந்த வங்கியாவது கடன் கொடுத்தால் அவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10–20

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கே. முனிவெங்கடப்பன்.

திரு. கே. முனிவெங்கடப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிலவள வங்கிகளில், படித்துவிட்டு வேலையில்லாமல் இருக்கின்ற பல கிராமப்புறத்தைச் சேர்ந்த இளைஞர்கள் டிராக்டர்கள் வாங்குவதற்கு லோன் அப்ளை செய்து இருக்கிறார்கள். ஆனால், இன்னும் நிறைய பேர்களுக்குக் கிடைக்காமல் இருக்கிறது. ஒரு ஆண்டிற்கு, ஒரு வங்கியில் ஒரு டிராக்டர் லோன் கிடைப்பதுகூட அரிதாக இருக்கிறது. அரசு, ஒரு ஆண்டிற்கு அந்த வங்கிகளில் எவ்வளவு கொடுக்க ஏற்பாடு செய்துள்ளது? அதிகமான டிராக்டர்கள் கொடுத்தால் வேலையற்ற இளைஞர்களுக்கு வேலை கிடைக்க வாய்ப்பாக இருக்கும். அதற்கு அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நிறைய டிராக்டர்களுக்கு நிலவள வங்கிகள் கடன் கொடுத்திருக்கின்றன. இதிலே பலபேர் வங்கிகளுக்குத் தெரியாமலேயே டிராக்டர்களை விற்றுவிட்டு

இருக்கிறார்கள். கிட்டத்தட்ட 2,100 பேர் இந்த நிலவள வங்கிகளில் நிலங்களை மார்ட்கேஜ் செய்து, வங்கிகளுக்குத் தெரியாமலேயே அந்த நிலங்களை விற்று விட்டு இருக்கிறார்கள். இப்படி ஏற்கெனவே கொடுத்து இருக்கிற கடன் திரும்ப வராத காரணத்தினாலே அதிகமாகக் கடன் கொடுக்க முடியவில்லை. ஆனாலும் ஆண்டுதோறும் இன்னும் டிராக்டர்கள் வாங்குவதற்குக் கடன் கொடுக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய ஆலோசனை கருத்தில் கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கே. பி. ராஜூ.

திரு. கே. பி. ராஜூ : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலவள வங்கிகளில் ஒருசில குறிப்பிட்ட பொருள்களுக்குதான் கடன் கொடுப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மற்ற வங்கிகள் நூற்பாலைகளில் உற்பத்திச் செய்யப்படுகின்ற பொருள்களை வைத்துக்கொண்டு கடன் தருகிறார்கள்; அதாவது உடனடியாக அவைகளை விற்க முடியாத பொழுது, கடன் கொடுக்கப்படுகிறது. அதேமாதிரி விவசாயத் தொழிலாளர்கள் விளைவிக்கின்ற பொருள்களை விற்க முடியாத பொழுது. நஷ்டத்திற்கு விற்கின்ற சூழ்நிலைகள் வருகின்ற பொழுது, நிலவள வங்கியிலே வைத்துவிட்டு, அந்தப் பொருள்களுக்குரிய பணத்தை, அந்த விவசாயிகளுக்கு நிலவள வங்கிகள் தருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இத்தகைய கடன்களைக் கூட்டுறவு வங்கிகள் வழங்கி வருகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. என். பன்னீர் செல்வம்.

திரு. என். பன்னீர்செல்வம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற 5—12—1991-லே ஆடுதுறையிலே உள்ள நிலவள வங்கியிலே டிராக்டருக்குப் பணம் கட்டப்பட்டு உள்ளது. இதுபோன்று பல இடங்களிலே கட்டப்பட்டு டிராக்டர்கள் இது வரையில் கிடைக்கப் பெறாமல் இருக்கின்றன. இங்கே சென்னை அலுவலகத்திலே இருக்கின்ற அதிகாரிகள் இதுவரையிலே அனுப்பவில்லை என்ற புகார் இப்போது என் கையில் இருக்கிறது. அதை உடனடியாக அரசு கொடுக்க ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,. மாண்புமிகு உறுப்பினருடைய கையிலே இருக்கிற புகாரை எனக்கு அனுப்பினால் உடனடியாக நான் நடவடிக்கை எடுக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.





மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஏதாவது புகார் வந்தால் உங்கள் கையிலே வைத்துக் கொள்ளக் கூடாது. மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே கொடுத்துவிட வேண்டும்.

வினா எண் 112 திரு. கே. பி. மணிவாசகம். மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

112—

பாப்பான்குளம் அரசுப் பண்ணை.

*வினா எண் 4715—திரு. கே. பி. மணிவாசகம் :

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) உடுமலை வட்டம் பாப்பான்குளத்தில் உள்ள அரசுப் பண்ணையை நவீனப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) உடுமலை வட்டம் பாப்பான்குளத்தில் உள்ள அரசு விதைப்பண்ணையை நவீனப்படுத்தும் கருத்துரு ஏதும் அரசிடம் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

திரு. கே. பி. மணிவாசகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கேட்டதும் கொடுப்பவர் கிருஷ்ண பரமாத்மா' என்பார்கள். ஆனால் நமது மாண்புமிகு அமைச்சர் அவர்களோ ''இல்லை'' என்று பதில் சொல்லி விட்டார்கள். இருந்தபோதிலும், ''உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்'' என்ற கருத்தின்படி, சிறப்பாகச் செயல்படுகின்ற நமது மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவியினுடைய புனித அரசு, நிலவளம், நீர் வளம், மன வளம் மிக்க மக்கள் வாழ்ந்து வருகின்ற உடுமலைப் பேட்டை வட்டம், பாப்பான்குளத்தில் வருகின்ற நிதியாண்டிலாவது அரசுப் பண்ணையை நவீனப்படுத்த ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணனுக்கு என்று எந்த சக்தியுமே கிடையாது. (சிரிப்பு) புராணத்திலே கூட ஆதிபராசக்தியாக இருக்

கக்கூடிய சக்தியிடமிருந்துதான் கிருஷ்ணனுக்கே சக்தி வந்தது. எனவே பாப்பான்குளத்தில் உள்ள பண்ணைக்குத் தேவையான அனைத்து வசதிகளையும் அரசு ஏற்கனவே வழங்கியிருக்கிறது. அந்தக் குளத்திற்குச் சொந்தமானது 41 ஏக்கர் நிலம்தான். அதற்குப் புதிதாக எந்தவித அபிவிருத்தியும் செய்யத் தேவையில்லை என அரசு கருதுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 113. திரு. வெ. தமிழரசு. மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

113—

ஆத்தூரில் தொழில் மையம்.

*வினா எண் 4293—திரு. வெ. தமிழரசு : மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சேலம் மாவட்டம், ஆத்தூர் தாலுகாவாக இருப்பதால் ஒரு தொழில் மையம் அல்லது ஆட்டோ நகர் தொழிற்பேட்டை அமைக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. முஹமது ஆசிப் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆத்தூரில் 'ஆட்டோ நகர்' ஒன்று அமைக்க தொழில் முனைவோர்கள் 10 நபர்களாவது மாவட்டத் தொழில் மையங்களின் மூலம் முன்வரின் தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் தொழிற் பேட்டை அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளும்.

திரு. வெ. தமிழரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆத்தூர் வட்டத்தில் 150-க்கும் மேற்பட்ட ஜவ்வரிசி ஆலைகளும், அதிகமான லாரிகளும், விவசாயத்தில் குறிப்பாக ஸ்பின் பருத்தி அதிகமான விளைச்சல் உள்ளதால் 300-க்கும் மேற்பட்ட டிராக்டர்களும் உள்ளதால் சிறு தொழில்கள் அதிகமாக உள்ள தலைவாசல், ஆத்தூர் தொகுதிகள் அடங்கிய ஆத்தூர் வட்டத்தில் வருகின்ற நிதி ஆண்டிலாவது 'ஆட்டோ நகர்' தொழிற்பேட்டை அமைக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : [illegible] தமிழரசு, அமைச்சர் சொல்லியிருக்கிற பதிலில் [illegible] முனைவோர்களாவது மாவட்டத் தொழில் மையத்தில் [illegible] பரிந்துரைப்பார்களானால் இப்படி தொழிற்பேட்டை அமைக்க ஆலோசிக்கப்



படும் என்று சொல்லியிருக்கிறார். அது சம்பந்தப்பட்டதாகத் தான் உங்களுடைய துணைக் கேள்வி இருக்க வேண்டும். 10 பேர் இருக்கிறார்களா இல்லையா என்று சொல்ல வேண்டும். நீங்கள் வேறு ஏதோ கேட்கிறீர்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதில் அதுதான். திரு. ச. காந்திராஜன்.

திரு. ச. காந்திராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே தொழில் முனைவோர்கள் சில இடங்களிலே இப்படிப்பட்ட தொழில்களை ஆரம்பிப்பதற்காக கொடுக்கப்பட்ட இடங்களில்கூட இதுவரையில் நடவடிக்கைகள் இல்லாமல் இருக்கிறது. அப்படிப்பட்ட இடங்களில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் துரித நடவடிக்கை எடுத்து, அதனைச் செய்வார்களா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-25

மாண்புமிகு திரு. முஹமது ஆசிப் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பாக எந்த இடத்தில் இந்த மாதிரி நடந்து இருக்கிறது என்று தெரிவித்தால், தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் எஸ். சுந்தரராஜ்.

டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் தொடங்குவதற்கு அதிகமான மக்கள் முன் வந்தும் இடம் கிடைக்காத காரணத்தால் பல்வேறு இடங்களில் தொழிற்சாலைகளைத் தொடங்குவதற்கு அனுமதி மறுக்கப்பட்டு இருக்கிறது. ஆகவே, அவ்வாறு தொழில் தொடங்குவதற்கு முன்வந்திருக்கின்ற

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் எஸ். சுந்தரராஜ், மூலக் கேள்விக்கு சம்பந்தப்பட்ட துணைக் கேள்வியாக இருக்க வேண்டும்.

டாக்டர் எஸ். சுந்தரராஜ் : 10 பேர்களுக்கு மேல் வருகை தந்தும் அந்த இடம் கிடைக்காத காரணத்தால் தொழில் தொடங்குவதற்கு அனுமதி மறுக்கப்படுகின்றது. ஆகவே, அவ்வாறு தொழில் தொடங்க முன் வந்திருக்கின்ற இடங்களில் தொழில் தொடங்குவதற்கு நிலங்களை ஆர்ஜிதம் செய்ய அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. முஹமது ஆசிப் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலங்களை அவர்களே தேடிக் கொடுத்தால் அரசு அதற்கான நடவடிக்கை எடுக்க முன் வரும்.

[1992 பிப்ரவரி 10

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 114. டாக்டர் எஸ். சுந்தரராஜ், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

114—

பணிபுரியும் பெண்களுக்கு விடுதி.

*வினா எண் 1702—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பரமக்குடியில் பணியிலிருக்கும் பெண்கள் விடுதி கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எந்த ஆண்டு கட்டப்படும்?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலை வாய்ப்பில் பெண்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து, கிட்டத்தட்ட 30 விழுக்காடு ஒதுக்கி, அதை நிறைவேற்றுகின்ற அரசாக மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவியினுடைய அரசு விளங்கி வருகிறது. அவ்வாறு தொழில்களில், வேலை வாய்ப்பில் ஈடுபடுகின்ற பெண்களுக்கு, அவர்களுடைய முக்கியத்துவம் கருதி, பாதுகாப்பு கருதி, பெண்கள் அதிகமாக வேலை செய்கின்ற இடங்களில், குறிப்பாக பரமக்குடி நகரில் பல்வேறு வங்கிகள் இருக்கின்றன; அதுமட்டுமின்றி 6 உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளிகள் இருக்கின்றன. ஆர்.டி.ஓ., டி.டி.ஓ., போன்ற பல்வேறு அலுவலகங்கள் நிறைந்த பரமக்குடி நகரில் வேலை செய்யும் அந்தப் பெண்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து, அரசு சார்பில் அந்தப் பெண்களின் பாதுகாப்புக் கருதி, ''ஒர்க்கிங் உமன்ஸ் ஆஸ்டல்'' கட்டுவதற்கு, அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி. இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கிற இதய தெய்வம் புரட்சித் தலைவியின் அரசில் ஏறக்குறைய 7 பெண்கள் விடுதிகள் இருக்கின்றன. தற்சமயம் புதிதாக இந்த ஆண்டு சென்னையிலே ஒரு பெண்கள் விடுதி கட்டப்படவிருக்கிறது. ஒரு பெண்கள் விடுதி புதியதாக கட்டப் பட வேண்டுமென்றால் 5 இலட்சம் ரூபாய் செலவாகும். அதுவும் பெண்கள் விடுதிகள் மாவட்ட தலைநகரங்களிலேதான் கட்டப்



1992 பிப்ரவரி 10]

பட முடியும் என்கின்ற காரணத்தினாலே பரமக்குடியில் கட்டுகின்ற யோசனை தற்போதைக்கு அரசின் பரிசீலனையில் இல்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பின்தங்கிய பகுதிகளில் இருக்கின்ற பெரு நகரங்களில், குறிப்பாக என்னுடைய மாவட்டத்தில் பரமக்குடிதான் அதிக மக்கள் தொகை கொண்ட நகரமாக இருக்கிறது. இப்படிப்பட்ட பகுதிகளில், மாவட்ட தலைநகரங்களில் அமைப்பதைக் காட்டிலும் மக்கள் ஜனத்தொகைக்கேற்ப, வேலைவாய்ப்பில் முக்கியத்துவம் கொடுத்து, அங்கே வேலை செய்கின்ற மகளிர் நலன் கருதி அங்கே அமைப்பதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்டங்களினுடைய தலைநகரங்களிலேதான் போக்குவரத்துக்கு வசதியும், மாவட்ட அலுவலகங்களும் இருக்கின்ற காரணத்தினால் மாவட்ட தலைநகரங்களிலேதான் தற்போது பெண்கள் விடுதி அமைக்கின்ற யோசனை அரசின் பரிசீலனையில் உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-30

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன் அனுமதியோடு வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. டாக்டர் ச. ஆரோக்கியசாமி.

டாக்டர் ச. ஆரோக்கியசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சரவர்கள், மாவட்டத் தலைநகரில் மட்டும்தான் பெண்களுக்கான விடுதி அமைப்பதற்கு இடம் இருக்கிறது என்று சொல்கின்றார்கள். தனியார் அமைக்கின்ற விடுதிகளுக்கு அரசு உதவி அளிக்குமா ? மாவட்டத் தலைநகரில், பெண்களுக்கு என்று அமைக்கப்படுகின்ற தனியார் விடுதிகளுக்கு அரசு உதவி புரியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் நிறுவனங்கள்—தொண்டு நிறுவனங்கள் மகளிர் விடுதிகளை அமைக்கும் என்று சொன்னால், அரசு அதற்கு 35,000 ரூபாய் மானியம் கொடுத்துக் கொண்டிருக்கிறது தற்போது. அதைப் போல அதையும் பரிசீலிக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் மு. சீனியம்மாள்.

டாக்டர் மு. சீனியம்மாள் : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவரவர்களே, இன்றைக்கு ஆண் குழந்தைகள்

[1992 பிப்ரவரி 10

இல்லை என்றாலும்கூட, பெண் குழந்தைகளை அரசே முன் வந்து 2,000 ரூபாய் டெபாசிட் கட்டியும், கல்விக்கு முக்கியத் துவம் கொடுக்கின்ற இந்த அரசில் பெண்களுக்கு, பாபுலேஷன் அதிகமாக உள்ள தொழில் நகரங்களில் பாதுகாப்பு இன்றி வேலைக்குச் செல்லுகிற பெண்களின் பாதுகாப்பு கருதியும், தன்னுடைய குழந்தையை வீட்டிலே விட்டுச் சென்று, மாலை முழுவதும் வேலை பார்த்துவிட்டுத் திரும்புகின்றவர்களுக்கும் ஒரு பாதுகாப்பு அளிப்பதைக் கருதியும், நிறைய வாடகை கொடுத்துத் தங்களால் வாழ இயலாதவர்களுக்கு, ஊரிலே குழந்தைகளை விட்டு விட்டு வந்து, குடும்பத்தை விட்டுவிட்டு வந்து, நகரங்களிலே வேலை பார்க்கின்ற பெண்களுக்கு உதவிக்கரம் நீட்டுகின்ற வகையிலே ஏழைகளுக்குத் தன் உயிரை ஈந்துகொண்டு இருக்கின்ற....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி. நீங்கள் நேரடியாகத் துணைக் கேள்வி கேட்பதற்கு அனுமதிக்கும்பொழுது ஒரு பிரசங்கம் பண்ணக் கூடாது.

டாக்டர் மு. சீனியம்மாள் : டாக்டர் புரட்சித் தலைவியின் அரசிலே பெண்களுக்காக அரசு விடுதி ஒவ்வொரு நகரத்திலும் அமைத்துத் தருவதற்கு அடுத்த ஆண்டிலாவது அரசு பரிசீலனை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : பேரவைத் தலைவரவர்களே, வாடகைக் கட்டிடத்தில் இந்தப் பெண்கள் விடுதியை நடத்த வேண்டுமென்றால், 1.5 இலட்சம் ரூபாய் செலவு ஆகும். எல்லா நகரங்களிலும் உருவாக்குவது என்பது நிதிநிலை நெருக்கடியைக் கொண்டு பரிசீலிக்க இயலாது. ஆனால், தொண்டு நிறுவனங்கள் செய்ய முன்வந்தால் அரசு மானியம் அளிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண்—115, செல்வி பி. நிர்மலா, திரு. எம். ஆண்டி அம்பலம், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

115—

## பணிபுரியும் பெண்களுக்கு விடுதி.

*வினா எண் 2050—செல்வி பி. நிர்மலா, திரு. எம். ஆண்டி அம்பலம் :

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

திண்டுக்கல் நகரில் பணிபுரியும் மகளிருக்கு தனி விடுதி கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?



1992 பிப்ரவரி 10]

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போதைக்கு இல்லை.

செல்வி பி. நிர்மலா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, '' இல்லை '' என்பது மிகவும் சுலபம். '' இல்லை '' என்பதை '' ஆம் '' என்று செயல்படுத்திக் காட்டுவதுதான் நமது புரட்சித் தலைவியின் நல்லாட்சி. ஆண்களைப் போல பெண்களால் தனியாக லாட்ஜிலோ அல்லது மற்றவர்களின் வீட்டிலோ தங்கியிருந்து வேலைக்குசெல்ல முடியாது என்பதை நம்முடைய அமைச்சரவர்களும் நன்கு அறிவார்கள். ஆகையினால் புரட்சித் தலைவி அவர்களின் நல்லாட்சியில் பெண்களின் பாதுகாப்பு கருதி, இந்தத் திட்டத்தை மறுபடியும் பரிசீலனை செய்து, புரட்சித் தலைவி அவர்களிடம் சம்மதம் வாங்கி '' ஆம் '' என்ற பதிலைத் தருவாரா என சட்டப் பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : பேரவைத் தலைவர் அவர்களே, நான் ''தற்சமயம் இல்லை'' என்றுதான் சொன்னேனே ஒழிய, '' இல்லை'' என்று சொல்லவில்லை. திண்டுக்கல்லிலே ஏற்கெனவே இரத்தினவேல் சுப்பிரமணியம் அறக்கட்டளையின் சார்பாக ஒரு மகளிர் விடுதி நடத்தப்படுகிறது. அதற்கு 35,000 ரூபாய் மானியத்தை அரசு வழங்கிக் கொண்டிருக்கிறது என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குப் பேரவைத் தலைவர் மூலமாகத் தெரியப்படுத்திக் கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எம். ஆண்டி அம்பலம்.

திரு. எம். ஆண்டி அம்பலம் : பேரவைத் தலைவரவர்களே, திண்டுக்கல்லைத் தலைநகரமாகக் கொண்டு, மரியாதைக்குரிய முன்னாள் முதலமைச்சர் எம். ஜி. ஆர். அவர்கள், திண்டுக்கல்—அண்ணா மாவட்டம் என்று அறிவித்த மாவட்டம், அங்கு அதிகமான மகளிர் அரசு வேலை செய்கின்ற காரணத்தினாலே, அவர்கள் குறைந்த வாடகையில் அங்கு தங்குவதற்கு கட்டித் தர இந்த அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறைந்த வாடகையில் கட்டித் தர முடியாது; ஏனென்றால், வாடகை என்று சொல்லுகின்றபோது சொந்தக்காரர்கள் வேறு யாராவது இருப்பார்கள். ஆனால் அந்தத் திண்டுக்கல் நகரிலே வேறு யாராவது தொண்டு நிறுவனங்கள் இதைச் செய்வதற்கு முன்வந்தால் அரசு உதவி அளிக்கும் என்பதைத் தெரியப்படுத்திக் கொள்ளுகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 19. திரு. செ. கு. தமிழரசன், மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர். 30-1-1992-ஆம் தேதிய பட்டியலில் இருந்தது. உறுப்பினருடைய வேண்டுகோளுக்கிணங்க இன்றைய தினம் மாற்றி அறிவிக்கப்பட்டுள்ளது.

19—

ஆதிதிராவிடர் நலத்துறையின் மூலம் பாலிடெக்னிக்குகள் அமைத்தல்.

*வினா எண் 146— திரு. செ. கு. தமிழரசன் :

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) ஆதிதிராவிடர் நலத்துறையின் சார்பில் பாலிடெக்னிக்குகள் தொடங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது தொடங்கப்படும்?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

முற்பகல் 10-35

திரு. செ. கு. தமிழரசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாழ்த்தப்பட்ட மக்களைத் தொழில் துறையில் முன்னேற்றுவதே எங்களுடைய கட்சியின் இன்றியமையாத இலட்சியம் என்று மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் தேர்தல் அறிக்கையிலே குறிப்பிட்டார்கள். பின்பு, அதை நிறைவேற்றிக் கொடுப்போம் என்று ஆளுநர் உரையிலும் தெரிவித்திருக்கிறார்கள். அதைத் தொடர்ந்து தாழ்த்தப்பட்ட மக்கள் தொழில் தொடங்குவதற்கு வருமான வரம்பையும் களைந்திருக்கிறார்கள். ஆக, அவர்கள் தொழில் துறையிலே முன்னேற வேண்டும் என்பதில் மிகுந்த அக்கறையாக இருக்கிற புரட்சித் தலைவி அவர்களுடைய நல்ல ஆட்சியிலே, தாழ்த்தப்பட்ட மக்கள் தொழில் துறையிலே முன்னுக்கு வர, அவர்களுக்குத் தொழிற் கல்வி பயிற்றுவிப்பது மிகத் தேவையான ஒன்றாக இருக்கிறது. எனவே, ஏற்கெனவே, புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு எங்களுடைய கோரிக்கையை ஏற்று ஒரு ஐ.டி.ஐ.-யை சிதம்பரத்



திலே கொண்டு வந்தது—இப்போது, பாலிடெக்னிக்குகள் ஆதி திராவிட நலத் துறையிலே கொண்டு வருவதற்கு அரசு உரிய நடவடிக்கையை இந்தக் கல்வியாண்டிலாவது மேற்சொன்ன காரணங்களைக் கருதி, எடுக்க முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிட மக்களின் நலனில் அக்கறை கொண்டுள்ள புரட்சித் தலைவியினுடைய அரசாங்கம், தென்னாற்காடு மாவட்டத்தில் அமைந்திருக்கிற சிதம்பரத்திலே உள்ள ஐ.டி.ஐ.-க்கு அவர்களிடமிருந்து கோரிக்கை வராமலேயே மாணவர்களுடைய கஷ்டங்களை உணர்ந்து, இந்த ஆண்டு மாணவர்கள் விடுதியைத் தந்திருக்கிறது. அதேபோல், தொழில் துறையில் முன்னேற வேண்டும் என்பதற்காகவே, நல்ல பல திட்டங்களைத் தீட்டி வருகிற புரட்சித் தலைவி அரசாங்கம்— இந்தச் சூழ்நிலையில் அரசினுடைய நிதிநிலை மிகவும் மோசமாக இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நன்றாகவே அறிவார்கள்—ஆகையினால், எதிர்காலத்தில் நிதி நிலையைக் கருத்தில் கொண்டு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. செ. கு. தமிழரசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் நடத்துகிற பாலிடெக்னிக்குகளிலே 15 ஆயிரம், 20 ஆயிரம் ரூபாய் கொடுத்து சேருவதற்குத் தாழ்த்தப்பட்ட மக்கள் மிகுந்த சிரமப்படுகிறார்கள். பொருளாதார நிலையிலே மிகவும் துன்பப்பட்டுக் கொண்டிருக்கிற அந்த மக்கள் இவ்வளவு பெரிய தொகையைக் கொடுத்துச் சேருவது என்பது, முடியாத காரியமாக இருக்கிறது. எனவே, ஆதிதிராவிட சமுதாய நலச் சங்கம், கல்வி நிறுவனங்கள் ஆகியவை அவர்களாகவே பாலிடெக்னிக்குகளோ, எஞ்சினியரிங் கல்லூரிகளோ தொடங்க முன் வந்தால், அதற்கு அரசு அனுமதி பெற்றுத் தருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவியினுடைய அரசாங்கம் மிக முயற்சியோடு செய்து கொண்டிருக்கிற காரியங்களை, அவர்கள் பார்ப்பார்கள். ஆகவே, அரசாங்கமே செய்யக்கூடிய சாத்தியக்கூறுகள், இருக்கின்ற நிதிநிலையைக் கருத்தில் கொண்டு, பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் அ. ஸ்ரீதரன்.

[1992 பிப்ரவரி 10

டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அரசிற்கு நிதிநிலை கடுமையாக இருக்கிற காரணத்தினால், தொண்டு நிறுவனங்கள் மூலம் இப்படிப்பட்ட ஆதிதிராவிடர்களுக்கென்று பாலிடெக்னிக்குகள் தொடங்க முன்வந்தால், மத்திய அரசால் இயங்கப்படுகிற 'நேஷனல் ஷெட்யூல்டு காஸ்ட் ஃபைனான்சியல் டெவலப்மெண்ட் கார்ப்பரேஷன்' மூலமாக நமது 'தாட்கோ' நிறுவனம் நிதியுதவி வழங்க முன்வந்தால், பரிந்துரை செய்யுமா ? அப்படிச் செயல்பட முன்வந்துள்ள தொண்டு நிறுவனங்களுக்கு நமது அரசு ஆக்கமும், ஊக்கமும் அளிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொண்டு நிறுவனங்கள் முன்வந்தால், அதைக் கல்வித் துறை பரிசீலிக்கும் என்று அறிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 116— திரு. ஆர். பி. பரமசிவம், மாண்புமிகு ஆதிதிராவிட நலத்துறை அமைச்சர்.

116—

## சின்னசேலம் ஆட்டுப்பண்ணை பணியாளர்களை நிரந்தரமாக்குதல்

*வினா எண் 1003— திரு. ஆர். பி. பரமசிவம் :

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சின்னசேலம் ஆட்டுப்பண்ணையில் தினக்கூலி அடிப்படையில் வேலை செய்யும் பணியாளர்களை நிரந்தரப் பணியாளர்களாக மாற்றும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. ஆர். பி. பரமசிவம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீண்ட நெடுங்காலமாக சின்னசேலம் ஆட்டுப் பண்ணையில் பலர் தினக்கூலியாக பணியாற்றுகிறார்கள். அவர்களில் ஒரு சிலரையாவது பணியின் தன்மை, தரம், உண்மையான உழைப்பு போன்றவைகளைக் கருத்தில் கொண்டு நிரந்தரமாக்க அரசு ஆவன செய்யுமா என்பதோடு. எவ்வளவு பேர் தினக்கூலியாக வேலை செய்கிறார்கள், அவர்களில் தாழ்த்தப்பட்ட மக்கள் எத்தனைப் பேர், இதர இனத்தவர் எத்தனைப் பேர் என்பதையும் அறிய விரும்புகிறேன்,



1992 பிப்ரவரி 10]

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லாத் துறைகளிலும் உள்ள சில்லறைச் செலவினப் பணியாளர்களை மட்டும் நிரந்தரம் செய்யும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது, தினக்கூலி பணியாளர்களை மட்டும் நிரந்தரம் செய்யும் செயற்குறிப்பு அரசிடம் இல்லை, மொத்தமாக சில்லறைச் செலவினப் பணியாளர்கள் எவ்வளவு பேர் இருக்கிறார்கள் என்பதைக் கணக்கெடுத்து நடவடிக்கை மேற்கொள்ள கருத்துரு பரிசீலனையில் உள்ளது,

முற்பகல் 10-40

திரு. ஆர். பி. பரமசிவம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்குத் தெரிந்தவரை தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்தவர்கள் அதிகமாக இதுவரை தினக்கூலிகளாக வேலை செய்து வருகின்றார்கள். அவர்களை நிரந்தரமாக்கும்போது அரசினுடைய சலுகை, ஊதிய உயர்வு போன்றவை கிடைக்கும் என்பதால், அவர்கள் வாழ்க்கையில் முன்னேறுவதற்கு வாய்ப்பு ஏற்படுகிறது. அவர்களுடைய வாழ்க்கைத் தரம் உயரும். இதனால் சமதர்ம சமுதாயத்தை அடைய முடியும் என்ற நோக்கத்தோடு, குறைந்தது அந்தத் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்தவர்களையாவது நிரந்தரமாக்கும் ஆய்வை அரசு எடுத்துக் கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது. தற்போது நிதித் துறையின் பரிசீலனையில் இருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 117— திரு. வ. சத்தியமூர்த்தி, மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர்.

[1992 பிப்ரவரி 10

117—

சாயல்குடியில் கால்நடை மருந்தகம்.

*வினா எண் 5209—திரு. வ. சத்தியமூர்த்தி :

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

இராமநாதபுரம் மாவட்டம் சாயல்குடி பேரூராட்சியில் கால்நடை மருந்தகம் ஒன்று துவங்குவதற்கு அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. வ. சத்தியமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாயல்குடியில் ஒரு கால்நடை மருந்தகம் துவக்க வேண்டும் என்றும், அந்த சாயல்குடியை உள்ளடக்கிய கடலாடி ஊராட்சி ஒன்றியத்தில் இதற்கான தீர்மானம் வேண்டும் என்றும் கடந்த 7, 8 ஆண்டுகளாக ஒவ்வொரு ஆண்டும் தீர்மானம் போட்டு, கால்நடை இயக்குநர் மூலம் அரசுக்குப் பரிந்துரைக்கப்பட்டு வருகிறது. சாயல்குடியைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய ஊராட்சி ஒன்றியம் அமையக்கூடிய ஒரு சூழ்நிலையும் தற்போது உருவாகியுள்ளது. சுமார் 20 லிருந்து 25 ஊராட்சிகளுக்குட்பட்ட கால்நடைகளுக்கு வைத்தியம் செய்வதற்கு வேறு இடம் இல்லை. ஆகவே, சாயல்குடியில் காலதாமதம் இன்றி ஒரு கால்நடை மருந்தகம் அமைக்க அரசு முன் வர வேண்டும். அதற்கான கோப்பை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கேட்டுப் பெறுவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டம் சாயல்குடி கிராமத்தில் மருந்தகம் அமைப்பதற்கான முன்மொழிவுகள் மண்டல இணை இயக்குநர் மூலம் கேட்கப்பட்டுள்ளது. அது வந்தவுடன் அது நிபந்தனைகளுக்கு உட்பட்டிருப்பின் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 118—திரு. ஆர். சிங்காரம், மாண்புமிகு மீனளத் துறை அமைச்சர்.



1992 பிப்ரவரி 10]

118—

மீனவர் மகளிர் கூட்டுறவுச் சங்கம்.

*வினா எண் 1185—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு மீனளத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பட்டுக்கோட்டை ஒன்றியம் ஏரிப்புறக்கரையிலுள்ள மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்கத்திற்குக் கடன் வசதி செய்து கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பட்டுக்கோட்டை ஒன்றியம், ஏரிப்புறக்கரையிலுள்ள மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்கத்திற்குப் பங்கு மூலதன உதவித் தொகையாக அதாவது ஷேர் கேபிடல் அசிஸ்டென்ஸ் ரூ. 20,000 (ரூபாய் இருபதாயிரம் மட்டும்) 1991 மார்ச் திங்களில் வழங்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது நான் ஆரம்பத்தில் போட்ட கேள்வி. அது மிகவும் தாமதமாக வந்திருக்கிறது. ஆனால், இந்தக் கடன்கள் முழுமையாக அனைத்து மீனவப் பெண்களுக்கும் இதுவரை வந்து சேரவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ரொம்பவும் காலதாமதம் என்று நீங்கள் சொல்லக்கூடாது. போன செஷனிலே போட்டிருக்கிறீர்கள். இந்த செஷனிலே வந்திருக்கிறது.

திரு. ஆர். சிங்காரம் : ஆகவே, அமைச்சர் அவர்கள் சொல்கிற பதிலைப் போல அங்கே செயல்முறை இல்லை என்று நினைக்கிறேன். அதை மீண்டும் பரிசீலனை செய்து, அளிக்கப்பட்டுள்ள பதில் சரிதானா என்பதைச் சரிபார்க்க நான் அமைச்சர் அவர்களைக் கேட்டு, அந்தப் பதிலை விரைவில் அறிவிப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர் அவர்கள் ரொம்பக் காலதாமதமாக வந்திருக்கிறது என்று சொன்னார். அவர் 17-7-1991 அன்று கேள்வி போட்டிருக்கிறார். நமக்கு 15-10-1991 அன்று பதில் வந்திருக்கிறது. அவை இப்போது கூடியவுடன் இந்தத் தொடரில் வைக்கப்பட்டிருக்கிறது.

[1992 பிப்ரவரி 10

ரொம்பக் காலதாமதம் என்று சொல்ல முடியாது. 7-வது மாதம் நீங்கள் போட்ட கேள்விக்கு பத்தாவது மாதம் பதில் வந்து விட்டது.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் ஷேர் கேபிடல் அசிஸ்டென்ஸ் ரூ. 20,000 ஏரிப்புறக் கரையில் உள்ள மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்கத்திற்கு வரவில்லை என்று முறையிட்டுள்ளார்கள். அதைப்பற்றி குறிப்பாக புகார் ஒன்றினை அரசுக்கு அளிப்பார் என்றால் அது குறித்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஷேர் கேபிடல் அசிஸ்டென்ஸ் கட்டப்பட்டிருக்கிறது. ஆனால் கடன் இன்னும் வழங்கப்படவில்லை என்பதுதான் என்னுடைய கேள்வி. ஆகவே, தயவு செய்து அதைப் பரிசீலனை செய்து—அமைச்சர் அவர்கள் விறுவிறுப்பாகச் செய்வார் என்று எனக்கு நன்றாகத் தெரியும். அந்தச் சுறுசுறுப்புடன் பணியைச் செய்து—தாய்க்குலத்தின் ஆட்சியில் விரைவில் கடன்வழங்க அரசு முயற்சி எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடன் வழங்குவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை என்று குறிப்பிட்டார்கள். அதற்குரிய நடவடிக்கை உடன் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி நேரத்தின்போது உறுப்பினர்கள் அமைச்சர்களைத் தொந்தரவு செய்யக்கூடாது. பொதுவாக அமைச்சர்கள் கேள்வி-பதில்களைக் கவனித்துக் கொண்டு இருந்தால், அவர்கள் தொடர்பான சில செய்திகள் கோரப்பட்டால் அவர்களும் சேர்ந்து அதற்குப் பதில் சொல்லலாம். ஆனால் இரண்டு, மூன்று உறுப்பினர்கள் அமைச்சர்களைச் சூழ்ந்துகொள்வார்களேயானால் அந்த வாய்ப்பை அவை இழக்க நேரிடும். எனவே கேள்வி நேரத்தின்போது அமைச்சர்களைச் சந்திப்பதோ, முறையீடுகள் கொடுப்பதோ தவிர்க்கப்பட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு) மற்ற நேரத்தில் பரவாயில்லை. விதி ரொம்பத் தெளிவாக இருக்கிறது. கேள்வி நேரத்தின்போது அமைச்சர்களைச் சென்று சந்தித்து உறுப்பினர்கள் எந்த வகையிலேயும் தொந்தரவு கொடுக்கக்கூடாது.



1992 பிப்ரவரி 10]

30-1-1992-ஆம் தேதி விடுபட்ட வினா எண் 20, உறுப்பினர்களுடைய வேண்டுகோளுக்கிணங்க இப்போது எடுத்துக் கொள்ளப்படுகிறது. வினா எண். 20, திரு. ப. கலியபெருமாள். மாண்புமிகு மீனளத்துறை அமைச்சர்

20—

மீனவர்களுக்குச் சலுகைகள்.

*வினா எண் 5002—திரு. ப. கலியபெருமாள்:

மாண்புமிகு மீனளத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கடலில் மீன்பிடிக்கும் மீனவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள சலுகைகளை உள்நாட்டு மீனவர்களுக்கும் வழங்கி வீடுகட்டித் தந்தும், தொழில் நடத்தவும் கடன் உதவி செய்திடவும் அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) உள்நாட்டு மீனவர்களுக்கும் சில சலுகைகள் இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் அரசால் அளிக்கப்படுகின்றன.

(ஆ) உள் நாட்டு மீனவர்களுக்குக் கீழ்க்கண்ட சலுகைகள் வழங்கப்படுகின்றன,

1. உள்நாட்டு கூட்டுறவு சங்க மீனவர்களுக்கு காப்பீட்டு நிவாரணம் வழங்கப்படுகிறது.

2. மீன்பிடித் தொழில் நடத்திட வள்ளம், வலை போன்ற உபகரணங்கள் வாங்கிடவும் மீன் விற்பனையின் துரித போக்குவரத்திற்கு ஊர்தி வாங்கிடவும் மீனவர் கூட்டுறவுச் சங்கம் மூலமாக அரசு கடனுதவி அளிக்கப்படுகின்றது.

3. மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நீண்ட கால அடிப்படையில் மீன்பாசிக் குத்தகை வழங்கப்படுகிறது.

4. மீன்குஞ்சுகள் உற்பத்தி செய்ய மானியம் வழங்கப்படுகிறது.

5. உள்நாட்டில் மீன்குஞ்சு உற்பத்தியைப் பெருக்க மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமை மூலமாக மானியம் மற்றும் வங்கி கடன் வசதி செய்து கொடுக்கப்படுகிறது.

திரு. ப. கலியபெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்நாட்டு மீனவர்களுக்குப் பல்வேறு சலுகைகளை அளித்திருப்பதாகச் சொல்கிறார்கள். கடலில் வாழும் மீனவர்களுக்கு பல்வேறு சலுகைகள் உள்ளன. வீடு கட்டித் தந்தும், கடன் உதவிகள் தந்தும், மற்றைய அரசின் உதவிகளும் தருகிறார்கள். அதைப்போல் உள்நாட்டு மீனவர்களுக்கும் அளிக்கப்படுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக கடல் மீனவர்கள் இயற்கையின் சீற்றத்தால் பெரிதும் பாதிக்கப்படுபவர்கள் என்பதற்காக அவர்களுக்கு இலவச வீடு மற்றும் இதர சலுகைகள் அளிக்கப்பட்டு வருகின்றன. மாறாக உள்நாட்டு மீனவர்களுக்கு இயற்கை சீற்றத்தால் ஏற்படும் இழப்புகள் அவ்வளவாக இல்லை. இதனைக் கருத்தில் கொண்டு அவர்களுக்குரிய சலுகைகள் ரெஸ்ட்ரிக்ட் செய்யப்பட்டு இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ப. கலியபெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலில் வாழும் மீனவர்கள் வருஷம் பூராவும் தொழில் நடத்துபவர்கள். உள்நாட்டு மீனவர்களுக்கு 6 மாதம்தான் உழைப்பு இருக்கிறது. அதுவும் அவர்கள் சொந்த நிலம் இல்லாமல் குடி இருப்பதற்குக் கூட நிலம் இல்லாமல், சாதாரண அரசு புறம்போக்கு நிலங்களில் குடிசை கட்டிக்கொண்டு ஒரு குடிசையில் மூன்று நான்கு குடும்பங்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு வீடு கட்டித் தரவும், குடும்பத் தலைவரை இழந்து விட்டால் அக்குடும்பங்கள் வசதியற்ற சூழ்நிலையில் வாழ்கிற நிலையைப் போக்குவதற்கும் அந்தக் குடும்பங்களுக்கு ஏதாவது அரசு உதவிகளைச் செய்து தரவும், மற்ற காலங்களில் வலைகள் போன்றவற்றை வாங்குவதற்கும் குடும்பம் நடத்துவதற்கும் அவர்களுக்கு வசதி இல்லாத காரணத்தால் அவர்களுக்குக் கடன் கொடுக்கவும் இந்த அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்நாட்டு மீனவர்கள், மீனவர் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களாக இருப்பதன் மூலம் தொழிலில் ஈடுபட்டிருக்கும்போதோ அல்லது விபத்தில் இறந்தாலோ, முழு ஊனமுற்றாலோ காப்பீட்டு நிவாரணம் ரூபாய் 15,000 வழங்கப்படுகிறது. இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி





அவர்களின் ஆட்சியில் இந்தத் தொகையைப் பொறுத்தவரையில் இறப்புக்கு ரூபாய் 21,000 என்றும் பகுதி ஊனமுற்றால் 10,500 எனவும் ஆணையிட்டு, மத்திய அரசிடம் பங்குத் தொகை தர வேண்டும் என கூறப்பட்டுள்ளது. இத்தகைய சலுகைகளை உள்நாட்டு மீனவர்களின் மேம்பாட்டுக்காக இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் அரசு அவர்களுக்கு வழங்கி வருகிறது. எனினும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இலவச வீடுகட்டிக் கொடுக்கவேண்டும் என்ற கருத்தினையும் சொன்னார்கள். அதனை அரசு பரிசீலிக்கும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : செல்வி கோ. மல்லிகா.

செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புவனகிரி தொகுதியில் புதுக்குப்பம், சாமியார் பேட்டை ஆகிய இடங்களில் மீனவ மகளிருக்காக நமது இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களை ஈன்றெடுத்த அன்னை சந்தியா மகளிர் கூட்டுறவுச் சங்கம் அமைக்கவேண்டுமென்ற வகையில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அந்த முயற்சிகள் வெற்றி அடையும் முன் அங்குள்ள மீனவ மகளிர் மேம்பாடு அடைய அரசு அளித்து வருகிற மானியங்களை, முன்னுரிமை அளித்து அளிக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-50

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இக்கேள்வி உள்நாட்டு மீனவர்களைக் குறித்ததாகும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கடலோர மீனவர்கள் சங்கம் பற்றி குறிப்பிட்டுள்ளார்கள். இது குறித்த தகவலினை அளிப்பார்கள் என்றால் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வி. கே. சின்னசாமி.

திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மீனவர்கள் குறிப்பாக கிராமங்களிலே மீன் பிடிக்கின்றவர்கள் பொதுப்பணித்துறைக்குச் சொந்தமான இடங்களிலேதான் குடியிருந்து வருகிறார்கள். அவர்கள் பல ஆண்டுகளுக்கு முன் வீடு கட்டியும் பொதுப்பணித்துறை அமைச்சர் மூலமாக அந்த இடத்தைப் பெற்றுத்தர முடியாத சூழ்நிலை இருந்து வருகிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அப்படிப்பட்ட, குறிப்பாக என்னுடைய தொகுதியில் பவானிசாகர் போன்ற இடங்களிலேகூட அப்படித்தான் இருக்கிறது. ஆகவே, பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களோடு அணுகி எந்தெந்த இடங்களில் இப்படி மீனவர்கள் பொதுப்பணித்

துறைக்குச் சொந்தமான இடங்களில் வீடு கட்டியிருக்கிறார்களோ அவர்களுக்குப் பட்டாக்கள் கொடுப்பதற்கான நடவடிக்கையை எடுக்க முன்வருவார்களா ? அதோடு மட்டுமல்லாமல் அவர்கள் பிடிக்கின்ற மீன்களுக்கு விலை குறிப்பிட்டு, ஒரு விலை அதாவது ஒரு குறிப்பிட்ட பங்கு

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி தொடர்புடையதாக இருக்க வேண்டும். முதல் கேள்வி தொடர்புடையது. அதன் பிறகு இரண்டாவது கேள்வி தொடர்பு இல்லாதது. மாண்புமிகு அமைச்சர்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது தொடர்பில்லாத கேள்வி. அதாவது " irrelevant question " ஆக இருப்பதால், அது குறித்து தனியாகக் கேள்வி போட்டால் அதற்குரிய விடை தரப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சோ. இராசாராமன்.

திரு. சோ. இராசாராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இயற்கையின் சீற்றத்தால் பாதிக்கப்பட்டு அவர்கள் பல சலுகைகள் அடைவதுபோல, உள்நாட்டிலே இருக்கின்ற மீனவர்கள் 6 மாதத்திற்கு அவர்கள் மீன் தொழில் செய்ய முடிகிறது. மீதி நாட்களிலே அவர்கள் சாப்பாட்டிற்குக்கூட கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதோடு மட்டுமல்லாமல் சென்ற 5, 6 ஆண்டுகளாக இயற்கையின் கோளாறால் காவிரி போன்ற பல ஆறுகளிலே தண்ணீர் வரவில்லை. அவர்கள் இன்னும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இதையெல்லாம் மனதிலே வைத்து அமைச்சர் அவர்களும் அரசும் உள்நாட்டு மீனவர்களுக்கு உடனடியாக குடியிருப்பதற்கு அவர்களுக்கு பட்டா வழங்க வேண்டும், வீடு கட்டிக் கொடுக்கவேண்டும், இதற்கு அரசு ஆவன செய்யுமா என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, " கரைமேல் பிறக்க வைத்தான், எங்களைக் கண்ணீரில் மிதக்கவிட்டான் " என்ற நிலை இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவியின் ஆட்சியில் இருக்காது என்பதை நான் தெளிவாகக் கூறி, கடல் மீனவர்களுக்கு அவர்கள் தொழில் செய்யாத காலங்களில் குறிப்பாக 4 மாதங்கள் அவர்களுக்கு ஒவ்வொரு மாதமும் தலா 270 ரூபாய் அவர்கள் தொழில் செய்யாத காலங்களில் வழங்க அரசு உத்தேசித்து, அதற்கான நடவடிக்கை விரைவாக மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உடுக்குறியிட்ட வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.





## (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்

1—

### குலசேகரம் அரசு மருத்துவமனைக்கு எக்ஸ்-ரே கருவி.

வினா எண். 10—திரு. இரா. நடேசன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) குலசேகரம் அரசு மருத்துவமனையில் எக்ஸ்-ரே கருவி பொருத்தும் நடவடிக்கை அரசு மேற்கொண்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும் ?

விடை—

(அ) மற்றும் (ஆ) இல்லை.

2—

### இராதாபுரம் அரசு மருத்துவமனைக்கு சுற்றுச்சுவர்

வினா எண். 62—திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம்—ராதாபுரம் தொகுதி, திசையன்விளை, இராதாபுரம் அரசு மருத்துவமனையைச் சுற்றிச் சுவர்கள் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

இல்லை.

3—

### சாலை செப்பனிடுதல்.

வினா எண். 154—டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கிள்ளியூர் ஊராட்சி ஒன்றியம், கிள்ளியூர் பேரூராட்சியில் கம்பிளார் சிவன்கோவில் சாலை இந்த ஆண்டில் செப்பனிட அரசு நடவடிக்கை எடுக்குமா ?

[1992 பிப்ரவரி 10

விடை—

கிள்ளியூர் பேரூராட்சியில் கம்பிளார் சிவன்கோவில் சாலையினை நடப்பு ஆண்டில் (1991-92) ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் ரூபாய் 60,000 (ரூபாய் அறுபதாயிரம்) மதிப்பீட்டில் செப்பனிடுவதற்கு அனுமதி வழங்கப்பட்டு, வேலை ஆரம்பிக்கும் நிலையில் உள்ளது.

4—

அந்தியூர் அரசினர் பெண்கள் உயர்நிலைப்பள்ளிக்கு பெண் தலைமையாசிரியர் நியமனம்.

வினா எண். 239— திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

அந்தியூர் அரசினர் பெண்கள் உயர்நிலைப்பள்ளியில் பெண் தலைமையாசிரியர் நியமிக்கப்படாமல் உள்ளதை அரசு அறியுமா?

விடை—

இப்பள்ளியில் 1982 ஆம் வருடம்வரை மகளிர் தலைமை ஆசிரியர்களே பணிபுரிந்து வந்துள்ளார்கள். தற்போது ஆண் தலைமை ஆசிரியர் பணிபுரிகிறார். எனினும், மகளிர் தலைமை ஆசிரியர் ஒருவரை இப்பள்ளியில் நியமிக்க விரைவில் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

5—

பாலம் கட்டுதல்.

வினா எண். 389— திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஆலங்குளம் தொகுதியைச் சேர்ந்த மானூர் ஒன்றியப் பகுதியான சீதைக்குறிச்சியையும் தெக்குப்பட்டியையும் இணைக்கும் வகையில் பாலம் ஒன்று கட்டப்படும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.



1992 பிப்ரவரி 10]

6—

கைபம்ப் போடுதல்

வினா எண். 392— திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

ஆலங்குளம் தொகுதியைச் சேர்ந்த வேலாயுதபுரம் கிராமத்தில் ஆதிதிராவிடர் வாழும் பகுதியில் கைப்பம்பு போட அரசு ஆவன செய்யுமா ?

விடை—

ஆலங்குளம் தொகுதியைச் சேர்ந்த வேலாயுதபுரம் கிராமத்தில் ஆதிதிராவிடர் வாழும் பகுதிக்கு குடிநீர் வசதி வழங்கும் பொருட்டு ஒரு ஆழ்குழாய் கிணறு தோண்டி, கையிறைப்பான் பொருத்தப்பட்டு செயலில் உள்ளது.

7 —

பாலம் கட்டுதல்.

வினா எண். 1466—திரு. வ. மு. சுப்பிரமணியம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மானாமதுரை தொகுதியில் மணலூருக்கு அருகில் திருப்புவனம் கால்வாய்க்கு குறுக்காக பாலம் கட்டித்தரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விரைவில் கட்டி முடிக்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

(அ) மற்றும் (ஆ) இல்லை.

8—

வலிவலம் வேளாண்மை விற்பனையகத்திற்கு சொந்தக் கட்டிடம் கட்டுதல்.

வினா எண். 1515— திரு. வி. தம்புசாமி : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருவாரூர் வட்டம் வலிவலத்தில் செயல்படும் வேளாண்மை விற்பனையகத்திற்கு சொந்தமாகக் கட்டிடம் கட்டும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா ?

[1992 பிப்ரவரி 10

(ஆ) ஆம் எனில், எப்போது கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

9—

## மோட்டார் விபத்துக்கள்.

வினா எண். 1814—திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) 1990 ஆம் ஆண்டில் ஏற்பட்ட மோட்டார் விபத்துக்கள் எத்தனை?

(ஆ) இறந்தோர்களின் எண்ணிக்கை என்ன?

(இ) விபத்துக்களைக் குறைக்க ஏதேனும் சிறப்பு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா?

விடை—

(அ) 34,634.

(ஆ) 6,663.

(இ) ஆம். அதன் விவரம் கீழ்வருமாறு ஆகும்.

### நடவடிக்கைகள்

1. சாலை பாதுகாப்பு மன்றக் கூட்டங்கள் மாவட்ட மாநில அளவில் கூட்டப்படுகின்றன.

2. போக்குவரத்து அதிகமுள்ள சாலைகளிலும், தானியங்கி சைகை விளக்கு, சாலைப் பிரிவுகள் அமைத்தல்.

3. முக்கியமான சந்திப்புகள் / சாலையில் சுரங்கப்பாதை அமைத்தல்.

4. போக்குவரத்துக்கு இடையூறாக உள்ள சாலை ஓர வியாபாரிகள், சைக்கிள் ஓட்டுநர்கள், பேருந்து படிகளில் பயணம் செய்பவர்கள் மீது வழக்கு பதிவு செய்தல்.

5. சாலைகளில் திரியும் கால்நடை மற்றும் தன்னை மறந்து நடப்பவர்களை பிடித்தல்.



1992 பிப்ரவரி 10]

6. கல்லூரி மாணவர்களையும், ரோட்டரி சங்கங்களின் அங்கத்தினர்களைக் கொண்டு "புல்ஸ்ஐ" ஓட்டுவான்கள் வாகன விளக்குகளில் ஒட்டப்பட்டன.

7. அடிக்கடி விபத்து நடக்கும் இடங்களை ஆராய்ச்சி செய்து விபத்து தவிர்க்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

8. விபத்துக்குள்ளாகும் வாகனங்களை தரம்பிரித்து ஆராய்ந்து விபத்தினை தவிர்க்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

9. சைகை பலகைகள் குறிப்பாக நிற்க, கார் நிறுத்துமிடம் போன்ற சைகை பலகைகள் பல இடங்களில் வைக்கப்பட்டுள்ளன.

10. துண்டுப்பிரசுரங்களும், செய்தி அட்டைகளும் பொது மக்களுக்கும் வாகன ஓட்டுநர்களுக்கும் விநியோகிக்கப்படுகின்றன.

11. போக்குவரத்துப் பூங்கா அமைக்கப்பட்டு, பள்ளி சிறுவர்கள் மற்றும் பள்ளிகள் அதனை சிறந்த முறையில் உபயோகப்படுத்துகிறார்கள்.

12. கருத்து மன்றங்களும், கலந்துரையாடல்களும் சேவை நிறுவனங்களுடன் நுகர்வோர் பாதுகாப்பு மன்றங்களுடனும் மாநகரில் பல இடங்களிலும் பல கால கட்டங்களிலும் நடைபெற்று வருகின்றன.

10—

## வானொலி, தொலைக்காட்சிப் பெட்டிகள் அளித்தல்.

வினா எண். 1851—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சை மாவட்டம், திருவோணம் ஒன்றியம், பாதரங்கோட்டை (வ) ஊராட்சி கருப்பட்டித் தெரு மக்களுக்கு வானொலிப் பெட்டியும் தொலைக்காட்சிப் பெட்டியும் அளிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

இவ்வாண்டில் தொலைக் காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட வேண்டிய ஊராட்சிகளின் பெயர்ப் பட்டியல்கள் அவைகளின் ஆண்டு வருமானங்களுடன் மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து பெறப்பட்டுள்ளன. இப்புள்ளி விவரங்களின்படி விகிதாச்சார அடிப்படையில் எல்லா மாவட்டங்களுக்கும்

[1992 பிப்ரவரி 10

தொலைக் காட்சிப் பெட்டிகள் பகிர்ந்து அளிக்கப்படும். அந்
தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களே ஊராட்சிகளைத் தெரிவு
செய்வார்கள். தனியாக இக்குடியிருப்பிற்கு தொலைக் காட்சிப்
பெட்டிகள் வழங்கும் செயற் குறிப்பு அரசிடம் இல்லை.
வானொலிப் பெட்டிகள் அந்தந்த ஊராட்சியே வாங்கிக் கொள்ள
லாம்.

11—

## தெரு விளக்கை எரியச் செய்தல்.

வினா எண். 1890—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், திருவோணம் ஒன்றியம், பாதரங்கோட்டை (தெ) ஆதிதிராவிடர் தெருவில் எரியாத தெருவிளக்கை எரியவைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

தற்சமயம் எல்லா தெரு விளக்குகளும் எரியவிடப்பட்டுள்ளன.

12—

வினா எண். 1891—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், திருவோணம் ஒன்றியம், பாதரங்கோட்டை (தெ.) குடியிருப்பில் எரியாத தெருவிளக்கை எரியவைக்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

விடை—

தற்சமயம் எல்லா தெரு விளக்குகளும் எரிய விடப்பட்டுள்ளன.

13—

வினா எண். 1902—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், திருவோணம் ஒன்றியம் அதம்பை வடக்கில் தெரு விளக்கை எரிய வைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?



1992 பிப்ரவரி 10]

விடை—

தற்சமயம் தெரு விளக்குகள் எரியவிடப்பட்டுள்ளன.

14—

வினா எண் 1915—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம் நடுவிக்கோட்டையைச் சேர்ந்த சூரங்கொல்லையில் தெரு விளக்கை எரியவைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

சூரங்கொல்லைப் பகுதியில் உள்ள எல்லா தெரு விளக்குகளும் தற்சமயம் எரிகின்றன.

15—

வினா எண் 1917—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம் கழுகுப்புளிக்காடு ஆதிதிராவிடர் தெருவில் தெருவிளக்கை எரிய வைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

இக்குடியிருப்பில் 20 தெருவிளக்குகள் உள்ளன. அனைத்தும் தற்போது எரிய வைக்கப்பட்டுள்ளன.

16—

வினா எண் 1937—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம், நடுவிக்கோட்டையைச் சேர்ந்த செக்கடிக் கொல்லைக்கு தெருவிளக்கு விஸ்தரித்துக் கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

[1992 பிப்ரவரி 10

விடை—

இக்குடியிருப்பிற்கு தெரு விளக்குகள் விஸ்தரிப்பு செய்திட மின் வாரியத்திடம் காப்புத் தொகை செலுத்தப்பட்டு உள்ளது. தமிழ்நாடு மின் வாரியத்தினால் வரிசைக் கிரமமாகத் தெரு விளக்கு விஸ்தரிப்பு டணி மேற்கொள்ளப்படும்.

17—

வினா எண் 1939—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம், கொண்டி குளத்தில் தெருவிளக்கை எரிய வைக்கும் செயற்திட்டம் அரசிடம் உள்ளதா ?

விடை—

கொண்டிகுளத்திலுள்ள அனைத்து தெரு விளக்குகளும் தற்போது எரிந்து வருகின்றன.

18—

வினா எண் 1943—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம், நடுவிக் கோட்டையில் தெரு விளக்கை எரியவைக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

இவ்வூராட்சியிலுள்ள தெருவிளக்குகள் அனைத்தும் தற் சமயம் எரிகின்றன.

19—

வானொலி, தொலைக் காட்சிப் பெட்டிகள் அளித்தல்.

வினா எண் 1975—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், திருவோணம் ஒன்றியம், அதம்பை ஊராட்சி வல்லம்பகொல்லைக்கு வானொலி, தொலைக் காட்சிப் பெட்டிகள் அளிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா



1992 பிப்ரவரி 10]

விடை—

இவ்வாண்டில் தொலைக் காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட வேண்டிய ஊராட்சிகளின் பெயர்ப் பட்டியல்கள் அவைகளின் ஆண்டு வருமானங்களுடன் மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து பெறப்பட்டுள்ளன. இப்புள்ளி விவரங்களின்படி விகிதாசசார அடிப்படையில் எல்லா மாவட்டங்களுக்கும் தொலைக் காட்சிப் பெட்டிகள் பகிர்ந்து அளிக்கப்படும். அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களே ஊராட்சிகளைத் தெரிவு செய்வார்கள். தனி யாக இக்குடியிருப்பிற்கு தொலைக் காட்சிப் பெட்டிகள் வழங் கும் செயற் குறிப்பு அரசிடம் இல்லை. வானொலிப் பெட்டி அந்தந்த ஊராட்சியே வாங்கிக்கொள்ளலாம்.

20—

வினா எண் 1990—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், திருவோணம் ஒன்றியம், அதம்பை (தெ)-ஐச் சேர்ந்த திருவள்ளுவர் நகருக்கு வானொலி, தொலைக் காட்சிப் பெட்டிகள் அளிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

இவ்வாண்டில் தொலைக் காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட வேண்டிய ஊராட்சிகளின் பெயர்ப் பட்டியல்கள் அவைகளின் ஆண்டு வருமானங்களுடன் மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து பெறப்பட்டுள்ளன. இப்புள்ளி விவரங்களின் படி விகிதாச்சார அடிப்படையில் எல்லா மாவட்டங்களுக்கும் தொலைக் காட்சிப் பெட்டிகள் பகிர்ந்து அளிக்கப்படும். அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களே ஊராட்சிகளைத் தெரிவு செய்வார்கள். தனியாக இக்குடியிருப்பிற்கு தொலைக் காட்சிப் பெட்டிகள் வழங்கும் செயற் குறிப்பு அரசிடம் இல்லை. வானொலிப் பெட்டிகள் அந்தந்த ஊராட்சியே வாங்கிக் கொள்ளலாம்.

21—

வினா எண் 1991—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், திருவோணம் ஒன்றியம், அதம்பை (தெ)-யைச் சேர்ந்த ஆதி திராவிடர் தெருவிற்கு வானொலி, தொலைக் காட்சிப் பெட்டிகள் அளிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

[1992 பிப்ரவரி 10

விடை—

இவ்வாண்டில் தொலைக் காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட வேண்டிய ஊராட்சிகளின் பெயர்ப் பட்டியல்கள் அவைகளின் ஆண்டு வருமானங்களுடன் மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து பெறப்பட்டுள்ளன. இப்புள்ளி விவரங்களின் படி விகிதாச்சார அடிப்படையில் எல்லா மாவட்டங்களுக்கும் தொலைக் காட்சிப் பெட்டிகள் பகிர்ந்து அளிக்கப்படும். அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களே ஊராட்சிகளைத் தெரிவு செய்வார்கள். தனியாக இக்குடியிருப்பிற்கு தொலைக் காட்சிப் பெட்டிகள் வழங்கும் செயற் குறிப்பு அரசிடம் இல்லை. வானொலிப் பெட்டி அந்தந்த ஊராட்சியே வாங்கிக் கொள்ளலாம்.

22—

ஆதிதிராவிடர்களுக்கு காலனி வீடுகள்.

வினா எண் 2000—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், திருவோணம் ஒன்றியம், அதம்பை (தெ) ஆதிதிராவிடர்கள் மீதமுள்ளவர்களுக்கு காலனி வீடுகள் கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழி முறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

23—

வானொலி, தொலைக் காட்சிப் பெட்டிகள் அளித்தல்.

வினா எண் 2004—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், திருவோணம் ஒன்றியம், கா. உஞ்சியவிடுதி ஆதி திராவிடர்களுக்கு வானொலிப் பெட்டியும், தொலைக் காட்சிப் பெட்டியும் அளிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?



1992 பிப்ரவரி 10]

விடை—

இவ்வாண்டில் தொலைக் காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட வேண்டிய ஊராட்சிகளின் பெயர்ப் பட்டியல்கள் அவைகளின் ஆண்டு வருமானங்களுடன் மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து பெறப்பட்டுள்ளன. இப்புள்ளி விவரங்களின்படி விகிதாச்சார அடிப்படையில் எல்லா மாவட்டங்களுக்கும் தொலைக் காட்சிப் பெட்டிகள் பகிர்ந்து அளிக்கப்படும். அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களே ஊராட்சிகளைத் தெரிவு செய்வார்கள். தனியாக இக்குடியிருப்பிற்கு தொலைக் காட்சிப் பெட்டிகள் வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் இல்லை. வானொலிப் பெட்டிகள் அந்தந்த ஊராட்சியே வாங்கிக் கொள்ளலாம்.

24—

பரமக்குடி அரசு ஆண்கள் மேல் நிலைப் பள்ளிக்கு சுற்றுச் சுவர்

வினா எண் 2032—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பரமக்குடி அரசு ஆண்கள் மேல் நிலைப் பள்ளிக்கு சுற்றுச் சுவர் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

இல்லை.

25—

பூங்கா பராமரிப்பு.

வினா எண் 2055—திரு. கு. லாரன்ஸ் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகர்கோவில் மையப் பகுதியிலுள்ள சச்சி ஒத்தமா சர். சி.பி. இராமசாமி ஐயர் நினைவுப் பூங்கா சரியாக பராமரிக்கப்படாமல் உள்ளது தற்போது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அரசு நடவடிக்கைகள் மேற்கொள்ளுமா ?

[1992 பிப்ரவரி 10

விடை—

(அ) நாகர்கோவில் மையப்பகுதியிலுள்ள சச்சி ஓத்தமா சர். சி.பி. இராமசாமி ஐயர் நினைவுப் பூங்கா நாகர்கோவில் நகராட்சியால் தற்போது சரியாக பராமரிக்கப்பட்டு வருகிறது.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

26—

கைத்தறி நெசவாளர்களுக்கு மருத்துவப்படி.

வினா எண் 2080—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கைத்தறி நெசவாளர்களுக்கு மருத்துவப்படி (Medical Allowance) வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

27—

கைத்தறி நெசவாளர்களுக்கு வீட்டு வாடகைப்படி.

வினா எண் 2081—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கைத்தறி நெசவாளர்களுக்கு வீட்டு வாடகைப்படி வழங்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அரசு அதன் மீது எடுத்துள்ள முடிவு என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.



1992 பிப்ரவரி 10]

28—

புதுக்கோட்டை அரசு தலைமை மருத்துவமனையில் மனநோய்ப் பிரிவு.

வினா எண் 2082—திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டையிலுள்ள அரசு தலைமை மருத்துவமனையில் தனியாக மன நோய்ப் பிரிவு தொடங்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

புதுக்கோட்டை அரசு தலைமை மருத்துவமனையில் சிகிச்சை பெற வெளி நோயாளி பிரிவு மன நோய் மருத்துவம் பயின்ற மருத்துவருடன் இயங்கி வருகிறது. உள் நோயாளி பிரிவு தொடங்க செயற் குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

29—

புதுக்கோட்டை—பட்டுக்கோட்டைக்கு புதிய பேருந்துகள் விடுதல்.

வினா எண் 2092—திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டத்தில் மருதுபாண்டியர் போக்குவரத்துக் கழகம் மூலம் புதுக்கோட்டையிலிருந்து ஆலங்குடி, கருக்காக்குறிச்சி, திருச்சிற்றம்பலம் வழியாக பட்டுக்கோட்டைக்கு புதிய பேருந்துகள் விட அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை—பட்டுக்கோட்டை (வழி) ஆலங்குடி, கருக்காகுறிச்சி, வடக்கு செருவாவிடுதி, உப்பு விடுதி, திருச்சிற்றம்பலம் வழித்தடத்தின் நீளம் 63·3 கி. மீ. ஆகும். கருக்காகுறிச்சியிலிருந்து வடக்கு செருவாவிடுதி, உப்பு

விடுதி வழியாக திருச்சிற்றம்பலம் வரையிலான 10.4 கி.மீ. தூரம் பேருந்து இயங்காத பகுதியாகும். இப்பகுதியில் இரண்டு குறுகலான பாலங்கள் உள்ளன. இப்பாலங்களின் வழியாக பேருந்து செலுத்துவது இயலாது.

30—

## புதுப்பட்டினம் கோழிப்பண்ணையை மீண்டும் இயக்குதல்.

வினா எண் 2107—திரு. கே. ஆர். இராமசாமி அம்பலம்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம் புதுப்பட்டினத்தில் இயங்காமல் இருக்கும் கோழிப் பண்ணையை மீண்டும் இயக்க அரசிடம் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது முதல் மீண்டும் இயங்கும் ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

31—

## வானொலிப்பெட்டி வழங்குதல்.

வினா எண் 2166—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், இடையாத்தி (மே), ஆதிதிராவிடர்களுக்கு வானொலிப் பெட்டி வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

தேவையான வானொலிப் பெட்டிகளை அந்தந்த ஊராட்சியின் நிதியிலிருந்தே வாங்கிக்கொள்ளலாம். எனவே, தனித் தனியாகச் செயற்குறிப்பு தேவையில்லை.





32—

## கைத்தறி நெசவாளர்களுக்கு தள்ளுபடி மானியம்.

வினா எண் 2242—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பரமக்குடி—எமனேஸ்வரம் கைத்தறி நெசவாளர்களுக்கு 1990-91 ஆம் ஆண்டு அரசு தள்ளுபடி செய்த தொகை எவ்வளவு?

விடை—

பரமக்குடி—எமனேஸ்வரம் பகுதியிலுள்ள நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு 1990-91 ஆம் ஆண்டு மொத்த தள்ளுபடி மானியம் ரூ. 48,22,813.41 அரசு வழங்கியுள்ளது.

33—

## நலிவடைந்த கூட்டுறவு கைத்தறிச் சங்கங்கள்.

வினா எண் 2261—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நலிவடைந்த கூட்டுறவு கைத்தறிச் சங்கங்களை அரசு ஏற்று நடத்த நடவடிக்கை எடுக்கப்படுமா ?

விடை—

இதற்காக, தனியாக ஒரு திட்டம் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

34—

## சீர்திருத்தப் பள்ளிகள்.

வினா எண் 2403—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழ்நாட்டிலுள்ள சீர்திருத்தப் பள்ளிகள் எத்தனை ?

(ஆ) அவற்றால் பயன் பெற்றவர் எத்தனை பேர் ?

விடை—

(அ) அரசு சார்பில் ஏழு இளைஞர் இல்லங்களும், மூன்று சிறப்பு இல்லங்களும் மற்றும் தனியார் தொண்டு நிறுவனங்களின் இம் 10 இளைஞர் இல்லங்கள் நடத்தப்படுகின்றன.

[1992 பிப்ரவரி 10

(ஆ) இப்பள்ளிகளில் கடந்த 10 ஆண்டுகளில் பயன்பெற்ற சிறார்களின் எண்ணிக்கை சுமார் 4,800 ஆகும்.

35—

நகரப் பேருந்து விடுதல்.

வினா எண் 2440—திரு. ஆர். முருகையா பாண்டியன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருநெல்வேலி–கட்டபொம்மன் மாவட்டம், காரையார் வழியாக கல்யாண தீர்த்தத்திற்கு 1990 நவம்பரிலிருந்து 1991 ஏப்ரல் வரை நகரப் பேருந்து விடப்பட்டனவா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

(அ) மற்றும் (ஆ)

1990 நவம்பரிலிருந்து 1991 மார்ச் மாதம் வரை கல்யாண தீர்த்தம் செல்லும் வழியில் உள்ள அகஸ்தியர் அருவி வரை ஒரு நகரப் பேருந்து இயக்கப்பட்டது. அகஸ்தியர் அருவியில் இருந்து கல்யாண தீர்த்தம் வரை செல்ல சாலை கிடையாது. அகஸ்தியர் அருவி வரை இயக்கப்பட்ட நகரப் பேருந்திற்கு அகஸ்தியர் அருவி விலக்கு வரை வனத்துறையின் அனுமதி 1991 ஆம் வருடம் மார்ச் மாதம் முடிய மட்டுமே கிடைத்தபடியால் அதன்பிறகு இப் பேருந்து இயக்கப்படவில்லை. இப்பகுதியில் பேருந்து வசதியினை தொடர்ந்து அளிக்கும் பொருட்டு வனத் துறையினரிடம் அனுமதி பெற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

36—

சிவந்திபுரம் ஊராட்சி குடிநீர்த் திட்டம்.

வினா எண் 2458—திரு. ஆர். முருகையா பாண்டியன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருநெல்வேலி–கட்டபொம்மன் மாவட்டம் அம்பாசமுத்திரம் ஊராட்சி ஒன்றியம், சிவந்திபுரம் ஊராட்சிக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர்த் திட்டம் அனுமதிக்கப்பட்டதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?



1992 பிப்ரவரி 10]

விடை—

(அ) ஆம்.

(ஆ) சிவந்திபுரம் ஊராட்சிக் குடிநீர்த் திட்ட மதிப்பீடு ரூ. 33.33 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டு வாரிய நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் தாமிரபரணி ஆற்றுப் படுகையில் அமைக்கப்பட்டுள்ள நீர் உறிஞ்சி கிணறுகளை நீராதாரமாகக் கொண்டு ஏற்கனவே உள்ள மேல்நிலைத் தொட்டிகளுடன் கூடுதலாக 1.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி ஒன்றும் 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி ஒன்றும் அமைத்து 5.60 கி.மீ. தொலைவிற்கு நீர் உந்துக் குழாய்களும் சுமார் 10.70 கி.மீ. தொலைவிற்கு பகிர்மானக் குழாய்களும் பதித்து குடிநீர் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

37—

அரசு மேல்நிலைப் பள்ளிக்கு சுற்றுச் சுவர்.

வினா எண் 2481—டாக்டர் அ. செல்லக்குமார் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சென்னை, எம்.எம்.டி.ஏ. காலனியில் இருக்கும் அரசு மேல்நிலைப் பள்ளிக்கு சுற்றுச்சுவர் கட்ட அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

38—

கால்நடை முகாம்களுக்கு நிதி ஒதுக்கீடு.

வினா எண் 2803—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கால்நடை சிகிச்சை மற்றும் கண்காணிப்பு முகாம்களுக்கு கால்நடை பராமரிப்புத் துறை நிதி ஒதுக்கீடு செய்யுமா ?

[1992 பிப்ரவரி 10

விடை—

இதற்கான திட்டங்கள் ஏதும் தற்போது இல்லை.

39—

வாய்க்கால் வெட்டுதல்.

வினா எண் 2813—திரு. கே. கந்தசாமி : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

சேலம் மாவட்டம், கெங்கவல்லி ஒன்றியம், ஆணையாம் பட்டியிலிருந்து புனல்வாசல் செல்லும் வாய்க்காலிலிருந்து நாவலூர் பெரிய ஏரிக்கு வாய்க்கால் வெட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

இல்லை.

40—

நரிக்குறவர் இனத்தை பழங்குடியினர் பட்டியலில் சேர்த்தல்.

வினா எண் 2833—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) நரிக்குறவர்கள் சமூகத்தை S.T. பட்டியலில் சேர்க்கும்படி அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

(அ) மற்றும் (ஆ)

நரிக்குறவர் இனத்தைப் பழங்குடியினர் பட்டியலில் சேர்ப்பதற்காக ஏற்கனவே மைய அரசுக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. மைய அரசின் முடிவு எதிர்பார்க்கப்படுகிறது.



1992 பிப்ரவரி 10]

41—

மீனவர்களுக்கு விசைப்படகுகள்.

வினா எண். 3569 ஏ—திரு. து. மூர்த்தி : மாண்புமிகு மீனளத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சீர்காழி தொகுதி மீனவர்களுக்கு விசைப் படகுகள் இவ்வாண்டு வழங்கப்படுமா ?

(ஆ) ஆம் எனில், இந்த நிதியாண்டில் எத்தனை விசைப் படகுகள் வழங்கப்படும் ?

விடை—

(அ) மற்றும் (ஆ) இல்லை.

42—

பெரணமல்லூர் தொகுதியில் பேருந்துகள்.

வினா எண் 3592—திரு. ஆ. கு. சீனிவாசன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பெரணமல்லூர் தொகுதியில் நிறுத்தி வைக்கப்பட்ட பேருந்துகளை மீண்டும் விட அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

எரிபொருள் கட்டுப்பாட்டின்காரணமாக நிறுத்தி வைக்கப்பட்ட அனைத்து பேருந்துகளும் மீண்டும் இயக்கப்பட்டு விட்டன.

43—

அடுக்கு மாடிக் குடியிருப்புகளில் தபால் பெட்டிகள் வைத்தல்.

வினா எண். 3886—திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சென்னைப் பெருநகர் பகுதிகளில் உள்ள அடுக்கு மாடி குடியிருப்புகளில் தபால் பெட்டிகள் வைக்கப்பட வேண்டும் என்று சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் கட்டாயப்படுத்தப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

[1992 பிப்ரவரி 10

விடை—

(அ) தற்போது அமலில் உள்ள அபிவிருத்தி கட்டுப்பாட்டு விதிகளின்படி அடுக்குமாடிக் குடியிருப்புகளின் தரைத்தளப் பகுதிகளில் தபால் பெட்டிகளை கட்டாயமாக வைக்க விதிகளில் வகை செய்யப்படவில்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

44—

வறுமைக் கோட்டுக்குக் கீழ் உள்ளவர்கள் விவரம்.

வினா எண். 3933—திரு. எம். கே. பாலன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) சமீபத்திய மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி தமிழ்நாட்டில் வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ளவர்கள் எண்ணிக்கை எவ்வளவு ?

(ஆ) படித்தவர்கள் எண்ணிக்கை எவ்வளவு ?

விடை—

(அ) 1991 ஆம் ஆண்டிற்கான மக்கட்தொகைக் கணக்கெடுப்பின் போது வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ளவர்கள் பற்றிய விவரம் கணக்கெடுக்கப்படவில்லை என மக்கட் தொகை கணக்கெடுப்பு இயக்குநர் தெரிவித்துள்ளார்.

(ஆ) 1991 ஆம் ஆண்டிற்கான மக்கட்தொகைக் கணக்கெடுப்பின் தற்காலிக புள்ளி விவரங்கள்படி தமிழ்நாட்டில் படித்தவர்களின் மொத்த எண்ணிக்கை 3,03,83,416.

| | | |
|---|---|---|
| இவர்களில் ஆண்கள் .. | .. | 1,80,66,226 |
| பெண்கள் .. | .. | 1,23,17,190 |

45—

நுகர்வோர் பாதுகாப்பு நீதிமன்றங்கள்.

வினா எண். 4084—திரு. ஆ. சுப்புரத்தினம் : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழகத்தில் அனைத்து மாவட்டங்களிலும் நுகர்வோர் பாதுகாப்பு நீதிமன்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளதா ?

(ஆ) எந்தெந்த மாவட்டங்களில் ஏற்படுத்தப்படவில்லை?



1992 பிப்ரவரி 10]

விடை—

(அ) மற்றும் (ஆ)

தமிழ்நாட்டிலுள்ள 21 மாவட்டங்களிலும் நுகர்வோர் குறை தீர்க்கும் நீதிமன்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. தஞ்சாவூர் மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்பட்டு 18—10—1991 முதல் 22-வது மாவட்டமாக நாகப்பட்டினம் காயிதே மில்லத் மாவட்டம் புதிதாக உருவாக்கப்பட்டுள்ளது. இம்மாவட்டத்திலும் மாவட்ட நுகர்வோர் குறைதீர்க்கும் நீதிமன்றம் அமைப்பதற்கு மைய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. எனவே, இம் மாவட்டத்திலும் மாவட்ட நுகர்வோர் குறைதீர்க்கும் நீதிமன்றம் விரைவில் அமைக்கப்படும்.

46—

தச்சக்காடு கிராமத்தில் பஸ் நிறுத்தம்.

வினா எண். 4133—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) புவனகிரி தொகுதி பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியத்தில் தச்சக்காடு கிராமத்தில் பஸ் நிறுத்தம் செய்து தரப்படுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை—

(அ) மற்றும் (ஆ) தச்சக்காடு வழியாக இயக்கப்பட்டு வரும் தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகப் பேருந்து தச்சக்காடு கிராமத்தில் நின்று பயணிகளை ஏற்றியும் இறக்கியும் வருகிறது.

47—

சத்துணவுத் திட்டப் பணியாளர்களுக்கு மருத்துவப் பரிசோதனை.

வினா எண். 4205—டாக்டர் ஜெ. பரந்தாமன் : மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

டாக்டர் எம். ஜி. ஆர். சத்துணவுத் திட்டத்தில் பணிபுரிகின்ற சமையலாளர்களுக்கு ஆறு மாதத்திற்கு ஒருமுறை மருத்துவப் பரிசோதனை செய்யும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா

[1992 பிப்ரவரி 10

விடை—

ஆம்.

48—

குட்டை அமைக்கும் திட்டம்.

வினா எண். 4256—டாக்டர் மு. சீனியம்மாள் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

அவிநாசி தாலுகா, தெக்கலூர் கிராமம் மக்கள் க. ச. எண் 273-இல் குட்டை அமைக்கும் திட்டம் எந்த நிலையில் உள்ளது ?

விடை—

கோவை மாவட்டம், அவிநாசி வட்டம், தெக்கலூர் கிராமம் க. ச. எண். 273-இல் வண்ணாத்தங்கரை ஓடையின் குறுக்கே குட்டை அமைக்கும் திட்டத்திற்கான திட்ட மதிப்பீடு ரூபாய் 15.76 இலட்சம் செலவில் தயாரிக்கப்பட்டு தலைமைப் பொறியாளர் (திட்டம் மற்றும் வடிவமைப்பு) அவர்களின் பரிசீலனையில் உள்ளது.

49—

சோழன் போக்குவரத்துக் கழகத்தில் பணிபுரியும் தாழ்த்தப்பட்டோர் எண்ணிக்கை.

வினா எண். 4316—திரு. என். ஆர். ராஜேந்திரன்; மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) இட ஒதுக்கீட்டு அடிப்படையில் சோழன் போக்குவரத்துக் கழகத்தில் தாழ்த்தப்பட்டவர்கள் எத்தனை பேர் பணிபுரிகின்றனர் ?

(ஆ) காலியிடங்கள் இருப்பின் எப்போது நிரப்பப்படும் ?

விடை—

(அ) இடஒதுக்கீடு அடிப்படையில் சோழன் போக்குவரத்துக் கழகத்தில் தாழ்த்தப்பட்டவர்கள் 925 பேர் பணிபுரிகின்றனர்.

(ஆ) எதிர்காலத்தில் பணிக்காலியிடம் தோன்றும்போது குறிப்பிட்டளவைவிடக் குறைவாக உள்ள இனங்களில் 'தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி இனத்தவர்களை எடுப்பதின் மூலம் குறியீட்டளவை நிறைவு செய்திட தீர்மானிக்கப்பட்டுள்ளது.



1992 பிப்ரவரி 10]

50—

அழகப்பா பல்கலைக் கழகத்தில் வணிக மேலாண்மை முதுகலைப் படிப்பு துவக்குதல்.

வினா எண். 4418—திருமதி கற்பகம் இளங்கோ : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

அழகப்பா பல்கலைக் கழகத்தில் M.B.A. Banking Technology Course துவக்கப்படுமா ?

விடை—

காரைக்குடி அழகப்பா பல்கலைக் கழகத்தில் வணிக மேலாண்மை (வங்கித் தொழில் நுட்பவியல்) முதுகலைப்படிப்பு (M.B.A. Banking Technology Course) துவக்குவது குறித்து கருத்துரு நிதிநிலைக்கு ஏற்ற வகையில் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

51—

வினாக்கள்—விடைகள்.

ராதாபுரம் தொகுதியில் வெள்ள நிவாரண உதவித் தொகை.

வினா எண். 50—திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

ராதாபுரம் தொகுதி டிசம்பர் திங்களில் ஏற்பட்ட வெள்ளத்தினால் கால்நடை, மீன்வலை, வீட்டுச்சாமான்கள், படகு போன்றவைகளை இழந்தவர்களுக்கு நிவாரணம் அளிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

விடை—

1990ஆம் ஆண்டு அக்டோபர் நவம்பர் மற்றும் டிசம்பர் திங்களில் திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம் ராதாபுரம் வட்டத்தில் ஏற்பட்ட வெள்ளத்தில் கால்நடை, மீன்வலை, வீட்டுச் சாமான்கள், படகு போன்றவைகளை இழந்த நபர்களுக்கு இதுவரை எந்த நிவாரணமும் வழங்கப்படவில்லை. அவ்வாறு நிவாரணம் வழங்குவதற்கு அரசிடம் திட்டம் இல்லை.

[1992 பிப்ரவரி 10

52—

பால்வளத்தில் வெண்மைப் புரட்சி.

வினா எண். 106— திரு. டி. எம். ரங்கராஜன் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

வெண்மைட புரட்சி பால்வளத்துறையில் ஏற்படுத்திட அரசிடம் திட்டங்கள் உள்ளனவா ?

விடை—

ஆம். தமிழகத்தில் வெண்மைப் புரட்சி பால்வளத்தில் ஏற்படுத்திட மூன்றாம் பால் பெருக்குத் திட்டத்தின் கீழ் ரூபாய் 68.19 கோடி மதிப்பீட்டில் திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன.

53—

நெசவாளர்களுக்கு சலுகைகள்.

வினா எண். 203— டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு கைத்தறி மற்றும் துணி நூல்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழகம் முழுவதுமாக நெசவுத் தொழிலில் ஈடுபட்டுள்ள நெசவாளர் எண்ணிக்கை எவ்வளவு ?

(ஆ) நெசவாளர்களுக்கு அரசு சார்பில் கிடைக்கப்பெறும் சலுகைகள் யாவை ?

விடை—

(அ) 1987 ஆம் வருட கணக்கெடுப்பின்படி, தமிழகம் முழுவதுமாக நெசவுத் தொழிலில் ஈடுபட்டுள்ள 4.27 இலட்சம் எண்ணிக்கையுள்ள கைத்தறிகளில், சுமார் 13 இலட்சம் நபர்கள் கைத்தறி மற்றும் உபதொழிலில் ஈடுபட்டுள்ளார்கள்.

(ஆ) கூட்டுறவு அமைப்பின்கீழ் உள்ள நெசவாளர்களுக்கு அரசு சார்பில் கீழ்க்கண்ட திட்டங்கள் மூலம், சலுகைகள் வழங்கப்படுகின்றன.

1. சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டம்.

2. நெசவாளர் வீட்டுவசதி திட்டம்.

3. டாக்டர் எம். ஜி. ஆர். நெசவாளர் நல்வாழ்வு அறக்கட்டளை.



1992 பிப்ரவரி 10]

4. பங்குத் தொகைக் கடன்.

5. அரசு பங்கு மூலதனம்.

6. தறிகள் நவீனமயமாக்கும் திட்டம்.

7. நெசவாளர் குடும்ப ஓய்வூதியத் திட்டம்.

54—

பரமக்குடியில் இரத்த சேமிப்பு நிலையம்.

வினா எண். 294—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பரமக்குடி தாலுகா மருத்துவ மனைகளில் இரத்த சேமிப்பு நிலையம் (Blood Bank) வைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

தற்போது அரசிடம் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

55—

தொழுநோய் மருத்துவமனை.

வினா எண். 325—திரு. அ. பாப்பா சுந்தரம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

குளித்தலை மையப்பகுதியிலுள்ள தொழுநோய் மருத்துவ மனையை அந்நகரின் ஓரப்பகுதிக்கு மாற்றும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

விடை—

இல்லை.

56—

மலையில் மரங்கள் வளர்க்கும் திட்டம்.

வினா எண். 501—திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வேலூரைச் சுற்றியுள்ள மலையில் மரங்கள் வளர்க்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

[1992 பிப்ரவரி 10

விடை—

(அ) மற்றும் (ஆ) வேலூரைச் சுற்றியுள்ள கோட்டமலை மற்றும் பாலமதி மலைகளின் மீது ஏற்கெனவே காடு வளர்ப்புத் திட்டத்தின் கீழ் 975.3 எக்டேர் பரப்பில் பலவகை செடிகள் நடப்பட்டுள்ளன. இதுதவிர, 1990-91 இல் பாலமதி காப்புக் காட்டில் வான்வழி விதைத் தூவும் திட்டத்தின்கீழ் 500 எக்டேர் பரப்பில் விதை தூவப்பட்டுள்ளது.

57—

## அரசினர் உறைவிடப்பள்ளிகள்.

வினா எண். 596—திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பெரியார் மாவட்டத்தில் 1990-91 இல் காக்காயனூர், குட்டையூர், ஒந்தணை, சோழகணை போன்ற ஊர்களுக்கு அரசினர் உறைவிடப்பள்ளி திறக்க காலந்தாழ்த்தியது அரசுக்குத் தெரியுமா ?

விடை—

பெரியார் மாவட்டம், சோழகணை, ஒந்தணை, குட்டையூர் மற்றும் காக்காயனூர் ஆகிய இடங்களில் உண்டு உறைவிடப் பள்ளிகள் தொடங்க இயக்குநரால் முன்மொழிவுகள் 5—4—90 மற்றும் 17—9—90 அன்று பெறப்பட்டன. அவை அரசின் பரிசீலனைக்குப் பிறகு காக்காயனூர் மற்றும் குட்டையூர் ஆகிய இரண்டு இடங்களில் மட்டும் புதிய உண்டு உறைவிடப் பள்ளிகள் தொடங்க 19—4—1991 அன்று உத்திரவிடப்பட்டது. அதன் படி குட்டையூரில் 10—6—1991 அன்றும் காக்காயனூரில் 11—6—1991 அன்றும் பள்ளிகள் திறக்கப்பட்டுள்ளன. ஆகவே மேற்படி பள்ளிகளை திறப்பதில் தாமதம் ஏதும் ஏற்படவில்லை.

58—

## இராசா மிராசுதார் அரசினர் மருத்துவமனைக்கு லிப்ட் வசதி.

வினா எண். 1092—திரு. சோ. இராசாராமன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தஞ்சாவூர் இராசா மிராசுதார் அரசினர் மருத்துவ மனையில் அமைந்துள்ள அறுவை சிகிச்சை அரங்கிற்கு லிப்ட் வசதி இல்லாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா ?



1992 பிப்ரவரி 10]

(ஆ) ஆம் எனில், லிப்ட் வசதி செய்துதர அரசு முன் வருமா ?

விடை—

(அ) தெரியும்.

(ஆ) இராசா மிராசுதார் மருத்துவமனையில் இரண்டடுக்கு மாடிக்கட்டிடம்தான் ( Ground Floor and First Floor ) இருக்கிறது. பன்மாடிக்கட்டிடம் ஏதும் இல்லை. எனவே, லிப்ட் வசதி தேவையில்லை.

59—

## மானூரில் நூல் நிலையக் கட்டிடம்.

வினா எண் 1190—திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

ஆலங்குளம் தொகுதி மானூரில் நூல் நிலையக் கட்டிடம் கட்ட அரசு முன்வருமா ?

விடை—

காமராசர் மாவட்டம், ஆலங்குளம் தொகுதி மானூரில் தற்போது நூலகம் இல்லை. எனவே, இது குறித்து வினாவுக்கு இடமில்லை.

60—

## கீழ்ச்செருவாய் கிராமத்திற்கு குடிநீர்த் திட்டம்.

வினா எண் 1268—திரு. ச. புரட்சிமணி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தென்னாற்காடு மாவட்டம், மங்களூர் தொகுதியில் கீழ்ச் செருவாய் என்ற கிராமத்திற்கு ஆற்றுக் குடிநீர் கொண்டுவரும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

விடை—

ஆம். வெள்ளாற்றில் அமைக்கப்பட்டுள்ள ஆழ்துளைக் கிணற்றை நீராதாரமாகக் கொண்டு, கீழ்ச்செருவாய் கிராமத்திற்கான குடிநீர்த் திட்டம் முடிக்கப்பட்டு ஒன்றியத்தின் பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

[1992 பிப்ரவரி 10

61—

சாலை போடும் திட்டம்.

வினா எண் 1270—திரு. ச. புரட்சிமணி : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தென்னாற்காடு மாவட்டம், மங்களூர் தொகுதியில் தொளார் முதல் செங்கமேடு வரை சாலை போடும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

விடை—

இல்லை.

62—

வினா எண் 1273—திரு. ச. புரட்சிமணி : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தென்னாற்காடு மாவட்டம், மங்களூர் தொகுதியில் கொடுக்கூர், கீழப்பெரம்பலூர் என்ற கிராமங்களுக்கு சாலைகள் போடும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

விடை—

தற்போது திட்டம் எதுவும் இல்லை.

63—

தொகுப்பு வீடுகள் கட்டும் திட்டம்.

வினா எண் 1284—திரு. ச. புரட்சிமணி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தென்னாற்காடு மாவட்டம், மங்களூர் தொகுதியில் ராஜேந்திரபட்டினம் என்ற கிராமத்திற்கு தொகுப்பு வீடுகள் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

விடை—

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்படவேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. என்வே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.



1992 பிப்ரவரி 10]

64—

குழாய்க் கிணறு அமைத்தல்.

வினா எண் 1343—திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) அந்தியூர் தொகுதி சத்தியாநகர், கருமான் கொட்டாயி ஆகிய இடங்களில் குடிதண்ணீர் வழங்க குழாய்க்கிணறு அமைக்க அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது குழாய்க் கிணறு அமைக்கப் படும் ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) (1) சத்தியாநகருக்கு மாற்று ஆழ்துளைக் கிணறு அமைக்க மாவட்ட ஆட்சித் தலைவரது அனுமதியை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் கேட்டுள்ளது. அவ்வனுமதி பெறப் பட்டவுடன் அமைக்கப்படும்.

(2) கருமான் கொட்டாயி குடியிருப்பிற்கு வரும் நிதி யாண்டில் முன்னுரிமை அடிப்படையில் அமைக்கப்படும்.

65—

நூற்பாலைகள்.

வினா எண் 1413—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாட்டில் உள்ள நூற்பாலைகள் எத்தனை ?

(ஆ) அதில் அலுவலகப் பணியாளர்கள் மற்றும் தொழிலாளர்கள் எத்தனை பேர் ?

(இ) இதில் ஆதிதிராவிட மக்கள் எத்தனை சதவீதம் வேலை செய்கிறார்கள் ?

விடை—

(அ) தமிழ்நாட்டில் கூட்டுறவு நூற்பாலைகள், கழிவு பஞ்சாலைகள், தேசிய துணிநூல் கழக நூற்பாலைகள் உனைத்தையும் சேர்த்து மொத்தம் 558 நூற்பாலைகள் உள்ளன.

[1992 பிப்ரவரி 10

(ஆ) சுமார் 1.70 இலட்சம் தொழிலாளர்களும், அலுவலக பணியாளர்களும் பணிபுரிந்து வருகின்றனர்.

(இ) தமிழ்நாட்டிலுள்ள மொத்தம் 18 கூட்டுறவு நூற்பாலைகளைப் பொறுத்தமட்டில் 1,835 ஆதிதிராவிட தொழிலாளர்கள் வேலை செய்கின்றனர். அவர்களின் எண்ணிக்கை மொத்த தொழிலாளர்களின் எண்ணிக்கையில் 6.20 சதவீதம் ஆகும்.

66—

**கிராம நிர்வாக அதிகாரிகளுக்கு வீடு கட்டித் தரும் திட்டம்.**

வினா எண் 1464—திரு. வ. மு. சுப்பிரமணியம் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கிராம நிர்வாக அதிகாரிகள் தங்கள் தலைமையிடத்தில் தான் குடியிருக்க வேண்டும் என்ற விதி உள்ளதால், அவர்களுக்கு வீடு கட்டித்தரும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

விடை—

இல்லை.

67—

**விவசாயத் தொழிலாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் திட்டம்.**

வினா எண் 1561—டாக்டர் வெ. சரோஜா : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) விவசாயத் தொழிலாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்குகின்ற வகையில் அரசு ஏதேனும் திட்டம் வகுத்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

(அ) மற்றும் (ஆ) : இத்துறையினால் அமுல்படுத்தப்பட்டு
வரும் பல்வேறு தொழிலாளர் நலச்சட்டங்களில் எந்தவொரு
சட்டத்திலும் அமைப்பு ரீதியான/அமைப்பு ரீதியற்ற தொழி
லாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்க விதி ஏதுமில்லை. அமைப்பு
ரீதியற்ற தொழிலாளர்களுக்கு குறிப்பாக, விவசாயத் தொழி
லாளர்களுக்கு குறைந்த அளவு ஊதியச் சட்டப் பிரிவுகளின்



1992 பிப்ரவரி 10]

கீழ் குறைந்த அளவு ஊதியங்கள் மட்டுமே குறிப்பிட்ட கால
முறையில் நிர்ணயிக்கப்பட்டு/திருத்தப்பட்டு வருகின்றன ;
எனவே, விவசாயத் தொழிலாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும்
வகையில் அரசு ஏதேனும் திட்டம் வகுத்துள்ளதா என்ற வினா
விற்கு இடமில்லை.

68—

**கைத்தறி உதவி இயக்குநர் அலுவலகத்தை பரமக்குடிக்கு மாற்றுதல்.**

வினா எண் 1664—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

மானாமதுரையில் இயங்கிவரும் கைத்தறி உதவி இயக்குநரின் அலுவலகத்தை பரமக்குடிக்கு மாற்ற அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

இல்லை.

69—

**நகரப் பேருந்து விடுதல்.**

வினா எண். 1707—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

இராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி தொகுதி பொதுவக்குடிக்கு நகரப் பேருந்துவிட அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

பரமக்குடி—பொதுவக்குடி வழித்தடத்தின் தூரம்
7.9 கி.மீ. ஆகும். பொதுவக்குடி, பரமக்குடி - பார்த்திபனூர்
பிரதானச் சாலையிலிருந்து 4.6 கி.மீ. தூரத்திலுள்ளது.
அங்கு 4.6 கி.மீ. தூரமும், பேருந்து செல்லாத சாலையாகும்.
அதில் 0.1 கி.மீ. தூரத்தில் ஆள் இல்லாத ரயில்வே லெவல்
கிராசிங் இருப்பதுடன், 3.2 கி.மீ. தூரத்திற்கு பழைய மெட்டல்
சாலையாகவும், எஞ்சிய 1.4 கி.மீ. மண் சாலையாகவும் பேருந்து
சென்று வர ஏற்றதாக இல்லை. எனவே கோரிக்கை வழித்
தடத்தில் பேருந்தினை இயக்க இயலாது.

[1992 பிப்ரவரி 10

70—

**நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரிக்காக புதிய குடிநீர்த் திட்டம்.**

வினா எண். 1744—திரு. எஸ். அன்பழகன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரிக்காக ஏற்படுத்தப் பட்டுள்ள புதிய குடிநீர்த் திட்டம் தற்போது எந்த நிலையில் உள்ளது ?

விடை—

நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சிக் கழகத்திற்கு குடிநீர்த் திட்டம் செயல்படுத்த உத்தேச மதிப்பீடு ரூ. 629.77 இலட்சங்களுக்கு தயாரிக்கப்பட்டு வாரிய மற்றும் தொழில்நுட்பக் குழுவின் அனுமதியுடன் அரசு நிர்வாக ஒப்புதல் பெறவேண்டி அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. இது அரசின் பரிசீலனையில் உள்ளது. இதன்மீது நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டபின் திட்டம் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும். மோகனூரில் ஓடும் காவிரி ஆற்றினை நீராதாரமாக கொண்டு இத்திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. கால்நடை மருத்துவக் கல்லூரிக்கு நாள் ஒன்றுக்கு 10,00,000 லிட்டர் தண்ணீர் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் மருத்துவக் கல்லூரியின் விகிதாச்சாரத் தொகை திட்டச் செலவிற்காக ரூ. 99.19 இலட்சமும் மற்றும் பராமரிப்புச் செலவிற்காக ரூ. 2,952 இலட்சமும் ஆகும்.

71—

**சாலைப்பணிச் செலவுகளை ஏற்றல்.**

வினா எண். 1773—திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(a) Whether M/s. Indian Oil Corporation has agreed to share the cost of road laying in Madras city and elsewhere: and

(b) the details thereof?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.



1992 பிப்ரவரி 10]

72—

**தொலைக்காட்சி, வானொலிப் பெட்டிகள் வழங்குதல்.**

வினா எண். 2170—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம் இடையாத்தி (மேற்கு) கோனார் தெருவில் தொலைக்காட்சிப் பெட்டியும் வானொலிப் பெட்டியும் அமைத்துத்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

இவ்வாண்டில் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட
வேண்டிய ஊராட்சிகளின் பெயர்ப்பட்டியல்கள் அவைகளின்
ஆண்டு வருமானங்களுடன் மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து
பெறப்பட்டுள்ளன. இப்புள்ளி விவரங்களின்படி விகிதாச்சார
அடிப்படையில் எல்லா மாவட்டங்களுக்கும் தொலைக்காட்சிப்
பெட்டிகள் பகிர்ந்து அளிக்கப்படும். அந்தந்த மாவட்ட ஆட்சித்
தலைவர்களே, ஊராட்சிகளைத் தெரிவு செய்வார்கள். தனி
யாக இக்குடியிருப்பிற்கு தொலைக்காட்சிப் பெட்டிகள்
வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் இல்லை. வானொலிப்பெட்டி
அந்தந்த ஊராட்சியே வாங்கிக்கொள்ளலாம்.

73—

வினா எண். 2199—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம் இடையாத்தி (கி), பசுக்காரன் தெருவிற்கு தொலைக்காட்சிப் பெட்டி அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

இவ்வாண்டில் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்
படவேண்டிய ஊராட்சிகளின் பெயர்ப் பட்டியல்கள் அவை
களின் ஆண்டு வருமானங்களுடன் மாவட்ட ஆட்சித் தலைவ
ரிடமிருந்து பெறப்பட்டுள்ளன. இப்புள்ளி விவரங்களின்படி
விகிதாச்சார அடிப்படையில் எல்லா மாவட்டங்களுக்கும்
தொலைக்காட்சிப் பெட்டிகள் பகிர்ந்து அளிக்கப்படும். அந்
தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களே ஊராட்சிகளைத் தெரிவு
செய்வார்கள். தனியாக இக்குடியிருப்பிற்கு தொலைக்காட்சிப்
பெட்டிகள் வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் இல்லை.

[1992 பிப்ரவரி 10

74—

## ஆதிதிராவிடர்களுக்கு வீட்டுவசதி.

வினா எண். 2200— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், இடையாத்தி (கி) ஆதிதிராவிடர்களுக்கு 75 குடும்பங்களுக்கு காலனி வீடு அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்படவேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப் பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

75—

## தொலைக்காட்சிப் பெட்டி வழங்குதல்.

வினா எண் 2205— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், இடையாத்தி (தெற்கு) ஆதிதிராவிடர்களுக்குத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

இவ்வாண்டில் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட வேண்டிய ஊராட்சிகளின் பெயர்ப் பட்டியல்கள் அவைகளின் ஆண்டு வருமானங்களுடன் மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து பெறப்பட்டுள்ளன. இப்புள்ளி விவரங்களின்படி விகிதாச்சார அடிப்படையில் எல்லா மாவட்டங்களுக்கும் தொலைக்காட்சிப் பெட்டிகள் பகிர்ந்து அளிக்கப்படும். அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களே ஊராட்சிகளைத் தெரிவு செய்வார்கள். தனியாக இக்குடியிருப்பிற்கு தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் இல்லை.



1992 பிப்ரவரி 10]

76—

வினா எண். 2218— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம் இடையாத்தி (மேற்கு) வெள்ளாளர் தெருவிற்கு தொலைக்காட்சிப் பெட்டி வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

இவ்வாண்டில் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப் படவேண்டிய ஊராட்சிகளின் பெயர்ப் பட்டியல்கள் அவைகளின் ஆண்டு வருமானங்களுடன் மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து பெறப்பட்டுள்ளன. இப்புள்ளி விவரங்களின்படி விகிதாச்சார அடிப்படையில் எல்லா மாவட்டங்களுக்கும் தொலைக்காட்சிப் பெட்டிகள் பகிர்ந்து அளிக்கப்படும். அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களே ஊராட்சிகளைத் தெரிவு செய்வார்கள். தனியாக இக்குடியிருப்பிற்கு தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் இல்லை.

77—

## ஆதிதிராவிடர்களுக்கு வீட்டுவசதி.

வினா எண். 2229— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், இடையாத்தி (மேற்கு) ஆதிதிராவிடர்களுக்கு காலனி வீடு கட்டிக் கொடுக்க பட்டா இடமில்லாததால் தனியாரின் இடத்தை கட்டாயமாக கையகப்படுத்தி பட்டா வழங்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

43, இடையாத்தி வடக்கு கிராமத்தைச் சேர்ந்த இடை
யாத்தி மேற்கு பகுதியில் காஞ்சான் தெருவில் 9 ஆதிதிராவிடர்
குடும்பங்கள் மட்டுமே உள்ளன. வேறு ஆதிதிராவிடர் குடும்பங்
கள் இல்லை. 9 ஆதிதிராவிடர் குடும்பங்கள் குடியிருக்கும்
நிலம் அவர்களுக்குச் சொந்தமான பட்டா நிலமாகும். மேற்
கண்ட 9 குடும்பங்களில் 4 குடும்பங்களில் மட்டும் திருமண
மாகிய மகன்கள் நால்வர் பெற்றோருடன் சேர்ந்து வசிக்கின்
றனர். அவர்களுக்கும் தனியே வீடுகள் கட்டிக் கொள்வதற்கும்

சொந்தமாக இடம் உள்ளது. எனவே, பேராவூரணி வட்டம், இடையாத்தி (மேற்கு) கிராம ஆதிதிராவிடர்களுக்கு வீட்டு மனைக்காக நிலம் கையகப்படுத்த வேண்டிய அவசியம் இல்லை.

78—

## ஊராட்சிகளைப் பிரித்தல்.

வினா எண். 2301—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம் பின்னவாசல் ஊராட்சியைச் சேர்ந்த சித்தாதிக்காட்டை தனி ஊராட்சியாகப் பிரிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

இல்லை.

79—

வினா எண். 2302—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், திருவோணம் ஒன்றியம், காயாவூர் ஊராட்சியைப் பிரித்து பேராவூரணி ஒன்றியத்தில் இணைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

இல்லை.

80—

## பேருந்து நிழற்குடை அமைத்தல்,

வினா எண். 2310—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம் வ. கொல்லைக்காடு கடைத்தெருவில் பேருந்து நிழற்குடை அமைத்துத்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?





விடை—

நடைமுறையில் இருக்கும் அரசின் முடிவின்படி போக்குவரத்துக் கழகங்களின் நிதி நிலையைப் பொறுத்து பயணிகள் நிழற்குடைகள் அமைக்கலாம். தற்போது சோழன் போக்குவரத்துக் கழக நிதி நிலவரப்படி, தஞ்சை மாவட்டம் பேராவூரணி ஒன்றியம் வ. கொல்லைக்காடு கடைத்தெருவில் பேருந்து நிழற்குடை அமைக்கும் செயற் குறிப்பு பரிசீலனையில் இல்லை.

81—

## மயானப்பாதை அமைத்தல்.

வினா எண். 2351—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், குறிச்சி கிழக்கு ஆதிதிராவிடர்களுக்கு மயானத்திற்கு பாதையும் மயானக் கொட்டகையும் அமைத்துக்கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

பேராவூரணி ஒன்றியம், குறிச்சி கிழக்கு ஆதிதிராவிடர்களுக்கு மயானத்திற்குப் பாதையும், மயானக் கொட்டகையும் அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு இல்லை.

குறிச்சி கிழக்கு கிராமத்தில் புல எண் 195-6-ல் 0.05.5
ஹெக்டேரில் மயான புறம்போக்கு உள்ளது. இதன் முழு
பரப்பும் ஆதிதிராவிடர் வகுப்பைச் சேர்ந்த திரு. கு. சிலம்பன்
என்பவரின் நெல் சாகுபடி மூலம் ஆக்கிரமிப்பில் உள்ளது.
எனவே, இதற்குப் பக்கத்தில் உள்ள புல எண் 22/2-ல் உள்ள
மயானத்தைத் தற்போது ஆதிதிராவிடர்கள் பயன்படுத்தி
வருகிறார்கள். இவர்கள் இதை பயன்படுத்துவதற்கு எண்ணாணி
வயல் என்ற கிராமத்தில் வசிக்கும் ஆதிதிராவிடர்கள்
எதிர்ப்பு தெரிவிக்கின்றனர். எனவே, குறிச்சி கிழக்கு ஆதி
திராவிடர்கள் தனியாக மயானம் வேண்டும் எனக் கோரு
கிறார்கள். எனவே, புல எண் 195-6-ல் உள்ள மயான புறம்
போக்கில் உள்ள ஆக்கிரமிப்பை அகற்றி ஊராட்சியிடம்
ஒப்படைத்த பின்னர், அதில் ஊராட்சி ஒன்றியத்தால் தகரக்
கொட்டகை அமைக்கப்பட வேண்டும். எண்ணாணி வயல்
கிராமத்தில் உள்ள மயானத்திற்கு செல்லும் பாதையை
புல எண் 195/6-ல் உள்ள மயானத்திற்கும் பயன்படுத்த
லாம்.

[1992 பிப்ரவரி 10

82—

## போக்குவரத்து நிழற்குடை அமைத்தல்.

வினா எண். 2373—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம் பேராவூரணி ஒன்றியம் இடையாத்தி (கி) ஆதிதிராவிடர் தெரு கொடி மரம் அருகில் ஒரு போக்குவரத்து நிழற்குடை அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

நடைமுறையில் இருக்கும் அரசின் முடிவின்படி போக்குவரத்துக் கழகத்தின் நிதி நிலையைப் பொறுத்தும் நிழற்குடை அமைக்கலாம். தற்போது சோழன் போக்குவரத்துக் கழகத்தின் நிதி நிலவரப்படி தஞ்சை மாவட்டம் பேராவூரணி ஒன்றியம் இடையாத்தி (கி) ஆதிதிராவிடர் தெரு கொடிமரம் அருகில் ஒரு பஸ் நிழற்குடை அமைப்பது குறித்த செயற்குறிப்பு பரிசீலனையில் இல்லை.

83—

## பேருந்து நிழற்குடை அமைத்தல்.

வினா எண். 2377—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம் பேராவூரணி ஒன்றியம் இடையாத்தியைச் சேர்ந்த மந்திக்கோன் விடுதியில் பேருந்து நிழற்குடை அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

நடைமுறையில் இருக்கும் அரசின் முடிவின்படி போக்குவரத்துக் கழகங்களின் நிதிநிலையைப் பொறுத்தும் நிழற்குடை அமைக்கலாம். தற்போது சோழன் போக்குவரத்துக் கழக நிதி நிலவரப்படி தஞ்சை மாவட்டம் பேராவூரணி ஒன்றியம் இடையாத்தியைச் சேர்ந்த மந்திக்கோன் விடுதியின் பேருந்து நிழற்குடை அமைப்பது குறித்த செயற்குறிப்பு ஏதும் பரிசீலனையில் இல்லை.



1992 பிப்ரவரி 10]

84—

## சிவந்திபுரம் ஊராட்சிப் பகுதியில் நில அளவு ஆய்வு செய்தல்.

வினா எண். 2453—திரு. ஆர். முருகையா பாண்டியன் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், அம்பாசமுத்திரம் ஊராட்சி ஒன்றியம், சிவந்திபுரம் ஊராட்சி பகுதியை செட்டில்மெண்ட் மூலம் சர்வே செய்யப்பட்ட மொத்த ஏக்கர் எவ்வளவு ?

(ஆ) நன்செய், புன்செய், புறம்போக்கு, நத்தம் தனித்தனியாக எவ்வளவு ஏக்கர் ? அனுபவித்து வருபவர்களின் விவரம் என்ன ?

விடை—

(அ) திருநெல்வேலி–கட்டபொம்மன் மாவட்டம், அம்பாசமுத்திரம் ஊராட்சி ஒன்றியம், சிவந்திபுரம் ஊராட்சி பகுதியை செட்டில்மெண்ட் செய்தது குறித்து, உயர்நீதி மன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளது.

(ஆ) வழக்கு நிலுவையில் உள்ள நிலையில், வினாவில் கேட்டுள்ள விவரங்கள் பற்றி தெரிவிக்க இயலாது.

85—

## இனாம் கோடாரங்குளம் கிராம பட்டா விவரம்.

வினா எண். 2455—திரு. ஆர். முருகையா பாண்டியன் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

திருநெல்வேலி — கட்டபொம்மன் மாவட்டம், இனாம் கோடாரங்குளம் கிராமம் அதன் டைட்டில் டீடு (Title Deed) யார் பெயரில் உள்ளது என்பதை அரசு தெரிவிக்குமா ?

விடை—

திருநெல்வேலி — கட்டபொம்மன் மாவட்டம், இனாம் 'கோடாரங்குளம் கிராமம் இனாம் ஒழிப்புச் சட்டத்தின்கீழ் கொண்டுவரப்பட்டு, நிலவரித் திட்டம் அமுல்படுத்தப்பட்டு, ரயத்துகளுக்கு பட்டா வழங்கப்பட்டது குறித்து வழக்கு ஒன்று (SLP) இந்திய உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில்

[1992 பிப்ரவரி 10

உள்ளது. எனவே, உறுப்பினர் எழுப்பியுள்ள வினாவிற்குரிய விவரங்களை இம் மன்றத்தில் தெரிவித்தால், அது நிலுவையில் உள்ள வழக்கின் தன்மையை பாதிக்கக்கூடும். எனவே, இதுபற்றிய விவரங்களை இம் மன்றத்தில் தெரிவிக்க இயலாது.

86—

## வேளாண்மைத் துறையை இரு இலாக்காக்களாக மாற்றுதல்

வினா எண் 2477—டாக்டர் ஜி. ஆர். மாலா : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

வேளாண்மைத் துறை தற்பொழுது ஆறு இலாக்காக்களாக (Agricultural Extension, Soil Seed, Seeds Certification, Agricultural Marketing, Horticulture, Agricultural Engineering) செயல்பட்டு வரும் வேளாண்மைத் துறையை இரு இலாக்காக்களாக (Agricultural Extension and Agricultural Engineering) மாற்றும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

விடை—

இல்லை.

87—

## வீட்டுவசதி வாரிய நிர்வாக அலுவலகம்.

வினா எண் 2479—டாக்டர் ஜி. ஆர். மாலா : மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

ஒவ்வொரு மாவட்டத்திற்கும் மாநில வீட்டுவசதி வாரியத்தின் ஒரு நிர்வாக அலுவலகம் அமைத்து, அதற்கு ஒரு செயற்பொறியாளரை நியமிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

எந்தெந்த மாவட்டத்தில் வீட்டுவசதித் திட்டங்களுக்கு அத்தியாவசியத் தேவை இருக்கிறதோ மற்றும் வீட்டு வசதித் திட்டங்கள் அதிக அளவில் ஏற்படுத்தப்பட்டுள்ளதோ அந்த மாவட்டத்தில் மட்டும் நிர்வாக அலுவலகம் அமைக்கப்பட்டு செயற்பொறியாளரும் நியமிக்கப்படுவர். எனவே ஒவ்வொரு மாவட்டத்திற்கும் நிர்வாக அலுவலகம் அமைப்பது என்பது இயலாது.



1992 பிப்ரவரி 10]

88—

## தொலைக்காட்சிப் பெட்டி வழங்குதல்.

வினா எண். 2555—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், வலப்பிரமன்காடு ஊராட்சி, பனஞ்சேரிக்கு தொலைக்காட்சிப் பெட்டி அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

இவ்வாண்டில் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்படவேண்டிய ஊராட்சிகளின் பெயர்ப் பட்டியல்கள் அவைகளின் ஆண்டு வருமானங்களுடன் மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து பெறப்பட்டுள்ளன. இப் புள்ளி விவரங்களின் படி விகிதாச்சார அடிப்படையில் எல்லா மாவட்டங்களுக்கும் தொலைக்காட்சிப் பெட்டிகள் பகிர்ந்து அளிக்கப்படும். அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களே ஊராட்சிகளைத் தெரிவு செய்வார்கள். தனியாக இக் குடியிருப்பிற்கு தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் இல்லை.

89—

வினா எண் 2561—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், ஆண்டா கோட்டைக்கு தொலைக்காட்சிப் பெட்டியும் கட்டிடமும் கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

இவ்வாண்டில் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட வேண்டிய ஊராட்சிகளின் பெயர்ப்பட்டியல்கள் அவைகளின் ஆண்டு வருமானங்களுடன் மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து பெறப்பட்டுள்ளன. இப் புள்ளி விவரங்களின்படி விகிதாச்சார அடிப்படையில் எல்லா மாவட்டங்களுக்கும் தொலைக்காட்சிப் பெட்டிகள் பகிர்ந்து அளிக்கப்படும். அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களே ஊராட்சிகளைத் தெரிவு செய்வார்கள். தனியாக இக் குடியிருப்பிற்கு தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் இல்லை.

[1992 பிப்ரவரி 10

கட்டிடம் கட்டித் தருவதற்கு அரசிடம் செயற்குறிப்பு ஏதுமில்லை.

90—

**ஆதிதிராவிடர்களுக்கு வீட்டுவசதி காலனி**

வினா எண் 2635—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சை மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம், பண்ணைவயல் ஊராட்சியைச் சேர்ந்த சுந்தர்ராசபுரம் ஆதிதிராவிடர்களுக்கு காலனி வீடுகள் கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ்மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்படவேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவும் இல்லை.

91—

**வாய்க்கால் தூர் எடுத்து ஆழப்படுத்துதல்.**

வினா எண். 2810—திரு. எஸ். எஸ். ராமசுப்பு: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

ஆலங்குளம் ஒன்றியம், நெட்டூர் அருகில்] உள்ள காசிக்குவாய்த்தான் குளத்திற்கு தண்ணீர் வரும் வாய்க்கால் தூர் எடுத்து ஆழப்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

ஆலங்குளம் ஒன்றியம் நெட்டூர் அருகிலுள்ள காசிக்குவாய்த்தான் குளத்திற்கு தண்ணீர் வரும் வாய்க்காலில் தூர் எடுக்கும் வேலைக்கு ரூ. 20,100-க்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு மேற்படி வேலையை குடிமராமத்து திட்டத்தின்கீழ் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.



1992 பிப்ரவரி 10]

92—

**தோல்தொழில் நிறுவனத்தால் தயாரிக்கப்படும் பொருட்கள் விற்பனை.**

வினா எண் 2817—திருமதி வி. ஜி. மணிமேகலை: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழ்நாடு தோல் தொழில் நிறுவனத்தால் தயாரிக்கப்படும் பொருட்கள் விற்பனை செய்யப்படுகின்றனவா?

(ஆ) அப்படியெனில், அது குறித்த விவரங்கள்.

விடை—

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு தோல் தொழில் வளர்ச்சி நிறுவனம் பல்வேறு வகைப்பட்ட தோல்களையும், காலணிகளையும் மற்றும் தோலினாலான பொருட்களையும் உற்பத்தி செய்து கீழ்க்கண்ட முறைகளில் விற்பனை செய்து வருகிறது:—

(1) நிறுவனங்களுக்குத் தேவையான விற்பனை:—

தமிழ்நாட்டில் இயங்கி வரும் போக்குவரத்துக் கழகங்களுக்கும், தமிழ்நாடு மற்றும் இந்திய அரசாங்க தொழில் துறை நிறுவனங்களுக்கும் விற்பனை செய்கிறது.

(2) விற்பனைக்கூடம்:—

சென்னை, மதுரை, கிருஷ்ணகிரி மற்றும் ஊட்டி ஆகிய ஊர்களில் அமைக்கப்பட்டுள்ள விற்பனைக் கூடங்களின் வாயிலாக விற்பனை செய்கிறது.

(3) கண்காட்சி பொருட்காட்சிகள்:—

அரசு அங்கீகாரம் பெற்ற பொருட்காட்சிகளில் விற்பனைக்கூடம் அமைத்து விற்பனை செய்கிறது.

93—

**இளையான்குடி தாலுகாவை இணைக்கும் செயற்குறிப்பு.**

வினா எண் 2838—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் இளையான்குடி தாலுகாவை இணைப்பதற்கு அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

[1992 பிப்ரவரி 10

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

94—

ஒரு நபர் கார்டுக்கு அரிசி வழங்குதல்.

வினா எண். 3464—திரு. எம். தங்கவேல் : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) ரேஷன் கடைகளில் ஒரு நபர் கார்டுகளுக்கு அரிசி வழங்குவது நிறுத்தப்பட்டுள்ளதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அவர்களுக்கு அரிசி வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

(அ) மற்றும் (ஆ)

பொது விநியோக நியாய விலைக் கடைகளில் ஒரு நபர் கார்டுகளுக்கு அரிசி வழங்கப்படுவது நிறுத்தப்படவில்லை.

95—

தஞ்சை மாவட்டத்தை இரண்டாகப் பிரித்தல்.

வினா எண் 3483 – திரு. எம். எம். எஸ். அபுல்ஹசன் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சை மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து நாகப்பட்டினத்தைத் தலைமையிடமாகக் கொண்ட காயிதே மில்லத் மாவட்டம் எப்போது தனித்து செயல்படும் ?

விடை—

நாகப்பட்டினம் காயிதே மில்லத் மாவட்டம் 18—10—91 முதல் செயல்பட்டு வருகின்றது.



1992 பிப்ரவரி 10]

96—

போடிநாயக்கனூர் அரசு மருத்துவமனையை விரிவுபடுத்துதல்.

வினா எண் 3554—திரு. தேனி பன்னீர்செல்வம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) போடிநாயக்கனூர் அரசு மருத்துவமனையை விரிவுபடுத்தி காது, மூக்கு, தொண்டை மற்றும் பல் மருத்துவப் பிரிவுகள் ஏற்படுத்த அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் எப்போது செயல்படுத்தப்படும் ?

விடை—

(அ) போடிநாயக்கனூர் அரசு மருத்துவமனையை விரிவுபடுத்தி காது, மூக்கு, தொண்டை மற்றும் பல் மருத்துவ சிறப்பு சிகிச்சைப் பிரிவுகள் ஏற்படுத்த செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

97—

கன்னியாகுமரி–திருச்செந்தூர் கடற்கரை சாலையை பழுதுபார்த்தல்.

வினா எண் 3669—திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

கன்னியாகுமரி–திருச்செந்தூர் கடற்கரை சாலை கூத்தங்குளி பிரியும் கிளை ரோடு வெள்ளத்தால் மோசமான நிலையில் உள்ளதால் அதை பழுதுபார்க்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

விடை—

வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள சாலையில் உள்ள பழுதுகள் தற்போது சீர்செய்யப்பட்டுள்ளன.

98—

அண்ணா போக்குவரத்துப் பணிமனை.

வினா எண் 3985—திரு. செ. பெருமாள் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சேலம் மாவட்டம் வாழப்பாடியில் புதியதாக கட்டப்பட்ட அண்ணா போக்குவரத்துப் பணிமனை ஆரம்பிக்கப்பட்டு இதுவரை எத்தனை பேருந்துகள் விடப்பட்டன ?

[1992 பிப்ரவரி 10

(ஆ) ஆம் எனில், எந்த வழித்தடத்தில் விடப்பட்டன ?

விடை—

(அ) மற்றும் (ஆ) வாழப்பாடி கிளை ஆரம்பிக்கப்பட்டவுடன் சேலம் பணி மனையில் வாழப்பாடியை மையமாக வைத்து இயக்கப்படும் 28 பேருந்துகள் வாழப்பாடி கிளைக்கு மாற்றப் பட்டு இயக்கப்பட்டு வருகின்றன. மக்களின் தேவைக்கேற்ப புதிய வழித்தடங்களில் பேருந்துகள் விட நடவடிக்கை எடுக்கப் பட்டு வருகிறது.

99—

## குடும்ப அட்டை வழங்குதல்.

வினா எண் 4139—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) புவனகிரி தொகுதி பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியத்தில் ராமநாதன்குப்பம் கிராமத்திற்கு குடும்ப அட்டை இல்லாதவர்களுக்கு குடும்ப அட்டை கொடுக்க ஏற்பாடு செய்து தரப்படுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை—

(அ) மற்றும் (ஆ) குடும்ப அட்டை இல்லாதவர்கள் சம்பந்தப் பட்ட வட்ட வழங்கல் அலுவலகத்தில் முறைப்படி மனு செய்தால் 100 சத வீதம் விசாரணைக்குப் பிறகு தகுதியின் அடிப்படையில் குடும்ப அட்டை வழங்கப்படும்.

100—

## வீட்டு வேலைகளுக்கு பணியமர்த்த தனி வேலைவாய்ப்பு மையங்கள்.

வினா எண் 4322—டாக்டர் எம். கருப்பசாமி : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

வீட்டு வேலைகளுக்கு பணியமர்த்தத் தனியாக வேலை வாய்ப்பு மையங்களை அமைத்து, பதிவு செய்து, வீட்டு வேலை களுக்கு பணியாளரை அனுப்பும் திட்டம் பற்றி அரசு பரிசீலிக்குமா ?



1992 பிப்ரவரி 10]

விடை—

வீட்டு வேலைகளுக்குப் பணியாளர்களை அனுப்புமாறு பெரும்பாலும் தனி நபர்களிடமிருந்து கோரிக்கை ஏதும் பெறுவதில்லை. மேலும் வேலைவாய்ப்பு அலுவலகங்களில் இடைக்கப் பெறுவ மீர்வட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களில் இடைக்கப் பெறுவ தில்லை. மேலும் இத்தகைய திட்டத்தினால் நல்ல பயன் விளையும் வாய்ப்பு ஏதுமில்லை. ஆகையால் வீட்டு வேலை களுக்கு பணியமர்த்தத் தனியாக வேலை வாய்ப்பு மையங்கள் அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

101—

## இரண்டு சக்கர வாகனங்களுக்கு வரிவிலக்கு.

வினா எண் 47—திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) இரண்டு சக்கர வாகனங்களுக்கு வரிவிலக்கு அளிக்க அரசு முன் வருமா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) மற்றும் (ஆ); தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்புச் சட்டம் 1974-ன் படி 50 கன செண்டி மீட்டருக்கு மேற்படாத மிதி இயக்கிகளுககும் (Motor Cycle) இயக்கூர்திகள் வரி (Motor Vehicles Tax) விதிக்கப்பட்டு வந்தது. அண்மையில், அரசால் மேற்படி சட்டத்திற்கு கொண்டு வரப்பட்ட சட்டத்திருத்தத்தின்படி (தமிழ்நாடு சட்டம் 33/91), 50 கன செண்டிமீட்டரும், அதற்குக் குறைவான கன செண்டி மீட்டருள்ள மிதி இயக்கிகளுக்கு 1—10—91 முதல் இயக்கூர்திகள் வரி செலுத்த தேவையில்லை.

102—

## "பனை வாரியம் அமைத்தல்".

வினா எண். 70—திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

பனை ஏறும் தொழிலாளர்களுக்கான "பனை வாரியம்" அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

விடை—

தமிழ்நாடு மாநில பனை வெல்லம் மற்றும் தும்பு விற்பனைக் கூட்டுறவு இணையமும் 5 மாவட்ட பனை வெல்லம் கூட்டுறவுச் சம்மேளனங்களும் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் மூலம் பம்பாய் கதர் ஆணைக் குழுவினால் ஒப்புக் கொள்ளப்பட்ட திட்டத்தின்கீழ் நிதி ஆதாரத்தினை ஆண்டு தோறும் தொடர்ந்து பெற்று தமிழ்நாட்டில் பனைத்தொழில் வளர்ச்சிக்காகவும் மேம்பாட்டிற்காகவும் கூடுதல் கவனம் செலுத்தி செயலாற்றி வருவதால் பனைத்தொழில் மற்றும் பனைத் தொழிலாளர்க்கென்று தனியாக பனை வாரியம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

103—

## சித்த மருத்துவப் பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு.

வினா எண். 202—டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சித்த மருத்துவம் பட்டப்படிப்பு, பட்ட மேற்படிப்பு படித்து வேலை இல்லாமல் இருப்போர் எண்ணிக்கை எவ்வளவு?

(ஆ) இவர்களுக்கு வேலை வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

(அ) சென்னை தொழில் முறை மற்றும் செயலாட்சி, வேலைவாய்ப்பு அலுவலகத்திலிருந்து பெறப்பட்ட விவரப்படி 30—9—1991 நாள் வரை பதிவு செய்து வேலையில்லாமல் இருக்கும் படித்த சித்த மருத்துவ பட்டதாரிகளின் எண்ணிக்கை 369. பட்ட மேற்படிப்பு படித்து பதிவு செய்துள்ளவர்கள் எவரும் இல்லை.

(ஆ) அரசின் நிதிநிலைக்கேற்ப ஒவ்வொரு ஆண்டும் சித்தா பிரிவுகள் திறக்க அரசு ஒப்புதல் செய்து வருகின்றது. நடப்பு எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் கல்லூரி மற்றும் மாவட்ட மருத்துவமனைகளில் சித்தா பிரிவுகளுக்கு மருத்துவ அலுவலர்கள் நியமிக்க ஒப்பளிப்பு செய்வது தவிர சித்தா பிரிவுகள் ஏற்படுத்தவும் அரசு தீவிர நடவடிக்கை மேற்கொண்டு ஆண்டிற்கு 10 சித்தா பிரிவுகள் வீதம் துவக்கிட திட்டக் குழுவின் பரிந்துரையுடன் செயல்பட்டு வருகின்றது. மேலும் அரசுப் பணியில் பணிபுரிந்து கொண்டிருக்கும் உதவி மருத்துவ அலுவலர்கள் பணிக்காலத்தில் பட்ட மேற்படிப்பு படிப்பதனாலும் அவர்கள் பட்ட



600 008. 16233

மேற்படிப்பு முடிந்ததும், மீண்டும் உதவி மருத்துவர்களாகவே பணியில் சேர்ந்து தனது பட்ட மேற்படிப்புத் தகுதிக்கான பதவி உயர்வு கிடைக்கும் வரை அவர்கள் பணிபுரிந்து வருவதால் பட்ட மேற்படிப்பு படித்தவர்களுக்கு வேலை இல்லை என்ற நிலைமை அவர்களுக்கு இல்லை.

104—

## தாமரைக்கரை — தாளக்கரை சாலை.

வினா எண் 235—திரு வே. பெரியசாமி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) அந்தியூர் தொகுதியில் தாமரைக்கரை முதல் தாளக்கரை வரை ரோடு போட 1990—91-ல் செலவிடப்பட்ட தொகை எவ்வளவு ?

(ஆ) பணி இன்னும் முடிவு பெறாத நிலையில் இருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(இ) ஆம் எனில், இதுகுறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) 1990-91-ல் ரூ. 99,954 மட்டும் பொருட்கள் சேகரிப்புக்காக செலவிடப்பட்டுள்ளது.

(ஆ) பணிகள் 30—9—91-ல் முழுமையாக முடிவு பெற்றுள்ளன.

(இ) இவ்வினாவுக்கு இடம் இல்லை.

105—

## அரசு மருத்துவமனைக்குக் கட்டிடம்.

வினா எண். 482—திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) ஆலங்குளம் ஒன்றியம், ஊத்துமலை கிராமத்தில் உள்ள அரசு மருத்துவமனைக்குக் கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது துவங்கப்படும் ?

[1992 பிப்ரவரி 10

விடை—

(அ) மற்றும் (ஆ) : தற்போது ஏதும் இல்லை.

106—

மேல்நிலைத் தொட்டி அமைத்தல்.

வினா எண். 853—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், புனல்வாசல் மேற்கு முருகன் தெருவிற்கு ஒரு மேல்நிலைத் தொட்டி ஏற்படுத்த அரசின் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

இல்லை. புனல்வாசல் மேற்கு குடியிருப்பு, புனல்வாசல் ஊராட்சி பேராவூரணி ஒன்றியத்தைச் சார்ந்தது ஆகும். இதன் மக்கள் தொகை 3,600 ஆகும். ஒரு மின்விசைப் பம்புத் திட்டம் நிறைவேற்றப்பட்டு உள்ளது. இது போதுமானதாக இல்லை. இது பகுதியாக செயலாக்கப்பட்ட குடியிருப்பு வரும் நிதியாண்டில் மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி அமைத்து குடிநீர் வழங்கும் திட்டம் கருத்தில் கொள்ளப்படும்.

107—

தஞ்சைத் தமிழ்ப்பல்கலைக் கழகக் கட்டிடம்.

வினா எண். 1102—திரு. சோ. இராசாராமன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தஞ்சாவூர் தமிழ்ப்பல்கலைக்கழகத்தின் புதிய வளாகத்தில் 'த' 'மி' 'ழ்' 'நா' 'டு' என்ற எழுத்து வடிவ அமைப்பில் கட்டிடங்கள் கட்டப்பெற்று வருகின்றனவா ?

(ஆ) ஆம் எனில், அதன் மதிப்பீட்டுத்தொகை எவ்வளவு ?

விடை—

(அ) மற்றும் (ஆ) : தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழக புதிய வளாகத்தில் 'ழ்' என்ற எழுத்து வடிவ அமைப்பு கொண்ட கட்டிடம் மட்டுமே கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இதன் மதிப்பீட்டுத் தொகை ரூ. 45.50 லட்சம் ஆகும். இது நீங்கலாக பிற எழுத்து வடிவம் கொண்ட கட்டிடங்களின் கட்டுமானப் பணிகள் நிதி நிலைக்கேற்ற வகையில் நாளடைவில் கட்டிமுடிக்கப்படும்.



1992 பிப்ரவரி 10]

108—

பார்த்திபனூர் ரெகுலேட்டரின் வழியாக வந்த நீர் அளவு.

வினா எண். 1216—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பார்த்திபனூர் ரெகுலேட்டரின் வழியாக 1987-88, 1988-89 ஆம் ஆண்டில் வந்த நீரின் அளவு விவரம் என்ன ?

விடை—

பார்த்திபனூர் ரெகுலேட்டரின் வழியாக வந்த நீரின் அளவு விவரம் கீழ்வருமாறு :—

1987-88 ஆம் ஆண்டு :

| | |
|---|---|
| நவம்பர் 1987 | 1556 மில்லியன் கன அடி. |
| ஜனவரி 1988 | 1242.45 மில்லியன் கன அடி. |

1988-89 ஆம் ஆண்டு :

| | |
|---|---|
| செப்டம்பர் 1988 | 29 மில்லியன் கன அடி. |

109—

மின்சார டிரான்ஸ்பார்மர் அமைக்கும் திட்டம்.

வினா எண். 1255—திரு. ச. புரட்சிமணி : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தென் ஆற்காடு மாவட்டம், மங்களூர் தொகுதியில் தொளார் கிராமத்தில் மின்சார டிரான்ஸ்பார்மர் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

விடை—

தென்னாற்காடு மாவட்டம், மங்களூர் தொகுதியில் தொளார் கிராமத்திற்கு தற்சமயம் ஐந்து (5) மின்மாற்றிகள் மூலம் மின்சக்தி அளிக்கப்பட்டு வருகின்றது. மேலும் ஒரு மின் மாற்றி காலனியிலும் மற்றும் இரண்டு மின்மாற்றிகள் தொளார் கிராமத்திலும் நிறுவப்படவுள்ளன. இக்காலனியில் அமைக்கப்பட இருக்கும் புதிய மின்மாற்றியின் மூலம், புதிய விவசாய மின் இணைப்புகளும், காலனிக்குத் தேவைப்படும் மின்சக்தியும்

[1992 பிப்ரவரி 10

அளிக்கப்படும். இம்மின்மாற்றி இவ்வாண்டு (1991) இறுதிக்குள் நிறுவப்படவுள்ளது. மேலும் தொளார் கிராமத்தில் அமைக்க விருக்கும் புதிய இரு மின்மாற்றிகளும் மார்ச் 1992-க்குள் நிறுவப் பட உள்ளன.

110—

## வைகை ஆற்றுக்கரைப் பகுதியில் வெள்ளத் தடுப்புச் சுவர்.

வினா எண். 1634— டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா ;

வைகை ஆற்றின் கரையோரப் பகுதிகளில் வெள்ளத் தடுப்புச் சுவர் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

விடை—

வைகையாற்றின் கரையோரங்களில் இராமநாதபுரம் மாவட்டத்தில் காரேந்தல் பாலம் வரை வெள்ளத் தடுப்புச் சுவர் கட்டி இராமநாதபுரம் பெரிய கண்மாயையும், வைகை ஆற்றின் ஆயக்கட்டுப் பகுதிகளையும் பாதுகாக்கத் திட்டம் ஒன்று சுமார் ரூ. 193 இலட்சங்கள் செலவில் திருச்சியிலுள்ள பொதுப் டணித் துறை ஆய்வு வட்டத்தில் ஆய்வில் உள்ளது. ஆய்வுப் பணிகள் முடிந்து முதனிலை அறிக்கையும், சாத்தியக்கூறு அறிக்கையும் தலைமைப் பொறியாளர், திட்டம் மற்றும் வடிவ மைப்பு அவர்களால் அரசுக்குச் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் இப் பொருள் மீது நிதி ஒதுக்கீடு செய்வது குறித்து மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

111—

## ஆதிதிராவிட குடியிருப்புகளுக்கு மின் வசதி.

வினா எண். 1665—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா:

இராமநாதபுரம் மாவட்டத்தில் பரமக்குடி தொகுதியில் மின்வசதி இல்லாத ஆதிதிராவிட குடியிருப்புக்கள் எத்தனை ?

விடை—

இராமநாதபுரம் மாவட்டத்தில் பரமக்குடி தொகுதியில் மின் வசதி கோரி 17 ஆதிதிராவிட காலனிகளில், 223 தெரு விளக்குகள் அமைக்க விண்ணப்பம் தற்பொழுது நிலுவையில்



1992 பிப்ரவரி 10]

உள்ளது. மேற்படி தெரு விளக்குகளுக்கு 10/91 முதல் 3/92 வரை செயலாக்கப்படவுள்ள மாண்புமிகு முதலமைச்சரின் சிறப்பு தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் மின்வசதி அளிக்க நட வடிக்கை எடுக்கப்படும்.

112—

## கல்லூரிகள் இல்லாத தொகுதிகளுக்கு கல்லூரிகள்.

வினா எண் 1727—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் கல்லூரிகள் இல்லாத சட்டமன்ற தொகுதிகள் எத்தனை ?

(ஆ) கல்லூரிகள் இல்லாத தொகுதிகளுக்கு கல்லூரிகள் வழங்க அரசு திட்டமிடுமா ?

விடை—

(அ) கல்லூரிகள் தொடங்குவதற்கு சட்டமன்றத் தொகுதி களை அடிப்படையாகக் கொள்வதில்லை என்றாலும் தமிழ் நாட்டில் சுமார் 119 சட்டமன்றத் தொகுதிகளில் கல்லூரிகள் ஏதும் இல்லை.

(ஆ) அரசு தரப்பில் புதிய கல்லூரிகள் தொடங்க இயலா ததற்கு நிதி நெருக்கடி முக்கிய காரணமாகும். எனினும், தற் போது நிதி உதவி பெறாத தனியார் கல்லூரிகள் (Unaided Private Colleges) தொடங்க அரசு அனுமதி வழங்கி வருவ தால் கல்லூரியே இல்லாத தொகுதியில் இத்தகைய கல்லூரி யினைத் துவங்க முன்வரும் தனியார் கல்வி முகமைகளுக்கு (Private Educational Agencies) முன்னுரிமை அளித்து விதிகளின் படி பரிசீலித்து முடிவெடுக்கப்படும்.

113—

## பரமக்குடி தாலுகா மருத்துவமனை மருத்துவர் குடியிருப்பு.

வினா எண் 2029— டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பரமக்குடி தாலுகா மருத்துவமனையில் ஆர்.எம்.ஓ. குடியிருப்புக் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

114—

ஆரம்ப சுகாதார நிலையத்தை மேம்படுத்துதல்.

வினா எண் 2067—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் (Upgrade) செய்த ஆரம்ப சுகாதார நிலையங்கள் எத்தனை ?

(ஆ) 1991-92-ல் (Upgrade) செய்ய தீர்மானித்த ஆரம்ப சுகாதார நிலையங்கள் எத்தனை ?

விடை—

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் கடலாடி, ஆர்.எஸ். மங்களம், மண்டபம், தொண்டி மற்றும் புதுமடம் ஆகிய இடங்களில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்கள் மேம்படுத்தப்பட்டு சமுதாய நல நிலையமாக இயங்கி வருகிறது.

(ஆ) 1991-92-ல் எந்த ஆரம்ப சுகாதார நிலையத்தையும் மேம்படுத்தி சமுதாய நல நிலையமாக மாற்ற தற்போது திட்டம் ஏதுமில்லை.

115—

பார்த்திபனூரில் சார் பதிவாளர் அலுவலகம்.

வினா எண் 2123—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

பரமக்குடி தொகுதி, பார்த்திபனூரில் சார் பதிவாளர் அலுவலகம் ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

பார்த்திபனூரில் சார் பதிவாளர் அலுவலகம் புதியதாகத் துவக்க சாத்தியக் கூறு தொடர்பாக பரிசீலிக்கப்பட்டதில் ஆண்டுக்கு 436 ஆவணங்களே பதிவாகக் கூடுமென்று எதிர்பார்ப்ப



தாலும், மேலும் வருவாயை விட செலவு அதிகமாக இருக்குமென்பதாலும் பழைய சார் பதிவாளர் அலுவலகங்களிலிருந்து கிராமங்கள் மாற்றப்பட்டால் பழைய சார் பதிவகங்களில் ஆண்டு வருவாய் பாதிப்பதோடு, போதிய வேலைப் பளுவும் இராது என்பதால் பார்த்திபனூரில் புதிய சார் பதிவகம் திறக்க சாத்தியக்கூறு இல்லை.

116—

ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்கு மின்வசதி.

வினா எண் 2182 திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், அலிவலம் கீழத் தெரு ஆதிதிராவிடர் காலனி வீடுகளுக்கு ஒற்றை விளக்கு அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

அலிவலம் கீழத்தெரு ஆதிதிராவிடர் காலனிக்கு ஒரு விளக்கு/ஒரு குடிசை திட்டத்தின்கீழ் 20 ஒற்றை விளக்குகள் பொருத்தக்கோரி 18–3–1991 அன்று 20 விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன. ஒரு குடிசை/ஒரு விளக்கு திட்டத்தின்கீழ் இலவச மின்சாரம் வேண்டி 65 விண்ணப்பங்கள் மின் வாரியத்தின் சம்பந்தப்பட்ட பிரிவு அலுவலகத்தில் ஏற்கெனவே நிலுவையிலுள்ளன.

24–4–1989 வரை பெறப்பட்ட விண்ணப்பங்களுக்கு சம்பந்தப்பட்ட பிரிவு அலுவலகத்தால் பணிகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன. அலிவலம் - கீழத்தெரு காலனிக்குரிய விண்ணப்பங்களுக்கு 1992–93 ஆம் ஆண்டில் பணிகள் மேற் கொள்ள இயலும்.

117—

தெரு விளக்கு அமைத்துக் கொடுத்தல்.

வினா எண் 2187—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், வாட்டாத்திக்கோட்டை ஊராட்சி, சொக்கன் தெரு ஆதிதிராவிடர்களுக்கு தெரு விளக்கு அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

[1992 பிப்ரவரி 10

விடை—

வாட்டாத்திக்கோட்டை ஊராட்சி, சொக்கன் தெரு ஆதிதிராவிடர்களுக்கு ஒரு தெரு விளக்கு பொருத்தி ஏற்கெனவே மின் வசதி அளிக்கப்பட்டுள்ளது. விளக்கு நன்றாக இயங்கி வருகின்றது. சொக்கன் தெரு ஆதிதிராவிடர்கள் குடியிருப்புக் களையும் உள்ளிட்ட வாட்டாத்திக்கோட்டை ஊராட்சியில் 15 கூடுதல் தெரு விளக்குகள் பொருத்தக் கோரி விண்ணப்பம் ஒன்று 6–5–1987-ல் மின் வாரியத்தால் பெறப்பட்டுள்ளது. மேற் கூறிய விண்ணப்பத்திற்கு முன்னரே 222 தெரு விளக்குகள் வேண்டி 6 விண்ணப்பங்கள் சம்பந்தப்பட்ட மின் வாரியத்தின் பிரிவு அலுவலகத்தில் நிலுவையிலுள்ளது.

தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் 1–9–1991 அன்று நிலுவையி லுள்ள எல்லா தெரு விளக்குகளுக்கான விண்ணப்பங்களும் பரி சீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு 31–3–1993-க்குள் இத் தெரு விளக்குகள் பொருத்தப்படும்.

118—

வினா எண் 2189—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா:

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், பின்னவாசல் ஊராட்சி மெயின் ரோடு, புதுநகருக்கு தெரு விளக்கு அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

பின்னவாசல் கிராமத்திற்கு 30 தெரு விளக்குகள் பொருத்தி ஏற்கெனவே மின் வசதி அளிக்கப்பட்டுள்ளது. விளக்குகள் நல்ல நிலையில் இயங்கி வருகின்றன. பின்னவாசல் ஊராட்சி மெயின் ரோடு, புதுநகருக்கு தெரு விளக்குகள் கோரி விண்ணப் பம் ஏதும் மின்வாரிய அலுவலகத்தில் தற்போது நிலுவையில் இல்லை.

119—

## ஆதிதிராவிடர்களுக்கு பால்வாடி அமைத்தல்.

வினா எண் 2201—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா:

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், இடைத்தி (கி) ஆதிதிராவிடர்களுக்கு பால்வாடி ஒன்று அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?



1992 பிப்ரவரி 10]

விடை—

இல்லை.

120

## பாலர் பள்ளி தொடங்குதல்.

வினா எண் 2212—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா:

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், இடையாத்தி ஊராட்சி, வேணாம்பட்டி கிழக்கில் ஒரு பாலர் பள்ளி தொடங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

இல்லை.

121—

## ஆரம்ப சுகாதார நிலையங்கள்.

வினா எண் 2246—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா:

(அ) இராமநாதபுரத்தில் எத்தனை ஆரம்ப சுகாதார நிலையங்கள் உள்ளன ?

(ஆ) 1991–92-ல் எத்தனை ஆரம்ப சுகாதார நிலையங் கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன ?

விடை—

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் 47 ஆரம்ப சுகாதார நிலையங்கள் உள்ளன.

(ஆ) 1991–92-ல் தமிழ்நாட்டில் 76 ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஆரம்பிக்கப்பட அரசு இலக்கு நிர்ணயித்து உள்ளது.

[1992 பிப்ரவரி 10

122—

உடல் ஊனமுற்றோருக்கு மறுவாழ்வுத் திட்டங்கள்.

வினா எண் 2249—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

மாவட்டந்தோறும் உடல் ஊனமுற்றோர்களுக்கு மறுவாழ்வுத் திட்டங்கள் அமுல் நடத்தும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

விடை—

தற்போது நடைமுறையில் உள்ளது.

123—

கூட்டுறவு மற்றும் தனியார் விசைத்தறிகள்.

வினா எண் 2264—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழ்நாட்டிலுள்ள கூட்டுறவு மற்றும் தனியார் விசைத்தறிகள் எத்தனை ?

(ஆ) கூட்டுறவு விசைத்தறிகள் எத்தனை நல்ல முறையில் இலாபத்தில் இயங்கி வருகின்றன ?

விடை—

(அ) தமிழ்நாட்டில் தனியார் துறையின்கீழ் 2,07,093 விசைத் தறிகளும், கூட்டுறவுத் துறையின்கீழ் 4,848 விசைத் தறிகளும் ஆக மொத்தம் 2,11,941 விசைத்தறிகள் செயல்பட்டு வருகின்றன.

(ஆ) கூட்டுறவின்கீழ் 1,300 விசைத்தறிகள் நல்ல முறையில் இயங்கி வருகின்றன.

124—

பாசன ஏரிகளை வெட்டுதல்.

வினா எண் 2278 திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், பின்னவாசல் ஊராட்சி, சித்தாதிக்காட்டில் உள்ள கல்லாண்குளம், சித்தாதிக் குளம் இடிதாங்கி நல்லிக்குடி ஏரி ஆகிய பாசன ஏரிகளை புல்டோசர் வைத்து வெட்டித்தர அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?



1992 பிப்ரவரி 10]

விடை—

இல்லை.

125—

பூவலூர் கிழக்கு குளம் பராமரித்தல்.

வினா எண் 2338—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சை மாவட்டம். பேராவூரணி ஒன்றியம், பூவலூர் கிழக்கு ஆதிதிராவிடர் தெருவில் உள்ள குளத்தை புல்டோசர் வைத்து அகலப்படுத்தி ஆழப்படுத்தி பராமரிக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

இல்லை.

126—

பாலர் பள்ளி தொடங்குதல்.

வினா எண் 2355—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், இடையாத்தியைச் சேர்ந்த மந்திக்கோன் விடுதியில் ஒரு பாலர் பள்ளி தொடங்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

இல்லை.

127—

உறைக் கிணறுகள்.

வினா எண் 2389—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

[1992 பிப்ரவரி 10

(அ) பரமக்குடி தொகுதி போகலூர் ஒன்றியங்களில் உள்ள உறைக் கிணறுகள் எத்தனை

(ஆ) அவற்றில் உபயோகத்தில் இல்லாதவை எத்தனை ?

விடை—

(அ) 74

(ஆ) 22 உபயோகத்தில் இல்லாத இந்த உறைக் கிணறுகளில் உவர் நீர் உள்ளது.

128—

**தமிழ் நாட்டிலுள்ள அனாதை விடுதிகள்.**

வினா எண் 2402—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழ் நாட்டிலுள்ள அனாதை விடுதிகள் எத்தனை ?

(ஆ) மாவட்டந்தோறும் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

(அ) தமிழ் நாட்டில் 19 மாவட்டங்களில் வடாற்காடு—அம்பேத்கார், திருநெல்வேலி—கட்டபொம்மன், நாகப்பட்டினம்—காயிதே மில்லத் மாவட்டங்கள் நீங்கலாக 22 குழந்தைகள் காப்பகங்கள் இயங்கி வருகின்றன.

(ஆ) நடப்பு நிதி ஆண்டில் வடாற்காடு—அம்பேத்கார் மற்றும் திருநெல்வேலி—கட்டபொம்மன் ஆகிய இரு மாவட்டங்களிலும் புதிதாக ஒவ்வொரு குழந்தைகள் காப்பகம் துவங்க உத்தரவிடப்பட்டுள்ளது.

129—

**திருச்சி வட்டாட்சியர் அலுவலகத்திற்கு புதிய கட்டிடம்.**

வினா எண் 2473—டாக்டர் (செல்வி) ஜி.ஆர். மாலா : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

திருச்சியிலுள்ள வட்டாட்சியர் அலுவலகக் கட்டிடம் பழுதுபட்டிருப்பதால் அதற்குப் புதிய கட்டிடம் கட்டிக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?



1992 பிப்ரவரி 10]

விடை—

திருச்சி வட்டாட்சியர் அலுவலகக் கட்டிடம், தற்பொழுது நல்ல நிலையில் உள்ளது. கட்டிடத்தில் ஒரு சில இடங்களில் மராமத்துப் பணிகள் வெள்ளையடித்தல் முதலானவை செய்ய வேண்டியுள்ளது. இருப்பினும் புதிய கட்டிடம் கட்ட மேற்படி அலுவலகத்திற்கு அரசாணை எண் 904, வருவாய்த்துறை, நாள் 28-5-82-ல் திருச்சி கோட்டாட்சியர் வளாகத்தில் இட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

130—

**திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்து.**

வினா எண் 2603—திரு. எஸ்.எஸ். ராமசுப்பு : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

திருநெல்வேலி—கட்டபொம்மன் மாவட்டம், தென்காசியிலிருந்து சென்னை செல்லும் திருவள்ளுவர் போக்குவரத்துப் பேருந்து கீழப்பாவூர், சுரண்டை, சங்கரன் கோவில், ராஜபாளையம் வழியாக செல்ல அரசு ஆவன செய்யுமா ?

விடை—

திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின் பேருந்து தடம் எண் 290 (செங்கோட்டை - சென்னை வழித்தடம்) தென்காசி, சுரண்டை, சங்கரன்கோவில், ராஜபாளையம் வழியாக மூன்று நடைகளும், தடம் எண் 192 (செங்கோட்டை - சென்னை) தென்காசி, பாவூர்சத்திரம் வழியாக ஒரு நடையும் இயக்கப்படுகின்றன.

வினாவில் கேட்கப்பட்டுள்ள எல்லா இடங்களையும், கீழப்பாவூர் தவிர திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின் வழித்தடங்கள் சென்னையுடன் இணைக்கின்றன.

கீழப்பாவூர், பிரதான சாலையிலிருந்து ஒதுங்கியிருப்பதால் இதன் வழியாகப் பேருந்துகள் இயங்குவது இயலாது. தவிர கீழப்பாவூர், பாவூர் சத்திரத்திலிருந்து 2 கி.மீ. தொலைவில் தான் உள்ளது. எனவே கீழப்பாவூர் செல்ல விரும்பும் பயணிகள் தடம் எண் 192-ஐ பயன்படுத்தி பாவூர் சத்திரத்தில் இறங்கிச் செல்லலாம்.

[1992 பிப்ரவரி 10

131—

பால்வாடிக் கட்டிடத்திற்கு கூரை மாற்றுதல்.

வினா எண் 2637—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சை மாவட்டம், பட்டுக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், மழவேனிற்காட்டில் உள்ள பால்வாடிக் கட்டிடத்திற்கு கூரையை மாற்றித்தர அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

ஆம். மழவேனிற்காட்டில் உள்ள பாலர் பள்ளிக் கட்டிடத்திற்கு கூரையை மாற்றித்தர ரூ. 3,000 மதிப்பீட்டில் தொண்டு நிறுவனங்கள் மூலம் தத்து எடுத்து செய்து கொடுக்கும் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது.

132—

காலனி வீடுகளைப் பழுது பார்த்தல்.

வினா எண் 2668—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், நாடியம் ஊராட்சியைச் சேர்ந்த பிள்ளையார் திடலில் உள்ள பழுதடைந்த காலனி வீடுகளைப் பழுது பார்த்துத்தர அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

இல்லை.

133 —

குடிசைகளுக்கு மின் வசதி.

வினா எண் 2706—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், செங்கமங்கலம் கீழ்க்காட்டிலுள்ள குடிசைகளுக்கு ஒற்றை விளக்குப் போட அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?



1992 பிப்ரவரி 10]

விடை—

பேராவூரணி ஒன்றியம், செங்கமங்கலம் கீழ்க்காட்டில் ஒரு விளக்குத் திட்டத்தின்கீழ் இலவச மின் வசதி கோரி இதுவரை விண்ணப்பம் ஏதும் மின்வாரிய அலுவலகத்திற்கு வரவில்லை.

134—

செங்கமங்கலத்தில் நூல் நிலையம்.

வினா எண் 2710—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், செங்கமங்கலத்தில் ஒரு நூல் நிலையம் தொடங்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், செங்கமங்கலம் கிராமத்தின் மக்கட் தொகை 5,000-க்கும் குறைவாக உள்ளதால் இக் கிராமத்தில் கிளை நூலகம் திறக்க வாய்ப்பில்லை.

135—

காலனி வீடுகளைப் புதுப்பித்தல்.

வினா எண் 2724—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், அம்மையாண்டி ஆதிதிராவிடர்களின் இடிந்துபோன காலனி வீடுகளை மாற்றி புதிய வீடுகள் கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

இல்லை.

136—

## மீனவர் குடிசைகளுக்கு மின்வசதி.

வினா எண் 2732—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், நாடியம் ஊராட்சியைச் சேர்ந்த பிள்ளையார் திடல் மீனவர் குடிசைகளுக்கு ஒற்றை விளக்கு அமைத்துத்தர அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், நாடியம் ஊராட்சியைச் சேர்ந்த பிள்ளையார் திடல் மீனவர் காலனியில் ஏற்கனவே 8 குடிசைகளுக்கு மின்வசதி அளிக்கப்பட்டுள்ளன. மேற்கண்ட பகுதியில் ஒரு விளக்கு திட்டத்தின் கீழ் இலவச மின்வசதி கோரும் விண்ணப்பம் ஏதும் மின்வாரிய அலுவலகத்தில் நிலுவையில் இல்லை.

137—

## குருவிக்கரம்பை அரசினர் மேல்நிலைப் பள்ளிக்குக் கட்டிடம்.

வினா எண் 2737—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், குருவிக்கரம்பை அரசினர் மேல்நிலைப் பள்ளிக்கு நிரந்தர இரு வகுப்பறை துணைக் கட்டிடம் கட்ட அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

'இல்லை'. எனினும், ஆண்டுதோறும் நிதிநிலை அறிக்கை இரண்டாம் பகுதித் திட்டத்தில் பள்ளிக் கட்டிடம் கட்ட நிதி ஒதுக்கப்படுகிறது. மேலும் பள்ளிக் கட்டிடங்கள் கட்ட வீட்டு வசதி அபிவிருத்திக் கழகத்திடமிருந்து (HUDCO) கடனுதவி பெறவும் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த நிதி நிலைமைக்கு ஏற்ப கட்டிடங்கள் கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.





138—

## காலனி வீடுகள் கட்டுதல்.

வினா எண் 2755—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சை மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம், கோட்டாகுடி ஆதிதிராவிடர்களுக்கு மீதி நபருக்கு காலனி வீடு கட்டித்தர அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழி முறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

139—

வினா எண் 2776—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம், இராஜாமடத்தில் உள்ள ஆதிதிராவிடர்களுக்கு காலனி வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசின் செயற் குறிப்பில் உள்ளதா ?

விடை—

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்படவேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

140—

வினா எண் 2796—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

[1992 பிப்ரவரி 10

தஞ்சை மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம், புதுக்கோட்டை உள்ளூர் ஆதிதிராவிடர்களுக்கு மேலும் 20 காலனி வீடுகள் கட்டிக் கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழி முறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப் பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

141—

## பொய்த்த கிணறுகள் இழப்பீட்டு நிதி.

வினா எண் 2800—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா :

(அ) Failed well compensation scheme. நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளதா ?

(ஆ) எத்தனை பேர் இந்த திட்டத்தால் 1989-90-ல் பயன் அடைந்துள்ளனர் ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) பொய்த்த கிணறுகள் இழப்பீட்டு நிதி பற்றிய விதிகள் 1990-91 ஆண்டில் தான் [அரசு ஆணை எண் 419, நிதித்துறை (நிதி),] நாள் 19—4—90-ல் அரசால் அங்கீகரிக்கப்பட்டது. ஏனவே, 1989-90 ஆம் ஆண்டில் இந்நிதியிலிருந்து உதவித் தொகை ஏதும் வழங்கப்படவில்லை.

142—

## காலனி வீடுகள் கட்டுதல்.

வினா எண் 2854—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ?



1992 பிப்ரவரி 10]

தஞ்சை மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம், பண்ணவயல் ஊராட்சியைச் சேர்ந்த கூத்தாடிவயல் ஆதிதிராவிடர்கள் மீதி பேருக்கு காலனி வீடு கட்டித்தர அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழி முறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப் பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

143—

## பால்வாடி அமைத்தல்.

வினா எண் 2996—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா :

தஞ்சை மாவட்டம், சேதுபாவா சத்திரம் ஒன்றியம், பெரு மகளூர் நகரம், வலையன் வயலில் பால்வாடி ஒன்று அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

இல்லை.

144—

## செம்பரம்பாக்கம் ஏரியின் பணிகள்.

வினா எண் 3213—திருமதி. வி. ஜி. மணிமேகலை : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா :

(a) Whether the work at the Chembarambakkam lake in Madras city is in progress to prepare receipt of Krishra water;

(b) the details thereof ; and

(c) when will the work at the lake be completed ?

[1992 பிப்ரவரி 10

விடை—

(அ) ஆம்.

(ஆ) கிருஷ்ணா நதி நீரை பெற செம்பரம்பாக்கம் ஏரியின் முழுநீர் மட்டத்தை இரண்டி அடி உயர்த்தும் பணி 1990-91 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டு பணி முன்னேற்றத்தில் உள்ளன. இதனால் ஏரியில் கூடுதலாக 14.85 மி.க. மீட்டர் (525.00 மி.க. அடி) நீரை சேமிக்கலாம்.

(இ) எல்லா பணிகளும் 1993 ஆம் ஆண்டில் முடிவடையும் வகையில் திட்டமிடப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன,

145—

அரசு ரப்பர் கழகத்தில் உற்பத்தியாகும் ரப்பர் விற்பனை.

வினா எண் 3510—திரு. இரா. நடேசன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) அரசு ரப்பர் கழகத்தில் உற்பத்தி செய்யும் ரப்பரை டெண்டர் மூலம் விற்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், டெண்டர் மூலம் விற்காமல் பொது ஏலத்தில் விற்க அரசு முன்வருமா?

விடை—

(அ) அரசு ரப்பர் கழகத்தில் ரப்பர் டெண்டர் மூலமாகவும் பேரம் பேசியும் விற்பனை செய்யப்படுகிறது. பெறப்படுகின்ற அனைத்து டெண்டர்களையும் பிரித்துப் பார்த்து, அதில் அதிக அளவு ரப்பர் வாங்குவோரிடம் பேரம் பேசி அதிக விலைக்கு விற்பனை செய்யப்படுகிறது.

(ஆ) அரசு ரப்பர் கழகத்தில் பொது ஏல முறையில் ரப்பரை விற்பனை செய்ய எந்தவித யோசனையும் இல்லை.

146—

அரசு ஊழியர்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுத்தல்.

வினா எண் 3578—திரு. து. மூர்த்தி: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:



1992 பிப்ரவரி 10]

சீர்காழிப் பகுதியில் பணிபுரியும் அரசு ஊழியர்களுக்கு அவர்களின் நலன் கருதி வீட்டுவசதி வாரியத்தின் மூலம் வீடுகள் கட்டிக்கொடுக்க அரசு முன் வருமா?

விடை—

தற்போது இல்லை.

147—

சோப்பு தயாரிக்கும் தனியார் நிறுவனங்கள்.

வினா எண் 3885—திரு. மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(*a*) Whether private firms manufacturing soaps are purchasing sandalwood logs from the State forest department directly; and

(*b*) the details thereof?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

148—

சிதம்பரம் தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள்.

வினா எண் 4048 செல்வி கோ. மல்லிகா: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சிதம்பரம் தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் 1987 டிசம்பர் 24 ஆம் தேதிக்கு முன் இருந்த கால அட்டவணையின்படியே இருக்க ஏற்பாடு செய்து தரப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

(அ) மற்றும் (ஆ).

எந்தத் தடத்திலும் கூடுதல் பேருந்துகள் இயக்கப்படுகின்ற போது தடத்தில் உள்ள மற்றைய பேருந்துகளின் கால அட்டவணையில் மாற்றம் செய்ய வேண்டிய சூழ்நிலை ஏற்படின் ஏற்

[1992 பிப்ரவரி 10

கனவே தடத்தில் இயங்கி வரும் பேருந்துகளுடைய கால அட்டவணையும், வட்டார போக்குவரத்து அலுவலரால் மாற்றியமைக்கப்படுகிறது. அவ்வாறு மாற்றியமைக்கப்பட்டு வட்டாரப் போக்குவரத்து அலுவலர் அவர்களால் நிர்ணயம் செய்து தரப்பட்ட கால அட்டவணையின்படியே தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் தற்சமயம் இயங்கி வருகின்றன.

149—

அரசு அலுவலகங்களில் மின் உபயோகத்தை சிக்கனப்படுத்துதல்.

வினா எண் 4105—திரு. ஆ. சுப்புரத்தினம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

அரசு அலுவலகங்களில் மின்சார உபயோகத்தை சிக்கனப் படுத்த என்ன நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன ?

விடை—

அரசு அலுவலகங்களில் மின்சார உபயோகத்தை சிக்கனப் படுத்த வழிமுறைகள் விதிக்கப்பட்டு, அவை அடிக்கடி அனைத்து அலுவலர்களுக்கும் சுற்றனுப்பப்பட்டும் சீரிய முறையில் கண்காணிக்கப்பட்டும் வரப்படுகிறது.

150—

பெருமாத்தூரில் பேருந்து நிற்க ஏற்பாடு செய்தல்.

வினா எண் 4154—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) புவனகிரி ஊராட்சி ஒன்றியம் பெருமாத்தூரில் பேருந்து நிற்க ஏற்பாடு செய்யப்படுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை—

(அ) மற்றும் (ஆ) புவனகிரி ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த 'பெருமாத்தூர்', அவ்வழியாகச் செல்லும் அனைத்து தந்தை பெரியார் போக்குவரத்துக் கழக பேருந்துகளுக்கும், ஓர்



1992 பிப்ரவரி 10]

கட்டண நிலையாகும். பெருமாத்தூர் வழியாக இயக்கப்படும் அனைத்து தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளும் பெருமாத்தூரில் நின்று பயணிகளை ஏற்றியும் இறக்கியுமே செல்கின்றன.

151—

குலசேகரத்தில் அரசு கலைக்கல்லூரி.

வினா எண் 30—திரு. இரா. நடேசன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருவட்டார் தொகுதி, குலசேகரத்தில் மலையோரப் பகுதி மக்களுக்காக அரசு கலைக்கல்லூரி ஒன்று அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும் ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

152—

வெள்ளத்தினால் வீடிழந்தவர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம்.

வினா எண் 51—திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

ராதாபுரம் தொகுதியில் டிசம்பர் திங்களில் ஏற்பட்ட வெள்ளத்தினால் வீடிழந்த சுமார் 1,800 குடும்பத்தார்க்கும் புதிய இல்லங்கள் கட்டித்தரும் திட்டம் எந்த நிலையில் உள்ளது ?

விடை—

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம் ராதாபுரம் வட்டத்தில் கடந்த 29—11—1990 அன்று பெய்த மழையினால் ஏற்பட்ட வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு வீடுகளை முழுவதுமாக இழந்தவர்களின் எண்ணிக்கை 493. இவர்களில் 193 நபர்களுடைய வீட்டுமனைகள் கூடங்குளம் பகுதியில் அனல் மின்

நிலைடம் அமையவிருக்கும் காரணத்தால், அந்த 193 நபர்களுக்கும் கிராமிய வீட்டுவசதி திட்டத்தின்கீழ் வீடு கட்ட கடன் வழங்க இயலவில்லை. எஞ்சியுள்ள 300 நபர்களில் 80 நபர்களுக்கு 1990-91ஆம் ஆண்டு அட்கோ 9-ஆவது திட்டத்தின் கீழ் (தமிழ்நாடு கிராமிய வீட்டு வசதி திட்டம்) ராதாபுரம் வட்டக் கூட்டுறவு வீட்டுவசதி சங்கம் மூலம் வீடு கட்ட கடன் அனுமதிக்கப்பட்டு, வீடுகளின் கட்டுமான நிலைக்கேற்ப கடன் தவணைகளும் வழங்கப்பட்டுள்ளன. இன்னமும் 220 நபர்களுக்கு வீடு கட்ட கடனுதவி வழங்க வேண்டியுள்ளது. 1991-92-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கிராமிய வீட்டுவசதி திட்டத்தின்கீழ் எஞ்சியுள்ள 220 நபர்களுக்கும் வீடுகட்ட கடனுதவி வழங்க தக்க நடவடிக்கைகள் வீட்டுவசதி கூட்டுறவு சங்கங்களின் பதிவாளரால் மேற்கொள்ளப்படும்.

**153—**

### சாலைகள் செப்பனிடுதல்.

வினா எண் 155—டாக்டர் தே. குமாரதாஸ்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கிள்ளியூர் தொகுதி வழுதலம் பள்ளம்—பாலப்பள்ளம் பாலப்பள்ளம்—மிடாலக்காடு சாலை ஆகியவை பழுதடைந்துள்ளது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அந்த சாலைகளை உடனடியாகச் செப்பனிட அரசு முன்வருமா ?

விடை—

(அ) மற்றும் (ஆ) சட்டமன்ற வினாவில் குறிப்பிடும் சாலைகள் கிள்ளியூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட நான்கு கல் சாலைகளாக உள்ளது. அதன் விபரம் :—

1. பாலப்பள்ளம் படுவூர் சாலை .. 1.0 கி.மீ.
2. படுவூர் பாம்பூரி வாய்க்கால் சாலை .. 1.2 கி.மீ.
3. கட்டக்குழி பாம்பூரி வாய்க்கால் சாலை .. 1.2 கி.மீ.
4. பாலப்பள்ளம் மிடாலக்காடு சாலை .. 1.0 கி.மீ.

மேற்கூறிய சாலைகளில் வரிசை எண். 4-ல் குறிப்பிடும் சாலையை கிள்ளியூர் ஊராட்சி ஒன்றியத்தின் வழி 1.65 மதிப்பீட்டில் 1991-92-ஆம் வருடம் ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் தார்ச்சாலையாக மாற்றுவதற்கு வேலை தொடங்கப்பட்டுள்ளன.





**154—**

### கிராம நிர்வாக அலுவலர்களுக்கு குடியிருப்பு கட்டுதல்.

வினா எண். 291—திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கிராம நிர்வாக அலுவலர்களுக்கு குடியிருப்பும், அலுவலகமும் அந்தந்த கிராமங்களில் கட்டித்தர அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

12,498 கிராம நிர்வாக அதிகாரிகள் உள்ளனர். அவர்களுக்கு குடியிருப்பும், அலுவலகமும் அந்தந்த கிராமங்களில் கட்டித்தர பொருளாதார நிலை சீராக்கப்பட்ட பின் பரிசீலிக்கப்படும்.

**155—**

### மாவட்ட மருத்துவமனைகளுக்கு ஸ்கேன் கருவி.

வினா எண். 296—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

விடை—

அனைத்து மாவட்ட மருத்துவமனைகளிலும் (Scan) ஸ்கேன் கருவி வைக்க அரசு விரைவாக நடவடிக்கை எடுக்குமா ? சென்னை மற்றும் மதுரையில் உள்ள மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் ஸ்கேன் கருவி உள்ளது. ஸ்கேன் கருவியின் விலை ரூ. 1 1/2 கோடியாகும். மேலும் அந்த இயந்திரத்தை வைப்பதற்கு குளிர்பதனப் பாதுகாப்பான இடம், இயக்குவதற்குத் தேவையான ஆள் போன்ற வசதிகள் தேவை. மாவட்ட மருத்துவமனைகளுக்கு ஸ்கேன் கருவி வாங்குவது குறித்து, தற்போது அரசின் பரிசீலனையில் செயற்குறிப்பு இல்லை, நிதிநிலை அனுமதிக்கும்போது இக்கருத்துரு பரிசீலிக்கப்படும்.

156— [1992 பிப்ரவரி 10

## வீட்டுமனைப்பட்டா வழங்குதல்.

வினா எண். 376—திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) அந்தியூர் தொகுதியில் எண்ணமங்கலம் ஊராட்சியைச் சார்ந்த குன்னிக்காட்டான்காட்டில் வசிக்கும் அருந்ததியர் இன மக்களுக்கு வீட்டுமனைப்பட்டா வழங்கப்படாமல் உள்ளதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது பட்டா வழங்கப்படும் ?

விடை—

(அ) பெரியார் மாவட்டம், பவானி வட்டம், எண்ணமங்கலம் கிராமம், மஜரா குன்னிக்காட்டான் வலசுவில் புல எண். 489/2- ஓடைப் புறம்போக்கில் 25 ஆதிதிராவிடக் குடும்பங்கள் குடிசை போட்டு வசித்து வருகின்றனர்.

(ஆ) இப்புல எண்ணில் உள்ள மற்ற ஆக்கிரமிப்புகளை நீக்கி, நத்தமாக வகை மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேற்கண்ட நடவடிக்கை முடிந்ததும் ஆதிதிராவிட குடும்பங்களுக்கு வீட்டுமனைப்பட்டா வழங்கப்படும்.

157—

## உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளிலுள்ள ஆய்வுக்கூடங்களுக்கு உபகரணங்கள்.

வினா எண். 455—திரு. இரா. நடேசன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் அரசு உயர்நிலை மேல்நிலைப் பள்ளிகளில் உள்ள ஆய்வுக் கூடங்களில் போதிய உபகரணங்கள் இல்லாதிருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், உடனடியாக வழங்க அரசு முன்வருமா?



1992 பிப்ரவரி 10]

விடை—

(அ) மற்றும் (ஆ).

கன்னியாகுமரி மாவட்டத்தில் 46 அரசு உயர்நிலைப் பள்ளிகளில் அறிவியல் ஆய்வகம் இல்லாததால் அறிவியல் உபகரணங்கள் வழங்கப்படவில்லை. தற்போது அறிவியல் ஆய்வகங்கள் இல்லாத பள்ளிகளுக்கு ஒவ்வொரு மாவட்டத்திலும் அறிவியல் ஊர்தி மூலம் அறிவியல் கல்வி நடத்தப்பட்டு வருகிறது. இம்மாவட்டத்தில் உள்ள அனைத்து அரசு மேல்நிலைப் பள்ளிகளுக்கும் ஆய்வுக்கூடமும் உபகரணமும் உள்ளன.

158—

## ஆதிதிராவிடர்களுக்கு வீட்டுவசதி.

வினா எண். 878—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், கஞ்சங்காடு வீடற்ற ஆதிதிராவிடர் மக்களுக்கு புதிய வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

விடை—

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்படவேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

159—

வினா எண். 879—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், ஆண்டிக்காடு வீடற்ற ஆதிதிராவிடர் மக்களுக்கு புதிய வீடு கட்டிக்கொடுக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

[1992 பிப்ரவரி 10

விடை—

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்படவேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செய்யப்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

160—

வினா எண். 905—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், செறுவாவிடுதி (வடக்கு) வீடு இல்லாத ஆதிதிராவிடர் மக்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

விடை—

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்படவேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

161—

வினா எண். 906—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், செறுவாவிடுதி (வடக்கு) வெட்டிக்காடு வீடு இல்லாத ஆதிதிராவிடர் மக்களுக்கு புதிதாக வீடு கட்டிக்கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

விடை—

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்படவேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.



1992 பிப்ரவரி 10]

162—

பெருமகளூர் தலைமை சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாக்குதல்.

வினா எண். 910—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சை மாவட்டம், பேராவூரணி தொகுதி, பெருமகளூர் தலைமை சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

இல்லை.

163—

ஆதிதிராவிடர்களுக்கு வீட்டுவசதி.

வினா எண். 928—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், களத்தூர் வீடு இல்லாத ஆதிதிராவிடர் மக்களுக்கு வீடு கொடுக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா ?

விடை—

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்படவேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

164—

வினா எண். 930—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், தென்னங்குடி வீடற்ற ஆதிதிராவிடர் மக்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா ?

[1992 பிப்ரவரி 10

விடை—

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்படவேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

165—

வினா எண். 956—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சை மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம், பண்ணைவயல் வீடு இல்லாத ஆதிதிராவிடர் மக்களுக்கு புதிய காலனி வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா ?

விடை—

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படித் திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்படவேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

166—

வினா எண். 959—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சை மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம், பள்ளிகொண்டான் வீடு இல்லாத ஆதிதிராவிடர் மக்களுக்கு புதிய காலனி வீடு கட்டும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா ?

விடை—

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்படவேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.



1992 பிப்ரவரி 10]

167 —

வினா எண் 962—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சை மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம், முதல்சேரி வீடு இல்லாத ஆதிதிராவிடர் மக்களுக்கு புதிய காலனி வீடு கட்டும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா ?

விடை—

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்படவேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

168—

வினா எண் 963—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சை மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம், சுந்தர் ராஜபுரம் வீடு இல்லாத ஆதிதிராவிடர் மக்களுக்கு புதிய காலனி வீடு கட்டும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா ?

விடை—

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்படவேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

169—

காலகம் உயர்நிலைப்பள்ளிக்கு கட்டிடம் கட்டுதல்.

வினா எண் 974—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், காலகம் உயர்நிலைப் பள்ளிக் கட்டிடம் கட்ட பத்மநாபசாமி கோவில்

[1992 பிப்ரவரி 10

இடத்தை குத்தகைக்குப் பெற்றுத்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

இல்லை.

170—

ஆதிதிராவிட பெண்கள் விடுதி கட்டுதல்.

வினா எண் 1217—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பரமக்குடி தொகுதி பார்த்திபனூரில் ஆதிதிராவிட பெண்கள் விடுதி கட்ட அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

171—

பரமக்குடியிலுள்ள உயர்நிலைப் பள்ளிகள்.

வினா எண் 1423—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பரமக்குடி தொகுதியில் உள்ள உயர்நிலைப்பள்ளிகள் எத்தனை ?

(ஆ) அவற்றில் குடிநீர் வசதி இல்லாத பள்ளிகள் எத்தனை?

விடை—

(அ) ஒன்பது.

(ஆ) பரமக்குடி தொகுதியில் இயங்கி வரும் அரசு உயர் நிலை/மேல்நிலைப் பள்ளிகள் தனியாக தண்ணீர் வசதியின்றியே இயங்கி வருகின்றன. மேற்படி பள்ளிகளுக்கு கிணறு மற்றும்



1992 பிப்ரவரி 10]

ஆழ்குழாய்கள் இல்லாத காரணத்தால் பள்ளிகளில் வேலை செய்யும் பணியாளர்கள் மூலம் பொது கிணற்றிலிருந்தும் நகராட்சி குழாய்களின் மூலம் தண்ணீர் எடுக்கப்பட்டு பள்ளி மாணவர்களின் உபயோகத்திற்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது.

172—

இணைப்புச் சாலைகள்

வினா எண் 1430 டாக்டர் எஸ். சுந்தரராஜ்— மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பரமக்குடி ஒன்றியத்தில் கண்மாய்க்கரையின் மேல் எத்தனை இணைப்புச் சாலைகள் போடப்பட்டுள்ளன?

(ஆ) கண்மாய்க்கரையின் ஓரத்தில் எத்தனை இணைப்புச் சாலைகள் போடப்பட்டுள்ளன?

விடை—

(அ) நான்கு

(ஆ) பதிமூன்று

173—

வினா எண் 1431—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி தொகுதி நயினார்கோவில் தேவிபட்டினம் சாலையை இணைக்க அரசுக்கு பரித்துரை வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) மற்றும் (ஆ): பரமக்குடி தொகுதி நயினார்கோவிலும், தேவிப்பட்டினமும் ஏற்கனவே அரசுச் சாலைகளில் இணைக்கப்பட்டுள்ளன. அவை நன்கு பராமரிக்கப்பட்டு வருகின்றன.

174—

## மூவலூரில் டிரான்ஸ்பார்மர் அமைத்தல்.

வினா எண் 1432—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) இராமநாதபுரம் மாவட்டம் நயினார்கோவில் ஒன்றியம் மூவலூரில் மின் அழுத்தம் சரிசெய்ய டிரான்ஸ்பார்மர் அமைக்க அரசுக்கு பரிந்துரை வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

175—

## கால்நடை உதவி மருத்துவர்களை நியமித்தல்.

வினா எண் 1586—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

மாநிலத்திலுள்ள கால்நடை மருத்துவமனையில் கால்நடை மருத்துவர்களுக்கு (Veterinary Surgeon) உதவியாக கால்நடை உதவி மருத்துவர்களை (Veterinary Assistant Surgeon) நியமிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

இல்லை.

176—

## ஊராட்சி மன்றங்களுக்கு அலுவலகக் கட்டிடம்.

வினா எண் 1722—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) இராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி ஊராட்சி ஒன்றியத்தில் ஊராட்சி மன்றக் கட்டிடங்கள் இல்லாத ஊராட்சி மன்றங்கள் எத்தனை?



(ஆ) அவை எந்த ஆண்டு கட்டி முடிக்கப்படும்?

விடை—

(அ) பரமக்குடி ஊராட்சி ஒன்றியத்தில் தற்போது 23 ஊராட்சிகளுக்கு அலுவலகக் கட்டிடங்கள் இல்லை.

(ஆ) 1991–92 ஆம் நிதியாண்டில் 4 ஊராட்சி மன்றங்களுக்கு ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் கட்டிடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. ஊராட்சிகளின் நிதிநிலைமைக்கு ஏற்ப மீதமுள்ள 19 ஊராட்சிகளுக்கு அலுவலகக் கட்டிடங்கள் கட்டப்படும்.

177—

## குடிசைமாற்று வாரியப்பணிகளை விரிவுபடுத்துதல்.

வினா எண் 1793—டாக்டர் ஜி. ஆர். மாலா: மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

குடிசை மாற்று வாரியத்தால் செயல்படுத்தப்படும் திட்டங்கள் திருச்சி நகராட்சிப் பகுதியை ஒட்டியுள்ள பேரூராட்சிப் பகுதிகளுக்கு விரிவுபடுத்தப்படுமா?

விடை—

திருச்சி நகராட்சிப் பகுதியை ஒட்டியுள்ள லால்குடி மற்றும் திருவெறும்பூர் ஆகிய பேரூராட்சிப் பகுதிகளுக்கு மட்டுமே தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் பணிகள் விரிவுபடுத்தப்பட்டுள்ளன. திருச்சி நகரை ஒட்டியுள்ள இதர பேரூராட்சிப் பகுதிகளுக்கு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் பணிகளை விரிவுபடுத்துவதற்கான செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

178—

## விழுப்புரம் அரசினர் கலைக்கல்லூரிகளில் பட்ட மேல்வகுப்பு தொடங்குதல்.

வினா எண் 1808—திரு. தே. ஜனார்த்தனன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) விழுப்புரம் அரசினர் கலைக்கல்லூரிகளில் பட்ட மேல் வகுப்பு (எம்.ஏ., எம்.எஸ்சி., எம்.காம்.) தொடங்கும் எண்ணம் அரசுக்கு உண்டா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

179—

ஆதிதிராவிடர் காலனி வீடுகளைப் பழுதுபார்த்தல்.

வினா எண். 1874—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், மதுக்கூர் ஒன்றியம், கீழக்குறிச்சி ஆதிதிராவிடர்களின் பழுதுபட்ட காலனி வீடுகளை பழுது பார்த்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவும் இல்லை.

180—

விவசாயிகளுக்கு மத்திய, மாநில அரசுகளின் சலுகைகள்.

வினா எண். 2016—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

மத்திய மாநில அரசு அளிக்கின்ற சலுகைகளை விவசாயிகள் நன்கு அறிந்து கொள்ள அரசு தகுந்த ஏற்பாடு செய்யுமா ?

விடை—

மத்திய மற்றும் மாநில அரசுகள் பல்வேறு திட்டங்களின் மூலம் வழங்குகின்ற சலுகைகள் குறித்து வேளாண் விரிவாக்க மையங்களில் உள்ள அறிவிப்புப் பலகைகளில் விரிவாக எழுதி அந்தந்த வட்டார விவசாயிகளுக்குத் தெரிவிக்கப்படுகின்றது.



மேலும் விரிவாக்கப்பணியாளர்கள் விவசாயிகளின் சந்திப்பின் போது நேரிடையாகவும் துண்டு பிரசுரங்கள் மூலமும் தெரிவிக்கின்றனர். வேளாண்மை உதவி இயக்குநர்கள் தங்களது பகுதியில் வழங்கப்படும் மானியங்களை துண்டுப் பிரசுரங்கள் மற்றும் பல்வேறு வெளியீடுகள் மூலமாகவும் வானொலி மூலமாகவும் விவசாயிகளுக்கு இந்த தகவல்களைத் தெரிவிக்கின்றனர். இணை வேளாண்மை இயக்குநர்கள் வானொலி மற்றும் தொலைக்காட்சி மூலமாகவும், உழவர் தினவிழா மற்றும் கூட்டங்களின் வாயிலாகவும், நாளிதழ்களின் வாயிலாகவும் பல்வேறு திட்ட மானியங்கள் பற்றி உழவர்களுக்கு அறிவிக்கின்றனர்.

2. வேளாண் பெருமக்களுக்கு வேளாண்மை இலாகா மூலம் அளிக்கப்படும் மானியங்களை தொகுத்து ஒரு புத்தகமாக வெளியிட இவ்வருடம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

181—

வைகை அணையில் இருந்து இராமநாதபுரத்திற்கு திறந்து விடப்பட்ட நீர்.

வினா எண். 2110—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

விவசாயத்திற்காக 1990–91 ஆம் ஆண்டு வைகை அணையில இருந்து இராமநாதபுரம் மாவட்டத்திற்கு திறந்து விடப்பட்ட நீரின் அளவு என்ன ?

விடை—

திறந்துவிடப்பட்ட மொத்த நீரின் அளவு 2,039 மி. கன அடிகளாகும்.

182—

நகரப் பேருந்தை நீட்டித்தல்.

வினா எண். 2116—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

பரமக்குடி—வீரனூர் பேருந்தை முதலூர் வரையிலும் பரமக்குடி—காமன்கோட்டை பேருந்தை மென்னந்தி வரையிலும், பரமக்குடி—கொழுவூர் பேருந்தை கிளியூர் வரையிலும் நீட்டித்துத்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

[1992 பிப்ரவரி 10

விடை—

பரமக்குடி—வீரவனூர் வழித்தட தூரம் 27.0 கிலோ மீட்டர், வீரவனூரிலிருந்து முதலூர் 6.0 கிலோ மீட்டராகும். எனவே வழித்தடத்தின் மொத்த தூரம் 33.0 கிலோ மீட்டராகும். இத்தூரம் நகரப் பேருந்து செலுத்த அனுமதிக்கப்பட்ட 30.0 கிலோ மீட்டரைக் காட்டிலும் அதிகமாக உள்ளதால் பரமக்குடி—வீரவனூர் நகரப் பேருந்தை முதலூர் வரை நீட்டித்துச் செலுத்த இயலாது. முதலூருக்கு இராமநாதபுரத்திலிருந்து நகரப் பேருந்து வசதியுள்ளது.

பரமக்குடி—காமன்கோட்டை வழித்தட தூரம் 23.6 கி.மீ. காமன்கோட்டையிலிருந்து மென்னந்தி 5.6 கிலோ மீட்டர் தூரத்திலுள்ளது. எனவே பரமக்குடியிலிருந்து மென்னந்தி வரையிலான வழித்தடம் தூரம் 29.2 கிலோ மீட்டர் மட்டுமே. எனவே பரமக்குடி—காமன்கோட்டை நகரப் பேருந்தை மென்னந்தி வரை நீட்டித்துச் செலுத்த மருது பாண்டியர் போக்குவரத்துக் கழகம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

பரமக்குடி கொறுவூர் வழித்தடம் தூரம் 24.0 கிலோ மீட்டர். கொறுவூரிலிருந்து கிளியூர் 3.1 கிலோ மீட்டர் தூரத்திலுள்ளது. பரமக்குடி — கிளியூர் வழித்தட தூரம் 27.1 கிலோ மீட்டர் மட்டுமே. எனவே பரமக்குடி — கொறுவூர் நகரப் பேருந்தை கிளியூர் வரை நீட்டித்துச் செலுத்த மருது பாண்டியர் போக்குவரத்துக் கழகம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

183—

சாலை பாதுகாப்புச்சுவர் கட்டுதல்.

வினா எண். 2132—திரு. ஆர். முருகையா பாண்டியன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) திருநெல்வேலியிலிருந்து பாளையங்கோட்டை மார்க்கமாக தென்காசி செல்லும் மெயின் ரோட்டில் பிராஞ்சேரி குளத்தங்கரை அநேக இடங்களில் பாதுகாப்புச் சுவர் கட்டப்படாமல் இருப்பதால் போக்குவரத்து பாதிப்பு ஏற்படுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

(அ) மற்றும் (ஆ) சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்படும் பிராஞ்சேரி குளம் பாளையங்கோட்டை அம்பா சமுத்திரம் சாலையில் கி.மீ. 15.0—15.8 பகுதியில் (மாவட்ட



1992 பிப்ரவரி 10]

பெருஞ்சாலை) இடது பக்கத்தில் உள்ளது. இந்தப் பகுதியில் எங்கெங்கு குறுகலான சாலை இருந்ததோ அங்கெல்லாம் தக்க பாதுகாப்பு பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன. இந்தச் சாலைப்பகுதி தற்போது இருவழிப்பாதை கொண்ட தார் சாலையாக உள்ளது. இந்த சாலையில் தற்போது வாகன போக்குவரத்து தங்கு தடையின்றி சென்று கொண்டு இருக்கிறது. இச்சாலையில் ஓரிரு இடங்களில் சாலை மருங்குகள் மட்டும் ( Berms ) அகலம் குறைவாக உள்ளதால் அவ்விடங்களில் தடுப்புச் சுவர் கட்டப்பட வேண்டும். இந்த தடுப்புச் சுவர் கட்டும் பணிகள் ஆண்டு பராமரிப்பு நிதி நிலைக்கேற்ப கட்டம் கட்டமாக எடுத்துச் செய்யப்படும்.

184—

காரில் செல்பவர்கள் பாதுகாப்பு பெல்ட் அணிதல்.

வினா எண். 2237—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

கார்களில் செல்லும் டிரைவர்களும் மற்றும் முன் வரிசையில் இருப்பவர்களும் கட்டாயமாக பெல்ட் அணிய அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

1989-ஆம் ஆண்டு மத்திய மோட்டார் வாகன விதி 125 (9)ன்படி இரண்டு சக்கர வண்டிகள் மற்றும் மூன்று சக்கர வண்டிகளைத் தவிர இதர வாகனங்களில் செல்லும் ஓட்டுநர்கள் மற்றும் முன்வரிசையில் பயணம் செய்பவர்களும் கட்டாயமாக பாதுகாப்பு பெல்ட் அணிய வேண்டும். ஆனால், இந்த விதி எந்த தேதியில் இருந்து நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என மத்திய அரசு அறிவிக்கை பிறப்பிக்காததால் இவ்விதி இன்னமும் நடைமுறைக்கு வரவில்லை. நடைமுறைக்கு வந்ததும் இங்கும் அமுல் செய்யப்படும்.

185—

நகரப் பேருந்து விடுதல்.

வினா எண். 2241—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பரமக்குடி நகராட்சி எல்லைக்குள் நகரப் பேருந்து விடும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

(அ) மற்றும் (ஆ)

பரமக்குடி நகரம் 4 அல்லது 5 கிலோ மீட்டர் சுற்றளவுள்ள ஒரு நகராட்சி, நகரின் எல்லைப் பகுதியிலிருந்து 4 திசைகளிலும் பேருந்துகள் செலுத்தும் இணைப்புச் சாலைகள் இல்லை. நகருக்குள் நுழைவதற்கு எல்லைப் பகுதியிலுள்ள பிரதானச் சாலை வழியாகத்தான் திரும்ப வர வேண்டும்.

பரமக்குடி பேருந்து நிலையத்திலிருந்து நான்கு திசைகளிலும் நகரப் பேருந்துகள் 30.0 கிலோ மீட்டர் தூரம் வரை இயக்கப்பட்டு வருகிறது. பரமக்குடி ஒரு சிறிய நகரமாக இருப்பதாலும் பேருந்துகள் செல்லும் இணைப்புச் சாலைகள் நகர எல்லைக்குள் இல்லாத காரணத்தாலும், பரமக்குடி நகர எல்லைக்குள் பேருந்து செலுத்த இயலாத நிலையில் உள்ளது.

186—

## வாக்குச்சாவடி அமைத்தல்.

வினா எண். 2305—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம் பேராவூரணி ஒன்றியம் குறிச்சியைச் சேர்ந்த மேட்டுவயலில் தனியாக வாக்குச்சாவடி அமைக்க அரசிடம் செயற்குடிப்பு உள்ளதா?

விடை—

மேட்டுவயல், ஒரு சிற்றூர். இது குறிச்சி கிராமத்தில் உள்ளது. இங்குள்ள மொத்த வாக்காளர்களின் எண்ணிக்கை 365. மேட்டுவயலில் உள்ள வாக்காளர்கள் குறிச்சி கிராமத்தில் ஆரம்பப்பள்ளியில் அமைக்கப்பட்ட வாக்குச்சாவடியில் நாடாளுமன்றத்திற்கும், சட்டமன்றப் பேரவைக்கும் அண்மையில் நடைபெற்ற பொதுத்தேர்தலின்போது வாக்களித்தனர். இவ்வாக்குச் சாவடிக்கும், மேட்டுவயல் சிற்றூருக்கும் உள்ள தூரம் 1.5 கிலோ மீட்டர். மேட்டுவயலில் தனியாக வாக்குச்சாவடி அமைக்க செயற்குறிப்பு ஏதும் இல்லை.

187—

## ஆதிதிராவிடர்களுக்கு வீட்டுவசதி.

வினா எண். 2324—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், குறிச்சி கிழக்கு மீதமுள்ள ஆதி திராவிடர்களுக்கு காலனி வீடுகள் கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?



விடை—

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழி முறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

188—

## கண்மாய் மராமத்து செய்தல்.

வினா எண். 2410—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி தொகுதி அரியகுடி கண்மாய் மராமத்து செய்ய அரசுக்குப் பரிந்துரை வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

189—

வினா எண். 2412—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி தொகுதி, போகலூர் ஒன்றியம், எட்டியல் கிராம கண்மாய் எந்த ஆண்டு மராமத்து செய்யப்பட்டது ?

(ஆ) மீண்டும் மராமத்து செய்ய அரசுக்குப் பரிந்துரைகள் வந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், விவரம் என்ன ?

[1992 பிப்ரவரி 10

விடை—

(அ) எட்டிவயல் கிராம கண்மாய் 1983–84-ல் மராமத்து செய்யப்பட்டது.

(ஆ) ஆம்.

(இ) நடப்பு ஆண்டில் (1991–92) மேற்படி கண்மாயில் கரை, மடை மற்றும் கலுங்கு ஆகியவற்றை ரூ. 60,000 செலவில் மராமத்து செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

190—

## தொலைக்காட்சிப் பெட்டிகள் அளித்தல்.

வினா எண். 2500— திரு. கே. கந்தசாமி :

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

ஊராட்சி மன்றங்களுக்குக் கொடுக்கப்பட்ட தொலைக்காட்சிப் பெட்டிகள் பெரும்பாலும் ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர்கள் வீடுகளிலேயே உள்ளதால் அவைகளைப் பெற்று உள்ளூர் பொது மக்கள் பயன் பெற அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

இவ்வாறான முறையில் குறிப்பிட்ட குற்றச்சாட்டுகள் ஏதும் கிடைக்கவில்லை. கிடைத்தால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும். இருப்பினும் இது போன்ற குற்றச்சாட்டுகளைத் தவிர்ப்பதற்காக அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் அறிவுரைகள் வழங்கப்பட்டு மீண்டும் வலியுறுத்தப்பட்டுள்ளன.

191—

## மீனவர்களுக்கு வீட்டு வசதி.

வினா எண். 2785—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு மீனளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், பிள்ளையார் திடலில் மேலும் மீனவர்கள் காலனி கட்டிக் கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

இல்லை.



1992 பிப்ரவரி 10]

192—

## சாலை மராமத்து செய்தல்.

வினா எண். 3066—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு மீனளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம் சேதுபாவாசத்திரம் மெயின் சாலையிலிருந்து கடற்கரை செல்லும் மீனவர்கள் சாலையை மராமத்து செய்துதர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

இல்லை.

193—

வினா எண். 3069—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு மீனளத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், அந்தோணியார்புரம் கடற்கரை ஓரத்தில் சாலை வசதியும் விளக்கு வசதியும் செய்துகொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

இல்லை.

194—

வினா எண். 3081—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு மீனளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், புதுப்பட்டினம் ஊராட்சியை சேர்ந்த வெளிவயலுக்கு செல்லும் மீனவர் சாலையை பராமரித்து தார் சாலையாக மாற்றியும் இரண்டு சிறு பாலங்கள் இடையில் அமைத்தும் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

இல்லை.

[1992 பிப்ரவரி 10

195—

சென்னை பிராட்வேயில் உள்ள பல்கலைக் கழக மாணவர் விடுதி.

வினா எண். 3228—திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(a) whether the Government building at Brodway where the University students hostel was run is in a dilapidated condition; and

(b) if so, the steps taken to reconstruct the building for the students hostel ?

விடை—

(அ) மற்றும் (ஆ) சென்னை பிராட்வேயில் பல்கலைக் கழக மாணவர் விடுதியாக செயல்பட்ட கட்டிடம், '' யாத்ரி நிவாஸ் '' அமைப்பதற்காக, நீண்டகால குத்தகை அடிப்படையில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்கு ஒப்படைக்கப்பட்டு விட்டது.

196—

முதுநிலைப் பட்ட மையம் அமைத்தல்.

வினா எண். 3447—திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பெரியார் மாவட்டம், ஈரோட்டில் பாரதியார் பல் கலைக் கழகத்தைச் சேர்ந்த முதுநிலைப் பட்டமையம் (Post Graduate Centre) அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமைக்கப்படும் ?

விடை—

(அ) மற்றும் (ஆ) பாரதியார் பல்கலைக் கழக எல்லைக்குட் பட்ட ஈரோட்டில் முதுநிலைப் பட்ட மையம் அமைக்கும் திட்டம் பல்கலைக் கழகத்தின் பரிசீலனையில் உள்ளது.

197—

திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்து.

வினா எண். 3476—திரு. எம். எம். எஸ். அபுல்ஹசன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தஞ்சை மாவட்டம் அதிராமபட்டினத்திலிருந்து சென்னைக்கு சொகுசுப் பேருந்து ஒன்று திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தால் விடும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?



1992 பிப்ரவரி 10]

(ஆ) ஆம் எனில், எப்பொழுதிலிருந்து விடப்படும் ?

விடை—

(அ) மற்றும் (ஆ) தற்சமயம் தடம் எண் 333 அதிராமபட்டினத்திலிருந்து சென்னைக்கு இரண்டு பேருந்துகளைக் கொண்டு நான்கு ஒரு வழிப் பயணங்களுடன் நாள்தோறும் இயக்கப்பட்டு வருகின்றன. இத்தடத்தின் பயணிகள் விகிதாச்சாரம் 88 சதவீதம் ஆகும்.

சூப்பர் டீலக்ஸ் பேருந்துகளின் இருக்கை எண்ணிக்கை 35 தான். ஆனால் செமி டீலக்ஸ் பேருந்தின் இருக்கை எண்ணிக்கை 45 ஆகும். இந்த வழித்தடத்தில் சூப்பர் டீலக்ஸ் பேருந்தினை இயக்கினால் வருவாய் இழப்பு ஏற்படும் எனக் கருதப்படுகிறது. எனவே, இந்த வழித்தடத்தில் சூப்பர் டீலக்ஸ் பேருந்தை இயக்குவது உகந்ததல்ல.

198—

நகரப் பேருந்து விடுதல்.

வினா எண். 3498—திரு. எஸ். எம். துரை : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திண்டுக்கல்—ஸ்ரீராமபுரத்திற்கு இரண்டு தனியார் நகரப் பேருந்துகள் மட்டுமே ஓடிக்கொண்டிருப்பதால் மக்கள் நெரிசல் மிகுந்த அந்தப் பகுதியில் ராணி மங்கம்மாள் போக்குவரத்துக் கழகத்தின் நகரப் பேருந்து விட அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது பேருந்து விடப்படும் ?

விடை—

(அ) மற்றும் (ஆ) ஸ்ரீராமபுரம் கிராமமானது ஒட்டன்சத்திரம்—செம்பட்டி பிரதான சாலையில் அமைந்துள்ளது. தற்போது திண்டுக்கல்லிலிருந்து எல்லப்பட்டி ராஜாபுதூர் வழியாக ஸ்ரீராமபுரத்திற்கு தனியார் பேருந்துகள் இரண்டு 32 தனி நடைகள் இயங்கி வருகின்றன. மேலும் ராணி மங்கம்மாள் போக்குவரத்துக் கழகத்தின் நகரப் பேருந்துகள் இரண்டின் மூலமாக ஸ்ரீராமபுரம் விலக்கு வழியாக 6 தனி நடைகள் (வேலன் சேர்வை காரன்பட்டிக்கு 4 தனி நடைகளும் தெத்துப்பட்டிக்கு 2 தனி நடைகளும்) இயக்கப்படுகின்றன. ஸ்ரீராமபுரம்—விலக்கிலிருந்து ஸ்ரீராமபுரம் 0.6 கி.மீ. தான் உள்ளது. எனவே

இப்பேருந்துகள் மூலமாகவும் ஸ்ரீராமபுரத்திற்கு பேருந்து வசதி அளிக்கப்பட்டுள்ளதாக கொள்ளலாம். இவ்வாறாக தனியார் பேருந்து மூலமாக 32 தனி நடைகளும் கழக பேருந்து மூலமாக 6 தனி நடைகளும் மொத்தம் 38 தனி நடைகள் திண்டுக்கல்— ஸ்ரீராமபுரத்திற்கு இயக்கப்படுகின்றன. தற்சமயம் இயக்கப்படும் நடைகளே போதுமானவை என்று கருதப்படுகிறது.

199—

பள்ளிக் கட்டிடங்களை பராமரிக்கும் பிரிவிற்கு வாகன வசதி.

வினா எண். 3516—திரு. இரா. நடேசன் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள பள்ளிக் கட்டிடங்களை பராமரிக்கும் பிரிவிற்கு பழுதடைந்த பள்ளிகளை சுற்றிப் பார்ப்பதற்கு வசதியாக வாகன வசதி இல்லாதிருப்பது அரசுக்கு தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், வாகன வசதி செய்து கொடுக்க அரசு முன்வருமா ?

விடை—

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டத்தில் பள்ளிக் கட்டிட உட் கோட்டத்திற்கு ஜீப்பு வசதி இல்லை. பொதுப்பணித் துறையில், பிரிவு அலுவலர் எவருக்கும் பணி ஆய்வுக்கு என தனியே வாகன வசதி ஏதும் அளிக்கப்படுவதில்லை.

200—

பேருந்து வசதி செய்தல்.

வினா எண். 4126—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) புவனகிரி தொகுதி, பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியத்தில் சிதம்பரம்—புதுச்சத்திரம் வழி, தச்சக்காடு, சேந்திரக்கிள்ளை வழியாக மேலும் ஒரு பேருந்துவிட ஏற்பாடு செய்துதர அரசு ஆவன செய்யுமா ?





(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை—

(அ) மற்றும் (ஆ)

சிதம்பரத்திலிருந்து தச்சக்காடு, சேந்திரக்கிள்ளை வழியாக புதுச்சத்திரம் வரை தற்பொழுது தந்தை பெரியார் போக்குவரத்துக் கழக நகரப் பேருந்து தடம் எண். டி. 7 நாளொன்றுக்கு 10 நடைகள் வீதம் இயக்கப்பட்டு வருகிறது. மேற்கண்ட வழித்தடத்தில் கூடுதல் நடைகள் இயக்க தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

[குறிப்பு— ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி * இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்]

சிறப்புக்குறிப்பு.

கோவை மாவட்டத்தில் அரசு வழக்கறிஞர்கள் இல்லாத காரணத்தால் பொதுமக்கள் பாதிக்கப்பட்டுள்ளது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. கே. லட்சுமணன் அவர்கள் கோவை மாவட்டத்தில் அரசு வழக்கறிஞர்கள் இல்லாத காரணத்தால் கடந்த 4 மாதங்களாக ஏற்பட்டுள்ள சிரமங்கள் குறித்து அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டும் என்று ஒரு பிரச்சினையை என்னிடத்திலே தெரிவித்திருக்கிறார்கள். அவருக்கு அனுமதி அளித்திருக்கிறேன். திரு. வி. கே. லட்சுமணன்.

திரு. வி. கே. லட்சுமணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டத்தில் அரசு தரப்பு வழக்கறிஞர்கள் கடந்த 4 மாதங்களாக நியமிக்கப்படாமல் அந்த இடங்கள் காலியாக உள்ளதால் ஏராளமான வழக்குகள் தேங்கிக் கிடக்கின்றன. இதனால் பொதுமக்கள் பெரிதும் அவதிக்குள்ளாகியிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

முற்பகல் 10–55

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்ட அதிகாரிகள், ஆபீசர்ஸ் அப்பாயின்ட்மெண்ட் பொறுத்தவரையில் ஒரு நடைமுறை உண்டு. ஒரு அரசாங்கம் மாறி இன்னொரு அரசாங்கம் வருகிறபோது, ஏற்கனவே அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டவர்கள் ஒன்று ராஜினாமா செய்வார்கள் அல்லது அரசாங்கத்தினால் விடுவிக்கப்படுவார்கள். இதுதான் நடைமுறையாக

[திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி] [1992 பிப்ரவரி 10

இருந்தது. ஆனால் 1991-வது ஆண்டு, உத்தரபிரதேசத்தில் ஆட்சி மாறிய உடன், பி.ஜே.பி. ஆட்சிக்கு வந்த உடன், அவர்கள் சட்ட அதிகாரிகளை, ஒரே உத்தரவில், ஒரே நாளில், ஒரே நிமிடத்தில் மாற்றினார்கள். பாதிக்கப்பட்ட வழக்கறிஞர்கள் சுப்ரீம் கோர்ட்டுக்குப் போனார்கள். சுப்ரீம் கோர்ட் 'ஏர்பஸ் ஆர்டர்' போடக் கூடாது, 'ஆர்பிட்ரரி ஆர்டர் போடக் கூடாது. எல்லா மாநிலங்களும் இனி வழக்கறிஞர்களை நியமிக்கிறபோது, எல்லா வழக்கறிஞர்களுக்கும் வாய்ப்பளிக்க வேண்டும் என்று ரூலிங் சொல்லியிருக்கிறது. அதன் காரணமாகத்தான் இங்கே நாம் அதை 4 மாதங்களாகப் பின்பற்றி, நாங்கள் மாவட்ட ஆட்சித் தலைவர்களிடத்திலே 'பேனல்' கேட்டிருக்கிறோம். இது அரசாங்கத்திற்கு வந்துவிட்டது. விரைவாக சில மாவட்டங்களுக்கு நியமித்து இருக்கிறோம். கோவை மாவட்டத்திற்கு விரைவில் 'பேனல்' அடிப்படையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒப்புதலோடு நியமிக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

## 3. கவன ஈர்ப்பு.

**(அ) தோல் தொழிற்சாலையிலிருந்து வெளியேற்றப்படும் கழிவு நீரால் பம்மல் நகர்ப் பகுதி மக்கள் பாதிக்கப் பெறுவது குறித்து.**

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. இன்று கடைசி நாளாக இருக்கிற காரணத்தால், இரண்டுக்கு மேற்பட்ட கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முதலாவது கவன ஈர்ப்பு, திரு. எஸ். எம். கிருஷ்ணன், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. எஸ். எம். கிருஷ்ணன்.

திரு. எஸ். எம். கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தோல் தொழிற்சாலையிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுநீரால் பம்மல் நகர் பாதிக்கப்படுவது குறித்த, அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, விவர அறிக்கை அவைமுன் வைக்கப்பட்டிருக்கிறது.



[திரு. சு. முத்துசாமி]

1992 பிப்ரவரி 10]

## அறிக்கை.

செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டம், சைதாப்பேட்டை தாலுக்காவில் சுமார் 90 தோல் பதனிடும் தொழிற்சாலைகள் பம்மல்-பல்லாவரம் ஆகிய பகுதிகளில் இயங்கி வருகின்றன. இந்தத் தோல் பதனிடும் தொழிற்சாலைகள் பகுதியாக பதனிடப்பட்ட தோலாகவோ அல்லது முழுவதும் பதனிடப்பட்ட தோலாகவோ உற்பத்தி செய்கின்றன. இத்தொழிற்சாலைகளிலிருந்து வெளியேற்றப்படும் சுத்திகரிக்கப்படாத அல்லது பகுதியாகச் சுத்தகரிப்பு செய்யப்பட்ட கழிவு நீரானது நிலத்தில் அல்லது நீர் நிலைகளில் வெளியேற்றப்படுவதால் அவற்றின் தன்மை பாதிக்கப்படுகின்றது.

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் 1974-ம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம் மற்றும் 1981-ம் ஆண்டு காற்று (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டங்களைச் செயல்படுத்துகிறது.

மேற்படி சட்டத்தின் பிரிவு 25/26-ன் படி புதிய மற்றும் செயலிலுள்ள தோல் பதனிடும் தொழிறசாலைகள் வடிகால் கழிவு, நீர் மற்றும் தொழிற்சாலைக் கழிவு நீரினை நீரோடையிலோ அல்லது கிணற்றிலோ அல்லது வடிகாலிலோ அல்லது நிலத்திலோ வெளியிடுவதறகு தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் ஒப்புதலைப் பெற வேண்டும். 76 தோல் பதனிடும் தொழிற்சாலைகள் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் இசைவினைப் பெற விண்ணப்பித்துள்ளது. இசைவினைப் பெற தமிழ்நாடு அரசு குறித்த தேதியான 31—5—198-4க்குள் விண்ணப்பிக்காத 19 தோல் பதனிடும் தொழிற்சாலைகள் மீதும் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் ஒப்புதல் வழங்கும்பொழுது தொழிற்சாலைகள் வெளியேற்றும் கழிவு நீரின் தன்மைக்கான வரைமுறைகளைத் தெரிவிக்கிறது. மூன்று தோல் பதனிடும் தொழிற்சாலையானது கழிவு நீரினை சுத்திகரிப்பு செய்ய சுத்திகரிப்பு நிலையம் அமைத்துள்ளது.

அநேகமாக எல்லா தோல் பதனிடும் தொழிற்சாலைகளும் சிறு தொழிற்சாலைகளே. அவை சொந்தமாக சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்குப் பண வசதி மற்றும் இடவசதியின்மை போன்ற காரணங்களைக் கூறி வந்தன. ஆகவே தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் அருகருகில் உள்ள தொழிற்சாலைகளை ஒன்று சேர்த்து ஒரு பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க யோசனை தெரிவித்தது. அதன்படி தொழிற்சாலைகள் அனைத்தும் பல்லாவரம் தோல் பதனிடும் தொழிற்சாலைகளின் சுத்திகரிப்பு நிலையம் (பி) லிமிடெட் என்ற நிறுவனத்தினை அமைத்தது. இந்த நிறுவனத்தில் மொத்தம்

90 தொழிற்சாலைகள் சேர்ந்துள்ளன. சுத்திகரிப்பு நிலையத்தினை நிறுவுவதற்கும் பராமரிப்பதற்கும் மற்றும் சுத்திகரிப்பு செய்வதற்கும் இந்த நிறுவனம் பொறுப்பேற்கும்.

இந்த சுத்திகரிப்பு நிலையத்தின் மொத்த மதிப்பீடு ரூ. 495 லட்சமாகும். சுமார் 3,000 கன மீட்டர் கழிவு நீர் தினமும் சுத்திகரிப்பு செய்யும் திறன் கொண்டதாக இருக்கும். மொத்த தொகையின் நிதி ஒதுக்கீடு கீழ் வருமாறு :

10 சதவீதமானது தொழிற்சாலைகளே ஏற்க வேண்டும். 25 சதவிகிதம் மத்திய அரசால் மான்யமாக வழங்கப்படும். 25 சதவிகிதம் மாநில அரசால் மான்யமாக வழங்கப்படும். மீதம் 40 சதவிகிதம் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளிலிருந்து கடனாகப் பெறப்படும்.

மத்திய மற்றும் மாநில அரசுகள் தலா ரூ. 50 லட்சம் வீதம் ரூ. 1 கோடியை மான்யத்தின் முதல் தவணையாக அளித்துள்ளது. தோல் பதனிடும் நிறுவனமானது தோல் பதனிடும் தொழிற்சாலைகளின் பங்காக ரூ. 42 லட்சத்தினை வசூலித்துள்ளது.

மேற்கூறிய சுத்திகரிப்பு நிலையத்தின் திட்டமானது நாகபுரியிலுள்ள தேசிய சுற்றுச்சூழல் பொறியியல் ஆராய்ச்சி நிலையத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. சுத்திகரிப்பு நிலையத்தில் திரட்டு கிணறு (Collection tank), கலப்பான் (Pl... Mixer) பகிர்வு தொட்டி (Distribution box), காற்று ஏற்று தொட்டி, காற்றில்லா வடிப்பான் (Anaerobic contac filter) சுத்திகரிக்கப்பட்ட கழிவு நீர்த் தொட்டி, இரண்டாம் நிலை தெளிவாக்கும் தொட்டி, வண்டல் தொட்டி, செண்டிரிபியூஸ், கெட்டிப்படுத்தும் தொட்டி போன்ற சாதனங்கள் அமைக்கப்படும்.

சுத்திகரிக்கப்பட்ட கழிவு நீரை அடையாறு ஆற்றில் வெளியிட உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்த நிறுவனமானது தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் ஒப்புதலைப் பெற விண்ணப்பித்துள்ளது. தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் தனது ஒப்புதலை 31-3-1992 வரையில் அளித்துள்ளது. இந்த நிறுவனம் 2.424 ஏக்கர் நிலத்தினை சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்கு வாங்கியுள்ளது. நிலத்தினை சுற்றி பாதுகாப்புச் சுவர் எழுப்பப்பட்டுள்ளது.

இந்த நிறுவனம் பொது சுத்திகரிப்பு நிலையத்தினைக் கட்டி முடித்து இயக்குமானால் தோல் பதனிடும் தொழிற்சாலைகளினால் ஏற்படும் மாசு கட்டுப்படுத்தப்படும்.

திரு. எஸ். எம். கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பம்மல் நகரம் சென்னை நகரத்திற்கு அருகாமையிலுள்ள, பல்லாவரத்தை அடுத்துள்ள நகரம். ஒரு லட்சம்



மக்கள் வாழ்கின்ற நகரம். அங்கே 200-க்கு மேற்பட்ட தோல் தொழிற்சாலைகள் உள்ளன. அந்தத் தோல் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேற்றப்படுகின்ற கழிவு நீர் அந்த நகரத்தில் ஓடி, நிலத்தடி நீரை முழுக்க முழுக்க பாழ்படுத்தி விட்டது. இதை அனைவருமே அறிவர். இதன் விளைவாக, சுகாதாரக் கேடுகள் அங்கே மிகுந்துள்ளன. அண்மையில் உறுதிமொழிக் குழு அங்கே வருகை தந்தபோது, அதனுடன் வந்த அங்கத்தினர்கள் அத்தனைபேரும் அதனை நேராக காணக்கூடிய வாய்ப்பு இருந்தது. அங்கே நிரந்தர ட்ரீட்மென்ட் பிளான்ட் ஒன்றை அமைக்க ஏற்பாடுகள் நடந்துகொண்டிருப்பது உண்மைதான். ஆனால் அந்த ட்ரீட்மென்ட் பிளான்ட் நடைமுறைக்கு வருவதற்கு இன்னும் குறைந்தது, இன்றைக்கு துவங்கினால்கூட, ஓராண்டு ஆகும் என்று நினைக்கிறேன். ஆனால் அதற்கு இடையே, உடனடி தீர்வு என்ன? இடைக்காலத்தில் அந்த நீரை, அந்த மத்திய ட்ரீட்மென்ட் பிளான்ட் ஒன்று வைக்கும்வரை அந்தந்த தொழிற்சாலைகளில் ஒவ்வொரு இன்டர்னல் ட்ரீட்மென்ட் பிளான்ட் இருக்கிறதே, அவைகளை உடனடியாக இயக்க செய்துவிடுவோமேயானால், ஓரளவுக்கு கழிவுநீரை சுத்திகரிப்பு செய்து வெளியே அனுப்ப வாய்ப்பு இருக்கிறது. அல்லாமலும் கூட, அங்கே இருக்கிற கழிவுநீரை, நகராட்சிகளில் கழிவு நீரை வெளியேற்றுகிறோமே அதுபோல 'டாங்கர்'களை வைத்து வெளியேற்றக்கூடிய வாய்ப்பும் இருக்கிறது. இந்த இரண்டு முறைகளையும் உடனடியாக கையாளுவோமேயானால் உடனடியாக அது நல்ல தீர்வை வழங்குவதாக ஆகும் என நான் கருதுகிறேன். இதன் விளைவாக அங்கே கொசுத் தொல்லை மிக மிக அதிகமாக இருக்கிறது. அதுமட்டுமல்லாமல், அங்கே இருக்கிற தொழிற்சாலைகளுக்கு உள்ளேயே கழிவு நீரைத் தேக்கி வைத்திருக்கிறார்கள். சாதாரணமாக, கோட்டைகளிலும், மதிற்சுவர்களிலே எல்லாம்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : —அந்த விளக்கக் குறிப்பினையொட்டி உங்களுடைய கேள்வியைக் கேட்க வேண்டும்.

திரு. எஸ். எம். கிருஷ்ணன் : எனவே, இத்தனை சிக்கல்களை ஏற்படுத்திக்கொண்டிருக்கிற இந்தக் கழிவு நீர் பிரச்சினைக்கு அரசு உடனடி தீர்வு காண, என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11-00

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியதற்கு இணங்க அங்கே 98 தோல் பதனிடும் தொழிற்சாலைகள் இருக்கின்றன. அதிலே மூன்று தொழிற்சாலைகள் மட்டும் டிரீட்மென்ட் பிளான்ட்டை போட்டிருக்கிறார்கள்.

மற்றவர்கள் யாரும் அதைச் சரியாகப் போடவில்லை. எனவே தான் இந்தக் கழிவு நீர் வெளியிலே வந்து, பல பிரச்சினை களை இப்போது உருவாக்கிக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போல அதற்குத் தீர்வு என்பது, பொது சுத்திகரிப்பு நிலையம் என்றைக்கு அமைக்கப் படுகிறதோ அன்றுதான் அதற்கு முழுமையான தீர்வு கிடைக்கும். அதற்கு ஓராண்டுக்காலம் ஆகுமென்று சொன்னார்கள். 1993 டிசம்பர் மாதத்திலேதான் அது முடியும் என்ற வகையிலே அந்தத் திட்டம் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது. "இனி மேல் ஆரம்பித்தால்" என்று உறுப்பினர் அவர்கள் சொன் னார்கள். இப்போது அந்த வேலை ஆரம்பித்து நடந்து கொண்டிருக்கிறது. எனவே 1993 டிசம்பர் மாதம் அது முடிய இருக்கிறது. அப்படி முடியும்போது அனேகமாக இந்தப் பிரச் சினைகள் முழுவதும் தீர்க்கப்பட்டு விடும் என்பதை நான் தெரி வித்துக்கொள்கிறேன். இடைக்காலத்திலே இதை முழுமையாகத் தீர்க்க என்ன நடவடிக்கை என்று கேட்டார்கள். அதை முழு மையாகத் தீர்ப்பதற்கு நிச்சயமாக வேறு எந்த நடவடிக்கை யும் எடுக்க வாய்ப்பில்லை. அங்கே இருக்கின்ற தொழிற் சாலைகள் அனைத்தையும் மூடினால் ஒழிய இடைக்காலத்திலே அதற்கு நிரந்தரமான தீர்வைக் காண முடியாது. அப்படி மூடினால் தொழிலாளர்கள் வேலையில்லாமல் இருக் கிறார்கள் என்று அடுத்த கவன ஈர்ப்புத் தீர்மானம் இங்கே வரும் என்பது எங்களுக்குத் தெரியும். இவ்வளவு காலமாக இருந்தாகிவிட்டது. நகராட்சியிடம் அல்லது சம்பந்தப் பட்ட அதிகாரிகளிடம் எந்த அளவுக்குச் சுத்தமாக வைத்துக்கொள்ள முடியுமோ அந்த அளவுக்கு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று நாம் ஒரு முறை கண்டிப்பாகச் சொல்லலாம். எனவே இந்தப் பணி முடிகிற வரையில் பொறுத்துக்கொண்டால், இந்தப் பணி முடிந்த பின்னால், அங்கே பிரச்சினைகள் தீர்க்கப்படுமென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். எம். கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே உள்ள தொழிற்சாலைகளை மூடுவது என்ற யோசனையை நிச்சயமாக ஒப்புக் கொள்ள முடியாது. அதை நான் சொல்வதற்குத் தயாராக இல்லை. ஆனால் நகரங்களில் கழிவு நீரை நாம் டேங்கர்கள் மூலம் வெளியேற்றுகிறோம் அல்லவா, அதைப்போல அங்கே வெளி யேற்றுவதற்கு ஏன் வாய்ப்பு இல்லை? மேலும் இன்ட்டர்னல் பிளாண்ட் வைப்பதை உடனடியாக அமல்படுத்துவதற்கு ஏன் முயற்சிக்கக்கூடாது என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்ட்டர்நல் பிளாண்ட் போடுவது என்று சொன்னால், பொது சுத்திகரிப்பு நிலையம் இருக்க வேண்டிய



அவசியமில்லை. இன்ட்டர்னல் பிளாண்ட் போடுவது என்பது மிகவும் கடினமான காரியம். எல்லாத் தொழிற் சாலைகளும் சின்னச் சின்னத் தொழிற்சாலைகள். எனவே அவர்கள் இன்ட்டர்னல் பிளாண்ட் போடுகிறபோது அதிகமான செலவு ஆகுமென்பதால் இப்போது ஒருங்கிணைத்து போட்டுக் கொண்டிருக்கிறோம். இன்ட்டர்னல் பிளாண்ட் போட முடியு மென்று சொன்னால் பொது சுத்திகரிப்பு நிலையம் வர வேண்டிய அவசியமில்லை. எனவே அப்படிப் போடுவதற்கு முடியாத காரணத்தால்தான் இது போன்ற நடவடிக்கைகளை இப்போது எடுத்திருக்கிறோம். அதுவும்கூட மாசுக் கட்டுப்பாடு வாரியம் மிகப் பெரிய முயற்சி எடுத்த பின்னாலேதான் இது செய்யப் பட்டிருக்கிறது. பல ஆண்டுகளுக்குப் பிறகு, 50, 100 ஆண்டு களுக்குப் பிறகு இன்றைக்கு இது நடைமுறையில் வர இருக் கிறது. எனவே, இது சிறப்பாக நடக்குமென்று கருதுகிறோம். டேங்கர்களை வைத்து அகற்ற வேண்டுமென்று சொன் னால், அது சாதாரண விஷயமல்ல. ஒன்று, இரண்டல்ல, தினந்தோறும் நூற்றுக்கணக்கான வாகனங்களில் கொண்டு போக வேண்டுமென்ற நிலை இருக்கிறது. எனவே இந்தச் சிரமங்கள் கொஞ்ச நாளைக்கு இருக்கத்தான் செய்யும். நாம் டேங்கர்களில் கொண்டு போக முடியுமென்று சொல்லி, அது முடியாமல் போனால், அது அவ்வளவு சிறப்பாக இராது.

## (ஆ) ராதாபுரம் தொகுதி நம்பியாற்று அணையில் ரிவிட்மெண்ட் சரிந்து கிடப்பதால் ஏற்பட்டுள்ள பாதிப்பு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த கவன ஈர்ப்பு. திருமதி ரமணி நல்லதம்பி அவர்கள் அவசரப் பொது முக்கியத் துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள். திருமதி ரமணி நல்லதம்பி.

திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ராதாபுரம் தொகுதி நம்பியாற்று அணை யில் ரிவிட்மெண்ட் முழுவதும் சரிந்து கிடப்பது குறித்த அவசரப், பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவை முன் வைக்கப்பட்டிருக்கிறது.

[திரு. எஸ். கண்ணப்பன்]

[1992 பிப்ரவரி 10

## அறிக்கை.

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம் இராதாபுரம் தொகுதியில் கோட்டைக் கருங்குளம் கிராமம் அருகே நம்பியாற்றின் குறுக்கே நம்பியாறு அணை ( 11.13 கோடி ரூபாய் மதிப்பீட்டில்) கட்டும் பணி நடந்து வருகிறது.

மண் அணை அமைக்கும் வேலை மற்றும் மண் அணை பின்பக்கம் '' டோ பில்டர் '' டோ டிரையின் '' அமைக்கும் பணிகள் முடிவு பெற்றுவிட்டன. மண் அணையின் முன் பக்கம் உள்ள '' ரிவெட்மெண்ட் '' வேலைகள் இன்னும் துவங்கப்படவில்லை. மண் அணையின் பின் பக்கமுள்ள '' டோ டிரையின்'' மற்றும் '' டோ பில்டர் '' வேலைகள் டிசைன் மற்றும் ஒப்பந்த நிபந்தனைகளின்படி நல்ல முறையில் கட்டப்பட்டுள்ளன.

கடந்த ஆண்டு நவம்பர் மாதம் பெய்த கடும் மழையினாலும் வெள்ளத்தாலும் அணை மிக அருகிலுள்ள ராஜசிங்கப் பேரிகண்மாய் உடைப்பு ஏற்பட்டு அந்த மிகுதியான தண்ணீர் ''டோடிரைன் '' வழியாக வழிந்தோடி நம்பியாற்றில் கலந்தது. இந்தக் கடும் வெள்ளத்தால் மண் அணையின் பின் புறமுள்ள டோ டிரைன் சரகம் 1865 மீட்டர் முதல் 2040 மீட்டர் வரை உள்ள பகுதியில் சிறிது சேதம் அடைந்தது.

இதில் சரகம் 1800 மீட்டர் முதல் 2040 வரை உள்ள பகுதியில் ஏற்பட்ட சேதம் ஒப்பந்தக்காரரால் சீர் செய்யப்பட்டு விட்டது. மீதமுள்ள பகுதியான சரகம் 1685 மீட்டர் முதல் 1800 மீட்டர் வரை ஏற்பட்ட சேதம் ஒப்பந்தக்காரரால் சீர் செய்யப்பட்டு வருகிறது. இன்னும் ஒரு வாரத்தில் இச்சீர் செய்யும் பணி முடிக்கப்பட்டுவிடும்.

'' டோ டிரையின் '' வழக்கமாக அணையில் ஏற்படும் கசிவுத் தண்ணீர் வடிவதற்காக வடிவமைக்கப்பட்டது. ஆனால் கடந்த வெள்ளத்தில் வினாடிக்கு சுமார் 500 க.அடி தண்ணீர் திடீரென பாய்ந்ததால் ஒரு சில இடங்களில் டோ டிரையினில் உள்ள ரிவெட்மெண்ட் கற்கள் உட்கார்ந்து விட்டன. அதிக சேதம் ஏதுமில்லை. இருப்பினும் ஒப்பந்தக்காரரே மேற்படி சேதங்களைச் சரி செய்து வருகிறார்.

மேற்கண்ட சம்பவத்தால் இனி வருங்காலங்களில் இராஜசிங்கப்பேரி கண்மாயிலிருந்து வெள்ளம் அணைப்பகுதிக்கு வராத வண்ணம் அணையின் பின்புறமுள்ள சர்வீஸ் சாலை கண்மாயின் நிறைநீர் மட்டத்திற்கு மேல் (எப்.டி.எல்.) உயர்த்தப்பட்டு [illegible] புதிதாக அமைக்கப்பட்டுள்ளது. எனவே இனி வருங்காலங்களில் மேற்கண்டவாறு சேதம் ஏற்படாது.



1992 பிப்ரவரி 10]

திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையிலே அப்படி ரிவிட்மெண்ட் எதுவும் சரியவில்லை, அந்த வேலை துவக்கப்படவில்லை என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அமைச்சரகத்திற்குத் தவறான தகவல்களைப் பொதுப் பணித் துறை அதிகாரிகள் தந்திருக்கிறார்கள் என்று கருதுகிறேன். 2 மாதங்களுக்கு முன்னதாக அந்த ரிவிட்மெண்ட் சரிந்து கிடந்ததென்று மக்கள் என்னிடம் முறையிட்ட காரணத்தாலே, நிருபர்களை ஒரு வாகனத்திலும், பொது மக்களை இரண்டு வாகனங்களிலும் ஏற்றிக் கொண்டு, அந்த இடத்திற்குச் சென்று பார்வையிட்டு, என்னுடைய திருப்தியைத் தெரிவித்துவிட்டு வந்திருக்கிறேன். ஆனால் மகிழ்ச்சி தரும் வகையிலே அங்கே ஒரு தடுப்பை ஏற்படுத்திவிட்ட காரணத்தாலே, இனிமேல் வெள்ளத்தால் அது பாதிக்கப்படாது என்று அமைச்சரவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். அந்த அணை குறித்து இன்னும் ஒன்றை நான் அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். கடந்த 1989-ஆம் ஆண்டு, திரு. கருணாநிதி அவர்கள் ஆட்சிக் காலத்திலே நிதி ஒதுக்காமல் அணைக்கு அடிக்கல் நாட்ட வந்தார்கள். அதை எதிர்த்து நீங்களும் நிதி இல்லாமல் வருகிறீர்கள், நானும் நிதி இல்லாமல் இருக்கிறேன் என்று சொல்லி, நானும் கூட போட்டியாக ஒரு அடிக்கல் நாட்டு விழாவை நடத்தி, கண்டனம் தெரிவித்தேன். அந்த வகையிலே அவர்கள் செயல்பட்டார்கள். ஆனால் இந்த அரசு நிதியை ஒதுக்கி, டெண்டர் கோரி, கான்ட்ராக்ட் விட்டு, வேலையைத் துரிதமாகச் செயல்படுத்தி வருகிறது. இந்த அணை நீரின்றி வாடுகின்ற அந்தப் பகுதி மக்களுக்கு நீண்ட நெடுங்காலமாக நினைத்து நின்று. நிலைத்த பயனைத் தந்து இந்த அரசுக்கு நீங்காத புகழைத் தர இருக்கிறது. ஆகவே அணை பணியினை சரியாக நடத்தி, சிறப்பினைப் பெற வேண்டுமெனக் கவனத்திற்கு கொண்டுவர வேண்டுமென்றுதான் இந்தக் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்தேன். எனவே இத்தகைய நிலையைத் தவிர்ப்போமென்று கூறி, சிறப்பாக அதைச் செயல்படுத்த வேண்டி அமைகிறேன்.

முற்பகல் 11—05

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அணையில் சரிவு ஏற்பட்டிருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் சொல்லியிருக்கிறார். அணையில் சரிவு ஏற்பட்டது பற்றி அதிகாரிகள் சொல்லவில்லை. அணையிலே சேதம் ஏற்பட்டு இருக்கிறது என்றுதான் சொல்லியிருக்கிறார்கள். அதாவது 1655 மீட்டரிலிருந்து 2040 மீட்டர் வரை, சமீபத்தில் பெய்த மழையின் காரணமாக திடீர் என்று வினாடிக்கு 500 கன அடி தண்ணீர் வந்த காரணத்தாலே,

[திரு. எஸ். கண்ணப்பன்] [1992 பிப்ரவரி 10

அணையில் உள்ள கற்கள் சரிந்து சேதம் அடைந்திருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவே, அந்தச் சேதம் பற்றி உடனடியாக அரசின் கவனத்திற்கு வந்ததும் அது சரி செய்யப்பட்டு இன்றைக்கு 1655 மீட்டர் முதல் 1800 மீட்டர் வரை இதுவரை சரி செய்யப்பட்டிருக்கிறது. அது தவிர மீதியிருக்கிற பகுதியும் சரி செய்யப்பட்டுக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நல்ல பாராட்டைத் தெரிவித்தார்கள். அணையில் மழைக்காலத்திலே ஏற்படுகின்ற சரிவு இயற்கையின் சீற்றத்தினால் ஏற்படுவது என்று இருந்தாலும், அப்படி இயற்கையின் சீற்றத்தால் ஏற்படுகின்ற விளைவுகளுக்கு அரசு பொறுப்பேற்க முடியாது என்றாலும், அரசின் கவனத்திற்கு வந்ததும் அரசு உடனடியாக நடவடிக்கை எடுத்திருக்கிறதா இல்லையா என்பதுதான் பிரச்சினை. இயற்கையின் சீற்றத்தின் விளைவுகளை இந்த அரசு சந்தித்து, உடனடியாக அந்த அணையின் பாதிக்கப்பட்ட பகுதிகளை மேம்படுத்துவதற்காக முனைப்பாக நடவடிக்கையை இந்த அரசு மேற்கொண்டது என்பதைத் தெரிவித்துக் கொண்டு, இந்தப் பிரச்சினைக்கு உடனடியாகத் தீர்வு காணப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். நம்பியாற்றின் குறுக்கே கட்டப்படும் அணை மிகச் சிறந்த முறையில், மிக உறுதியான முறையில் கட்டித் தரப்படும் என்பதையும் உறுப்பினர் அவர்களுக்கு இந்த அரசின் சார்பில் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி ரமணி நல்ல தம்பி அவர்கள் மேலும் 3 கவன ஈர்ப்புத் தீர்மானங்களை கொடுத்திருக்கிறார்கள், அவற்றுக்குத் துறையின் சார்பில் பதில்கள் தரப்பட்டுள்ளன, ஒரு உறுப்பினருக்கு ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டுவர வாய்ப்புத் தரப்படும் என்கிற வகையில் இந்தக் கவன ஈர்ப்புத் தீர்மானம் எடுத்துக்கொள்ளப்பட்டது, எஞ்சிய மூன்று கவன ஈர்ப்புத் தீர்மானங்களுக்கான பதில்கள் உறுப்பினருக்கு நேரடியாக அனுப்பி வைக்கப்படும்,

## (இ) பரமக்குடியில் பால் தட்டுப்பாட்டால் ஏற்பட்டுள்ள நிலை குறித்து,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த கவன ஈர்ப்பு, டாக்டர் எஸ். சுந்தரராஜ், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் கொண்டு வருவார், டாக்டர் எஸ். சுந்தரராஜ்.



1992 பிப்ரவரி 10]

டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரமக்குடி நகரில் பால் தட்டுப்பாடு குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை மற்றும் பால்வளத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு, எம், ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. விவர அறிக்கை ஒன்று அவை முன் வைக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்,

### அறிக்கை.

கடந்த நான்கு மாதங்களில் பரமக்குடி பால் உற்பத்தி யாளர்கள் கூட்டுறவுச் சங்கத்நால் கொள்முதல் செய்யப்பட்ட பாலின் விவரமும். உள்ளூர் விற்பனையும் கீழே கொடுக்கப் பட்டுள்ளன.

| மாதம் | | பால் கொள் முதல் | விற்பனை |
|---|---|---|---|
| அக்டோபர் 1991 | | 3,860 லிட்டர், | 3,462 லிட்டர், |
| நவம்பர் 1991 | .. | 3,569 லிட்டர் | 3,239 லிட்டர், |
| டிசம்பர் 1991 | .. | 3,788 லிட்டர் | 3,288 லிட்டர், |
| ஜனவரி 1992 | .. | 3,838 லிட்டர் | 3,338 லிட்டர், |

1991-92-ஆம் ஆண்டின் ஏப்ரல் முதல் ஜனவரி முடிய
45,465 மி, லிட்டர் பால் கொள்முதல் செய்யப்பட்டு 39,369
லிட்டர் வரை உள்ளூரில் விற்பனை செய்யப்பட்டுள்ளது.
அதாவது, உற்பத்தியாகும் பாலில் 86.6 சதவீதம் விற்பனை
செய்யப்பட்டுள்ளது, கடந்த அக்டோபர் 1991 முதல்
ஜனவரி 1992-ஆம் ஆண்டு வரை நாளொன்றுக்குச் சராசரியாக
3,764 லிட்டர் பால் கொள்முதல் செய்யப்பட்டு 3.331 லிட்டர்
அதாவது 88,5 சதவீதம் விநியோகம் செய்யப்பட்டு
வருகிறது.

மேலும் இவ்வாண்டில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்
சித் திட்டத்தின்கீழ் 52 உறுப்பினர்களுக்கு மானியத்துடன்
கூடிய கறவைமாட்டுக் கடனும், திட்டம் சாரா மானிய
மில்லாத கறவை மாட்டுக்கடன் 44 உறுப்பினர்களுக்கும்
பெற்றுத் தரப்பட்டுள்ளது, இதுதவிர தமிழக ஆதிதிரா
விடர் வீட்டுவசதி மேம்பாட்டுக் கழக திட்டத்தின்கீழ்

[திரு. எம். ஆனந்தன்] [1992 பிப்ரவரி 10

101 உறுப்பினர்கள் மானியத்துடன் கூடிய கறவை மாட்டுக் கடன் பெறவும், திட்டம் சாரா மானியமில்லாத கறவை மாட்டுக்கடன் 401 உறுப்பினர்கள் பெறவும், நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு பாலுற்பத்தியைப் பெருக்கப் பெரும் முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது,

டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையில், பரமக்குடியில் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்தில் உற்பத்தியாகும் பாலில் கிட்டத்தட்ட 88.5 சதவீதம், பரமக்குடி நகரில் விநியோகிக்கப்படுவதாக அறிவித்து இருக்கிறார்கள். அது மட்டுமின்றி, ஐ. ஆர். டி. பி. திட்டத்தின்கீழ், 52 உறுப்பினா களுக்கும், ''தாட்கோ' திட்டத்தின்கீழ் 101 உறுப்பினர் களுக்கும், திட்டம் சாரா மானியம் இல்லாத திட்டத்தின்கீழ் மாடுகள் வாங்குவதற்கு 401 உறுப்பினர்களுக்கும் அரசு திட்டமிட்டு செலவிடப்பட்டிருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் இவ்வாறு செலவிடப்படுகிற தொகையில் மாடுகள் வாங்கப்பட்டு, அதன் மூலம் கிடைக்கின்ற பால், தனியார் பால் பண்ணைகளுக்குச் செல்கிறதே தவிர, கூட்டுறவுச் சங்கங் களின் பால் பண்ணைகளுக்குச் செல்லவில்லை என்பதை இந்தச் சமயத்தில் அரசுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். திறமையான தனி அதிகாரிகள் மூலம் நீங்கள் அவைகளை நிர்வகித்தால், கூட்டுறவுச் சங்கங்களுக்குப் பால் அதிகம் கிடைக்கும். 72,000 மக்கள் தொகை கொண்ட பரமக்குடி நகரில், ஆவின் பால் கிட்டத்தட்ட 600 பேர்களுக்கு மட்டுமே கிடைக்கிறது. ஒரு நாளைக்கு 2,000 லிட்டர் ஆவின் பால்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் சுந்தரராஜ் அவர்கள் கவனிக்க வேண்டும். பரமக்குடியில் பால் விநியோகம் சரியில்லை என்று நாம் இப்போது பொது விவாதம் நடத்த வில்லை. நீங்கள் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்திருக் கிறீர்கள். அதற்கு அமைச்சர் பதில் வைத்து இருக்கிறார். அதில் உங்களுடைய கேள்வி என்ன என்பதைத் தான் நீங்கள் சொல்லவேண்டும்.

டாக்டர் எஸ். சுந்தரராஜ் : சிறிய மாவட்டங்களாக இருக்கிற நீலகிரி, கன்னியாகுமரி மற்றும் புதுக்கோட்டை போன்ற மாவட்டங்களில் தனியாக பால் கூட்டுறவு இணையம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. பெரிய மாவட்டமாக இருக்கிற இராமநாதபுரம் மாவட்டத்தில் தனியாக பால் கூட்டுறவு இணையம் ஆரம்பிக்கப்பட்டு, பரமக்குடியில் பால் உற்பத்தி பெருக்கப்பட்டு, அரசின் கூட்டுறவு பால் சங்கங்களுக்கு அது போய்ச் சேருவதற்குரிய முயற்சியை அரசு எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்,



1992 பிப்ரவரி 10]

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரமக்குடியில் பால் உற்பத்தியைப் பெருக்குவதற்காக கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்திருக் கிறார்கள். அதற்குண்டான நடவடிக்கையை அரசு எடுத்துக் கொண்டிருக்கிறது. அதற்காக விவசாயப் பெருமக்களுக்கும், ஆதி திராவிடர்களுக்கும் கடன் வசதிகள் செய்து தரப்பட்டு, பால் உற்பத்தியைப் பெருக்குவதற்கு இந்த அரசு முனைப் போடு செயல்பட்டு வருகின்றது என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

முற்பகல் 11-10

(ஈ) சென்னை மற்றும் சுற்றுப் புறங்களில் கறவை மாடு களுக்கு ஊசி போட்டு பால் கறக்கும் நிலை இருப்பது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த கவன ஈர்ப்பு. திருமதி மரியம்உல் ஆசியா அவர்கள், மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திருமதி மரியம்உல் ஆசியா.

திருமதி கே. மரியம்உல் ஆசியா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரிலும் மற்றும் அதன் சுற்றுப்புறங் களிலும் கறவை மாடுகள் கூடுதலாக பால் கறப்பதற்காக ஊசி மூலம் மருந்து செலுத்தப்படுவது குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்பு மிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்களின் கவனத் திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை அவை முன் வைக்கப் பட்டிருக்கிறது.

அறிக்கை.

கறவை பசு மற்றும் எருமைகளில் கன்று ஈன்றவுடன் கன்று இறந்துவிட்டால் பால் தொடர்ந்து சுரப்பதை ஊக்குவிக்க பால்காரர்கள் ஆக்சிடோசின் என்ற ஹார்மோன் ஊசி மருந் தினை ஊசி மூலம் செலுத்தி பால் சுரக்க உபயோகப்படுத்து கின்றனர். இந்த ஹார்மோன் மருந்து மனிதர்கள் மற்றும் கால்நடை மருத்துவத்தில் மகப்பேறு இயல் சம்பந்தமான தேவைகளுக்கு (கன்று ஈன்றல், நச்சுக்கொடி வெளியேற்றுதல் கன்று ஈன்ற பிறகு கருப்பையைச் சுருங்கச் செய்தல், கருப்பை வெளித்தள்ளினால் வீக்கத்தைக் குறைத்து சுருங்கச் செய், பல் ஆகிய தேவைகளுக்கு) டாக்டரின் உரிய மருந்துச் சீட்டின் (Prescription) அடிப்படையில் பயன்படுத்த வேண்டிய

ஒரு " ஷெட்யூல்டு " மருந்தாகும். இதை வேறு வகைகளில் தன்னிச்சையாக பால்காரர்கள் பயன்படுத்துவது தவறான செயலாகும். இதன் தயாரிப்பும், விநியோகமும் மாநில டிரக் கண்ட்ரோலர் ஆளுகையின்கீழ் வருகின்றது. இம்மருந்தின் துஷ்பிரயோகத்தை கட்டுப்படுத்தும் அடிப்படையில் இம்மருந் தின் உற்பத்தியையும் விநியோகத்தையும் கண்காணிக்க மாநில டிரக் கண்ட்ரோலர் உரிய நடவடிக்கை எடுக்க வழிவகை உள்ளது. இப்பொருள் குறித்து மாநில டிரக் கண்ட்ரோலரின் ஆளுகையி லுள்ள டிரக் ஆலோசனைக் குழுவில் விவாதிக்கப்பட்டு கீழ்க் கண்ட முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளதாக மாநில டிரக் கண்ட் ரோலர் கால்நடை பராமரிப்புத் துறைக்குத் தெரிவித்துள்ளார்:

(1) ஆக்சிடாசின் ஊசி மருந்தினை உற்பத்தி செய் வதைக் கட்டுப்படுத்தவும், இம்மருந்தைத் தயாரிக்க தேவை யான பவுடர் மருந்தின் இறக்குமதியைத் தகுந்த ஆய்விற்குப் பிறகு, உண்மையாக உபயோகிப்பவர்களுக்கு மட்டுமே இறக்கு மதிக்குத் தேவையான இன்றியமையாச் சான்றிதழ் வழங்க வேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது;

(2) மனிதர்களின் தேவைக்கு இம்மருந்தின் விற்பனை, பதிவு செய்த மருத்துவரின் சான்றின் அடிப்படையிலேயே இருக்க வேண்டும் எனவும், இதற்கு மாறாக எவரேனும் இம் மருந்தை விற்றாலும், உபயோகம் செய்தாலும் சட்டப்படி நடவடிக்கை எடுக்க முடிவு செய்யப்பட்டுள்ளது;

(3) கால்நடை மருத்துவத்தில் இம்மருந்தின் விநியோ கத்தை தேசிய பால்வள வாரியத்தின் மூலமாகவும், கால்நடை மருத்துவக் கல்லூரிகளின் மூலமாகவும் ஒழுங்குபடுத்துவது என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

எனவே, இம்மருந்தின் உற்பத்தியையும், விநியோகத்தையும் ஒட்டுமொத்தமாக தடை செய்ய இயலாது. ஆனால், இம் மருந்தினை துஷ்பிரயோகம் செய்து உபயோகிப்பவர்களை, மாநில டிரக் கண்ட்ரோலரின் ஆளுகையின்கீழ் உள்ள கண் காணிப்புப் பிரிவு அலுவலர்கள் மூலம் கண்காணித்து சட்டப்படி உரிய நடவடிக்கை எடுத்து தண்டனை வழங்கலாம்.

திருமதி கே. மரியம்உல் ஆசியா: :மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரிலும் மற்றும் அதன் சுற்றுப் புறங்களிலும் கறவை மாடுகள் அதிகமாக பால் தருவதற்காக, பால் கறப்பதற்கு இரண்டு மணி நேரத்திற்குப் முன்பு ' ஆக்சி டோசின் ' எனப்படுகிற ' ஹார்மோன் ' மருந்தை ஊசி மூலம் தருகிறார்கள். அதனால் அந்தக் கறவை மாடுகள் பாலை அதிகமாகத் தருகின்றன என்றாலும், அந்தக் கறவை மாடுகள் மீண்டும் கரு தரிப்பதில்லை. அதன் காரணமாக அப்படிப் பட்ட மாடுகளை இறைச்சிக்காக அறுத்துவிடுகிறார்கள் அதனால்





கறவை மாடுகளின் உற்பத்தி, குறைக்கப்படுகிறது. கறவை மாடுகளின் எண்ணிக்கை குறைக்கப்படுகிறது. எனவே இப் படிப்பட்ட மருந்தை துஷ்பிரயோகம் செய்யும் பால் வியாபாரி கள் மீதும், அதை விற்பனை செய்பவர்கள் மீதும் கடுமையான நடவடிக்கையை எடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பால்காரர்கள் ' ஆக்சிடோசின் ' என்ற மருந்தை பயன்படுத்துவதைத் தடுக்க ' டிரக்ஸ் அட்வைசரி கமிட்டி ' ஒன்று நியமிக்கப்பட்டு உரிய முறையில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பாக தகவல் தந்தால் அதன் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## (உ) ஜெகந்நாதப்பட்டினத்திலிருந்து சென்ற மீன்பிடி படகுகள் திரும்பாதது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த கவன ஈர்ப்பு. திரு. ஆர். கோடிமாரி அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. ஆர். கோடி மாரி.

திரு. ஆர். கோடிமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. நாகப்பட்டினத்தைச் சார்ந்த நாராயணசாமி மகன் ராமையன் என்பவருக்குச் சொந்தமான பி. டி. கே. 641 எப். பி. என்ற மீன்பிடி படகு 25—1—1992 அன்று மூன்று நபர்களுடன் ஜெகந்நாதப்பட்டினத்தில் இருந்து மீன் பிடிக்கச் சென்றது. மீன் பிடிக்கச் சென்ற படகு திரும்பாததால் அந்த படகைத் தேடி 26—1—1992 அன்று மற்றொரு படகு, பி. டி. கே. 329 எம். பி. ஐந்து நபர்களுடன் சென்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கோடிமாரி, நீங்கள் நிகழ்ச்சி நிரலில் என்ன இருக்கிறதோ அதை மட்டும் படிக்க வேண்டும். பிறகு கேள்வியாகக் கேட்கலாம். அதிலே இருப்பதை மட்டும் அப்படியே படியுங்கள்.

திரு. ஆர். கோடிமாரி : ஜெகந்நாதப்பட்டினத்தில் இருந்து 25—1—1992 மற்றும் 26—1—1992-ல் சென்ற மீன் பிடி படகுகள் திரும்பாதது குறித்த அவசரப் பொது முக்கியத் துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மீன் வளத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

[1992 பிப்ரவரி 10

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது குறித்து விவர அறிக்கை அவை முன் வைக்கப்பட்டிருக்கிறது.

அறிக்கை.

25—1—1992 மற்றும் 26–1—1992 அன்று விசைப்படகு பி. டி. கே. 641 மற்றும் பி. டி. கே. 329-ல் சென்ற அனைத்து மீனவர்களும் தமிழகத்திற்கு திரும்பி வந்துவிட்டனர். விசைப் படகுகள் பி.டி. கே. 641-ம் பி. டி. கே. 329-ம் தற்போது நெடுந் தீவில் உள்ளன. அவைகளைத் தமிழகத்திற்கு கொண்டு வர நட வடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

திரு. ஆர். கோடிமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காணாமல் போன படகில் உள்ள ஆட்கள் மீட்கப்பட்டு வந்ததாக அறிகிறேன். ஆனால் இன்னும் விசைப்படகு திரும்ப வரவில்லை. அந்த விசைப்படகை மீட்டுத் தருவதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விசைப்படகுகள், பி. டி. கே. 641, மற்றும் பி. டி. கே. 329 தற்போது நெடுந்தீவில் உள்ளன. அவைகளைத் தமிழகத்திற்குக் கொண்டுவர விரைவான நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டு வருகிறது.

திரு. ஆர். கோடிமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காணாமல் போன மீனவர்களைக் கண்டு பிடித்து, மீனவர்களின் வாழ்க்கையைக் காக்க வேண்டும் என்று மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க, மீனவர்கள் சமுதாயத்தின் மீது பற்றும் பாசமும் கொண்ட மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் போர்க்கால நடவடிக்கையின் பேரில் மீனவர்களையும் அவர்களது குடும்பத்தினரையும் காத்த எனது புரட்சித் தலைவிக்கு மீனவ சமுதாயத்தின் சார்பாக நன்றி சொல்லக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பிற்பகல் 11–15

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விதி 55-ன் கீழ் பல்வேறு மாண்புமிகு உறுப்பினர்கள் ஆர்வத்தோடு பல்வேறு பிரச்சினைகள் பற்றிய அறிவிப்புகளைக் கொடுத்து இருக்கிறார்கள். அவை அனைத்தும் மாண்புமிகு அமைச்சர் களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. நாள்தோறும் இரண்டு இரண்டு வீதம் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் எடுத்துக் கொள்ளப்படுகின்றன.



1992 பிப்ரவரி 10] [பேரவைத் தலைவர்]

எஞ்சி இருக்கிற கவன ஈர்ப்புத் தீர்மானங்கள், பதில் கிடைத்தது
வரையிலும் கடைசி நாளில் எல்லா கவன ஈர்ப்புத் தீர்மானங்
களையும் ஒரே நாளில் முடிவுக்கு கொண்டு வருகிற ஒரு மரபு
இருந்து வருகிறது. அந்த வகையில் இதுவரையிலும் பதில்
கிடைத்த 5 கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் இப்போது வைக்கப்
பட்டு இருக்கின்றன. திருமதி ரமணி நல்லதம்பி கொடுத்து
இருக்கிற எஞ்சிய இன்னும் 3 கவன ஈர்ப்புத் தீர்மானங்களுக்கு
உரிய பதில் அவருக்கு நேரடியாக அனுப்பப்பட்டு இருக்கிறது.

மற்ற கவன ஈர்ப்புத் தீர்மானங்களைப் பொறுத்தமட்டில்
இன்னும் துறைகளிலிருந்து நமக்குப் பதில் வரவில்லை. விதி 55
(3)-ன்படி இந்தக் கவன ஈர்ப்புத் தீர்மானங்களுக்கு எல்லாம் 7
நாட்களுக்குள் துறையிலிருந்து நமக்குப் பதில் வந்துசேர
வேண்டும், 7 நாட்களுக்குள் அவையில் எடுத்துக் கொள்ளப்பட
வேண்டும் என்று விதி 55 (3) திட்டவட்டமாகத் தெரிவிக்கிறது.
இதை மாண்புமிகு அமைச்சர்கள் கவனத்தில் கொண்டு, வர
இருக்கிற காலங்களில் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்படுகிற
கவன ஈர்ப்புத் தீர்மானங்களுக்கு எந்த வகையிலேயும் 7 நாட்களுக்
குள் பதில் பெற்று அனுப்பி வைக்கிற முயற்சியிலே ஈடுபட
வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

## 4. அறிக்கைகள் அளித்தல்.

### (அ) பொதுக் கணக்குக் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : குழுக்களின் அறிக்கை
அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகளை
அளித்தல். திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள், பொதுக்
கணக்குக் குழுத் தலைவர்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, 1991-92 ஆம் ஆண்டுக்கான பொதுக்
கணக்குக் குழுவின் பின்வரும் அறிக்கைகளைப் பேரவைக்கு
அளிக்கிறேன்:

1982-83 மற்றும் 1983-84 ஆம் ஆண்டுகளுக்கான இந்தியத்
தணிக்கைத் துறைத் தலைவரின் சிவில் அறிக்கையின் கூட்டுறவு,
உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை தொடர்பான
பத்திகள் மீது பொதுக் கணக்குக் குழுவின் ஆறாவது அறிக்கை,
9-வது பேரவையில் கண்டுள்ள பரிந்துரைகளின் மீது அரசு
எடுத்துள்ள நடவடிக்கை பற்றிய 30-வது அறிக்கையை அளிக்
கின்றேன்.

தமிழ்நாடு அரசின் 1982-83 ஆம் ஆண்டுக்கான கணக்குகள்
மீது இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் சிவில் மற்றும்
தொழில் துறை தொடர்பான பத்திகள் குறித்த பொதுக் கணக்குக்

குழு அளித்த 5-வது அறிக்கை, 9-வது பேரவையில் கண்டுள்ள பரிந்துரைகள் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை பற்றிய 31-வது அறிக்கையை அளிக்கின்றேன்.

தமிழ்நாடு அரசின் 1965-66, 1969-70 மற்றும் 1971-72 ஆம் ''ஆண்டுகளுக்கான கணக்குகள் மீது இந்தியத் தணிக்கைத் தலைவரின் சிவில் அறிக்கையில், ஊரக வளர்ச்சித் துறை குறித்த பொதுக் கணக்குக்குழு அளித்த முந்தைய அறிக்கைகள் 4-வது அறிக்கை, 7-வது பேரவை, மற்றும் 32-வது அறிக்கை, 8-வது பேரவையில் மேலும் தொடரப்பட்ட பரிந்துரைகள் மீது அரசு மேற்கொண்டு எடுத்துள்ள நடவடிக்கைகள் பற்றிய 32-வது அறிக்கையை அளிக்கின்றேன்.

இந்தியத் தணிக்கைத்துறைத் தலைவரின் 1984-85 மற்றும் 1985-86 ஆம் ஆண்டுகளுக்கான அறிக்கைகளில் வருவாய் வரவினங்கள், வருவாய்த் துறை குறித்த பத்திகள் மீது பொதுக் கணக்குக் குழுவின் 33-வது அறிக்கையை அளிக்கின்றேன்.

## (ஆ) பொது நிறுவனங்கள் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல், திரு. கி. தர்மலிங்கம், பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர்.

திரு. கி. தர்மலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொது நிறுவனங்கள் குழுவின் சார்பாக இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1973-74 ஆம் ஆண்டிற்கான அறிக்கையின் (வணிகம்) மீது பொது நிறுவனங்கள் குழு 1989-90 அளித்த 29-வது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளின் மீது அரசு மேற்கொண்டு எடுத்த நடவடிக்கை பற்றிய குழுவின் 29-வது அறிக்கையை அளிக்கின்றேன்.

இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1976-77 மற்றும் 1977-78 ஆம் ஆண்டுகளுக்கான அறிக்கைகளின் (வணிகம்) மீதான பொது நிறுவனங்கள் குழுவின் 1985-86, 23-வது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகள் மீது அரசு மேற்கொண்டு எடுத்த நடவடிக்கை பற்றிய (ழுவின் 30-வது அறிக்கையை அளிக்கின்றேன்.

இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 31--3—1988 ஆம் தேதியுடன் முடிவுற்ற ஆண்டிற்கான அறிக்கையில் (வணிகம்) (எண் 4/1989) செய்தி சுற்றுலாத்துறை தொடர்பான பத்தி மீதான குழுவின் 31-வது அறிக்கையை அளிக்கின்றேன்.





இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1981-82 ஆம் ஆண்டிற்கான அறிக்கையில் (வணிகம்) சுற்றுப்புறச் சூழல் மற்றும் வனத்துறை தொடர்பான பத்திகள் மீது பொது நிறுவனங்கள் குழு 1989-90, அளித்த 27-வது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகள் மீது அரசு மேற்கொண்டு எடுத்த நடவடிக்கை பற்றிய குழுவின் 32-வது அறிக்கையை அளிக்கின்றேன்.

முற்பகல் 11–20

இந்திய தணிக்கைத் துறைத் தலைவரின் 1981–82-ஆம் ஆண்டிற்கான அறிக்கையில் (வணிகம்) கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை தொடர்பான பத்திகள் குறித்து பொது நிறுவனங்கள் குழு (1989–90) அளித்த இருபத்தொன்றாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகள் மீது அரசு மேற்கொண்டு எடுத்த நடவடிக்கை பற்றிய குழுவின், முப்பத்தி மூன்றாவது அறிக்கை.

மற்றும், இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1981-82-ஆம் ஆண்டிற்கான அறிக்கையில் (வணிகம்) பொதுப்பணித்துறை குறித்த பத்திகள் மீது பொது நிறுவனங்கள் குழு (1986–87) அளித்த ஐம்பத்தொன்றாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளின் மீது அரசு எடுத்த நடவடிக்கை பற்றிய குழுவின் முப்பத்தி நான்காவது அறிக்கை ஆகியவற்றை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.

## 5. சட்டமுன்வடிவுகள்—ஆய்வு செய்தல்

(அ) எதிர்பாராச் செலவு நிதிய (திருத்தச்) சட்ட முன்வடிவு, 1992.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரசினர் சட்டமுன்வடிவுகள், ஆய்வு செய்தல். 1992-ஆம் ஆண்டு தமிழ்நாடு எதிர்பாராச் செலவு நிதிய (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 4/1992)—மாண்புமிகு நிதியமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

1992-ஆம் ஆண்டு தமிழ்நாடு எதிர்பாராச் செலவு நிதிய (திருத்த) சட்டமுன்வடிவு* (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 4/1992) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர்.

---

* 7—2—1992 ஆம் நாளிட்ட அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்பாராச் செலவு நிதியத்தை அதிகரிக்க வேண்டும் என்கிற சட்டமுன்வடிவை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் பேரவையின் ஆய்வுக்கு வைத்திருக்கிறார்கள். இது சட்டமுன்வடிவாக வருவதற்கு முன்னால் அவசரச் சட்டமாகப் பிறப்பிக்கப்பட்டு இப்போது சட்டமாக்குகிற வகையில் சட்டமுன்வடிவாக இங்கே வைக்கப்பட்டிருக்கிறது. எந்தச் செலவினங்களாக இருந்தாலும் சட்டப் பேரவையின் அனுமதி பெற்ற பிறகே பொது நிதியிலிருந்து எடுத்துச் செலவு செய்ய வேண்டும் என்பது விதியாக இருக்கிறது. சட்டப் பேரவையில் அது வைக்கப்பட்டு அனுமதி பெறவேண்டும். ஆனால் சில செலவினங்கள், சில செலவுகள் எதிர்பாராத வகையிலே வரக்கூடும். எனவே, அவசரச் செலவுகளுக்கு பணத் தேவைக்கு ஒரு நிதியம்— அதுதான் எதிர்பாராச் செலவு நிதியம், அந்த எதிர்பாராச் செலவு நிதியத்திலிருந்து எடுத்து செலவு செய்யப்படுகிற தொகைக்கு பின்னர் சட்டப்பேரவையில் அனுமதி பெற்றவுடனே மீண்டும் அந்தத் தொகை அந்த நிதியத்திற்குச் சென்று விடும். அந்த நிதியத்தை அதிகரிக்கிற அதிகாரம் சட்டப் பேரவைக்கு மட்டுமே உண்டு. சட்டப் பேரவை மட்டுமே செய்ய வேண்டும். பொதுவாக எதிர்பாராச் செலவுகள் என்று சொன்னால் யாருமே எதிர்பார்க்காத செலவுகள். திடீரென்று வந்த செலவுகளாக இருக்க வேண்டும், இந்தச் சட்டமுன்வடிவில் சொல்லப்பட்டிருக்கிற செலவுகளில் எல்லாம் பெரும்பாலான செலவுகள் முன்பே எதிர்பார்த்திருக்கக்கூடிய செலவுகள்தான். பொங்கல் இனாம், வேஷ்டி சேலைகள் வழங்குதல், தெரு விளக்குகள் பராமரிப்பு, உர மானியம் என்று வரிசையாக நிதியமைச்சர் அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். இவைகள் எல்லாம் எதிர்பார்த்த செலவுகள் தானே தவிர, எதிர்பார்க்காத செலவுகள் அல்ல. எனவே, இதற்கென பட்ஜெட்டில் செலவுத் தொகை ஒதுக்கியிருக்க வேண்டும். ஒதுக்காதது அவ்வளவு முறையாக இருக்காது. என்றாலும் வருங்காலத்திலாவது இப்படி நடைபெறக்கூடாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். நாம் இரண்டு பேருமே இதைக் கடுமையாக எதிர்த்து வந்தவர்கள். எதிர்பாராச் செலவினத்தை அதிகரிக்கக்கூடாது. அதிகரிப்பதாக இருந்தால் அதை அவசரச் சட்டமாகக் கொண்டு வந்து அதிகரிப்பது முறையாகாது என்று சொல்லி வந்திருக்கிறோம். எனவே, வருங்காலத்திலாவது இப்படி செய்வதைத் தவிர்க்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு நிதியமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்பாராச் செலவுகளை ஈடுகட்டுகிற வகையில் தான் நிரந்தரமாக சட்ட அனுமதியின் பேரில் ரூபாய் 75 கோடி நிரந்தரமாக ஒதுக்கித் தரப்பட்டிருக்





கிறது. சில வேளைகளில் சட்டமன்றம் கூடாத நிலையில், சட்டமன்றத்தினுடைய அனுமதி பெற இயலாத நிலை ஏற்படுகிறபோது எதிர்பாராச் செலவுகளைச் செய்து தீர வேண்டிய இக்கட்டான கட்டம் அரசுக்கு ஏற்படுகிறது. அப்படி ஏற்படுகிறபோது அந்த நிதியினுடைய அளவைக் கூட்டவேண்டிய அவசியம் ஏற்படுகிறது. அப்படி ஏற்படுகிறபோதுதான் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு அந்தத் தொகையை அதிகப்படுத்தி அதற்கான சட்டத்திருத்தத்தைக் கொண்டு வர வேண்டியிருக்கிறது.

முற்பகல் 11-25

சட்டமன்றம் கூடாத நேரத்தில் அவசரப் பிரகடனத்தின் மூலமாகத்தான் அதைப்பெற வேண்டியிருக்கிறது. அப்படி பலதடவைகள் இதற்கு முன்னால் பல ஆண்டுகள் கூடுதல் நிதிகள் பெறப்பட்டிருக்கின்றன. பிறகு அவை சட்டமன்றத்தினுடைய அனுமதியும் பெற்று, முறைப்படி பிற கணக்கில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இப்போது இந்த நிதியாண்டில் சிறு நிலங்களில் பயிரிடுபவர்களுக்கும், வளம்குன்றிய நிலையில் பயிரிடுபவர்களுக்கும் உரத்திற்கான உதவித் தொகை அளித்தல். தமிழ்நாடு மின் விசை அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்திற்கு உதவி அளித்தல், ஊராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் தெரு விளக்குகளைப் பேணி வருதல், 1991-ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் ஏற்பட்ட வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட, சில நிலங்களில் பயிரிடுபவர்களுக்கும், வளம் குன்றிய நிலங்களில் பயிரிடுபவர்களுக்கும் நிவாரணம் அளித்தல், 1992-ஆம் ஆண்டு பொங்கல் விழாவிற்கு இலவசமாக வேட்டிகளும், சேலைகளும் வழங்குதல் ஆகிய திட்டங்களை நிறைவேற்றுவதற்காக கூடுதல் செலவு எதிர்பாராத வகையில் ஏற்பட்டுவிட்டது. ஆகவே இந்த வெள்ளத்தால் பாதிக்கப்படுவது, வறட்சியால் பாதிக்கப்படுவது போன்ற நிகழ்ச்சிகள் எதிர்பாராத வகையில்தான் ஏற்படுகின்றன.

அதுமட்டுமல்லாமல் வேட்டி, சேலைகளை ஏழைகள், வறுமைக்கோட்டிற்குக் கீழே இருப்பவர்களுக்கு அளிப்பது என்ற ஒரு முடிவு, அண்மையில் எடுக்கப்பட்டதன் காரணமாக அதுவும் எதிர்பாராத செலவாக அமைந்து விட்டது. அந்த வகையிலே தான் மார்ச் திங்கள் 31-ஆம் தேதி முடிகின்ற அளவிற்கு ஜனவரி 10-ஆம் தேதியிலிருந்து ரூ. 150 கோடியாக ஆக்கவேண்டுமென்று கூறப்பட்டிருக்கின்றது. எதிர்பாராச் செலவுகள் செய்தாலும் பிறகு துணை மானியக் கோரிக்கைகள் கொண்டு வந்து இந்த அவையினுடைய முழு அனுமதியையும் பெற்றுத்தான் பிறகு அவற்றிற்கான பணம் எடுக்கப்பட்டு, மறுபடியும் அந்த நிதியத்திற்கு கொண்டு சேர்க்கப்படும்.

1—4—1992-க்குப் பிறகு இதனுடைய அளவு ரூ. 75 கோடியாக மீண்டும் அமையும். அது வரையிலும் எதிர்பாராத வகையில் ஏற்படும் இந்தச் செலவுகளை ஈடுகட்டுவதற்கும் துணை மானியக் கோரிக்கைகள் கொண்டு வருகின்ற வகையிலே இது தேவைப்படுகின்றது. துணை மானியக் கோரிக்கைகள் வந்து, இந்த அவையும் அனுமதி அளித்ததற்குப் பிறகு, அதற்குரிய நிதி இதிலே சேர்க்கப்பட்டதற்குப் பிறகு, வழக்கம் போல இருக்கின்ற ரூ. 75 கோடி நமக்கு போதுமானதாக அமையும். ஆகவேதான், இந்தச் சட்ட முன்வடிவை ஏற்றுக்கொள்ளுமாறு இந்த அவையைக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் '' ஆம் '' என்க. (ஆம்)
மறுப்போர் '' இல்லை '' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் '' ஆம் '' என்க. (ஆம்).
மறுப்போர் '' இல்லை '' என்க. (இல்லை).
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்ட முன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் '' ஆம் '' என்க. (ஆம்).
மறுப்போர் '' இல்லை '' என்க. (இல்லை).
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதிய



மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'' 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு எதிர்பாராச் செலவு நிதிய (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 4]1992.) நிறைவேற்றப்பெற வேண்டும் ''
எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் '' ஆம் '' என்க. (ஆம்)
மறுப்போர் '' இல்லை '' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.
சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(ஆ) பச்சையப்ப அறக்கட்டளை மற்றும் பட்டியல் பொதுப் பொறுப்பாட்சியமைப்புகள் மற்றும் நிலைக் கட்டளைகள் (மேலாண்மையை மேற்கொள்ளுதல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 1992.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதேபோன்று அடுத்த சட்டமுன்வடிவும் கல்வி அமைச்சருடைய இதே பொருள் தொடர்புடையது. (குறுக்கீடு). அது அமைச்சர் வேறு. (குறுக்கீடு) இவை இரண்டையும்தான் சேர்த்து எடுக்க முடியும். (குறுக்கீடு).

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் படித்தாலே புரியும். மூன்றும் நான்கும், இரு அமைச்சர்களுடையதாக இருந்தாலும்கூட, இரண்டு பத்தியும் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளச் சொன்னதற்கு பின்னால் விவாதம் முடிந்ததற்குப் பின்னால், தனித்தனியாக எடுத்துக்கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளக் கோருவது இரு அமைச்சர்கள். ஒரே அமைச்சர் கோரலாம். ஒரே அமைச்சர் என்றால் அந்த மாதிரி எடுத்துக் கொள்ளுமாறு அவரைக் கேட்டுக் கொள்ளலாமே தவிர, ஒரு அமைச்சர் ஒரு சட்டமுன்வடிவை முடிப்பதற்குள் இன்னொரு அமைச்சர் தொடர்புடையதை எடுக்க முடியாது. ஆகவே, நீங்கள் விவாதிக்கின்றபோது, உறுப்பினர்கள் பேசுகின்ற போது, அதைச் சேர்த்துப் பேசுகிற மாதிரி வைத்துக்கொள்ளலாம்.

[பேரவைத் தலைவர்] [1992 பிப்ரவரி 10

இரண்டாவது, தனியாக எடுத்துக் கொள்ளலாம். மூன்றும், நான்கும் ஒரே பொருள்தான். எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகமும், இதே பொருளில்தான் வருகிறது. அப்போது பேசுகின்ற உறுப்பினர்கள் அந்த இரண்டு பற்றியும் சேர்த்து பேசிக் கொள்ளலாம். இப்போது பச்சையப்பனுக்கு மட்டும், இரண்டாவதை மட்டும் எடுத்துக் கொள்ளலாம்.

முற்பகல் 11-30

*மாண்புமிகு திரு. இராம வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

" 1992ஆம் ஆண்டு பச்சையப்ப அறக் கட்டளை மற்றும் பட்டியல் பொதுப் பொறுப்பாட்சியமைப்புகள் மற்றும் நிலைக் கட்டளைகள் (மேலாண்மையை மேற்கொள்ளுதல்) திருத்தச் சட்டமுன்வடிவு *(சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 1/1992) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்" எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சோ. பால கிருஷ்ணன்.

திரு. சோ. பாலகிருஷ்ணன் : அடுத்த பில்லிலேதான் பேசப் போகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வே. தம்புசாமி, பச்சையப்பன் அறக்கட்டளையில் பேசப்போகிறீர்களா அல்லது பல்கலைக் கழகங்கள் சட்டத்திலே பேசப்போகிறீர்களா ?

திரு. வே. தம்புசாமி : பல்கலைக் கழகங்கள் பில்லிலேதான் பேசப்போகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு கல்வியமைச்சரின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் " ஆம் " என்க. (ஆம்)

மறுப்போர் " இல்லை " என்க (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 4 வரை திருத்தங்கள் இல்லை.

* 4—2—1992 ஆம் நாளிட்ட அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.



1992 பிப்ரவரி 10] [பேரவைத் தலைவர்]

பிரிவுகள் 2 முதல் 4 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் " ஆம் " என்க. (ஆம்)

மறுப்போர் " இல்லை " என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன் வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் "ஆம் " என்க. (ஆம்)

மறுப்போர் " இல்லை " என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கல்வி அமைச்சர்.

மாண்புமிகு திரு. இராம வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

" 1992ஆம் ஆண்டு பச்சையப்ப அறக்கட்டளை மற்றும் பட்டியல் பொதுப் பொறுப்பாட்சியமைப்புகள் மற்றும் நிலைக் கட்டளைகள் (மேலாண்மையை மேற்கொள்ளுதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 1/1992) நிறைவேற்றப்பெற வேண்டும்." எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் " ஆம் " என்க. (ஆம்)

மறுப்போர் " இல்லை " என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(இ) பல்கலைக் கழகங்கள் சார்ந்த சட்டங்களின் (திருத்த) சட்ட முன்வடிவு 1992.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1992ஆம் ஆண்டு தமிழ்நாடு பல்கலைக் கழகங்கள் சார்ந்த சட்டங்களின் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 2/1992) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும் என்று மாண்புமிகு கல்வியமைச்சர் கோருவார். மாண்புமிகு கல்வியமைச்சர்.

மாண்புமிகு திரு. இராம வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1992ஆம் ஆண்டு தமிழ்நாடு பல்கலைக் கழகங்கள் சார்ந்த சட்டங்களின் (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 2/1992)* ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த சட்ட முன்வடிவும் இதே பொருள் பற்றியதுதான். தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துப் பல்கலைக் கழகம் என்ற சட்டமுன்வடிவு பற்றியது. எனவே, இதில் பேசுகிற மாண்புமிகு உறுப்பினர்கள் இரண்டு பொருள் பற்றியும் சேர்த்தே பேசலாம். கடைசியில் இந்தச் சட்டமுன்வடிவு வாக்கெடுப்பிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு பிறகு அடுத்த சட்டமுன்வடிவு முன்மொழியப்பட்டு அது தொடர்ந்து வாக்கெடுப்பிற்குக் கோரப்படும். திரு. சோ. பாலகிருஷ்ணன்.

திரு. சோ. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்கலைக் கழக துணை வேந்தர் திருத்தச் சட்டத்தைப் பற்றி இங்கே நான் சில கருத்துக்கள் கூற விரும்பகிறேன். நம்முடைய பல்கலைக் கழகங்களில் துணைவேந்தர் தேர்வுக்காக 3 பேர் கொண்ட குழு அமைக்கப்படுகிறது. ஒருவர் அரசு சார்பாகவும் மற்றொருவர் ஆட்சிக் குழு சார்பாகவும், இன்னொருவர் பொதுக் குழு சார்பாகவும் 3 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டு, அந்த 3 அறிஞர்களும் பல கூட்டங்கள் நடத்தி பல பெரிய அறிஞர்களுடைய வாழ்க்கை வரலாறு அவர்களுடைய கருத்துக்கள் எல்லாவற்றையும் ஆராய்ந்து 3 பேர் கொண்ட பட்டியலை துணை வேந்தரை இந்த 3 பேரிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்று வேந்தர் அவர்களுக்கு அனுப்புகிறார்கள். அந்தப் பட்டியலில் உள்ள மூன்று பேர்களுமே தகுதியில்லை என்று வேந்தர் அவர்கள் நினைப்பார்களேயானால், அதை ரத்து செய்துவிட்டு மறுபடியும் இன்னும் மூன்று பேரை அனுப்புங்கள் என்று கேட்பதற்காக இந்தச் சட்டம் வந்திருக்கிறது என்று நான் நினைக்கிறேன்.

* 4—2—1992 ஆம் நாளிட்ட அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.





இது ஜனநாயகத்திற்கு விரோதமான செயல் என்று நான் கருதுகிறேன். 3 பேர் கொண்ட பட்டியலைப் போடுவது என்பதே கடுமையானது. நானும், நம்முடைய சபாநாயகர் அவர்களும் 1977–80 ஆம் ஆண்டு சட்டமன்றத்தில் இருந்தபோது நாங்கள் இருவரும் மதுரை-காமராசர் பல்கலைக் கழகத்தின் ஆட்சிக் குழு பொதுக் குழு அங்கத்தினர்களாக இருந்தோம்.

முற்பகல் 11-35

அவர்கள் ஆட்சிக் குழு உறுப்பினராக இருந்தார்கள். நான் பொதுக்குழு உறுப்பினராக இருந்தேன். நாங்கள் எல்லாம் அப்போது பெரிய அறிஞர்களையெல்லாம் அதாவது வைஸ்-சான்ஸலர் செலக்ஷனுக்கு கமிட்டி போடுகின்றபோதே, அந்தக் கமிட்டிக்கு வருகின்றவர்களையே பெரிய அறிஞர்களாக நாங்கள் தேர்ந்தெடுந்திருக்கிறோம். பிறகு அவர்கள் பல நாட்கள் கூடி உட்கார்ந்து சிறந்த தேர்வுகள் செய்து அனுப்புவார்கள். அதை மறுபடியும் வேண்டாம் என்று சொல்லிவிட்டு இன்னொரு 3 பேர்களை அனுப்புங்கள் என்று சொல்வது சரியல்ல. தனியார் கல்லூரிகள் எல்லாம் என்ன செய்கிறார்கள் என்றால், எம்ப்ளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்சிலே நம்பர் கேட்பார்கள். தன்னுடைய ஆள் வருகிறார்களா என்று பார்த்துக்கொண்டிருப்பார்கள்.......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பாலகிருஷ்ணன். நாம் இருக்கின்ற காலத்தில், நீங்களே சொன்னீர்கள், நல்ல அறிஞர்களைத் தேர்ந்தெடுத்தோம் என்று. இப்போது அப்படியில்லை என்பதற்காகத்தான் அவர்கள் இப்படி ஒரு சட்டமுன்வடிவைக் கொண்டு வந்திருக்கிறார்கள். எனவே, அப்போது நடந்ததையே இப்போது உதாரணமாகக் காண்பிப்பது என்பது நீங்கள் சொன்னதைப்போல, அப்படிப்பட்ட அறிஞர்கள் வராத போது இப்படி வருகிறது.

திரு. சோ. பாலகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, இப்போதும் கூட அப்படி வராது என்று நாம் சொல்ல முடியாது. ஏனென்றால், இது ஜனநாயக நாடு. ஒரு குழு தேர்ந்தெடுத்து அனுப்பியவர்களை இவர்கள் சரியில்லை என்று ஒதுக்குவது ஜனநாயக விரோதமான செயல் என்று நான் கருதுகிறேன். ஆகவே, இந்தச் சட்டம் தேவையில்லாதது என்பதை மிக வலியுறுத்திச் சொல்கிறேன்.

பல்கலைக் கழகங்களுக்கு ஏராளமான வேலைகள் இருக்கின்றன. இப்போது துணை வேந்தராக வருபவர்கள் 3 ஆண்டுகள் இருக்கப் போகிறார்கள். சரியாக இல்லாவிட்டால் வேறு ஒரு துணை வேந்தரை அடுத்த ஆண்டு நியமித்துக்கொள்கிறார்கள். ஆகவே, இதற்காக ஒரு சட்டத்தை இயற்றி வேந்தர் அவர்களுக்கு இப்படி ஒரு அதிகாரத்தைக் கொடுப்பது தேவையில்லாத

[திரு. சோ. பாலகிருஷ்ணன்] [1992 பிப்ரவரி 10

வேலை என்று நான் கருதுகிறேன். பல்கலைக் கழகங்களில் இன்று நடக்கின்ற வேலைகள் அனைத்தும், கல்லூரிகள் செய்கின்ற வேலைகளைத்தான் அவர்கள் செய்துகொண்டிருக்கிறார்கள். பாடம் சொல்லிக் கொடுப்பது, ஆசிரியர்களை நியமிப்பது, உரிமைப் போராட்டங்கள் நடத்துவது மூடல் வேலைகள் செய்வது என்ற பணிகளைத்தான் இப்போது பல்கலைக் கழகங்கள் செய்து கொண்டிருக்கின்றன. ஆராய்ச்சித் துறையில் அவர்கள் ஈடுபட வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். அதற்கான சட்டங்களை நாம் உருவாக்க வேண்டும். இன்று நம்முடைய தமிழகப் பல்கலைக் கழகங்களைப் பொறுத்தவரை ஐ.ஏ.எஸ். , ஐ.பி.எஸ்.-ல் ஒருவர் கூட பாஸ் பண்ணுவதில்லை என்ற நிலைமைதான் இருந்துகொண்டிருக்கிறது. இப்போது இருக்கின்ற ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். அதிகாரிகள் எல்லாம் பழைய காலத்தில் வந்தவர்கள். இப்போது எல்லாம் நம் ஆட்கள் யாருமே வருவதில்லை என்ற மிக மோசமான சூழ்நிலையில் நம்முடைய பல்கலைக் கழகங்கள் இயங்கிக்கொண்டிருக்கின்றன. அவற்றைச் செம்மையாக, சிறப்பாகச் செய்ய வேண்டும்.

பி.எச்.டி. என்று வருபவர்கள் கூட நல்ல அறிவு படைத்தவர்களாக வருகிறார்களா என்று இன்று சந்தேகம் எழுகின்ற அளவிற்கு பி. எச். டி.-யைச் வாங்கிக் கொண்டிருக்கிறார்கள் என்று நம்முடைய பல்கலைக் கழகங்களைப்பற்றி பேசுகிறார்கள். ஆகவே, திறமையான சட்டங்கள், திருத்தங்கள் கொண்டுவர வேண்டும் என்பது என்னுடைய கருத்து. திறமான புலமை எனில் வெளிநாட்டார் அதை வணக்கம் செய்தல் வேண்டும் என்று நம்முடைய பாரதியார் அவர்கள் சொன்னார்கள். அந்த பாரதியார் பெயரிலுள்ள பல்கலைக் கழகத்திலேகூட நல்ல ஆராய்ச்சிகள் நடைபெறுவதில்லை என்று நான் கருதுகிறேன்.

அதோடு நம் பல்கலைக் கழகங்களில் போடுகின்ற விதிகள், உத்திரவுகள் அத்தனையும் கோர்ட் வரையிலே சென்று அடிபட்டுப் போகின்றன. கோர்ட்டுகளுக்குச் செல்ல நேரிடுவதால் இப்போது யூனிவர்சிட்டிகள் ஏராளமான செலவுகள் செய்து கொண்டிருக்கின்றன. ஆகவே, நல்ல திருத்தங்களை உருவாக்கி சிறப்பான முறையில் நம்முடைய பல்கலைக் கழகங்கள் நடந்து வருங்காலத்தில் கல்வியில் பழையபடி நம்முடைய தமிழகம் இந்தியாவில் தனித்து சிறப்பாக நிற்கிறது என்கின்ற பெயர் பெறுகின்ற அளவிற்குப் பல்கலைக் கழகங்களுக்கு நல்ல சட்டங்களைக் கொண்டுவந்து திறமான கல்வியினை உருவாக்கிக் கொடுக்க வேண்டும் என்று நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு இந்தச் சட்டம் தேவையில்லை என்று நான் வலியுறுத்திக் கூறி அமர்கின்றேன். வணக்கம்.



1992 பிப்ரவரி 10]

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> திரு. வே. தம்புசாமி.

<u>திரு. வே. தம்புசாமி :</u> பேரவைத் தலைவர் அவர்களே, பல்கலைக் கழகம் சம்பந்தமாக இங்கே கொண்டு வந்திருக்கின்ற சட்டமுன்வடிவு தேவையில்லை என்று கருதுகிறேன். காரணம் துணைவேந்தர் நியமனத்திற்கு 3 பேர்களைக் கொண்ட நபர்களைத் தேர்வு செய்வதற்கு ஒரு குழு தேர்வு செய்யப்படுகிறது. அந்தக் குழு தேர்வு செய்வதற்கு முன்னாலேயே திறமையானவர்கள், தகுதியானவர்கள், எதிர்காலத்திலே தேர்வுகளைச் சிறப்பாக நடத்தக்கூடியவர்கள் என்ற அடிப்படையிலேதான் தேர்வு செய்யப்படுகிறது. அப்படி தேர்வு செய்யப்பட்ட அந்தக் குழுவைக் கலைப்பது என்பது பொருத்தமானதாக இருக்காது. அந்த வகையிலே அது ஜனநாயகத்திற்கு முரணானதாக இருக்கும். எனவேதான் இந்தத் தேர்வையே பின்பற்ற வேண்டும். அதனாலே இந்தக் கலைப்பு என்பது ஜனநாயகத்திற்கு முரணானது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-40

அதேநேரத்தில் இதற்கு ஒரு சட்டமுன்வடிவு கொண்டு வந்திருப்பதைப் போல தமிழக அரசு இன்னும் தனியார் கல்லூரிகள், மைனாரிட்டி சமூகத்தைச் சேர்ந்தவர்கள் நடத்தக்கூடிய கல்லூரிகள் இவைகளிலே ஏற்படக்கூடிய சிக்கல்களைத் தவிர்ப்பதற்கு ஒரு சட்டம் கொண்டுவர வேண்டியிருக்கிறது. உதாரணமாகச் சொன்னால் இன்றைக்கு கிருத்துவக் கல்லூரியில் 3 ஆசிரியர்களை வேலை நீக்கம் செய்திருக்கிறார்கள். அது இன்றைய தினம் தமிழ்நாடு முழுவதும் பிரச்சினையாக வளர்ந்து வந்திருக்கிறது. அதிலே ஒரு நல்ல தீர்வு காணவேண்டுமென்று தமிழக அரசு முயற்சிக்கிறபோது தங்களுக்கு இருக்கிற சுய உரிமையைப் பயன்படுத்தி நீதிமன்றத்திலே தடை வாங்கி அதிலே தலையிட்டு தீர்வு காணமுடியாத ஒரு நெருக்கடியை இன்றைய தினம் ஏற்படுத்தியிருக்கிறார்கள். இப்படி ஏற்படுத்தியிருப்பது ஒரு மைனாரிட்டி சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் நடத்தக்கூடிய கல்லூரிக்கும் தமிழக அரசுக்கும் ஒரு சவாலாக அது அமைந்திருக்கிறது. என்பதை நாம் பார்க்க வேண்டும். தமிழக அரசு அந்தக் கல்லூரிகளை நடத்துவதற்கு பல கோடி ரூபாய் மானியம் வழங்குகிறது. அந்த மானியத்தைப் பெற்று நடத்தக்கூடிய தனியார் கல்லூரியாக இருந்தாலும், மைனாரிட்டி சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் நடத்தக்கூடிய கல்லூரியாக இருந்தாலும் நியாயமான தீர்வுகளை, கோரிக்கைகளை ஏற்று தமிழக அரசு ..........

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> பில்லின் ஸ்கோப்பை ரொம்ப தாண்டி போய்விடக்கூடாது. பில் ஸ்கோப் துணைவேந்தர் தேர்வு செய்வதற்கு ஒரு குழு அமைக்கப்பட்டு அந்தக்

குழு தேர்வு செய்த 3 பேரை நிராகரித்துவிட்டு இன்னொரு 3 பேர் கேட்கலாம் என்பதுதான் அந்தத் துணை வேந்தர் தேர்வு பற்றி கொஞ்சம் தாண்டிக் கூட போய் பேசிக் கொண்டு இருக்கலாம். அதை விட்டு மைனாரிட்டி நிறுவனத்தைப்பற்றிப் போகும்போது இதற்கும் அதற்கும் தொடர்பு இல்லாததாகப் போய்விடும். ஏன் என்றால் உங்களைப் போன்ற மூத்த உறுப்பினர்கள் அப்படித் தொடர்பு இல்லாமல் பேசக் கூடாது. மற்ற புது உறுப்பினர்கள் பேசினால் கூட பரவாயில்லை.

திரு. வே. தம்புசாமி : தலைவர் அவர்களே, இது ஜனநாயகத்திற்கு முரணானது. ஆகவே, இந்தக் குழு வேண்டாம். ஏற்கனவே உள்ள குழுவைக் கலைத்துவிட்டு வேறு ஒரு மறு குழுவை நியமிக்க வேண்டாம் என்று கேட்டு வாய்ப்புக்கு நன்றி கூறி முடிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவு ஏற்கனவே ஆளுநர் அவர்கள் 3 பேர் கொண்ட பட்டியலிலிருந்து துணை வேந்தரை தேர்வு செய்தார்கள். அந்த 3 பேர் கொண்ட பட்டியலைத் தயாரிப்பதற்கு ஒரு குழு ஏற்படுத்தப்பட்டு இருந்தது. குழுவிலே ஒருவர் ஆளுநர் அவர்களால் நியமிக்கப்பட்டவர், இன்னொருவர் சிண்டிகேட்டிலே தேர்வு செய்யப்படுகிறார் ; இன்னொருவர் செனட்டால் தேர்வு செய்யப்படுகிறார். இதிலே பொதுவாக ஆளுநரால் நியமிக்கப்படுபவர் தான் முதலிடம் வகிக்கிறார். எனவே, துணை வேந்தராக பரிந்துரை செய்யப்படுவர்களில் முதல் பெயர் ஏற்பு உடைய பெயராக இல்லாவிட்டால் கூட அடுத்த 2 பெயரிலிருந்து யாராவது ஒருவர் பெயரை ஆளுநர் அவர்கள் தேர்வு செய்து வந்தார். இவர்களைத் தவிர்த்து வேறு எவரையும் நியமிக்க இப்போதுள்ள சட்டத்தில் இடமில்லை. ஏன் என்றால் அது அவசியம் இல்லை என்று முன்பு கருதப்பட்டது. காரணம் ஆளுநரால் சிபாரிசு செய்யப்படுபவர் அந்தக் குழுவிலே இருக்கிறார். எனவே, அவர் பரிந்துரை செய்யப்படுகிற பெயர், மற்றும் 2 பெயர்கள் இருக்கிற காரணத்தால் 3 பெயர்களில் ஒரு பெயர்தான். ஏதோ ஒரு பெயர் எடுக்க முடியும் என்ற எண்ணம் இருந்தது.

முற்பகல் 11-45

ஆனால் இப்போது ஏதோ ஒரு புதிய சூழ்நிலை உருவாகி இருக்கிறது. அந்தப் புதிய சூழ்நிலை என்ன என்பதை சட்டமுன்வடிவினுடைய விளக்கக் குறிப்பில், அறிக்கையில் குறிப்பிட்டு இருக்க வேண்டும். அப்படி குறிப்பிட்டு இருந்தால் இவ்வளவு பிரச்



சினை வந்து இருக்காது. அதனால்தான் நண்பர் பாலகிருஷ்ணன் அவர்கள் கூட இப்போது நான் எதிர்க்கிறேன் என்று சொன்னார். ஏன் என்றால் அதில் விளக்கக் குறிப்பில் விளக்கம் இல்லை. விளக்கக் குறிப்பில், புதிய சூழ்நிலை என்ன ஏற்பட்டது. இந்த சட்டமுன்வடிவு ஏன் கொண்டுவரப்பட்டிருக்கிறது. என்ன திருத்தம் தேவை என்பதெல்லாம் விளக்கப்பட்டு இருக்குமானால் நிச்சயமாக அது பயனுள்ளதாக இருந்து இருக்கும். எனவே, எதனாலே ஏற்பட்டது என்று புரிந்து கொள்ளாத காரணத்தால்தான் அப்படி ஒரு கேள்வியே இந்த அவையில் இன்றைய தினம் எழுப்பப்பட்டிருக்கிறது.

அது மட்டுமல்லாமல் சென்னைப் பல்கலைக் கழகத்திற்கு துணை வேந்தரை நியமிப்பதற்கு பல்வேறு காலங்களில், பல்வேறு நேரங்களில் காலதாமதம் ஏற்பட்டு வருகிறது. அதனால் நிர்வாகம் பெரிதும் பாதிக்கப்படுவதாக அனைவரும் குற்றம் சுமத்திக்கொண்டிருக்கிறார்கள். எனவே, புதிய துணை வேந்தர் பொறுப்பு ஏற்கும் வரை ஏற்கனவே பதவியில் இருக்கும் துணை வேந்தர் அவருடைய பதவிக் காலம் முடிந்தாலும் தொடர்ந்து பணியாற்ற ஏற்ற வகையில் சட்டத் திருத்தம் கொண்டு வர வேண்டும்.

இன்னும் ஒன்று துணை வேந்தர் பதவிக் காலம் 3 ஆண்டுகள் என்பது மிகவும் குறைவு. இந்த குறுகிய காலத்திற்குள் புதுமையைப் புகுத்தவோ, ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ளவோ அவர்களுக்கு அவகாசம் இருப்பது இல்லை. எனவே அவருடைய பதவிக் காலத்தை 3 ஆண்டுகள் என்பதை 5 ஆண்டுகள் என்று மாற்றுகிற வகையில் சட்டத்திருத்தம் கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சிண்டிகேட் போன்ற அமைப்புகளில் பல்கலைக் கழகத்தில் பணியாற்றும் மூத்த பேராசிரியர்களோ, வீடர்களோ அங்கம் பெறும் வகையில் சட்டத்திருத்தம் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். செனட், சிண்டிகேட் போன்ற அமைப்புகளில் பதவியைச் சார்ந்த உறுப்பினர்களைத் தவிர தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் தற்போது இல்லை என்ற நிலை மாற வேண்டும். பல்கலைக்கழகத்தினுடைய துறைத் தலைவர்கள் நியமிக்கப்படும்போதும் அந்தத் துறைகளில் தகுதிவாய்ந்த பேராசிரியர்களை விட்டுவிட்டு போதுமான தகுதி இல்லாத வெளியார்களைக் கொண்டு வந்து திணிக்க முயற்சிகள் சில வேளைகளில் கையாளப்படுவதாக குற்றம் சுமத்தப்படுகிறது. மாணவர்களைத் தேர்வு செய்து அனுமதிப்பதிலும் ஒரே மாதிரியான முறை இல்லாமல், இதில் பாரபட்சம் காட்டப்படுவதாக புகார்கள் வந்து கொண்டிருக்கின்றன.

சென்னை, கல்கத்தா, பம்பாய் இந்த 3 பல்கலைக் கழகங்களுக்கு ஒரு சிறப்பு உண்டு (Red brick Universities) என்று சொல்லுவார்கள். ஆக்ஸ்போர்டு போல கேம்பிரிட்ஜ் போல இந்தப் பல்கலைக் கழகங்கள் உருவாக்கப்பட்டதாக ஒரு தனி சிறப்புப் பெயர் அந்த பல்கலைக் கழகங்களுக்கு உண்டு. சென்னைப் பல்கலைக் கழகத்திற்கு இன்றைக்கு உலகம் முழுவதும் ஒரு சிறப்பு பெயர் உண்டு; ஒரு நல்ல பெயர் உண்டு. இந்த (Red Brick Universities) 3 பல்கலை கழகங்களையும், இந்திரா காந்தி அவர்கள் இருந்தபோது, 'நேஷனல் யூனிவர் சிட்டிஸ்' என்று அறிவிக்க ஒரு திட்டம் இருந்தது. அன்றைய தினம் திரு. ஜோதிபாசு அவர்கள் அதற்கு எதிர்ப்பு தெரிவித்த காரணத்தால் மாநிலத்திற்குள்ள மேலாண்மைப் போய்விடும். எனவே நான் இதை ஆதரிக்க மாட்டேன் என்று அவர் எதிர்ப்பு தெரிவித்த காரணத்தால் அன்றையதினம் அது கைவிடப்பட்டது என்றாலும் கூட சென்னைப் பல்கலைக் கழகத்தை 'சென்ட்ரல் யுனிவர்சிட்டியாக' மாற்றும் திட்டம் இருப்பதாக சொல்லுகிறார்கள். இதனால் நிறைய மானியம், நமக்கு கிடைக்கும். அப்போது வளர்ச்சிக்கு வழி பிறக்கும் என்று நான் நினைக்கிறேன். நம்மிடம் போதுமான நிதி இல்லை எனவே நிறைய நிதி வருவதை நாம் விட வேண்டியது இல்லை. இப்போது நிறைய பல்கலைக்கழகங்கள் தமிழ்நாட்டில் இருக்கின்றன. எனவே, சென்னைப் பல்கலைக் கழகத்தை 'சென்டிரல் யூனிவர்சிட்டியாக மாற்ற வேண்டுமென்று பரிசீலிப்பதில் தவறு இல்லை என்று நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

தற்போதுள்ள சிறப்பான நிலையிலிருந்து சென்னைப் பல்கலைக் கழகம் இறங்கி விட்டதாக ஒரு கருத்து பரவலாக நிலவுகிறது. பல்கலைக் கழக நிர்வாகத்தில் கல்வித் தகுதியில், தரத்தில் தேர்வில் ஒழுக்கம், கட்டுப்பாடு உயர்வதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். எல்லா பல்கலைக் கழகங்களுக்கும் ஒரே மாதிரி சட்டத்தை இயற்றவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பல்கலைக்கழகங்களிலும், பல்கலைக் கழகங்களுக்கு உட்பட்ட கல்லூரிகளிலும் பணியாற்றுகின்ற ஆசிரியர்கள் தரத்திலிருந்து மிகவும் இறங்கி செயல்படுவதாக நிறைய புகார்கள் வருகின்றன. உதாரணமாக தேசியக்கொடியை அவமதிக்கும் வகையில் தேசியத்தை, ஒருமைப்பாட்டை கேவலப் படுத்தி தீங்கு ஏற்படுத்தும் வகையில் ஒரு சில பேராசிரியர்கள் கவிதை புனைகிறார்கள். தேச விரோத இயக்கங்களில் ஈடுபடுகிறார்கள். சென்னைப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த தமிழ்ப் பேராசிரியர் ஒருவர் திருச்சியில் ஒரு கருத்தரங்கில் பேசும்போது நமது முதலமைச்சரையும், குடியரசுத் தலைவரையும் ஜாதியின் பெயரைக் குறிப்பிட்டு மிகவும் கீழ்த்தரமாக பேசி பரபரப்பை உண்டாக்கியிருக்கிறார். பரபரப்பான அந்தச் செய்திகள்





எல்லாம் பத்திரிகையில் இடம் பெற்றிருக்கின்றன. அவர் ஒரு அரசியல் கட்சிக்கு நெருக்கமானவர் என்று கூறப்படுகிறது. அவரோடு ஒத்த கருத்து கொண்ட ஒருவரே துணை வேந்தராக நியமிக்கப்பட்ட காரணத்தால் அவர் மீது இதுவரை எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. இதுபோன்ற புகார்களுக்கு இடம் இல்லாமல் வருங்காலத்தில் நம்முடைய பல்கலைக்கழகங்கள் இயங்குவதற்கு அரசு அனைத்தும் செய்யவேண்டுமென்று கேட்டு அமைகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கல்வி அமைச்சர்,

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்கலைக் கழகங்கள் சார்ந்த சட்டங்களின் திருத்த சட்டமுன்வடிவு குறித்து மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும், காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. பாலகிருஷ்ணன் அவர்களும், மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. தம்புசாமி அவர்களும் இந்த சட்ட திருத்தம் தேவையற்றது என்பதை மட்டும் சொல்லாமல் இது ஒரு ஜனநாயக விரோதமானது என்று குறிப்பிட்டு இருக்கிறார்கள்.

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அந்த வார்த்தையைப் பயன்படுத்தவில்லை. ஆனால் அவர்கள் தலைமையில் கீழ் பணியாற்றுகின்ற காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த உறுப்பினர்..

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காரணத்தை நீங்கள் குறிப்பிட்டு இருப்பீர்களானால் நிச்சயமாக எந்தச் சூழ்நிலையில் இந்த சட்ட திருத்தம் வருகிறது என்பதை அவரும் புரிந்து கொண்டிருப்பார். அதிலே நியாயம் இருக்கிறது என்று தெரிந்தால் இதிலே எதிர்க்க வேண்டிய அவசியம் இல்லை. ஏதோ ஒரு புதிய சூழ்நிலை ஏற்பட்ட காரணத்தால்தான் இந்த சட்ட திருத்தம் வருகிறது. எனவே, அதற்கான காரணத்தை நீங்கள் சட்ட முன்வடிவிலேயே அதனுடைய நோட்டிலே விளக்கியிருக்கலாம்; எக்ஸ்பிளனேட்டரி நோட்டிலே விளக்கியிருக்கலாம்; இல்லாவிட்டால் நீங்கள் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளும்படி கேட்கும்பொழுதாவது அதை விளக்கியிருக்க வேண்டும். அதைத்தான் நான் சொன்னேன்.

முற்பகல் 11–50

மாண்புமிகு திரு. இராம வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்கள்

தெரிவிக்கிற கருத்து, முறையாக அவர்கள் பெற வேண்டிய கருத்தை, அரசாங்கத்திடத்திலேயிருந்து பெறுவதற்காகத் தெரிவிக்கப்படுகிற கருத்துக்கள். நான் அதை மறுக்கவில்லை.

ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் பாலகிருஷ்ணன் அவர்களும் அதைத் தெரிவித்திருக்கலாம். இது ஜனநாயகத்திற்கு விரோதமானது என்று அவர் முடிவு எடுத்து விட்டதனால் தான் அந்தக் காரணவிளக்கங்கள் தெரியாததினால் நான் ஜனநாயகத்திற்கு விரோதம் என்று சொல்கிறேன் என்று அவர்கள் சொல்லவில்லை. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்கள் மிகுந்த எச்சரிக்கையோடு அவர்களுக்கும் சேர்த்து பாதுகாப்பு அளித்திருக்கிறார்கள்.

மாண்புமிகு கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்த உறுப்பினரவர்கள் தெளிவாகவே சொல்லியிருக்கிறார்கள்.

ஜனநாயகத்திற்கு விரோதமான ஒரு காரியம் என்றால் அது இந்தச் சட்டமன்றத்திற்கே வராது. இந்தச் சட்டமன்றம்தான் ஜனநாயகத்தையே உருவாக்குகிறது. இந்தச் சட்டமன்றம்தான் ஜனநாயகத்தினுடைய குழந்தையாக இருக்கின்ற தீர்மானங்களைப் பெற்றுத் தருகிறது. ஆகவே, இந்தச் சட்டமன்றத்தின் முன்னாலே விவாதிக்கப்படுகிற ஒரு கருத்து, ஜனநாயகத்திற்கு விரோதமானது என்று நாமே சொன்னால், நாம் ஜனநாயகத்திற்கு விரோதமான கருத்துக்களை இங்கே நிறைவேற்றுவதற்காக இருக்கிறோமோ என்கிற ஒரு தவறான கருத்துகூட வந்து விடும்.

இன்னும் இதில் ஒன்றை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு உங்கள் மூலம் நினைவுபடுத்த விரும்புகிறேன். இதைப்போன்ற ஒரு சட்டமுன்வடிவு, சென்ற கூட்டத் தொடரில் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அது, டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகத்தின் தொடர்பாக நிறைவேற்றப்பட்டது. அதிலே ஒரு சிறிய வார்த்தை திருத்தங்கள்—டெக்னிக்கல் கரெக்ஷன்ஸ் என்று சொல்கிறார்களே அப்படிப்பட்ட சில வார்த்தை திருத்தங்களோடு மாண்புமிகு மக்கள்—நல்வாழ்வுத் துறை அமைச்சரவர்கள் இங்கே அதை அறிமுகம் செய்திருக்கிறார்கள்.

அந்தச் சட்டத் திருத்தத்தின் தொடர்பாகத்தான், தமிழ் நாட்டிலே இருக்கிற மற்றப் பல்கலைக் கழகங்களுக்கும் ஒரே மாதிரியான சட்டத் திருத்தம் வேண்டும் என்கிற ஒரு சூழ்நிலையில் இந்தச் சட்டத் திருத்தத்தை நான் முன்மொழிந்திருக்கிறேன்.



தமிழ் நாட்டிலே 10 பல்கலைக் கழகங்கள் இருக்கின்றன. பொதுப் பல்கலைக் கழகங்கள், மருத்துவப் பல்கலைக் கழகம், வேளாண்மைப் பல்கலைக் கழகங்களைத் தவிர, இந்தப் பத்து பல்கலைக் கழகங்களுக்கும் தனித்தனி சட்டங்கள் இயற்றப்பட்டிருக்கின்றன.

அதிலே சென்னைப் பல்கலைக் கழகத்திற்கு மிகப்பழமையான சட்டம். அதற்குப் பிறகு அண்ணாமலைப் பல்கலைக் கழகம். அதற்குப் பிறகு மதுரை-காமராஜர் பல்கலைக் கழகம். நம்முடைய புரட்சித் தலைவர் ஆட்சிக் காலத்திலே தோன்றிய பல்கலைக் கழகங்கள். ஆகவே, இவை ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு வகையான சட்டதிட்டங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

துணைவேந்தர் தேர்ந்தெடுக்கின்ற முறையிலேகூட, மற்றப் பல்கலைக் கழகங்களிலேதான் இந்த மூன்று உறுப்பினர்களைத் தேர்வு செய்கிற முறை ஒரு மாதிரியாக வகுக்கப்பட்டிருக்கிறது. அதிலே ஆளுநர் ஒருவரை நியமிக்கிறார்; வேந்தர் என்கின்ற அந்த உரிமையில், அந்தப் பல்கலைக் கழகத்தினுடைய சிண்டிகேட் ஒருவரைத் தேர்ந்தெடுக்கிறது. அந்தப் பல்கலைக் கழகத்தினுடைய செனட் ஒருவரைத் தேர்ந்தெடுக்கிறது.

சில பல்கலைக் கழகங்களில் அப்படிப்பட்ட முறைகளிலேகூட மாறுதல் இருக்கிறது. குறிப்பாகஅண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில், அதனுடைய இணைவேந்தர் மற்ற பல்கலைக் கழகங்களுக்கெல்லாம் இணைவேந்தராகக் கல்வியமைச்சர் இருக்கிறார். ஆனால் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தைப் பொறுத்தவரை, அதனுடைய நிறுவனர் என்கின்ற வகையில் அந்த வாரிசாக வருகிற அந்த நிறுவனத்திற்குச் சொந்தக்காரராக இருக்கிற உரிமை படைத்தவராக இருக்கிறவர்தான் இணை வேந்தர். அங்கே இந்த மூன்று பேர் கொண்ட குழு நியமிப்பது இல்லை. இணை வேந்தர்தான் மூன்று பேர் கொண்ட பட்டியலைத் தருகிறார். அதை வேந்தர் முடிவு எடுக்கிறார். அதிலே அரசாங்கத்திற்குத் தொடர்பு இல்லை. இதிலே கூட அரசாங்கத்திற்குத் தொடர்பு இல்லைதான்.

காரணம், தன்னாட்சி உரிமை பெற்றதாகப் பல்கலைக் கழகங்கள் திகழ வேண்டும் என்பதற்காக வெள்ளைக்காரர் காலத்தில் 140 ஆண்டுகளுக்கு முன்னாலே இயற்றப்பட்ட சட்டங்களையொட்டித் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இங்கேகூட மாண்புமிகு உறுப்பினர் திரு. பாலகிருஷ்ணன் அவர்கள் ஒரு கருத்தைத் தெரிவித்தார்கள், நான் சென்ற கூட்டத் தொடரிலேயே தெரிவித்திருக்கிறேன், இப்படித் தனித்தனி

பல்கலைக் கழகங்களுக்குத் தனித்தனி வகையான சட்ட திட்டங்கள் இருப்பது நடைமுறைக்குச் சில நேரத்திலே சங்கடங்கள் விளைவிக்கின்றன. நியாயமான நிர்வாகத்தை நடத்த முடியவில்லை, அரசாங்கத்திற்கு இங்கே பதில் சொல்ல வேண்டிய பொறுப்பு இருக்கிறது. அங்கே நிதி தேவை என்றால் அரசாங்கம் கொடுக்க வேண்டிய கடமை இருக்கிறது. பல்கலைக் கழகங்களின் எல்லா சுகதுக்கங்களிலும் அரசாங்கம் பங்குபெற வேண்டிய சட்டபூர்வமான கடமையும் இருக்கிறது. மக்களுடைய தேவையையொட்டி கடமையும் இருக்கிறது. ஆனால் பல்கலைக் கழகத்தினுடைய நிர்வாகத்திற்குள்ளே அரசாங்கம் நுழையக் கூடாது, அரசு நுழைந்தால், அது தன்னாட்சி உரிமையை மீறிய செயல் என்று பேசப்படுகிற ஒரு சூழ்நிலை இருக்கிறது.

முற்பகல் 11–55

இங்கே நீங்கள் சில பல்கலைக் கழகங்களினுடைய நடவடிக்கைகளைக் குறித்துப் பேசினீர்கள். பேராசிரியர்களினுடைய நிலைமைகளைக் குறித்துப் பேசினீர்கள். துணை வேந்தர்களுடைய நிலைமைகளையெல்லாம் சொன்னீர்கள். அதற்கு பதிலளிக்க வேண்டிய பொறுப்பு கல்வியமைச்சருக்கு இருக்கிறது. அது இணை வேந்தர் என்ற தகுதியிலே அல்ல; கல்வியமைச்சர் என்ற தகுதியிலேதான் இருக்கிறது. ஆனால் அதைப்பற்றி உள்ளே நுழைந்து விசாரணை செய்யவோ அல்லது மாற்றுவதற்கோ அல்லது நீக்குவதற்கோ கல்வியமைச்சருக்கும் அதிகாரம் இல்லை, அரசாங்கத்திற்கும் அதிகாரம் இல்லை. இத்தகைய சிக்கல்கள் எல்லாம் நெடுங்காலமாக இருக்கிற காரணத்தால் தான், இதற்கெல்லாம் பொதுவாக ஒரு சட்டத்தை (Common Law for the Universities) என்று மிகவிரைவிலே கொண்டு வருவதற்கான முயற்சிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அதற்காக கல்வித் துறையிலே அனுபவம் பெற்ற ஓய்வு பெற்ற அதிகாரி ஒருவரை நியமித்து, அவர் அதற்கான சட்டமுன் வடிவைத் தயாரித்துக் கொண்டிருக்கிறார். அநேகமாக, அடுத்த கூட்டத்தொடரிலே அது நிறைவேற்றப்படும். அப்படி வருகிறபோது இப்போது இருக்கிற இந்தக் குறைகளும் நிவர்த்தி செய்யப்பட்டுவிடும் என்பதை நான் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இதைத்தவிர, வேறொன்றையும் நீங்கள் குறிப்பிட்டுக் காட்டினீர்கள்; சென்னைப் பல்கலைக் கழகத்தைச் சார்ந்த ஒரு பேராசிரியர், திருச்சியிலே ஏதோ ஒரு கருத்தரங்கத்தில் கவியரங்கத்தில் ஏதோ ஒரு கவிதை பாடியதாக. அதுபற்றிய தகவல் அரசுக்கு வரவில்லை. பாரதிதாசன் பல்கலைக் கழகத்தைச் சார்ந்த பாடப் புத்தகங்களில், இப்படிப்பட்ட சில குறிப்புகள் இருந்ததை உடனே சுட்டிக்காட்டி அவைகளெல்லாம் நீக்கப்



பட்டிருக்கின்றன. இதனுடைய அடிப்படைக் காரணமே, கடந்த இரண்டாண்டு காலமாக, துரதிருஷ்டவசமாக, விபத்தாக தமிழகத்திலே அமைந்த ஒரு ஆட்சியின், விளைவாக அந்த சக்தியை வைத்து கொண்டு அவர்கள் தூண்டிவிட்டு அதன் பலனாகத்தான் கல்லூரி ஆசிரியர்கள் அல்லது பள்ளி ஆசிரியர்கள் இப்படிப்பட்ட கவிஞர்களுக்கெல்லாம்கூட எதை வேண்டுமானாலும் பேசலாம்; எதை வேண்டுமானாலும் பாடலாம் என்கிற தைரியம் வந்து விட்டது. அரசாங்கத்தில் பணிபுரிந்து கொண்டு அரசாங்கத்தில் ஊதியத்தைப் பெற்றுக் கொண்டு, மாணவர்களுக்கு கல்வி போதிக்கிற வேலையைத் தவிர, மற்ற வேலைகளையெல்லாம் அவர்கள் செய்யலாம் என்கிற ஒரு தைரியம் அந்த இரண்டாண்டு காலத்திலேதான் ஏற்பட்டுவிட்டது. அது தமிழக முதலமைச்சர் மாண்புமிகு டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் காலத்தில் நிச்சயமாகக் கட்டுப்படுத்தப்படும். கட்டுப்படுத்திக் கொண்டிருக்கிறோம் என்பதையும் நான் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இது ஜனநாயக விரோதம். ஜனநாயக விரோதம் என்று எப்படிச் சொல்கிறீர்கள் என்பது எனக்குப் புரியவில்லை. அரசியல் சட்டத்தை உருவாக்கினோமே, அதை எத்தனை முறை திருத்தியிருக்கிறோம்? அது ஜனநாயக விரோதமா? இன்றைக்கும் திருத்திக் கொண்டிருக்கிறோமே, அது ஜனநாயக விரோதமா? நாமே ஒரு சட்டத்தை உருவாக்குகிறோம். இன்னும் சொல்லப்போனால் இது செல்லரித்துப்போன ஒரு பழையசட்டம், காரணம் இந்தப் பல்கலைக்கழகச் சட்டங்கள். 140 ஆண்டுகளுக்கு முன்பு வெள்ளைக்காரன் இருந்தபோது அவன் உருவாக்கிய கவர்னர் அன்றைக்கு வேந்தன், ஆனால் நாடு சுதந்திரம் பெற்றதற்குப் பிறகும், ஒரு சுயாட்சி முறையை ஒரு 'ஃபெடரேஷன்' அமைப்பில் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு வந்ததற்குப் பிறகும், நாம் அதை இன்றைக்கும் ஏற்றுக் கொண்டிருக்கிறோம். நான் முன்னாலேயே சொன்னேன், கல்வியமைச்சர் இணை வேந்தர் என்று. ஆனால் இணை வேந்தருக்கு என்ன அதிகாரம் என்றால் ஒன்றுமே கிடையாது. அது ஏதோ ஒரு அலங்காரப் பதவியாக வைத்துக் கொண்டிருக்கிறோம். ஆகவே தான், தேர்ந்தெடுக்கப்பெற்ற அரசு பதில் சொல்வதற்கும், அந்தப் பல்கலைக் கழகத்தினுடைய நிர்வாகத்திலே நடைபெறுகிற நிகழ்ச்சிகளுக்கும், அந்தப் பல்கலைக்கழகத்தை நடத்திச் செல்வதற்கும் அதற்குத் தேவையான நிதியுதவிகளைத் தருவதற்கும், அதைக் காப்பாற்றுவதற்கும் அது வளர்ச்சி பெறுவதற்கும் அதை உருவாக்குவதற்கும் இருக்கிற உரிமை பெற்ற ஒரு அரசு, இந்தப் பல்கலைக் கழகத்திற்குள்ளே தன்னுடைய கருத்துக்களைச் சொல்ல முடியாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டு, கதவுகளெல்லாம் அடைக்கப்படுகிறபோது நாங்கள் சட்டமன்றத்தைத்தான் தேடி வர வேண்டியிருக்கிறது. சட்டமன்றத்திலே இந்தத் திருத்தங்களைக் கொண்டுவந்து நிறைவேற்றி,

[திரு. இராம வீரப்பன்] [1992 பிப்ரவரி 10

சில அதிகாரங்களைப் பெறவேண்டியிருக்கிறது. இது எந்தச் சூழ்நிலையிலே கொண்டுவந்தது என்று நீங்கள் கேட்டால், அது சென்ற கூட்டத் தொடரில் நம்முடைய டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகம் இதேபோன்ற ஒரு சட்டத்திருத்தத்தை நிறைவேற்றியபோது தெளிவாக்கப்பட்டிருக்கிறது. அதை நீங்கள் கேட்டுக் பெறவில்லையோ, என்னவோ எனக்குத் தெரியவில்லை. நான் இப்போது அதைத் தொடர்ந்து, எல்லாப் பல்கலைக் கழகங்களுக்கும், அண்ணாமலைப் பல்கலைக் கழகம், சென்னைப் பல்கலைக் கழகம், தவிர, இந்த இரண்டு பல்கலைக் கழகங்களுக்கு மாத்திரம் இது பழைய சட்டங்கள் என்கிற காரணத்தினால் மத்திய அரசினுடைய முன் அனுமதியைப் பெற்றுக் கொண்டாக வேண்டும்.

நண்பகல் 12—00

இந்தப் பல்கலைக் கழகங்களுக்கெல்லாம் நாம் சட்டத்தை நிறைவேற்றி மத்திய அரசாங்கத்திற்கு அனுப்ப வேண்டும். ஆகவே இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் இந்த மூன்று பேர்களை நியமிக்கிறோம். எல்லோரும் மனிதர்கள்தான். நாம் ஒன்றும் உலகத்திலே மிகச்சிறந்த, அப்பழுக்கற்றவர்களை, பத்தரை மாற்றுத் தங்கங்களை தேர்ந்தெடுத்து, விட முடியாது. சிண்டிகேட் தேர்ந்தெடுக்கிறது-மெஜாரிட்டி, செனேட் தேர்ந்தெடுக்கிறது—மெஜாரிட்டி. அந்த இருவரும் சேர்ந்து, ஆளுநர்-வேந்தர் அவர்கள் நியமிக்கிற ஒருவருடைய கருத்துக்கு மாறு பட்டால் அவர்களுடைய கை கூடி, ஓங்கி விடும்.

இன்றைக்குப் பல்கலைக் கழகங்களுடைய சிண்டிகேட், செனேட் எப்படிச் செயல்படுகிறது என்பதையும் நீங்கள் உணர்ந்திருப்பீர்கள். அதிலேயும், குறிப்பாக நம்மைப் போன்ற அரசியல்வாதிகள் உணர்ந்திருக்கிறோம். ஆகவே, சுமை எல்லாவற்றையும் அரசாங்கத்தின் தலையிலே வைத்துவிட்டு சுமந்து கொண்டு மாத்திரம் போ; சுமந்து கொண்டிருக்கிற கழுதையாக மாத்திரம் இரு; மற்றவற்றைப் பற்றிக் கவலைப்படாதே என்று சொல்வது ஜனநாயகம் ஆகாது. ஆகவே, இதற்கு உள்ளே நுழைந்து இதை ஒரு விவாதப் பிரச்சினையாக மாற்றிவிடாமல், வேந்தராக இருக்கிற ஆளுநர் அவர்கள், ஒரு பட்டியல் வருகிறது அந்தப் பட்டியலிலே தகுதியானவர்கள் இல்லை என்று அவர்கள் கருதுவார்கள் என்றால், வேறு ஒரு குழுவை அமைக்கின்ற உரிமையை இந்த சட்டத் திருத்தம் தருகின்றது.

நான் கேட்கின்றேன். நான் மேலே சொன்னதைப்போல, சிண்டிகேட் தேர்ந்தெடுக்கிறது. செனேட் தேர்ந்தெடுக்கிறது. ஆளுநர்-வேந்தர் அவர்களால் நியமிக்கப்படுகின்ற மூவராலும் சேர்ந்து தேர்ந்தெடுக்கப்படுகிறவர்கள் எல்லாருமே தேர்ச்சி பெற்றவர்களாக வந்து விடுவார்கள் என்று சொல்ல முடியுமா? இதிலே இருக்கிற நடைமுறை சிக்கலையும் சொல்லுகிறேன்.



1992 பிப்ரவரி 10] [திரு. இராம வீரப்பன்]

பல பேர் ஒதுங்கி இருப்பார்கள். நாம் சில திறமையானவர்களை, உலகப் புகழ் மிக்க நிர்வாகிகளை, விஞ்ஞானிகளை, இவர்கள் துணை வேந்தர்களாக வந்தால் சரியாக இருக்கும் என்று எண்ணியிருப்போம். அரசாங்கம் கூட எண்ணியிருக்கும். வேந்தரும் எண்ணியிருப்பார்கள். ஆனால் அவர் இந்தப் போட்டிக்கு உள்ளே வராமல் ஒதுங்கியே இருப்பார். அவர் கிடைப்பாரா, மாட்டாரா என்கிற சந்தேகம் கூட இருக்கும். அப்படிப்பட்ட ஒருவர் வரவேண்டுமென்று விரும்பிக் கொண்டிருக்கிற சூழ்நிலையில் அவர் கிடைக்க மாட்டார் என்கிற ஒரு நிலைமை. இரண்டாம் தர, மூன்றாம் தர என்று அந்த வரிசையிலே வருகிறவர்களும் இந்தப் பட்டியலிலே இடம் பெறுவதற்கு வாய்ப்பு உள்ளது. ஒரு வேளை வேந்தர் விரும்பினால், அரசாங்கம் விரும்பினால், ஒருவேளை அரசாங்கத்தைக் கலந்து கொண்டு செய்ய வேண்டும் என்கிற உணர்வோடு வேந்தர் அரசாங்கத்தைக் கலந்து பேசினால், அப்படிப்பட்ட மிகச்சிறந்த ஒருவர் இந்தப் பல்கலைக் கழகத்தினுடைய துணை வேந்தராக வருவது, பல்கலைக் கழகத்திற்கும் சிறப்பு, இந்த மாநிலத்திற்கும் சிறப்பு, கல்வித் துறைக்கும் சிறப்பு என்று ஒரு முடிவு எடுக்கிறபோது, மீண்டும் ஒரு பட்டியலை நீங்கள் தாருங்கள் என்று கேட்பதிலே ஒரு தவறும் இருக்காது. ஆகவே, இதற்கு ஒரு காரணம் தேடிக் கொண்டிருக்க வேண்டிய அவசியம் இல்லை. ஒரு மிகச்சிறந்த நிர்வாக நடைமுறை இது. எங்கேயாவது இன்னும் நல்லவர்கள் கிடைப்பதற்கு வழி ஏற்படுமேயானால், அவர்களைத் தேடிக் கண்டுபிடிப்பதற்கு வசதியாக, அங்கே சட்டம் ஒரு தடையாக இருக்கக்கூடாது என்பதற்காகத்தான் இந்தச் சட்டத் திருத்தம் கொண்டுவரப்படுகிறதே தவிர, வேறு எந்த நோக்கமும் இல்லை. ஜனநாயக உணர்வோடு கொண்டு வரப்படுகிற சட்டத் திருத்தம்தான் இது. இதில் ஜனநாயக விரோதம் இல்லை. இந்த விளக்கத்தைப் பெற்றதற்குப் பிறகு நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுடைய அந்த எண்ணத்தின்படி, மாண்புமிகு திரு. பாலகிருஷ்ணன் தன்னுடைய கருத்தை மாற்றிக் கொண்டிருப்பார்கள் என்று நான் கருதுகிறேன்.

இந்த நேரத்தில் ஒன்றிரண்டு கருத்துக்களை மாத்திரம் சொல்லி நான் முடித்துக் கொள்ளுகிறேன். ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். தேர்வுகளிலே யாரும் தேறவில்லை, தேறவில்லை என்றெல்லாம் சொல்லிக் கொண்டிருக்கிறோம். நாம் இன்னும் பழைய காலத்தையே எண்ணிக் கொண்டிருக்கிறோம். இன்றைக்கு வருகிற இளைஞர்களில் 99.9 சதவீதம் பேர் இந்த ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். தேர்வுகளைப்பற்றி எல்லாம் கவலைப்படுவது இல்லை. 'அவர்கள் இன்ஜினியர்களாக, டாக்டர்களாக, வேறு தொழில்களுக்குப் போகிறார்கள். வேறு தொழில்களில் அக்கறை கொள்கிறார்கள்., அமெரிக்காவிற்குச் செல்கிறார்கள், இங்கிலாந்திற்குச் செல்கிறார்கள்

[திரு. இராம வீரப்பன்] [1992 பிப்ரவரி 10

காலமே மாறியிருக்கிறது. இளைஞர்களுடைய எண்ணமே மாறி இருக்கிறது. ஏதோ இந்த நாட்டிலே இருக்கிற இளைஞர்கள் அனைவரும் ஐ.ஏ.எஸ். படித்தால்—எத்தனை ஐ.பி.எஸ். ஆண்டு ஒன்றுக்கு சுமார் 80 அல்லது 90 சதவீதம் ஐ.ஏ.எஸ்.ஸைத்தான் இந்திய அரசாங்கம் தேர்ந்தெடுக்கிறது. இதிலே தமிழ் நாட்டிற்கு எவ்வளவு கிடைக்கும் என்று கருதுகிறீர்கள்?

நான் கூட நேற்று நம்முடைய நத்தம் தொகுதியில் மிக அற்புதமான பள்ளி, அரசாங்கப் பள்ளி, நிகழ்ச்சியில் கலந்து கொண்டேன். அநேகமாக இந்தியாவிலே அப்படிப்பட்ட சிறப்பு மிக்க ஒரு பள்ளி இருக்காது ஒரே பள்ளியில் பயின்றவர்கள், நான்கு ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் நம்முடைய தமிழக அரசிலே மூன்று பேர், ஒரிஸ்ஸா கேடரில் ஒருவர், அதிலும் நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும் தமிழிலேயே ஐ.ஏ.எஸ்., பரிட்சை எழுதி, பாலகிருஷ்ணன் என்பவர் ஒரிஸ்ஸாவிலே டணியாற்றுகிறார். ஒரு பள்ளிக்கூடத்தில், பிற்படுத்தப்பட்ட பகுதியில் கிராமப்புறப் பகுதியில், நத்தம் அரசினர் பள்ளியில் பயின்றவர்கள் நான்கு ஐ.ஏ.எஸ். அதிகாரிகளை அந்தப் பள்ளி உருவாக்கித் தந்து இருக்கிறது.

பிற்பகல் 12-05

இன்றைக்கு யாரும் ஐ.ஏ.எஸ். ஆக வேண்டும் என்று கவலைப் படுவதில்லை. இளைஞர்கள் அனைவரும் புதிய புதிய முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டு இருக்கிறார்கள். இன்னொன்றையும் நீங்கள் கவனிக்க வேண்டும். மற்றவர்கள் எல்லாம் தூங்கிக் கொண்டிருந்தபோது நாம் கொஞ்சம் விழித்துக் கொண்டிருந்தோம். இப்போது மற்றவர்கள் எல்லாம் விழித்துக் கொண்டு விட்டார்கள். நாம் அவர்களோடு போட்டி போடுகிற சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறோம்.

இங்கே நாம் ஆங்கிலமே பயில வேண்டும், பயில வேண்டும் என்கிறோம். வடக்கே இருக்கிற மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் இந்தியிலேயே பரீட்சை எழுதித் தேறிக்கொண்டிருக்கிறார்கள். இன்னும் சொல்லப்போனால் டெல்லி பல்கலைக் கழகம், நேரு பல்கலைக் கழகம், பஞ்சாபிலே, சண்டிகாரிலே இருக்கின்ற பஞ்சாப் பல்கலைக் கழகம் போன்ற வடக்குப் பகுதி மாநிலங்களிலே இருக்கின்ற பல்கலைக் கழக மாணவர்கள் அனைவரும் டெல்லியிலே முகாமிடுகிறார்கள். டெல்லியிலே இதற்கென்றே பயிற்சி பெறுகிறார்கள். மூன்று நான்கு ஆண்டுகளாக ஐ.ஏ.எஸ். தேர்வில் எந்தெந்தக் கேள்விகள் வந்தன என்றெல்லாம் தனியாகத் தயாரிக்கிறார்கள். அவர்கள் இந்தியிலேயே எழுதுகிறார்கள். தேர்ச்சியும் பெறுகிறார்கள்.



1992 பிப்ரவரி 10] [திரு. இராம வீரப்பன்]

நான் ஒரு புள்ளிவிவரத்தைச் சொல்ல விரும்புகிறேன். ஏதோ சமீப காலத்திலேதான் இந்த எண்ணிக்கை குறைந்து விட்டது, குறைந்துவிட்டது என்கிற ஒரு தவறான எண்ணம் நம்மிடத்தில் இருக்கிறது. புகழ் மிக்க பல்கலைக் கழகத்தினுடைய துணை வேந்தர் டாக்டர் லட்சுமணசாமி முதலியார் இருந்த காலத்திலேயே குறையத் தொடங்கி விட்டது. அதற்கான புள்ளிவிவரங்கள் எல்லாம் இருக்கின்றன. ஆகவே நம்முடைய இளைஞர்கள் ஐ.ஏ.எஸ். ஆகவில்லையே என்று கவலைப் படாதீர்கள். நம்முடைய இளைஞர்கள் ஆற்றல் மிக்க தொழில் வினைஞர்களாக, விஞ்ஞானிகளாக, இன்ஜினியர்களாக, மருத்துவர்களாக இந்தச் சமுதாயத்தை வளர்க்கின்றவர்களாக மாறவில்லையே என்றுதான் இன்றைக்குக் கல்வித் துறையிலே கவலைப்படுகிறோம். அதற்கான முறையில் கல்வித் திட்டங்களை நாம் மாற்றியமைத்துக் கொள்வதற்காக மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் மிகுந்த முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அதனுடைய ஒரு தொடர்புதான் இந்தச் சட்டத் திருத்தம்.

பல்கலைக் கழகத்தினுடைய துணை வேந்தர்கள் எப்படி இருந்து எப்படி இறங்கி வந்துகொண்டிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களே சூசகமாகக் குறிப்பிட்டார்கள். இது பல்கலைக் கழகத் துணைவேந்தர் அளவிலே மாத்திரமல்ல. கல்வித்துறை அனைத்திலும்தான் இருக்கிறது. நான் அதற்காகத்தான் சொன்னேன். நத்தம் பள்ளியிலே பயின்றவர்கள் ஆறாவது வகுப்புக்கு மேலே ஆங்கிலத்தை ஒரு மொழியாகப் பயின்றவர்கள்; மற்ற பாடங்களைத் தமிழிலே பயின்றவர்கள் அவர்கள். அதிலே ஒருவர் தமிழிலேயே ஐ.ஏ.எஸ். பரீட்சை எழுதித் தேறியிருக்கிறார். இன்றைக்குத் தமிழைப் படித்தால் ஐ.ஏ.எஸ். ஆக முடியாது ஆங்கிலத்தில் படித்தால்தான் எல்லா பதவிகளையும் பெற முடியும் என்ற தவறான உணர்வுகளை எழுப்பி கல்வியின் அடிப்படையையே நாம் தகர்த்திருக்கிறோம். அதை நாம் செப்பனிட்டாக வேண்டும். அதற்கான சட்டத் திருத்தங்கள் கொண்டுவரப்பட இருக்கின்றன. பல்கலைக் கழகங்கள் அனைத்திற்கும் ஒரே வகையான, ஒரேமாதிரியான சட்டம் செய்யப் போகிறோம். அது அடுத்த கூட்டத் தொடரிலே கூட வரலாம்.

அடுத்து தனியார் கல்லூரிகள் பற்றிச் சொன்னார்கள். அவர்கள் பச்சையப்பன் அறக்கட்டளை சட்டமுன்வடிவிலே பேசியிருந்தால் பொருத்தமாக இருந்திருக்கும். அதை விட்டு அவர்கள் இந்த மசோதாவில் பேசிவிட்டார்கள். தனியார் கல்லூரியிலே இருக்கின்ற சங்கடங்களை அரசு கவனித்துக் கொண்டிருக்கிறது. கூர்ந்து பார்த்துக் கொண்டிருக்கிறது. இது தொடர்பில்லை என்றாலும் இந்த இரண்டு சட்ட முன்வடிவுகளும் இங்கே வந்துவிட்ட காரணத்தால் கிறித்துவக் கல்லூரிக்கு நான் அன்பான வேண்டுகோளை விடுக்கிறேன். தயவு செய்து பிரச்சினையை சுமுகமாகத்

தீர்க்க முயலுங்கள். உங்களுடைய ஒரு கல்லூரியின் செய்கையினால் தமிழகத்தில் இருக்கின்ற ஆயிரக்கணக்கான பல்கலைக் கழக ஆசிரியர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு இருக்கிறார்கள். நாங்கள் அந்த ஆசிரியர்களோடு மோதிக் கொண்டிருக்கிற ஒரு சூழ்நிலை உருவாகி இருக்கிறது. இவை அனைத்திற்கும் அடிப்படைக் காரணம் ஒரு தனியார் கல்லூரி மூன்று ஆசிரியர்களை வேலையை விட்டு நீக்கியிருப்பதுதான். வேலையை விட்டு நீக்குகிற உரிமை அவர்களுக்கு இருப்பதாகச் சொல்கிறார்கள். நான் முன்னாலேயே பேசியிருந்தால் சொல்லியிருப்பேன். பச்சையப்பன் அறக்கட்டளை என்பது, ஒரு மிகச் சிறந்த கல்விமான் 1754-லே தோன்றி 1794-லே மறைந்து. அந்த 40 ஆண்டுகளுக்குள்ளே மாபெரும் வரலாற்றைப் படைத்த வள்ளலாக விளங்கியவர் அமைத்தது. அந்த நிறுவனங்களுக்காகவே நாம் சுமார் 4 கோடி ரூபாய் செலவு செய்து கொண்டிருக்கிறோம்.

பிற்பகல் 12–10

அதைப்போல் இந்த கிறித்துவக் கல்லூரிக்கு 1–1/4 கோடி ரூபாய் வழங்கிக் கொண்டிருக்கிறோம். இவ்வளவு வழங்கியதற்குப் பிறகும் அவர்கள் யாரை நியமிக்கிறார்கள்? தெரியாது. யாரை நீக்குகிறார்கள்? தெரியாது. மற்ற தனியார் கல்லூரிகள் யாரையாவது நீக்க வேண்டுமென்றால் அரசினுடைய முன்னனுமதியைப் பெற வேண்டும். சிறுபான்மைக் கல்லூரிகள் அவ்வாறு நீக்க வேண்டுமென்றால் அரசினுடைய அனுமதியைப் பெற வேண்டிய அவசியம் இல்லை. நாம் இந்தச் சூழ்நிலைகளை எண்ணி அதற்கும் சட்டங்களைக் கொண்டு வர இருக்கிறோம். காரணம் பல்வேறு உச்சநீதிமன்றத் தீர்ப்புகள் இன்றைக்கு வந்தாகிவிட்டன. நீங்கள் இந்தச் சட்டத் திருத்தமே ஜனநாயக விரோதம் என்கிறீர்களே, நமது அரசியல் சட்டம் வழங்கி இருப்பதாகக் கூறப்படுகிற அந்த அடிப்படை உரிமைகளுக்கே இன்றைக்கு உச்சநீதிமன்றம் புதிய வியாக்கியானங்களை வழங்கிக் கொண்டிருக்கின்றது. ஆகவே அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் அந்தக் கல்லூரி நிர்வாகத்திற்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலம் இந்த மன்றத்தின் மூலம் வேண்டுகோள் விடுக்கிறேன். அருள்கூர்ந்து இந்த அரசாங்கம் சொல்கிற யோசனை ஒன்று. 'ஆர்ப்பிட்ரேஷன்'. அந்தக் கல்லூரியிலே படித்த ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி ஒருவரின் தலைமையில், நிர்வாகத்தினுடைய பிரதிநிதியும், ஆசிரியர்களுடைய பிரதிநிதியும் மூவரும் சேர்ந்து விசாரிக்கட்டும். ஏனென்றால் அந்தக் கல்லூரி நிர்வாகத்தைப் பற்றி பல புகார்கள் அரசாங்கத்திற்கு வந்திருக்கின்றன. அந்தக் கல்லூரி முதல்வர் வந்ததற்குப் பிறகுதான் இத்தனை குழப்பமும் என்று புகார்கள் வந்திருக்கின்றன. நிர்வாகத்தினர் இந்த ஆசிரியர்கள் மிகுந்த கடுமையானவர்கள், வைத்துக்கொள்ள முடியாதவர்கள் என்று சொல்கின்றார்கள். 5 ஆசிரியர்கள் மீது நடவடிக்கை எடுத்து, 2 ஆசிரியர்களுக்குக் கொஞ்சம் குறைந்த தண்டனை கொடுத்து வைத்துக் கொண்டார்கள்.



3 ஆசிரியர்களை வேலையை விட்டு நீக்கியிருக்கின்றார்கள். நான் ஆசிரியர்களுக்காகவும் வக்காலத்து வாங்கவில்லை. நிர்வாகமும் சரியாக நடைபெறுகிறது என்றும் நான் சொல்லவில்லை. இதைப் பரிசீலிப்போம், ஆய்வு செய்து, அறிக்கை தருகின்ற ஒரு ஆர்ப்பிட்ரேஷன். அதை ஒத்துக் கொள்ளுங்கள் என்றுதான் நிர்வாகத்தைக் கேட்கிறோம். அவர்கள் பிடிவாதமாக மறுத்துக் கொண்டிருக்கின்றார்கள். எங்கள் கல்லூரி நிர்வாகத்திற்குள்ளே வேறு யாரும் தலையிடக் கூடாது, தலையிட முடியாது என்று சொல்லிக் கொண்டிருக்கின்றார்கள். அதற்காக நீதிமன்றத்திற்குச் சென்று தடை ஆணையைப் பெற்றுக் கொண்டு வருகிறார்கள். ஆனால் பணம் வாங்குவதற்கு மாத்திரம் எங்கேயும் போய் அவர்கள் எந்த ஆணையையும் பெறுவதில்லை. அது நாமே பார்த்து அவர்களுக்கு வழங்கிக் கொண்டிருக்கிறோம். தனியார் கல்லூரிகளுக்கு மாத்திரம் ஆண்டிற்கு ரூ. 75 கோடி கொடுத்துக் கொண்டிருக்கிறோம். ரூ. 150 கோடி அளவுக்குக் கல்லூரிக் கல்விக்குச் செலவழிக்கிறோம். அதிலே தனியார் நடத்துகிற கல்லூரிகளுக்கு ரூ. 75 கோடி கொடுத்துக் கொண்டிருக்கிறோம். ஆகவே அந்தக் கல்லூரிகளினாலே இன்றைக்கு ஒரு அமைதியின்மை, ஆசிரியர்கள் வேலை நிறுத்தம் போன்ற, கல்விக்கு இடையூறு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

ஏற்கெனவே கல்வித் தரம் குறைந்து விட்டது என்று குறை கூறுகிறார்கள். இருக்கின்ற கல்வித் தரத்தைக் குறைப்பதற்கு இப்படி ஒரு கல்லூரி காரணமாக இருக்கிறது. நான் அவர்களை அன்போடு வேண்டிக் கேட்டுக் கொள்வேன், தயவு செய்து மற்றவர்கள் இதிலே உட்கார்ந்து பேசி எந்தப்பக்கம் நியாயம் இருக்கிறது என்று கண்டறிவதற்கு அந்த நிர்வாகம் முன் வர வேண்டும். இதுதான் அரசினுடைய வேண்டுகோள். இது சிறுபான்மை என்கின்ற ஒரு காரணத்தை வைத்துக் கொண்டு, இந்த அரசாங்கம் ஏதோ சிறுபான்மைக்கு விரோதமாக இருக்கிறது என்கின்ற மாயத் தோற்றத்தை உருவாக்குவதற்கு சிலர் முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள். இந்த அரசாங்கத்தை விட்டால் வேறு எந்த அரசாங்கமும், எந்த முதலமைச்சரும் சிறுபான்மை இனத்தைக் காப்பாற்றுவதற்கு வர மாட்டார்கள்.

நான் மாண்புமிகு தமிழரசன் அவர்களுக்கும், மாண்புமிகு மன்ற உறுப்பினர்களுக்கும் தலைவர் அவர்களே, உங்கள் மூலம் ஒரே ஒரு புள்ளி விவரத்தைச் சொல்கிறேன். நேற்று மாண்புமிகு தமிழரசன் அவர்கள் பேசிய ஒரு கருத்துக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விடையிறுத்தபோது, மாநிலக் கல்லூரியிலே தாழ்த்தப்பட்டவர்களுக்கு இடம் வழங்கவில்லை என்று குற்றச்சாட்டுச் சொன்னார்கள். அதற்குப் புள்ளி விவரத்தோடு பதில் சொன்னார்கள். அதற்கு வேறு விளக்கத்தை தமிழரசன் அவர்கள் தந்திருக்கிறார். அதை அரசு ஆராய்ந்து கொண்டிருக்கிறது

[திரு. இராம வீரப்பன்] [1992 பிப்ரவரி 10

ஆனால் கிறித்துவக் கல்லூரி என்பது தோற்றுவிக்கப்பட்டதற்குக் காரணமே பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட கிராமப்புற மக்களுக்காகத்தான் தோற்றுவிக்கப்பட்டது. ஸ்காட்லேண்ட் மிஷன்-ஆலே தோற்றுவிக்கப்பட்டது. 150 ஆண்டுகளுக்கு முன்னாலே தோற்றுவிக்கப்பட்டது. அதனாலேதான் தாம்பரம் போன்ற ஒரு பிற்படுத்தப்பட்ட, இன்றைக்கு அது நகரம், 150 ஆண்டுகளுக்கு முன்பு, தயவுசெய்து அந்தப் பகுதியைப் பற்றி எண்ணிப் பாருங்கள், அப்படித் தோற்றுவிக்கப்பட்ட அந்தக் கல்லூரியில் சென்ற ஆண்டு தாழ்த்தப்பட்டவர்களுடைய மாணவர்கள் 8 அல்லது 9 சதவிகிதம் தான் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். அரசியல் சட்டப்படி 18 சதவிகிதம் சேர்த்தாக வேண்டும். ஒரு மாநிலக் கல்லூரியிலே ஏன் சேர்க்கவில்லை என்று தமிழரசன் அவர்கள் கேட்டாரே, கிறித்துவக் கல்லூரியில் நம்முடைய பணத்தினாலே நடைபெறுகின்ற கல்லூரியில், 8 அல்லது 9 சதவிகிதம் இன்றைக்கு முன்னாலே இருந்த முதல்வர் அவர்கள் 10, 12 சதவிகிதம் சேர்த்திருக்கிறார்கள். அதற்கு முன்னாலே 18 சதவிகிதம் சேர்த்திருக்கிறார்கள். பிற்படுத்தப்பட்டவர்களுக்கு, தாழ்த்தப்பட்டவர்களுக்கு என்று நடைபெறுகிற ஒரு கல்லூரியில் 8 அல்லது 9 சதவிகிதம் தான். அந்தப் புள்ளி விவரத்தைக் கூட தர மறுக்கிறார்கள். ஆகவே அந்த நியாயங்களுக்கும் எந்த சட்டதிட்ட விதிகளும் கடைப்பிடிக்கப்படுவதில்லை. அருள்கூர்ந்து அந்த நிர்வாகம் இந்தப் பிரச்சினையில் சுமூகமாக மற்றவர்களுடைய உணர்வுகளை மதித்து இந்த நாட்டில் கல்வித் துறை அமைதியாக செயல்படுவதற்கு உதவ வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்தப் பல்கலைக் கழக சட்டத் திருத்த மசோதா என்பது ஜனநாயக விரோதமானதல்ல. ஜனநாயகத்தை மறுக்கின்ற ஒரு சூழ்நிலைக்காக இடப்படுகின்ற ஒரு அஸ்திவாரம்.

பிற்பகல் 12–15

இதைத் தொடர்ந்து புதிய மசோதா வருகிறபோது, பல்வேறு திருத்தங்கள் வரும். நீங்கள் எண்ணுகின்றதுபோன்று இந்தப் பல்கலைக்கழகங்களினுடைய நடவடிக்கைகள் மிகச் சிறந்த முறையில் நடப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்பதைச் சொல்லி, மீண்டும் இது ஜனநாயக விரோதமல்ல, ஜனநாயக உரிமையை நிலைநாட்டுவதற்காக கொண்டுவரப்படுகிற சட்டத் திருத்தம் என்று சொல்லி, இதை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள், அவர்களுடைய தரப்பில் வேறு ஏதேனும் தெரிவிக்க விரும்புகிறார்களா ? பதில் உரையாக ஏதேனும் நீங்கள் சொல்வதாக இருந்தால் இப்பொழுதே சொல்லிவிடலாம்.



1992 பிப்ரவரி 10]

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள், நீண்ட விளக்கத்தை இதற்காகச் சொல்லியிருக்கிறார்கள். ஒன்றே ஒன்றை மட்டும் அதனோடு சேர்க்க விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. தம்புசாமி அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். இந்தக் குழு கலைக்கப்படுகிறது, அதற்காக இந்தத் திருத்தம் கொண்டு வரப்படுகிறது என்று சொன்னார்கள். அப்படி பொருள் அல்ல. அந்தக் குழு 3 பேர் கொண்ட ஒரு பட்டியலை வேந்தர்க்கு அனுப்பிய உடனேயே தானாகவே கலைந்து விடுகிறது. அதற்காக நாம் ஒரு நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியம் இல்லை. அதற்குப் பின்னாலே அந்தக் குழுவுக்கு அதிகாரம் இல்லை. வேந்தரிடத்திலே அந்தப் பட்டியல் போன பின்னாலே அந்தப் பட்டியலில், தகுதியானவர்கள் யாரும் இல்லையென்று வேந்தர் கருதினால் மீண்டும் புதிய ஒரு பட்டியலைப் பெறுவதற்காக ஒரு குழுவைப் புதிதாக அமைப்பதற்காக கொடுக்கின்ற அதிகாரம் இது. அந்தப் பட்டியலை வேண்டாமென்று நிறுத்துவதற்காகவும், புதிய ஒரு குழுவை அமைப்பதற்காகவும் எடுக்கப்படுகிற ஒரு அதிகாரத்தை நாம் கொடுத்திருக்கிறோம். இதிலே ஜனநாயகத்தைப் பற்றி அவர்களே தெளிவாக சொல்லியிருக்கிறார்கள். ஒன்று, 3 பேர் கொண்ட ஒரு கமிட்டி, 3 பேர் கொண்ட ஒரு பட்டியலை வேந்தருக்கு அனுப்பிவிட்டால், அதில் யாராவது ஒருவரைத்தான் கட்டாயம் எடுக்க வேண்டும். அதற்குப் பின்னால், வேறு வழியில்லை என்ற நிலை வரும்போதுதான் ஜனநாயகத்திற்கு ஆபத்து வருகிறது. எனவே, இந்த 3 பேர் தான் எல்லாவற்றையும் கையிலேயே வைத்துக்கொண்டிருக்கிறார்கள். இந்த 3 பேர் அனுப்புகிற அந்தப் பட்டியல் திருப்திகரமாக வேந்தருக்குப் படவில்லையென்று சொன்னால் அது திருப்பி அனுப்பப்படும். வேறு பட்டியல் கொடுப்பார்கள். ஆகவே, வேறு குழு நியமிக்கப்படும் என்ற நிலைமை வரும்போது ஜனநாயகத்தைக் காப்பாற்றதான் என்று, இந்தக் குழு கூட அதிக அக்கறையோடு இருக்கும் என்று நாங்கள் கருதுகிறோம். எனவே, அந்த வகையிலேதான் இது செய்யப்படுகிறது. இதிலே கொடுக்கிற அதிகாரம்கூட அரசாங்கத்திற்கு கொடுக்கப்படவில்லை. வேந்தருக்கு தான் கொடுக்கப்படுகிறது. எனவே, இதிலே அரசியல் நுழைந்துவிடும் என்று யாரும் கவலைப்பட வேண்டிய அவசியம் இல்லையென்று கருதுகிறேன். எனவே, ஜனநாயகம் முழுமையாக காப்பாற்றப்பட வேண்டும் என்று சொன்னால், நீங்கள் சொன்ன கருத்துக்களை எல்லாம் வாபஸ் பெற்று, இந்தத் திருத்தத்தை ஒப்புக்கொளவது நல்லது என்று கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வி. கே. லட்சுமணன்.

*திரு. வி. கே. லட்சுமணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துணை வேந்தருடைய பெயரைப் பரிந்துரை செய்கிறபோது, குழுவை வேந்தர் அவர்கள் எத்தனை முறை மாற்றலாம் என்பது பற்றிய விளக்கம் இந்தச் சட்ட முன்வடிவில் இல்லை. இதை கல்வி அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு திரு. இராம வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதல் முயற்சியிலே நீண்டக் காலத்திற்குப் பிறகு, இப்படி சட்டத்திலே ஒரு திருத்தம் கொண்டு வருகிறோம். 100, 150 ஆண்டுக் கால கட்டத்திலே, அதனால்தான் முன்னாலேயே சொல்லியிருக்கிறேன். இதற்கு எல்லாம் சேர்த்து ஒட்டுமொத்தமாக பல்கலைக் கழகங்களுக்காக ஒரே சட்டம் வர இருக்கிறது. அப்போது குறைபாடுகளை நிவர்த்தி செய்து, மிகத் தெளிவான சட்டம், அன்றைக்கு அறிமுகப்படுத்தப்படும். அதுவரை இந்தக் கால வரையறை, எத்தனை முறை என்பதைப் பற்றி இதிலே குறிப்பிட தேவையில்லை, அது அவசியமும் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்)

மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம்: தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 10 முடிய திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 10 முடிய, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்)

மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை)



ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்)

மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கல்வி அமைச்சர்.

மாண்புமிகு திரு. இராம வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு பல்கலைக் கழகங்கள் சார்ந்த சட்டங்களின் (திருத்த) சட்டமுன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 2/1992) நிறைவேற்றப் பெற வேண்டும்''.

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்)

மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

[1992 பிப்ரவரி 10

பிற்பகல் 12-20

## (ஈ) டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகம் சென்னை (திருத்த) சட்டமுன்வடிவு, 1992.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகம் சென்னை (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 3/1992) *ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டுமென்று மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கோருவார். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

" 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகம், சென்னை (திருத்த) சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்டமுன்வடிவு எண் 3/1992) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும் "

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் " ஆம் " என்க. (ஆம்)

மறுப்போர் " இல்லை " என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெறுகிறது.

பிரிவுகள் 2 முதல் 4 முடிய திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 4 முடிய சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் " ஆம் " என்க. (ஆம்.).

மறுப்போர் " இல்லை " என்க. (இல்லை.)

ஏற்போரே அதிகம் எனக் கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

---

*5—2—1992 ஆம் நாளிட்ட அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.



1992 பிப்ரவரி 10] [பேரவைத் தலைவர்]

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் " ஆம் " என்க. (ஆம்.).

மறுப்போர் " இல்லை " என்க. (இல்லை.)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

" 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகம், சென்னை (திருத்த) சட்டமுன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 3/1992) நிறைவேற்றப் பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ' ஆம் ' என்க. (ஆம்.)

மறுப்போர் ' இல்லை ' என்க. (இல்லை.)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## (உ) சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்றல் (திருத்த) சட்ட முன்வடிவு, 1992.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

" 1992 ஆம் ஆண்டு சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்றல் (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்டமுன்வடிவு எண் 5/1992) *ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும் " என்று மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கோருவார். மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

---

*7—2—1992 ஆம் நாளிட்ட அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1992 ஆம் ஆண்டு சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்றல் (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்டமுன்வடிவு எண் 5/1992) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்" எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ப. ரங்கநாதன்.

பிற்பகல் 12-25

திரு. ப. ரங்கநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1978 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சியில் இருந்து பிரிந்து, சென்னைப் பெருநகரக் குடிநீர் வடிகால் வாரியம் என்ற அமைப்பினை ஏற்படுத்தி அதற்கென்று நிர்வாக இயக்குநர்களையும், அதிலே தலைவர், நிர்வாக இயக்குநர், செயற் பொறியாளர், பொறியாளர், இயக்குநர், முதன்மைப் பொறியாளர், இவர்களின்கீழ் பல்வேறு தலைமை பொறியாளர்கள், செயற் பொறியாளர்கள், துணைப் பொறியாளர்கள் என்று இருந்தும், இப்போது திடீரென்று அந்த 28/1978 என்ற சட்டத்தினை மாற்றி இங்கே ஒரு புதிய சட்டத்தை நமது உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். ஏற்கனவே சென்னை நகரத்திலே வாழ்கின்ற மக்கள் சென்னைப் பெருநகரக் குடிநீர் வழங்கல் துறையினரால் தரப்படுகின்ற பல்வேறு சிரமங்களுக்கு இடையில், கொசுத் தொல்லைக்கு இடையில் வாழ்கின்ற இந்த நேரத்தில் ஒரு கோடி ரூபாய்க்கு மேற்படுகின்ற பணியினை வாரியம் மேற்கொள்வதற்கு அரசினுடைய ஒப்புதலைப் பெற வேண்டுமென்று திருத்தத்தினைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இந்தத் திருத்தத்தினை அரசு மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்வதோடு, இந்தத் திருத்தத்தினை இன்னொரு முறை மறுபரிசீலனை செய்கின்றபோது சில திருத்தங்களையும் சேர்த்தால் நன்றாக இருக்கும் என்று கருதுகிறேன். ஏனென்றால், வாரியத்திலே தலைமைப் பொறியாளர்கள், செயற் பொறியாளர்கள், இணைப் பொறியாளர்கள், துணைப் பொறியாளர்கள் என்று அதிகாரிகள் மட்டத்திலே எண்ணிக்கை அதிகமாக இருக்கிற நேரத்தில், சென்னை நகரைப் பொறுத்தவரையில், சென்னை மாநகராட்சி 150 கோட்டங்கள் என்று பிரிந்திருக்கின்ற சென்னைப் பெருநகர் குடிநீர் வடிகால் வாரியம் டெப்போக்களை வைத்துக் கொண்டு அந்த டெப்போக்களில் கீழ்நிலையில் பணியாற்றுவதற்கு, அதாவது பாதாள சாக்கடைகளில் ஏற்படும் அடைப்புகளை அகற்றுவதற்கு உள்ள பணியாளர்கள், டெப்போவிற்கு 3 பேர்கள் தான்



இருக்கிறார்கள். சென்னை நகரைச் சேர்ந்த 14 சட்டமன்ற உறுப்பினர்கள் இங்கே இருக்கிறோம். ஆனால் அந்த 3 பேர்களை வைத்துக் கொண்டு, நாள்தோறும் பணிகளைச் செய்ய முடியாமல் அங்கே அந்த டெப்போக்களில் அவதிப்படுகிறார். அவர்களை நாங்கள் அணுகிக் கேட்கிற பொழுது, போதுமான பணியாளர்களை எங்களுக்குக் கொடுக்கவில்லை என்று சொல்கிறார்கள். மேலும், அங்கே மேல் நிலையில் உள்ள தலைவர், நிர்வாக இயக்குநர் மற்றும் அவர்களின் கீழே பணியாற்றுகிற நிர்வாகப் பொறியாளர் போன்றவர்களை அணுகிக் கேட்கிறபோது, எங்களுக்கு போதுமான அதிகாரம் இல்லை என்று சொல்கிறார்கள். ஆகவே மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் மீண்டும் சட்டத் திருத்தத்தை கொண்டு வருகிறபோது, இதற்கான திருத்தத்தையும் கொண்டு வர வேண்டும். கீழ் நிலையில், அதாவது டெப்போக்களில் பணி செய்கிறவர்களைக் கூடுதலாக நியமிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதோடு அனைத்து மாநிலங்களுக்கும் அதிகமான அதிகாரங்கள் வேண்டுமென்று, சர்க்காரியா கமிஷன் அமைந்து, மாநில வாரியாக அவர்கள் ஒவ்வொரு மாநிலத்திலும் சுற்றுப்பயணம் செய்து பல்வேறு கட்சித் தலைவர்களையும், அறிஞர்களையும் சந்தித்து விளக்கம் பெறுகின்ற இந்த நேரத்தில், இந்த மாநிலத்தின் அரசின்கீழ் செயலாற்றும் ஒரு வாரியத்தில், அதிகாரிகள் மற்றும் இயக்குநர்கள் எல்லாம் இருந்த போதிலும் அந்த வாரியம் தன்னிச்சையாக செயல்படும் அளவில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன். நீங்கள் கொண்டு வந்திருக்கிற இந்தச் சட்டத்திருத்தம் ஒரு கோடி ரூபாய்க்கு மேல் செய்கின்ற எந்தப் பணியானாலும், அல்லது வாங்குகின்ற பண்டங்கள், பொருட்கள் ஆனாலும் அத்தனை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்து, அரசின் ஒப்புதல் பெற்றுத்தான் வாங்க வேண்டுமென்ற திருத்தம் கொண்டு வந்திருக்கிறார்கள். அதனால் வீண் காலதாமதம்தான் ஏற்படும். பணிகள் சீக்கிரமாக, விரைவாக நடைபெற வழியில்லை என்பதைக் கூறிக்கொண்டு, எனக்குப் பேச வாய்ப்பளித்த பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், இந்த திருத்தச் சட்டத்தினை திரும்பப் பெற வேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொண்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1992 ஆம் ஆண்டு சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்றல் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 5/1992) இன்றைக்கு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்

பட்டது. இந்தச் சட்டத் திருத்த முன்வடிவின்மீது மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்துக்களுக்காக என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தத் திருத்த சட்ட முன்வடிவு மீதான என்னுடைய விளக்கங்களை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள், அரசு பொது நிறுவனங்கள் மற்றும் சென்னைப் பெருநகர் குடி நீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் போன்ற அனைத்து வாரியங்களும் பணிகளைச் செய்வது, மற்றும் பொருட்களை வாங்குவது தொடர்பான ஒப்பந்தப் புள்ளிகளின் மதிப்பு ஒரு கோடி ரூபாய்க்கு மேல் வருகிறபோது, அதற்கு அரசின் ஒப்புதலைப் பெற வேண்டுமென்று உத்தரவிட்டு இருக்கிறார்கள். 1978 ஆம் ஆண்டு சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்றல் வாரிய சட்டத்தின்படி, பணிகளைச் செய்வது மற்றும் பொருட்களை வாங்குவது, அவற்றுக்குப் பணம் பட்டுவாடா செய்வது போன்றவற்றுக்கு, வாரியத்திற்கு அதிகாரம் உள்ளது. அதற்கு எந்தவித உச்சவரம்பும் கிடையாது. இந்தச் சட்டத்தில் இது சம்பந்தமான பணிப்புரை எதையும் வழங்குவதற்கு அரசாங்கத்திற்கு அதிகாரம் வழங்கும் வழிவகை ஏதுமில்லை.

மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்களின் உத்தரவின்படி, பணிகளைச் செய்வது, பொருட்களை வாங்குவது தொடர்பான ஒப்பந்தப் புள்ளிகளின் மதிப்பு ஒரு கோடி ரூபாய்க்கு மேற்படுகின்றபோது, அரசின் ஒப்புதலைப் பெற வேண்டுமென்ற அரசாணை எண் 310-ன்படி, 7-11-1991-ல் வெளியிடப்பட்டது. அந்த அரசாணையின் அடிப்படையில், சட்டத்தைத் திருத்துவது என்று முடிவு செய்யப்பட்டது. சட்ட மன்றப் பேரவைக் கூட்டம் அப்போது நடைபெறாத காரணத்தால், அவசரச் சட்டம் பிறப்பிக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. எனவே ஆளுநரால் 1991 ஆம் ஆண்டு சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்றல் (திருத்த) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் 6/1991) ஒன்று 20-11-1991 அன்று பிறப்பிக்கப்பட்டு, அன்றைக்கே தமிழ்நாடு அரசிதழிலும் வெளியிடப்பட்டது.

பிற்பகல் 12-30

எனவே, செயல் திட்டம், திட்டம் அல்லது பிற பணி எதையும் நிறைவேற்றுவதற்கு அல்லது பொருட்கள் வழங்குவதற்கான ஒப்பந்தத்தின் மதிப்பு, ஒரு கோடி ரூபாய்க்கு மேற்படுமானால், அவைமீது, அரசு மட்டுமே முடிவு எடுத்தல் வேண்டும் என்ற அளவிற்கு, சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும்





கழிவு நீர் அகற்றல் வாரியத்தின் அதிகாரங்கள் வரம்பிடப்படுதல் வேண்டுமென்பதற்காகவும், இச்சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு, அவ்வாரியத்திற்குப் பணிப்புரை வழங்கிட, அரசுக்கு அதிகாரம் அளிப்பதற்காகவும் இச்சட்டத் திருத்தம் கொண்டு வரப்பட்டுள்ளது.

மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் பேசுகிறபோது இங்கே பல்வேறு குறைகளைப் பற்றிச் சொன்னார்கள். அந்தக் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீர் அகற்றல் வாரியத்தின் செயல்பாடுகள் குறித்து மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் தகுந்த ஆதாரங்களோடு குறைகளைச் சொல்வார்களேயானால் நிச்சயமாக அவைகளைப் போக்க இந்த அரசு தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்து இந்தச் சட்ட முன்வடிவை நிறைவேற்றித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ப. ரங்கநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதாரத்தை நான் நிச்சயமாக தரத் தயாராக இருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கொடுப்பதாக இருந்தால் கொடுத்து விடுங்கள். பேச வேண்டாம்.

திரு. ப. ரங்கநாதன் : ஒரே நிமிடம். அதாவது சர்க்
காரியா கமிஷன் அமைத்து, மத்தியிலே அதிகாரங்கள் குவிந்
திருக்கின்றன. மாநிலத்திற்கும் அதிகாரப் பகிர்வு தந்தால்
தான் வேகமாகப் பணிகள் முடுக்கிவிடப்படும் என்று கூறுகிற
இந்தக் கால கட்டத்தில் சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல்
மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தில் பல்வேறு இயக்குநர்கள்
இயங்கி வருகின்ற சூழ்நிலையில் பணிகளை வெகுவாக முடுக்கி
தன்னிச்சையாகச் செயல்பட அவர்களுக்கு அதிகாரம் வழங்காமல்
இந்த அவசரச் சட்டத்தின் மூலமாக பணிகளை வெகுவாக
தடுப்பதாக இருக்கிறது என்பதை மீண்டும் நான் தெரிவித்துக்
கொள்கிறேன். அமைச்சர் அவர்கள் வாரியத்தினுடைய பணி
களைப் பற்றி குறிப்பிட்டதை எனக்கு மனுவாகக் கொடுத்தால்
அல்லது எழுதிக் கொடுத்தால் கவனிக்கிறேன் என்று சொன்னார்
கள். நான் மற்றொன்றைக் கூறிக்கொள்கிறேன். சட்ட
மன்ற உறுப்பினர்களை மாதம் ஒரு முறை சென்னைப் பெருநகர்
குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரிய அதிகாரிகள்,
அழைத்து கூட்டம் நடத்தினால் எங்களுடைய குறைகளை அங்கே
எடுத்துச் சொல்லி அந்தக் குறைகளை நிவர்த்திசெய்ய நல்லவை
யாக இருக்கும் என்று கூறிக் கொண்டு அமர்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்).

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம்.

தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்விற்கு எடுத்து கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 5 முடிய திருத்தங்கள் இல்லை. பிரிவுகள் 2 முதல் 5 முடிய சட்ட முன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்ற தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்).

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம்.

தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன் வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்ற தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்).

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1992 ஆம் ஆண்டு சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்றல் (திருத்த) சட்டமுன்வடிவு (சட்ட



மன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 5/1992) நிறைவேற்றப் பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை.)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி.)

## 6. அறிவிப்புகள்.

### (அ) டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகத்திற்கு உறுப்பினர்கள் தேர்வு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு டாக்டர் எம். ஜி. ஆர். மருத்துவப் பல்கலைக் கழக ஆட்சிமன்றக் குழுவிற்கு கீழ்க்கண்ட இரு உறுப்பினர்களிடமிருந்து முறையாக நியமனத்தாள்கள் வரப்பெற்றன:—

1. டாக்டர் எஸ். சுந்தரராஜ்.
2. திரு. டி. சுதர்சனம்.

### (ஆ) நில மேம்பாட்டுக் கழகத்திற்கு உறுப்பினர்கள் தேர்வு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு நில மேம்பாட்டு வாரியத்திற்கு கீழ்க்கண்ட மூன்று உறுப்பினர்களிடமிருந்து முறையாக நியமனத்தாள்கள் வரப்பெற்றன:—

1. திரு. செ. கு. தமிழரசன்.
2. திரு. ஆர். பி. பரமசிவம்.
3. திரு. கே. எம். கலைச்செல்வி.

**தேர்ந்தெடுக்கப் பெறவேண்டிய எண்ணிக்கையும், முறையாக வரப்பெற்ற நியமனத்தாள்களின் எண்ணிக்கையும் சமமாக இருப்பதால் மேற்கண்ட உறுப்பினர்கள் அந்தந்தப் பதவிகளுக்கு முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி.)**

[1992 பிப்ரவரி 10

பிற்பகல் 12-35

**(ஊ) வேளாண் விளைபொருள் வாணிப (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 1992.**

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் வாணிப (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண் 6/1992). மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

"1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் வாணிப (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 6/1992) *ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்."
எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஆர். சிங்காரம்.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவை ஆய்வு செய்கின்ற அதே நேரத்தில் விவசாயிகள் குறித்து ஒருசில கருத்துக்களைக் கூற ஆசைப்படுகிறேன். தமிழக அரசைப் பொறுத்தவரையில், அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசைப் பொறுத்தவரையில், அது விவசாயிகளுக்கு திருப்திகரமான பல காரியங்களைச் செய்து கொண்டிருக்கிறது. அதிலே எனக்கு மட்டற்ற மகிழ்ச்சி ; மாறுபட்ட வேறுபட்ட கருத்து கிடையாது. ஆனால், அதே நேரத்தில் விவசாயிகளினுடைய ஒரே ஒரு குறையை மட்டும் உங்கள் மத்தியிலே சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

கடந்த தேர்தலின்போது நாமெல்லாம் கூட்டணி அமைத்து போட்டியிட்டபோது அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக தேர்தல் அறிக்கையில் விவசாயிகளின் கடன்களைத் தள்ளுபடி செய்வோம் என்று குறிப்பிட்டு இருந்தார்கள். நான் கடந்த முறை சட்டமன்றத்திலே பேசுகின்றபோது கூட, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், 'பரிசீலனை செய்துகொண்டு இருக்கிறோம்' என்று சொன்னார்கள். ஆனால் இந்த கவர்னர் உரையிலே அதுகுறித்து எதுவும் இல்லை. ஒரு வேளை வருகின்ற பட்ஜெட்டிலேயாவது இருக்கும் என்று நான் எதிர்பார்க்கின்றேன். நான் நீண்ட விளக்கங்களைப் பல்வேறு நேரங்களில், பல்வேறு மானியக் கோரிக்கைகளின்

* 7—2—1992 ஆம் நாளிட்ட அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.



போதும், கவர்னர் உரையின்போதும் அளித்துப் பேசி இருக்கிறேன். நான் அதையே திரும்பத் திரும்பப் பேசிக்கொண்டு இருக்க வேண்டிய அவசியம் இல்லை. இருந்தாலும் விவசாயிகளினுடைய மோசமான அவலமான ஒரு நிலையையும், அவர்களுடைய குறைகளையும் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

1980-லிருந்து பல்வேறு கால கட்டங்களில் மிகப் பெரிய கொடுமையான புயல் அடித்த நேரங்களில் விவசாயிகள் நஷ்டம் அடைந்தார்கள். அதன்பிறகு அவர்கள் அறுவடை செய்ய முடியவில்லை. கடுமையான வெள்ளத்தின் காரணமாக விவசாயிகள் பாதிக்கப்பட்டார்கள். அவர்கள் கடன்களை கட்ட முடியவில்லை கொடுமையான வறட்சியின் காரணமாக விவசாயிகள் பாதிக்கப்பட்டார்கள். அதனாலும் அவர்கள் கடன்களைக் கட்டமுடியவில்லை. இந்தக் கடன் சுமைகள் அதிகரித்து அதிகரித்து அதற்கு வட்டி ஏறி ஏறி, வட்டி மேல் வட்டி ஏறி, மிக அதிக அளவில் 5 ஆயிரம் அசல் அன்று சொன்னால் இன்று மேற்கொண்டு 5 ஆயிரம், 10 ஆயிரம் என்று வட்டி ஏறிக் கொண்டிருக்கிறது. அந்த வட்டியும் அசலும் சேர்த்து மிக அதிகமான தொகையாகப் போய்விட்டதனால் அவர்கள் திரும்ப அதைக் கட்ட முடியவில்லை. அவர்கள் கூட்டுறவுச் சங்கத் தேர்தலில் போட்டியிட முடியவில்லை. கடந்த தி. மு. க. ஆட்சியின்போது கூட நான் சட்டமன்றத்தில் பேசும்போது, அவர்கள் ஓட்டுப் போடலாம் என்று ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். ஆனால் ஓட்டுப் போடுகின்றவர்கள் அந்தக் கூட்டுறவு சங்கத் தேர்தலிலே வேட்பாளராகப் போட்டியிட முடியாது. இந்த விவசாயிகளுக்கு எல்லாம் அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை இருக்கின்ற காரணத்தினால் அவர்களுடைய கடன் சுமையைக் குறைக்க வேண்டும். கடந்த ஆட்சியில் கூட 10 ஆயிரம் ரூபாய்க்குக் கீழே உள்ள கடன்களை எல்லாம் தள்ளுபடி செய்வதாக மத்திய அரசும், மாநில அரசும் அறிவித்து, அதில் கூட அவர்கள் முழுமையாகச் செய்ய முடியாமல், ஏதோ வந்தது, போனது என்று செய்துவிட்டு, கடைசியில் இந்த அரசுதான் அந்த 70 கோடி ரூபாயை வாங்கி கடன் தள்ளுபடி செய்ததாக நம்முடைய தமிழகத்தின் முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இந்தப் பேரவையிலே கவர்னர் உரைக்கு நன்றி தெரிவித்து பதிலுரை அளித்தபோது தெரிவித்தார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலையில் இந்த விவசாயிகளின் மீது அக்கறையும் ஆர்வமும் கொண்டிருக்கிற இந்த அரசு, இதை உடனடியாக செய்து ஆக வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

அதே நேரத்தில் இந்த விவசாயிகள் சம்பந்தப்பட்ட உறுப்பினர்களை மட்டும்தான் கூட்டுறவு சங்கங்களில் சேர்க்கவேண்டும். யார் யாரையோ அங்கு சேர்த்து இருக்கிறார்கள். எங்கிருந்தோ கொண்டுவந்து இறக்குமதியெல்லாம் செய்து அங்கே சேர்த்து

இருக்கிறார்கள். அங்கு விவசாயிகளைச் சேர்க்கவில்லை. விவசாயிகளைச் சேர்க்காமல் கட்சிக்காரர்களையெல்லாம் சேர்த்து இருக்கிறார்கள். ஒரு நல்ல முறையை முதல்வர் அவர்கள் அறிவித்தார்கள். அந்த முறையை நீங்கள் ஒழுங்கான முறையில் நன்றாகப் பயன்படுத்திக்கொண்டு அவர்களை எல்லாம்—விவசாயிகள் இல்லாதவர்களை எல்லாம் நீக்கிவிட்டு, விவசாயிகளை மட்டும் உறுப்பினர்களாகச் சேர்த்து கூட்டுறவு சங்கத் தேர்தலை நடத்த வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை.)

எங்கள் பகுதி கடைமடைப் பகுதி. எங்கள் மாவட்டத்துக்கே அது கடைசி 'பார்டர்'. அன்று கூட நான், கடைமடைப் பகுதிக்கு தண்ணீர் வேண்டும்; விவசாயிகளின் துயர் துடைக்க வேண்டும் என்று இந்த அவையிலே தெரிவித்தபோது மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் மின்சாரத்தைப் போல பாய்ந்து நடவடிக்கையை எடுத்து அந்தப் பகுதியிலே தி. மு. க. வினர் கூட புரட்சித் தலைவி வாழ்க என்று சொல்கின்ற அளவுக்கு தண்ணீர் அங்கே போய்க்கொண்டு இருக்கிறது. அப்படி பல நல்ல காரியங்களைச் செய்து கொண்டிருக்கின்ற இந்த அரசு—ஏனைய விவசாயிகளினுடைய பிரச்சினைகளையெல்லாம் அடிக்கடி நாங்கள் சொல்லிக்கொண்டு இருக்கின்றோம்; தவறுகளை உடனடியாகச் சுட்டிக்காட்டிக்கொண்டு இருக்கின்றோம்; அமைச்சர் அவர்களும் அங்கே வேகமாகப் பாய்ந்து நடவடிக்கை எடுத்து விவசாயிகளுக்குப்பல காரியங்களைச் செய்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் இந்த விவசாயிகளினுடைய கடன் சுமை மட்டும் அதிகமான அளவில் போய்க்கொண்டிருக்கிறது. அதை தயவு செய்து பரிசீலிக்க வேண்டும் அல்லது வட்டி அபராத வட்டியையாவது தள்ளுபடி செய்துவிட்டு அசலை ஒரிரு ஆண்டுகளுக்காவது "கன்வெர்ஷன்" கொடுத்தாலாவது பரவாயில்லை; அந்த அளவிற்காவது செய்வதற்கு நீங்கள் பரிசீலிக்க வேண்டும் என்று பணிவன்போடு கேட்டுக் கொள்கின்றேன்.

பிற்பகல் 12–40

எங்களுடைய பகுதி கடைமடைப் பகுதி என்று சொன்னேன். அந்த கடைமடைப் பகுதி விவசாயிகளுக்கு மின்சார மோட்டார் பம்புகளுக்கு கனெக்ஷன் கொடுப்பதற்கு நீங்கள் பிரையாரிட்டி கொடுக்க வேண்டும்....

மாண்புமிகு பேரவைத் மாற்றுத் தலைவர் (திரு. வ. சத்திய மூர்த்தி) : மார்க்கெட்டிங் கமிட்டி சம்பந்தமான பில். அதிலே பேச வேண்டும்.

திரு. ஆர். சிங்காரம் : அதற்கான விளக்கம் இதில் இல்லை. விவசாயம் பற்றிய பில் என்பதால் விவசாயத்தைப் பற்றி பேசுகிறேன்....



மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் (திரு. வ. சத்திய மூர்த்தி) : வேளாண் விளைபொருள் பற்றிய சட்டமுன்வடிவு அதில் பேச வேண்டும்.

திரு. ஆர். சிங்காரம் : இது வேளாண் விளைபொருள் சம்பந்தப்பட்ட பில்தான். ஆனால் அதற்கான விளக்கங்கள் இல்லையென்பதால்தான் விவசாயம் என்பதால் விவசாயிகள் பற்றி பேசினேன். என்னுடைய கருத்துக்களைச் சொல்ல ஒரு சான்ஸ் கிடைத்தது, அவ்வளவுதான். கடைமடைப் பகுதி மக்களுக்கு சீனியாரிட்டியை ஓவர்லுக் செய்து, பிரையாரிட்டி கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். விவசாயிகளுடைய பிரச்சினைகளைப் பொறுத்தவரையில், விவசாயிகள் கடன்களை குறைப்பதற்கு நீங்கள் முயற்சியெடுக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் வேண்டி விரும்பி கேட்டுக் கொண்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன். ஜெய்ஹிந்த்.

மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் (திரு. வ. சத்திய மூர்த்தி) : திரு. வே. தம்புசாமி

திரு. வே. தம்புசாமி : மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த வேளாண் விளைபொருள் திருத்தச் சட்டமுன்வடிவுகள் இதுவரையில் ஓராண்டு காலம் தனி அதிகாரிகள் இருப்பது என்பதை மாற்றி, அவர்களுடைய பதவி காலத்தை இரண்டாண்டு காலமாக நீடிப்பதற்கு கொண்டு வரப்படுகிறது. எந்தவொரு நிர்வாகமும் தனி அதிகாரிகளால் நடத்தப்படுவதில் எவ்வளவு பெரிய சிரமங்கள், சிக்கல்கள், அதனால் ஏற்படக்கூடிய பல்வேறு விதமான விளைவுகளை எல்லாம் கடந்த காலங்களில் நாம் அனுபவித்து இருக்கிறோம். எனவே, இந்த ஓராண்டு காலம் என்பது ஒரு ஜனநாயக முறைப்படி நடைபெறுகிற தேர்தலை ஒத்திவைப்பதற்குப் பயன்படுகிறதே தவிர, நிர்வாகச் சீரமைப்புக்கு அது பயன்படவில்லை என்பது கடந்த கால அனுபவம். எனவே, ஓராண்டு காலமே ஒரு நிர்வாகச் சீரழிவை ஏற்படுத்துகிறபோது அதனுடைய அதிகாரத்தை இரண்டாண்டு காலம் நீடிப்பது என்பது பொருத்தமாக இருக்காது. ஆகவே, விரைவாக அந்த விற்பனை நிலையத்திற்கு தேர்தலை நடத்தி, தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் மூலம் அந்த நிர்வாகத்தை சீரமைப்பதற்கு முயற்சிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே நேரத்தில் அந்த விற்பனை நிலையங்களுக்கு இன்றைய தினம் போதுமான அளவுக்கு கட்டடங்கள் கிடையாது. விவசாயிகள் உற்பத்தி செய்யக்கூடிய பஞ்சு இதர பொருள்கள் ஆகியவற்றையெல்லாம் நீண்டதூரம் எடுத்துச் செல்லவேண்டிய சூழ்நிலை இருக்கிற காரணத்தால், அவர்கள் ஒருபுறத்தில் வாகனங்களுக்கு வாடகை கொடுக்க வேண்டிய நிர்பந்தம் இருக்கிறது. அங்கே கொண்டு சென்றால் காலத்தில் [illegible]

[திரு. வே. தம்புசாமி] [1992 பிப்ரவரி 10

சூழ்நிலை இருக்கிறது. இதையெல்லாம் கருத்திற்கொண்டு விவசாயப் பகுதிகளில் எங்கெங்கே இந்த விற்பனை நிலையங்களுக்குச் சொந்தமான கட்டிடங்கள் இல்லையோ அங்கெல்லாம் கட்டுவதற்கான ஒரு முயற்சியை அரசு மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் அந்த விற்பனை நிலையத்திற்குக் கொண்டு வரக்கூடிய, மார்க்கெட்டிங் சொசைட்டிக்குக் கொண்டு வரக்கூடிய பொருள்கள் ஏலம் விடப்படுகின்றன. அப்படி ஏலம் விடுகிறபோது வசதி படைத்தவர்கள், தொடர்ந்து அதிலே ஏலம் எடுத்துக் கொண்டிருப்பவர்கள், அவர்களாகவே பேசிக்கொண்டு, அதிலே வரக்கூடிய பொருள்களை ஒரு சமமாக செய்து கொண்டு, எந்த அளவுக்குக் குறைத்து ஏலம் எடுக்க முடியுமோ அந்த அளவுக்குக் குறைந்து ஏலம் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே, அப்படி ஏலம் எடுப்பதைத் தடுப்பதற்கு முழுமையாக அரசு அவற்றை கொள்முதல் செய்ய வேண்டும். அது பஞ்சாக இருந்தாலும், கடலையாக இருந்தாலும் மிளகாயாக இருந்தாலும் அல்லது இதர புஞ்சை தானியங்களாக இருந்தாலும், அவை முழுவதையும் அரசு நேரடி கொள்முதல் செய்யவேண்டும். அப்படி அரசு நேரடி கொள்முதல் செய்கிறபோது அதை விற்பதற்கோ அல்லது பயன் படுத்துவதற்கோ எவ்வளவோ வழிமுறைகள் இருக்கின்றன. உதாரணமாக பஞ்சை அரசு நேரடியாகக் கொள்முதல் செய்தால் — இன்றைக்கு அரசுக்குச் சொந்தமான கூட்டுறவு ஆலைகள் இருக்கின்றன. அந்த ஆலைகளில் பஞ்சு பெறுவதற்கு அவர்கள் வெளியேயிருந்து வாங்கவேண்டிய நிர்பந்தம் இருக்கிறது. எனவே அப்படிப்பட்ட அரசு கூட்டுறவு ஆலைகளுக்கு இந்தப் பஞ்சை விநியோகிக்க முடியும். அதன் மூலம் ஒருபுறத்தில் விவசாயிகளுக்கு இலாபம் கிட்டலாம் இன்னொருபுறத்தில் அந்த ஆலைகளுக்கும் இலாபம் கிட்டலாம். எனவேதான் அந்த மார்க்கெட்டிங் சொசைட்டிகளில் விவசாயிகளிடமிருந்து வாங்கக்கூடிய விளைபொருள்கள் முழுவதையும் நேரடியாக கொள்முதல் செய்வதற்கு முயற்சிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படி விவசாயிகள் பாதுகாக்கப்பட வேண்டும்.

பிற்பகல் 12–45

அதே நேரத்தில், நான் முன்பு சொன்னதுபோல, அதிகயான அளவில், அந்த விற்பனைக் கூடங்களுக்கு கட்டிடங்களைக் கட்டுவதற்கு முயற்சிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொண்டு, ஓராண்டுக் காலம் என்பதே அதிகமானது. எனவே, இரண்டு ஆண்டுக்காலம் தனி அதிகாரிகள் நீட்டிக்கப்பட வந்துள்ள இந்த அவசரச் சட்டம் தேவையற்றது என்று தெரிவித்து, விரைவாக தேர்தல் நடத்தி, அந்த உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகத்தைக் கொண்டு, அந்த மார்க்கெட்டிங், சொசைட்டி எதிர்காலத்திலே சிறப்பான முறையிலே செயல்படுவதற்குத் தமிழக அரசு விரைவாகத் தேர்தல் நடத்த வேண்டுமென்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றிகூறி முடிக்கிறேன், வணக்கம்.



1992 பிப்ரவரி 10]

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வ. சத்தியமூர்த்தி):
திரு. நா. சா. பழனிசாமி :

திரு. நா. சா. பழனிசாமி : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த வேளாண்மைத் திருத்தச் சட்டத்தின் மீது உழவர் உழைப்பாளர் கட்சியின் சார்பிலே ஒரு சில கருத்துக்களை முன் வைப்பதற்கு சந்தர்ப்பம் அளித்தமைக்காக முதற்கண் எனது நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, ஒழுங்குமுறை விற் பனைக் கூடங்கள் உருவாக்கப்பட்டதினுடைய நோக்கமே, விவசாயிகள் தாங்கள் விளைவிக்கின்ற பொருட்களை இடைத் தரகர்கள் இல்லாமல், மோசடி செய்யப்படாமல், எடையிலே குறைவு இல்லாமல். கமிஷன் தரகு என்று பெறப்படாமல், அவர்களுடைய பொருட்களை நியாயமான விலைக்கு, நல்ல விலைக்கு விற்றுத் தரவேண்டுமென்பதுதான் அந்த ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்கள் தோற்றுவிக்கப்பட்ட காலத்திலே அதிலே விவசாய உறுப்பினர்கள்தான் பெரும் பான்மையினராகத் தேர்ந்தெடுக்கப்படுபவர்களாக இருக்க வேண்டுமென்று அதில் விதி வகுக்கப்பட்டு, அப்படி விவசாய பிரதிநிதித்துவம் அதிகமாக இருந்து, அந்த ஒழுங்குமுறை விற் பனைக்கூடங்கள் செயல்படுத்தப்பட்டு வந்தன. ஆனால் அதற்குப் பிறகு தனி அதிகாரிகள் என்று நியமிக்கப்பட்டு தேர்ந் தெடுக்கப்படுகின்ற முறை நீண்டகாலமாக இல்லாத சூழ்நிலையிலே அந்த ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள், இன்று விவசாயிகளுக்கு தங்களது பொருட்களை லாபகரமாக, இடைத்தரகு இன்றி விற்பனைச் செய்யக்கூடிய கூடங்களாக அல்லாமல் அந்த விற்பனைக் கூடங்களிலே இருக்கின்ற அதிகாரிகளுக்கு எப்படியும் சம்பளம் கிடைக்கவேண்டும் என்பதற்காக, செஸ் வசூலிக்கின்ற வேளாண் பொருட்கள்மீது வரி வசூலிக்கின்ற ஒரு காரியத்தை மட்டுமே செய்து வருகின்ற ஸ்தாபனங்களாக அவை மாறி இருக்கின்றன. விவசாயிகள், தாங்கள் விளைவிக்கின்ற பொருட்களை அந்த ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களின் மூலமாக நல்ல விலையில் விற்பனை செய்யக்கூடிய வாய்ப்புகள் இருந் திருக்குமேயானால் அந்த விற்பனைக் கூடங்கள் தோற்றுவிக்கப் பட்ட தன்நோக்கம் நிறைவேறுவதோடு விவசாய விளை பொருட் களுக்கு நல்ல லாபம் கிடைக்கப்பெற்று, அவர்கள் இன்று கடனிலே, வறுமையிலே இருக்கக்கூடிய நிலை ஏற்பட்டிருக்காது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

ஆனால் இன்று விவசாயிகள் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங் களில், ஒரு [illegible] விற்பனைக் கூடங்களில் இன்றும் விற்பனை [illegible] இருக்கிறது. இல்லை என்று [illegible] [illegible] விற்றுக் கொடுத்துக் [illegible] [illegible] இருக்கிறார்கள். ஆனால் பெரும்பான்மையான [illegible]

[திரு. நா.சா. பழனிசாமி] [1992 பிப்ரவரி 10

கூட்டங்கள் அவ்வாறு இல்லாமல் இருக்கின்றன. அதோடு மட்டுமல்லாமல் விவசாயிகள் விரோத சக்திகள் இடைத்தரகு சக்திகள் அந்த ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கு உள்ளேயே நுழைந்து அவர்களை ஆக்கிரமித்து இருக்கக்கூடிய நிகழ்ச்சிகளும் இருக்கின்றன. உதாரணமாக சொல்ல வேண்டுமானால் கோவை மாவட்டத்திலே நீண்டகாலமாக திருப்பூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் என்று சொல்லப்படுகின்ற காட்டன் மார்க்கெட் என்று சொல்லப்படுகின்ற அந்த இடத்திலே இன்றைய ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தின் மூலமாக மிகச் சிறிய அளவிலேதான் பருத்தி விற்பனை நடந்து கொண்டிருக்கிறது. மற்ற விற்பனையெல்லாம் அங்கே பெரும்பாலும் நடைபெறுவதில்லை. அந்த ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தின் இடத்தின் உள்ளேயே இடைத்தரகர்கள் கொண்டு வரப்பட்டு அந்த இடைத்தரகர்கள் தான் அங்கே கமிஷன் கடை வைத்துக் கொண்டு, அவர்கள் ஆண்டுக்காண்டு பருத்தி விற்பனையிலே கமிஷனை உயர்த்தி எடுத்துக் கொண்டு அவர்கள விருப்பத்திற்கு கமிஷன் என்றும் கமிஷன் என்று எடுப்பதோடு மட்டுமல்லாமல் பருத்தியிலேகூட ஒரு பகுதியை சாவிப் பருத்தி என்று எடுத்துக் கொண்டு விவசாயிகள் அங்கே தங்களுடைய விளைபொருட்களுக்கு நல்ல விலையைப் பெற முடியாத ஒரு நிலை இருந்துகொண்டிருக்கிறது. அவர்கள் அங்கே என்ன செய்கிறார்கள் என்றால் ஒழுங்கு முறை விற்பனைக்கூடத்தின் மூலமாக நடத்தப்படுகின்ற விற்பனை அவர்கள் கடையிலேயிருந்து விற்பதைவிட லாபம் குறைவாக இருக்குமாறு அந்த அதிகாரிகளைச் சரி செய்து பார்த்துக் கொள்கிறார்கள். அதன் மூலமாக விவசாயப் பெருமக்கள் அந்த ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கு நேரடியாகச் சென்று விற்பதிலே லாபமில்லை என்று நினைத்துக் கொண்டு மீண்டும் அந்த இடைத் தரகரிடத்திலே விற்பனை செய்யச் செல்ல வேண்டியிருக்கிறது. அந்த இடைத் தரகர்கள் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்குள்ளேயே இருக்கக் கூடாது. அந்த ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்திலே விவசாயிகள் நேரடியாக தரகின்றி விற்கக் கூடிய அந்த ஒழுங்கு முறை விற்பனைக் கூடம் தான் செயல்படுத்தப்படவேண்டுமென்று நாங்கள் எல்லாம் விவசாய சங்கத்தின் மூலமாக பல்வேறு கட்டங்களிலே மிகப் பெரிய போராட்டங்களை எல்லாம் நடத்தியிருக்கின்றோம். அப்போது தனி அதிகாரியாக இருந்தவர் மணி மந்திரி என்பவர். அவருடைய காலத்திலே அந்தப் போராட்டத்தை நடத்தி அந்த ஒழுங்குமுறை விற்பனைச் கூடத்திலே இருக்கின்ற அந்த இடைத் தரகர்கள் வெளியேற்றப்பட வேண்டுமென்றுகூட அவர்கள் உத்தரவு பிறப்பித்தார்கள். அங்கே இருக்கின்ற அந்த இடைத்தரகர்கள் வியாபாரம் செய்கின்ற லைசன்சை மட்டும் பெற்றுக்கொண்டு அங்கே இருந்து கொண்டிருக்கிறார்கள் அவர்கள் அந்த லைசன்சை புதுப்பிக்காவிட்டால் அவர்கள் இடத்திலேயிருந்து வெளியேற்றப்படவேண்டும். ஆனால் அந்த லைசன்சை பெற்றுக் கொண்டிருப்பவர்கள் தங்களை லைசென்ஸ்தாரர்கள் என்று இல்லாமல் தங்களை 'லெஸ்ஸி',



1992 பிப்ரவரி 10] [திரு. நா. சா. பழனிசாமி]

குத்தகைதாரர்கள் வாடகைதாரர்கள்—என்று சொல்லி நீதிமன்றத்திலே வழக்கு தொடர்ந்து அந்த நீதிமன்றத்திலே ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தின் சார்பில் சரியான வழக்கறிஞர்களை வைத்து வாதாடாத காரணத்தினால் அவர்கள் லைசன்சியாக இருந்தவர்கள் இன்று 'லெஸ்ஸி' என்று தங்களை மாற்றிக்கொண்டு அந்த ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் இருந்து கொண்டிருக்கிறார்கள்.

பிற்பகல் 12–50

சாதாரணமாக ஒரு கூடத்திற்கு ரூ. 5000 வாடகை வரக் கூடிய இடத்தில், அதற்கு வெறும் ரூ. 50, ரூ. 100 என்று கொடுத்துக்கொண்டு, இருக்கிறார்கள். திருப்பூர்— மிக அதிகமான வாடகை பெறக்கூடியதாக இருக்கின்ற அந்த நகரத்திலே, மிகக் குறைந்த வாடகைக்கு அந்த இடத்தை ஆக்கிரமித்துக் கொண்டு, அவர்கள் அங்கே கொள்ளை லாபம் அடித்துக்கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட அந்த ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்குள்ளே இருக்கின்ற அந்த இடைத் தரகர்களை இந்த வேளாண் விளைபொருள் சட்டத்தின் மூலமாக வெளியேற்றி, விவசாயிகள் தங்களது விளைபொருட்களை லாபத்தோடு இடைத் தரகர்களின்றி; எடை மோசடியின்றி, விற்பனை செய்யக் கூடிய வாய்ப்புகளை ஏற்படுத்தித் தரவேண்டும். அப்படிப்பட்ட வாய்ப்புகள் இந்தத் தனி அதிகாரிகள் இருக்கின்ற காரணத்தினால் அவர்கள் கொள்கை ரீதியாக நல்ல முடிவுகளை எடுத்து செயல்படுவதாக இல்லை. ஏதோ நடந்து கொண்டிருப்பதை நடத்திக்கொண்டு இருப்பதைப்போல் நடத்திக் கொண்டிருக்கிறார்களே தவிர, அவர்களாக முன் முயற்சி எடுத்து, விவசாயிகளுக்கு நல்ல விலையிலே அவர்களது விளைபொருட்களை விற்பதற்கு நடவடிக்கை எடுப்பது இல்லை.

உதாரணமாக பட்டு விற்பனை. நம்முடைய மாநிலத்தில் மல்பெரி சாகுபடி இன்று மிகச் சிறப்பாக நடைபெற்று கொண்டிருக்கிறது. பட்டு விற்பனையானது கர்நாடக மாநிலத்திலே கொள்ளேகால், சாம்ராஜ்நகர் போன்ற பகுதிகளுக்குக் கொண்டு செல்கின்றபோது கொஞ்சம் அதிகமான விலை கிடைக்கின்றது. ஆனால் இங்கே நம்முடைய பட்டு விற்பனைக்கு ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தின் மூலமாக கோவையிலே விற்பனை நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. ஆனால் விவசாயிகளுக்கு உடனுக்குடன், பட்டு விற்ற உடனேயே பணம் பட்டுவாடா செய்யப்படுவதில்லை. வியாபாரிகளுக்குக் கடனிலே விற்றுவிடுகிறார்கள். அந்தக் கடன் பணம் ஒரு மாத காலமாகியும், அந்த விவசாயிகளுக்கு திரும்ப வருவதில்லை. அதைவிட மைசூர் மாநிலத்திலே விற்கின்ற விலையைவிட இங்கே குறைந்த விலைக்குத்தான் விற்கப்படுகிறது. இப்படி

யெல்லாம் விவசாயிகள் தங்களுடைய விளைபொருட்களை விற்பதற்கான இந்த ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் இன்று நல்லமுறையில் செயல்படாத நிலையில் இருந்துகொண்டிருக்கின்றன. அதற்கான தேர்தலை விரைவிலே வைக்கா விட்டாலும் கூட, ஒரு ஆலோசனை கமிட்டியாக, விவசாயிகளின் பிரதிநிதிகளைக் கொண்டு, அந்தப் பகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்டு, ஒரு ஆலோசனைக் கமிட்டியை யாவது போட்டு, அந்த ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்கள் விவசாயப் பெருமக்களுக்கு பயனுள்ளவையாக அமைய வேண்டி இந்த நடவடிக்கையினை அரசாங்கம் எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த வேளாண்மை விளைபொருள் திருத்தச் சட்டத்தில் பேசுவதற்கு எனக்கு வாய்ப்பளித்த தலைவருக்கு நன்றிகூறி, முடிக்கிறேன், நன்றி வணக்கம்.

பிற்பகல் 12-55

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1959 ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் சந்தைகள் சட்டத்தின்படி வேளாண் விளை பொருள்களின் விற்பனையை ஒழுங்குபடுத்தி விவசாயிகள் தங்கள் விளைபொருளுக்கு நல்ல விலை பெறுவதற்கென விற்பனைக் குழுக்கள் அமைக்கப்பட்டன. அந்த விற்பனைக் குழுக்கள் 270 ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்கள், 22 துணை விற்பனை கூடங்கள் என்ற முறையில் இன்றைய தினம் செயல்பட்டு வருகின்றன. சீரான எடை, பொருள்களின் தரத்திற்கேற்ற விலை, மறைமுக ஏலத்தின் மூலம் கூடுதல் விலை, விற்றபின், உடனே பணம், இடைத் தரகர் இல்லை, விவசாயிகளிடமிருந்து எந்தவித கட்டணமும் வசூலிக்கப்படுவதில்லை. விவசாயிகளுக்குச் செய்யும் பணிகள் அனைத்தும் இலவசம், தரம் பிரிப்பு மற்றும் பொருள்களை இருப்பு வைக்கும் வசதிகள், வெளிச்சந்தையில் நிலவும் அன்றாட விலையை அறிந்து கொள்ளுதல், என்ற பல்வேறு நோக்கங்களின் காரணமாக இந்த வேளாண் விளைபொருள் கூடங்கள் உருவாக்கப்பட்டன. இத்தனை சலுகைகளும் வேளாண் பெருங்குடி மக்களுக்கு ஒரே இடத்தில் கிடைக்கின்ற காரணத்தினால் வேளாண் பெருங்குடி மக்கள் தங்களுடைய விளை பொருள்களைக் கொண்டு வந்து அங்கே விற்பனை செய்து அதற்குரிய பலனைப் பெற்றுக்கொண்டு வந்திருக்கிறார்கள்.

அதைப்போல வியாபாரிகளுக்கும் வேண்டிய அளவு பொருள்களை ஒரே இடத்தில் வாங்குகின்ற வசதிகளை அவர்களுக்கும் இடைத் தரகர் இல்லாமல் நல்ல தரம் பிரிக்-





கப்பட்ட பொருள்களை வாங்குகின்ற வசதியையும் குறைந்த செலவில் பொருள்களை வாங்குகின்ற வசதியையும் அளிக்கப்பட்டு, அனைத்து ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களிலும் விலை விவரங்களை அவர்கள் அறிந்து கொள்ளக் கூடிய வகையிலே இந்த வேளாண் விற்பனைக் கூடங்கள் செயல்பட்டு வந்தன. இந்தக் கூடங்களுக்கு முறைப்படி தேர்தல் நடைபெற்று, தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்களால் இவை செயல்படுத்தப்பட்டு வந்தன.

ஆனால் கோவையிலே 1957-லே நடைபெற்ற தேர்தலிலே வெற்றி பெற்றவர்கள் அந்த வேளாண் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திலே பணியாற்றிக் கொண்டிருக்கிற போது அவர்களுக்குள்ளேயே ஒற்றுமை இல்லாத காரணத்தினால் அவர்களுக்குள்ளே ஏற்பட்ட சண்டையின் விளைவாக அந்த வேளாண் விற்பனைக் கூடம் நலிவுற்றது. நசுக்கப்பட்டது. எனவே நலிவுற்றிருக்கிற வேளாண் விற்பனைக் கூடங்களை சீர்படுத்துவதற்காக அன்றைய தினம் அரசு தனி அலுவலர்களை நியமித்து அவற்றினுடைய ஒழுங்கு முறையை சீர்படுத்தியது. அதற்குப் பின்னாலே படிப்படியாக அனைத்து வேளாண் கூடங்களும் தன்னுடைய செயல்திறனை இழந்துவிட்டதால் அத்தனை மையங்களுக்கும் தனி அலுவலர்கள் நியமிக்கப்பட்டிருந்தார்கள்.

கடைசியாக 1987-லே விற்பனைக் குழுக்களுக்கு என்று புதிய சட்டம் கொண்டு வரப்பட்டு, 1989-ல் அமல்படுத்தப்பட்டது. அதன்படி விற்பனைக் குழுக்களுக்கு உறுப்பினர்களை அரசு நியமனம் செய்து, அவர்களுக்குள் ஒருவரை தலைவராகவும் மற்றொருவரை துணைத் தலைவராகவும் தேர்வு செய்ய அந்தச் சட்டத்தில் வழிவகை செய்யப்பட்டது. அந்தச் சட்டத்திலுள்ள சில பிரிவுகளைச் செயல்படுத்துவதை எதிர்த்து வியாபாரிகளும் மற்றும் சில சங்கங்களும் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்குகள் தொடுத்து, இடைக்கால தடை ஆணை பெற்றார்கள். அந்த இடைக்கால தடை ஆணை பெற்றதன் விளைவாக அந்தப் புதியச் சட்டமும் அமல்படுத்தப்பட முடியவில்லை என்ற சூழ்நிலை உருவானது. எனவேதான் தனி அலுவலர்களுடைய பதவிக் காலத்தை நீட்டிக்க வேண்டிய அவசியம் இந்த அரசுக்கு ஏற்பட்டது. இடைக்கால தடை ஆணையை விரைவில் நீக்குவதற்கான நடவடிக்கைகளை அரசு சிறப்பு வழக்கறிஞர்கள் மூலம் எடுக்க ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறது. இந்தத் தடை ஆணையை நீக்குகின்ற காலம் வரையில் தனி அலுவலர்களுடைய பதவியை நீட்டிக்க வேண்டியது அவசியம் என்று இந்த அரசு கருதுகிறது. எனவேதான் 1992 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 27 ஆம் நாள் மேதகு ஆளுநரால் பிறப்பிக்கப்

பட்ட அவசரச் சட்டம் ஜனவரித் திங்கள் 28 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டது. இதன் விளைவாக 1–2–1992 முதல் 31–1–1993 வரை வேளாண் விற்பனைக் குழுவின் தனி அலுவலர் பதவிக் காலத்தை நீட்டிப்பது அவசியம் என்று கருதப்பட்டு, அரசால் இந்தத் திருத்த மசோதா கொண்டு வரப்பட்டிருக்கிறது. இந்தத் திருத்த சட்ட முன்வடிவின் மீது மாண்புமிகு உறுப்பினர்கள் கூறிய கருத்துக்களை இந்த அரசு கவனத்தோடு பரிசீலித்து விவசாயிகளுடைய விளைபொருள்களுக்கு நல்ல விலை கிடைப்பதற்கு ஆவன செய்யும் என்று இங்கே தங்கள் வாயிலாக நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போல, மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. சா. பழனிசாமி அவர்கள் சாமி பருத்தி என்று சில ஆசாமிகள் எல்லாம் அங்கே செய்வதாகச் சொன்னார்கள். அவர்களை நிச்சயமாக இந்த அரசு களைந்துவிடும் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போல திருப்பூரிலே சில கடைகளின் உரிமம் பெற்றவர்கள், லைசென்ஸ் பெற்றவர்கள், பின்னாலே அவர்கள் குத்தகைதாரர் என்று வைத்துக்கொண்டு அந்த இடத்தை ஆக்கிரமிப்பு செய்து கொண்டிருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். அதுபற்றிய நடவடிக்கை அரசினுடைய ஆய்விலே இருக்கிறது என்று சொல்லிக்கொண்டு, இந்தத் திருத்தச் சட்டமுன்வடிவை மாண்புமிகு உறுப்பினர்கள் நிறைவேற்றித்தர வேண்டுமென்று தங்கள் மூலமாக நான் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-00

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்.

திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் தனி அலுவலர்களுடைய காலத்தை 2 ஆண்டுகளுக்கு நீட்டிப்பது சரி என்று கூட நான் கருதுகிறேன். ஆனால் இந்த தனி அதிகாரிகளை நியமிக்கின்றோமே அவர்கள் சற்று விவசாயிகளிடம் அக்கறை உள்ளவர்களாக இருக்க வேண்டும். அந்த அக்கறையோடு இருந்தால்தான் அவ்வப்போது நெல்லுக்கு என்ன விலை மற்ற இதர உணவுப்பொருட்களுக்கு என்ன விலை என்று விலை உயரும்போது, அவற்றை விற்று விவசாயிகளுக்குப் பணம் கொடுக்கக் கூடிய ஆளாகவும் இருக்க முடியும். அது மட்டும் அல்லாமல் கோடவுனிலே சாமான்கள் வைக்கும்போது, அவர்களுக்கு முன் பணமாக—இப்போது நான் 50 மூடை வைக்கிறேன் என்றால் மேற்கொண்டு விவசாயம் செய்ய வழி இல்லாது இருக்கிறேன் என்றால்.... நான் ஒன்றும்





வைக்கவில்லை. எனக்கு விளைச்சலே இல்லை—ஆனால் அப்படி வைக்கக் கூடிய விவசாயிகளுக்கு பாதி பணமாவது முன்கூட்டியே.... கொடுத்து உதவக்கூடிய நிலையை உருவாக்குவதோடு மட்டுமல்லாமல், அந்தத் தனி அலுவலர்கள், போர்டு இருக்கும்போது எப்படி திறமையோடு நடக்கிறதோ அதைவிட திறமையான ஆட்களாக இருந்தால் அவர்களுக்கு உதவக் கூடியவர்களாக இருந்தால், அவர்களுக்கு பதவி உயர்வு கொடுப்பதிலே உண்மையிலே நான் பாராட்டுவதோடு அமைச்சர் அவர்களுடைய இந்த முயற்சிக்கு என்னுடைய முழு ஆதரவை கட்சி சார்பிலே அறிவிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எப்போதுமே மாண்புமிகு *பொன்னம்மாள் அவர்களுடைய கருத்து இந்த அரசுக்கு ஆதரவாக இருந்து கொண்டிருக்கிறது தனி அலுவலர்களாக நியமிக்கின்றவர்களெல்லாம் வேளாண்மைத் துறையிலே முதிர்ந்த அனுபவம் பெற்றவர்கள். எனவே தகுதியானவர்களைத்தான் நியமிக்கின்றோம். அதனைப் போல விவசாயிகள் தங்களுடைய பொருட்களை அந்த ஒழுங்குமுறை கூடத்திலே வைத்து அவர்களுக்கு வேண்டிய பணத்தை பெற்றுக் கொள்ளக் கூடிய வசதியையும் நாங்கள் செய்திருக்கிறோம். எனவே இந்தத் திருத்தச் சட்ட முன்வடிவை மாண்புமிகு உறுப்பினர்கள் ஆதரிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட ** சொற்கள் நீக்கப்படுகின்றன.

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க (ஆம்).
மறுப்போர் 'இல்லை' என்க (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

---

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

பிரிவுகள் 2 மற்றும் 3 திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3 சட்ட முன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன் வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

''1992 ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் வாணிப (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 6/1992) நிறைவேற்றப்பெற வேண்டும்'' எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.





(ஏ) வீட்டுவசதி வாரிய (திருத்தம் மற்றும் செல்லத்தக்க தாக்குதல்) சட்டமுன்வடிவு, 1992

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில வீட்டுவசதி வாரிய (திருத்தம் மற்றும் செல்லத்தக்கதாக்குதல்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 7/1992). மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்.

*மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

''1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில வீட்டு வசதி வாரிய (திருத்தம் மற்றும் செல்லத்தக்கதாக்குதல்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 7/1992)* ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்'' எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. ஜீ. பழனிசாமி.

திரு. ஜீ. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக நிலம் கையகப்படுத்துகிற இந்தச் சட்ட முன்வடிவின் மீது பேச முன் வருகிறேன். பொதுவாகவே அரசாங்கம் நிலத்தைக் கையகப்படுத்த வேண்டுமென்று சொன்னால் பல ஆண்டுக் காலங்கள் தேவைப்படுகிறது. அத்தோடு அரசாங்கம் நிலம் கையகப்படுத்துகின்றபோது அதற்கான செலவு களும் கூட, கூட ஆகிறது என்று குறிப்பிடப்படுகிறது. ஆனால் ஒரு தனி நபர் நஞ்சை நிலத்தை புஞ்சையாக்கி வீடு கட்ட வேண்டுமென்று சொன்னால் 2 மாதம் அல்லது 3 மாதத்திற்குள் அனுமதி பெற்று விடுகிறார்கள். ஆனால் அரசு அந்த நிலத்தைக் கையகப்படுத்த வேண்டுமென்று சொன்னால் 5 வருடம் 8 வருடம் என்று காலதாமதம் ஆகிறது.

பிற்பகல் 1-05

அரசாங்க நடவடிக்கை மூலமாக அதற்கு என்ன அடிப்படை காரணம் என்பதை வீட்டு வசதி வாரியம் பரிசீலிக்க வேண்டும். அதுமட்டுமல்ல. இன்றைக்குத் தனியார்கள் மாநகராட்சி, பேரூராட்சி இன்னும் சொல்லப்போனால் கிராமப் புறங்களிலே இருக்கக்கூடிய நிலங்களை, ஆயிரக்கணக்கான ஏக்கர்களைக் கையகப்படுத்தி, தனியாக விநியோகித்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனால், அரசாங்கம் நிலத்தைக் கையகப்படுத்த வேண்டுமென்று சொல்லும்போது சட்டரீதியாக கோர்ட்டுக்குச் சென்றுவிடுகிறார்கள். இதனால் நிலத்தைக் கையகப்படுத்த முடியாத ஒரு சூழ்நிலை ஏற்படுகிறது. வீட்டு

*7-2-1992 ஆம் நாளிட்ட அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

வசதி வாரியத்தின் மூலமாக நிலத்தைக் கையகப்படுத்துகின்ற போது, அரசாங்கம் ஆயிரக்கணக்கான ஏக்கர்களை தனியார் கையகப்படுத்தி விநியோகிக்கின்ற முறைக்கு ஒரு தடையாணையைக் கொண்டுவர வேண்டும். இல்லையென்று சொன்னால், அரசாங்கத்திற்குத் தேவைப்படக்கூடிய இடம் கூட அநேகமாகக் கிடைக்காத ஒரு சூழ்நிலை ஏற்படக்கூடும்.

அதுமட்டுமல்ல, அரசு மூலமாக வீட்டு வசதி வாரியம் மூலமாகக் கட்டப்படுகின்ற வீடுகள், கட்டிடங்கள், தரமானதாக அமையவில்லை. குறிப்பாக இடத்தை நன்கு ஆய்வு செய்வதில்லை. மண் பரிசோதனை கூட செய்வதில்லை. அதிகாரிகள் காட்டக்கூடிய அந்த இடங்களில் கட்டிடங்கள் கட்டுவதன் மூலமாக ஒரு வருடத்திற்குள்ளாக அந்தக் கட்டிடங்கள் விரிசல் அடைகின்றன. அதுமட்டுமல்ல. கட்டிடங்களின் ஒரு பகுதி அதிலே உடைந்து விழுகின்ற காட்சியைக் கூட எங்களால் காண முடிகிறது. குறிப்பாக நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்களுடைய விடுதியிலே கூட அதுபோன்றுதான் பகுதி பகுதியாக இன்றைக்கு விழுந்துவிடக்கூடிய நிலைமைகள் இருக்கின்றன. மண்ணை நன்றாகப் பரிசோதித்து, தரமான கான்ட்ராக்டர்களிடத்தில் கொடுத்து அந்தக் கட்டிடங்களைக் கட்டுவதற்கான முயற்சிகளை நம்முடைய அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும்.

அதுபோன்று, கான்ட்ராக்டர்களிடம் விடும்போது கூட மண்களைப் பரிசோதிக்க வேண்டும். அதுபோல தண்ணீரைக் கூடப் பரிசோதிக்க வேண்டும். அநேகமாக, மணல்கள் உப்பு மண்ணாகவும், உப்புத் தண்ணீர் கலப்பதன் மூலமாகவும் அந்தக் கட்டிடங்கள் படிப்படியாக விழக்கூடிய நிலைமைகள் இருக்கின்றன. இதை அரசு முழுமையாக பரிசோதனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

இன்றைக்கு மத்திய அரசின் மூலமாக 7,000 ரூபாய் கடனாக சாதாரண ஏழை எளிய மக்களுக்கு, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, கிராமப்புற மக்களுக்கு பணம் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. ஆனால், மாநில அரசால் வழங்கக் கூடிய ரூ. 1,500ஐக் கொடுத்தால் அந்தக் கடனைப் பெற்று அவர்கள் அநேகமாக வீடு கட்ட முடியும். ஓராண்டுக் காலமாக, மத்திய அரசு அனுமதி தந்து பணங்களை ஒதுக்கீடு செய்தும் கூட, மாநில அரசு 1,500 ரூபாய் பணம் ஒதுக்கீடு செய்யாத காரணத்தினால், கிராமப்புறங்களில் இருக்கின்ற ஏழை எளிய ஹரிஜன மக்கள் வீடு கட்டும் சங்கத்தின் மூலம் மனுவைப் போட்டும், அந்தக் கடன்களைப் பெற்று வீடு கட்ட முடியாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இதை அமைச்சர் அவர்கள் இந்தச் சட்டமுன்வடிவிலேயே பரிசீலித்து உடனடியாக அந்தப் பணங்களை வழங்க வேண்டுமென்று சொல்லி அமர்கிறேன்.





மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. டி. எம். ரங்கராஜன்.

பிற்பகல் 1–10

திரு. டி. எம். ரங்கராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மாநில வீட்டு வசதி வாரிய சட்ட முன்வடிவிலே பேசுவதற்கு அனுமதி அளித்தமைக்கு என்னுடைய நன்றியை முதற்கண் உங்களுக்குக் காணிக்கையாக்குகின்றேன். நம்முடைய ஒப்பற்ற தலைவியாம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஒரு "true democrat" ஏனென்று சொன்னால் democracy பற்றி சொல்கின்றபோது, "for the people, of the people and by the people என்று சொல்வார்கள். இங்கே மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நம்முடைய ஒப்பற்றத் தலைவியாம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் சென்ற பட்ஜெட் கூட்டத் தொடரிலே, தமிழக மக்களுடைய வீடு இல்லாத குறையைத் தீர்ப்பதற்காக 5 இலட்சம் வீடுகள் கட்டித் தரப்படும் என்ற வாக்குறுதியை அளித்தார்கள். ஆனால், அவர்கள் எந்த நல் எண்ணத்திலே, தமிழக மக்களுடைய நலனிலே அக்கறைக் கொண்டு அதைச் சொன்னார்களோ, அதற்கு ஒரு தடைக்கல்லாக உச்ச நீதிமன்றத்தினுடைய தீர்ப்பு வந்திருக்கிறது. Special Leave Petition 3790 of 1991-இல் உச்சநீதிமன்றம் தீர்ப்பு கொடுக்கின்றபோது இந்த வீட்டு வசதி வாரியத்திற்கு நிலங்களைக் கையகப்படுத்துகின்றபோது ஸ்கீம் இருந்தால்தான் கையகப்படுத்த முடியும் என்கின்ற நிலையிலே அவர்கள் ஒரு தீர்ப்பை வழங்கியிருக்கிறார்கள். ஆனால், இந்தத் தீர்ப்பை நாம் உள்ளே சென்று பார்ப்போமேயானால் அது தவறு என்று நமக்குப் புலப்படும். அதன் காரணமாகத்தான் இந்த சட்டமுன்வடிவு இன்றைக்கு அறிமுகப்படுத்தப்பட்டு இருக்கிறது. ஏன் என்று சொன்னால் 1961ஆம் ஆண்டில் உச்சநீதிமன்றம் ஒரு தீர்ப்பு வழங்கியது. அது 5 நீதி அரசர்கள் கொண்ட ஒரு தீர்ப்பு ஆகும். அந்தத் தீர்ப்பில் "பப்ளிக் பர்பஸ்" பற்றி அங்கே சொல்லப்பட்டிருக்கிறது. "பப்ளிக் பர்பஸ்" மக்களுக்காக, மக்களுடைய பொது நன்மைக்காக செய்யப்படுகிற எந்தக்காரியமும் பப்ளிக் பர்பஸ் என்று அங்கே கூறப்பட்டிருக்கிறது. இப்போது இந்தச் சட்டமானது தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்கு நிலத்தை ஆர்ஜிதம் செய்யப்படுகிற ஒரு சட்டமாக அமைந்திருக்கிறது. தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் என்பது ஒரு பிரைவேட் கம்பெனி, அதுவும் owned by the Tamil Nadu Government. ஆகவே, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்காக நிலத்தைக் கையகப்படுத்துவது நில ஆர்ஜிதச் சட்டம் 1894 சட்டத்தில் ஏழாவது சேப்டரில் வருகிறது. அந்த ஏழாவது சேப்டரிலே ஒரு கம்பெனிக்காக அரசு நிலத்தை ஆர்ஜிதம் செய்கின்றபோது

அரசு அந்த பப்ளிக் பர்பஸ் பற்றி தான் சேட்டிஸ்பை ஆனால் போதும் என்று சொல்லி உச்சநீதிமன்றம் தன்னுடைய தீர்ப்பில் கூறியிருக்கிறது. அந்த உச்சநீதி மன்றத்தினுடைய தீர்ப்பு AIR 1961 S.C. 151 151ஆவது பக்கத்திலே அது வெளியிடப்பட்டிருக்கிறது. ஆனால், அந்த 5 நீதிபதிகள் கொடுத்த அந்தத் தீர்ப்புக்கு எதிர்மாறாக இன்றைக்கு இருவர் கொண்ட ஒரு பென்ச் இந்த மாதிரி ஒரு தீர்ப்பு கொடுத்து இருக்கிறது. தமிழ்நாடு வீட்டுவசதி வாரியச் சட்டத்தில் இருக்கின்ற 70ஆவது பிரிவை நாம் பார்க்கின்ற போது இந்தத்தமிழ்நாடு வீட்டுவசதி வாரியச் சட்டத்தின்கீழ் உள்ள எந்த பர்ப்பஸ்க்கும் நிலத்தை ஆர்ஜிதம் செய்யுலாம் என்றுதான் இருக்கிறது.ஸ்கீம் செய்த பிறகுதான் நிலம் ஆர்ஜிதம் செய்யப்படவேண்டும் என்று அந்தசட்டத்திலே இல்லை. ஆனால், உச்சநீதிமன்றம் சொன்னதன் காரணமாக இந்தச் சட்டமுன் வடிவு கொண்டுவரப்பட்டு இருப்பது வரவேற்கத் தக்கது. ஏன் என்று சொன்னால், இந்தச் சட்ட முன்வடிவு கொண்டு வரா விட்டால் பல விளைவுகளை நாம் சந்திக்க வேண்டியிருக்கும். உதாரணமாக தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் ஆர்ஜிதம் செய்யப்பட்ட பல நிலங்களின் சொந்தக்காரர்கள் இன்றைக்கு மீண்டும் புத்துயிர் பெற்று அதனால் பாதிக்கப்பட்டவர்கள் எல் லாம் கோர்ட்டுக்குச் சென்று இந்த பப்ளிக் பர்ப்பஸை நம்முடைய அரசு நிறைவேற்ற முடியாமல் செய்கிற வாய்ப்பு இருக் கிறது. அதன் காரணமாகத்தான் இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதுவும் நம்முடைய மக்களுடைய நலத்தில் அக்கறை கொண்டுள்ள நம்முடைய தானைத் தலைவர், டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே 5 இலட்சம் வீடுகள் கட்டித் தரவேண்டுமென்ற குறிக்கோளுடைய நம்முடைய அரசினுடைய நோக்கத்தை நிறைவேற்றுகின்ற வகையில் இந்தச் சட்டம் கொண்டு வந்திருப்பதை வரவேற்கிறேன் என்று கூறி வாய்ப்பு அளித்தவர்களுக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்

<u>திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் :</u> மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியச் சட்டம் 1961க்கு இந்தத் திருத்தம் கொண்டுவரப்பட்டிருக் கிறது. நீதிமன்றம் அளித்த தீர்ப்பு அரசுக்கு எதிராக இருக்கு மானால் மேல் முறையீடு செய்ய வேண்டும். எனக்கு முன்னரல் பேசிய ஆளுங்கட்சி உறுப்பினர் அவர்கள் இது ஒரு டிவிஷன் பென்சினுடைய தீர்ப்பு; 2 நீதிபதிகள் அடங்கிய பென்சி னுடைய தீர்ப்பு. இதைவிட 5 நீதிபதிகள் அடங்கிய ஃபுல் பென்ஞ் அளித்த தீர்ப்பு நமக்கு சாதகமாக இருக்கிறது என்று தெரிவித் தார்கள். எனவே, மிகவும் சுலபம். நீதிமன்றத்தின் முன்பு நின்று இந்த ரெவியூ கேட்டு இந்தத் தீர்ப்பு சரியில்லாத தீர்ப்பு



என்று அவரிடத்திலே வாதாடி அதிலே முறையாக வெற்றி பெறுவது தான் சரியாக இருக்குமே தவிர, நீதிமன்றம் ஒரு தீர்ப்பு அளித்து இருக்கிறது. அந்தத் தீர்ப்பு செல்லத்தக்கது அல்ல என்று சட்டமன்றத்தின் முன்னால் வந்து சட்டத் திருத்தம் கொண்டுவருவது ஒரு நல்ல முறையாகாது. ஏன் என்று சொன்னால், நீதிமன்றத்தில் இது போன்று நாம் கொண்டு வரு கின்ற சட்டத் திருத்தங்கள் சிலநேரங்களில் நிற்காமல் போய் விடும். பல தீர்ப்புகளை என்னால் கூட சொல்ல முடியும்.

பிற்பகல் 1–15

But this may amount to passing a Judgement. அதுதான் கூடாது என்று சொல்கிறேன். இதற்கு சட்டத்திலே ஒரு தத்துவம் கூட இருக்கிறது. Bill of Attainder என்று சொல் லுவார்கள். Bill of Attainder என்று சொன்னால் நீதிமன்றம் ஒன்றை செல்லத்தக்கது அல்ல என்று சொல்லிவிடுகிறது; பிறகு, அந்த சிரமத்திலிருந்து மீள்வதற்காக சட்டத் திருத்தம், சட்டப் பேரவை வழியாகக் கொண்டு வருதல், அல்லது புதிய சட்டத்தைச் சட்டப் பேரவையிலே கொண்டு வந்தால், அதற்கு "Bill of Attainder"-ஐ நீங்கள் அப்ளை செய்வீர் களானால், அந்தச் சட்டத் திருத்தம் அல்லது சட்டம் செல்லாத தாகிவிடும். எனவே, இதுபோன்று செல்லாமல் போகக்கூடிய ஆபத்துக்கள் இருக்கின்றன. இப்போது சமீபத்திலே கூட்டுறவுச் சங்கங்களினுடைய திருத்தச் சட்டத்தை நாம் கொண்டு வந் தோம். அது நீதிமன்றத்திலே போய், செல்லாது என்கிற நிலைமை ஏற்பட்டது. அதுபோன்ற நிலைமைகள் வந்துவிடா மல் பார்த்துக் கொள்ள வேண்டிய கடமை அமைச்சர் அவர்களுக்கு உண்டு.

சமிபத்திலே மதுரையில், என்.எஸ் ஏ. தேசிய பாதுகாப்புச் சட்டத்திலே 5 பேரை சிறை பிடித்து வைத்தார்கள். அவர்கள் 5 பேர்களையும் இன்றைய தினம் நீதிமன்றம் விடுதலை செய்யும் படி உத்தரவிட்டிருக்கிறது. அதிலே, அந்த டிடென்சன் ஆர்டரிலே ஒரே ஒரு சொல் இல்லை, 'Not' என்கிற சொல் இல்லை. தேச நலனுக்கு எதிராகச் செயல்பட்டார்கள் என்று குறிப்பிடப்பட்டு இருக்க வேண்டும். ஆனால், படித்துப் பார்த்தால், தேச நல னுக்கு எதிராக என்கிற சொல், அங்கேயில்லாத காரணத்தாலே, அந்த 5 பேர்களும் இன்றைய தினம் விடுதலை செய்யப்பட்டு இருக்கிறார்கள். எனவே, இதுபோன்று சட்டத் திருத்தங்களைக் கொண்டு வருகிற நேரத்திலே, முழுவதுமாகப் பரிசீலித்து, நல்லவிதமாக திருத்தங்களை டிராப்ட் செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக with retrospective effect from 1961 என்று சொல்லியிருக்கிறீர்கள். எனவே, 30 ஆண்டுகளுக்கு முன்னாலே, 31 ஆண்டுகளுக்கு முன்னாலே, ரெட்ராஸ்பெக்டிவ் எபக்ட் கொடுக்கும் போது, எந்த அளவிற்கு நீதிமன்றத்திலே இந்தச் சட்டத் திருத்தம் செல்லுபடியாகும் என்பதை பரிசீலிக்க வேண்டும் என்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பொதுவாக நிலம் கையகப்படுத்துவது என்பது கடந்த காலங்களிலே பல ஊழல்கள் நடைபெற்று இருக்கின்றன. திட்டமில்லாமல் நிலங்களைக் கையகப்படுத்துவதாக அறிவிப்பதும், பிறகு, அந்த நிலச் சொந்தக்காரர்களிடம் பணத்தை வாங்கிக் கொண்டு விடுவிப்பதும் ஏராளமாக நடைபெற்று இருக்கின்றன. இது போன்ற தவறுகள் எல்லாம் நடைபெறாமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக, சென்னை, கோவை, ஈரோடு, மதுரை போன்ற இடங்களில் இத்தகைய புகார்கள் ஏராளமாக வந்திருக்கின்றன. மனைகளையும், வீடுகளையும் ஒதுக்குவதில் கூட சட்ட விரோதமாக ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு, தவறுகள் நடைபெற்றிருக்கின்றன. இதில், சம்பந்தப்பட்ட அமைச்சருக்கும், வீட்டு வசதி வாரியத் தலைவருக்கும் கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டு, மோதல்கள் நடைபெற்று இருக்கின்றன. பிறகு, அன்றையதினம் முதலமைச்சராக இருந்த, எம்.ஜி.ஆர். அவர்கள் உயர்மட்ட அதிகாரிகளைக் கொண்டு, விசாரணை செய்து, அந்த அமைச்சரை, அந்த இலாக்கா பொறுப்பிலிருந்து விடுவித்தார்கள் என்பதை நாம் எல்லோரும் அறிவோம். அதேபோல் அந்த வாரியத் தலைவருக்குப் பதவி நீட்டிப்புத் தரவில்லை. இந்த விவரங்களை எல்லாம் கொஞ்சம் அமைச்சர் அவர்கள் உள்ளே சென்று படிப்பார்களேயானால், அந்தக் கோப்புகளை எல்லாம் எடுத்துப் படிப்பார்களேயானால், மிகுந்த பயனுள்ளதாக இருக்கும்.

இந்தச் சட்டத் திருத்தத்தைப் பொறுத்த வரையில் எனக்கு இருக்கிற அச்சம், நீதிமன்றத்திலே இதுநிற்காமல் போய்விடுமோ என்று நான் அஞ்சுகிறேன். எனவே, இதைக் கவனித்து செய்து இருக்க வேண்டும் என்கிற கருத்தை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர்.

<u>திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி</u> : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், நேஷனல் செக்யூரிட்டி ஆக்டின்படி, கைது செய்யப்பட்ட சிலர் உயர்நீதிமன்றத்திலே விடுவிக்கப்பட்டு இருக்கிறார்கள், சில லாப்சஸ் இருக்கின்றன என்று சொன்னார்கள். அந்தத்



தீர்ப்பை அரசு ஆராய்ந்தது. இன்றைக்கு கலெக்டர்தான் அதற்கு உத்தரவு போடுகிறார்கள். அதிலே இரண்டு இருக்க வேண்டும். ஒன்று, டிடன்சன் ஆர்டர், இரண்டு, கிரவுன்ட் பார் டிடன்சன். அது இல்லாத காரணத்தாலேதான்—குற்றவாளி அல்ல என்று அல்ல—அதிலேயிருந்த லாப்சஸ் காரணமாக, அந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டது. இன்றைக்கு மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் அந்த சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அனைவருக்குமே, அவர்களை கைது செய்து சிறையிலே அடைக்கிற போதே, எதற்காக அவர்கள் கைது செய்யப்படுகிறார்கள் என்ற ஆர்டரும் போட வேண்டும் என்று சொல்லி இருக்கிறார்கள். (1) டிடன்சன், (2) கிரவுண்ட் பார் டிடன்சன் இல்லாத காரணத்தாலேதான், இந்தக் குறை காரணமாகத்தானே தவிர, குற்றவாளிகள் அல்ல என்ற நீதிமன்றம் சொல்லவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்.

<u>திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்</u> : தலைவர் அவர்களே, குற்றவாளிகள் அல்ல என்று சொல்லி, நீதிமன்றம் அவர்களை விடுதலை செய்தது என்று நான் சொல்லவில்லை. அதிலே, அந்த டிடன்சன் ஆர்டரும் சரி, டிடன்சன் ஆர்டரிலே எப்படி அவர்களை, எதற்காக குற்றவாளிகளாக வைக்கிறோம் என்று சொல்லப்பட்ட காரணத்திலே, ஒரே ஒரு சொல்தான் விடுபட்டுப் போய் இருக்கிறது. அதை மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் ஒப்புக் கொள்வார்கள் என்று கருதுகிறேன். ''Not'' என்கிற சொல் இல்லை, அதிலே 'Not' என்கிற சொல் இருந்து இருக்குமானால், நிச்சயமாக நீதிமன்றம் அதிலே தலையிட்டு இருக்காது. அதுபோன்ற தவறுகள் இதிலே வந்துவிடக்கூடாது என்பதற்காகத்தான் சொன்னேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்.

<u>மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி</u> : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில வீட்டு வசதி வாரிய (திருத்தம் மற்றும் செல்லத் தக்கதாக்குதல்) சட்ட முன்வடிவின் ஆய்விலே மாண்புமிகு உறுப்பினர்களும், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் கூறிய கருத்துக்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அவர்கள் கூறிய கருத்துக்களின் அடிப்படையிலே என்னுடைய விளக்கங்களை இந்த அவைக்குத் தெரிவிப்பது அவசியமான ஒன்றாக நான் கருதுகின்ற காரணத்தால், பல்வேறு காரணங்களை இந்தச் சட்டத் திருத்த முன்வடிவின் மீது கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. டி. எம். செல்வகணபதி] [1992 பிப்ரவரி 10 பிற்பகல் 1-20

இந்த அடிப்படையில்தான் இந்தச் சட்டத் திருத்த முன்வடிவே, உச்ச நீதிமன்றம் Special leave petition 3790 of 91-இன் தீர்ப்பின்படி, வீட்டு வசதி வாரியத்தினுடைய நில ஆர்ஜித நடவடிக்கைகள், வரைவுத் திட்டம் உருவாக்கப்பட்ட பின்புதான் நில ஆர்ஜித நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமென்று கூறப்பட்டு இருக்கின்றது.

அதுமட்டுமல்ல, இந்தத் தீர்ப்பு தற்பொழுது நீதிமன்றத்தில் நிலுவையில் இருக்கின்ற நில ஆர்ஜித நடவடிக்கை அனைத்துக்கும் பொருந்தும் என்றும் கூறப்பட்டிருக்கின்றது. இந்தத் தீர்ப்பை வைத்துப் பார்க்கின்றபொழுது, தற்பொழுது சுமார் 4,000 ஏக்கர் நிலங்கள் சம்பந்தப்பட்ட 1,800 ரிட் மனுக்கள் சென்னை உயர் நீதிமன்றத்திலே நிலுவையில் இருக்கின்றன. இதில் சம்பந்தப்பட்டுள்ள நில ஆர்ஜித நடவடிக்கைகள் பல்வேறு நிலையிலே இருந்து வருகின்றன. உச்ச நீதிமன்றத் தீர்ப்பின்படி, நிலுவையில் இருக்கின்ற அனைத்து வழக்குகளும் முறியடிக்கப்படக்கூடிய சூழ்நிலை இருக்கின்றது. இதன் அடிப்படையில் சில வழக்குகள் இந்த உச்ச நீதிமன்றத் தீர்ப்பின்படியும் முடிவும் செய்யப்பட்டு நில ஆர்ஜித நடவடிக்கைகளும் தள்ளுபடியும் செய்யப்பட்டு இருக்கின்றன.

வீடு கட்டும் வரைவுத் திட்டம் உருவாக்கப்பட்ட பின்பு நில ஆர்ஜித நடவடிக்கையை மேற்கொள்வது என்பது நடைமுறையில் சாத்தியமானதும் இல்லை; ஒத்து வரக் கூடியதும் இல்லாது இருக்கின்ற காரணமாகத்தான் இந்தச் சட்ட முன்வடிவு கொண்டு வரப்பட்டிருக்கின்றது.

அதேபோல் வீடுகள் கட்டப்படுவதற்கு வரைவுத் திட்டம் தயாரிக்கப்பட்டு — தயாரிப்பதற்கு நிலம் வீட்டு வசதி வாரியத்தினுடைய சுவாதீனத்தில் இருந்தாக வேண்டும். காரணம் என்னவென்று சொன்னால், வரைவுத் திட்டம் தயாரிப்பதற்கு முன்பாக நிலத்தினுடைய தன்மையையும், மண்ணினுடைய தன்மையையும் மற்றும் நீரினுடைய ஆதாரம் போன்ற ஏனைய நிலைகள் ஆய்வு செய்யப்பட வேண்டிய நிலையில் இருக்கின்றோம். அப்படி இவற்றையெல்லாம் ஆய்வு செய்ய வேண்டுமென்றால், நிலம் வீட்டு வசதி வாரியத்தினுடைய சுவாதீனத்திலே that is possession and enjoyment-லே இருக்க வேண்டுமென்பதுதான் அர்த்தம். அப்படி சுவாதீனத்தில் இல்லை என்று சொன்னால், வரைவுத் திட்டம், that is scheme உருவாக்குவதற்கு எந்தவிதமான சாத்தியக் கூறுகளும் இல்லை.



1992 பிப்ரவரி 10] [திரு. டி. எம். செல்வகணபதி]

அதுமட்டுமல்லாமல், வீடுகட்டுகின்ற வரைவுத் திட்டம், சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்திடமிருந்தும், Town and Country Planning இயக்குநரிடமிருந்தும் ஒப்புதல் பெற வேண்டுமென்ற சட்ட விதிமுறையும் இருக்கின்றது. அப்படி ஒப்புதல் பெறப்பட வேண்டுமென்றால், நிலத்தினுடைய சொந்தக்காரர் கையிலே, சுவாதீனத்திலே அந்த நிலம் இருக்க வேண்டும். அப்படி சுவாதீனத்திலே இருந்தால் தான் ஒப்புதலும் பெற முடியும். அந்தச் சூழ்நிலையில் திட்டநகல் நில உரிமையாளர் கையொப்பம் இட்டாகவேண்டும். சப்போஸ், ஒரு நில உரிமையாளர், வேறு ஒருவருக்கு உரிமை கொடுத்து இருக்கின்றார் என்றால், அந்த நில உரிமையாளர் கையொப்பம் இட்டாக வேண்டும். இப்படிப்பட்ட விதிமுறைகள் ஒரு திட்டம் உருவாவதற்கு, வீடு கட்டும் திட்டம் உருவாவதற்குத் தடைக்கல்லாக, பல ஆண்டுகள் காலதாமதம் ஏற்படுவதற்கும் சாத்தியக் கூறுகள் இருக்கின்றன. இப்படிப்பட்ட நிலை, திட்டத்தினுடைய செலவுத் தொகையும் பன்மடங்கு Cost of the scheme அதிகரித்து விடுகின்றது. எனவேதான், அரசு இந்தச் சட்டத் திருத்தம் கொண்டு வந்துள்ளது.

தமிழகத்தினுடைய ஒரே நம்பிக்கை நட்சத்திரம், மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், ஒரு குடும்பத்திற்கு ஒரு வீடு என்ற திட்டத்தை அறிவித்திருக்கின்றார்கள்.

அதுமட்டுமல்ல, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூடச் சொன்னார்கள். 5 இலட்சம் வீடுகள் கட்டி முடித்தாக வேண்டும். வருகின்ற 5 ஆண்டுகளுக்குள்ளாக 10 இலட்சம் வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட வேண்டுமென்று மாண்புமிகு முதல்வரவர்கள் உத்தரவு இட்டு இருக்கின்றார்கள். அப்படிப்பட்ட உன்னதத் திட்டம் நிறைவேற்றப்பட வேண்டுமென்றால், இந்த திருத்தச் சட்ட முன்வடிவு அவசியம் ஆகும்.

Even in the Constitution of India the right to private property is no more a fundamental right என்று தெளிவாகக் குறிப்பிடப்பட்டு இருக்கின்றது. The right to private property— தனியாருடைய சொத்து எந்தக் காலத்திலேயுமே அடிப்படை உரிமை ஆகாது என்று மாண்புமிகு முன்னாள் பாரதப் பிரதமர் இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் அந்தச் சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்தார்கள். அந்த அடிப்படையிலே, பொது நலனுக்காக, பொது சேவைக்காக, நில ஆர்ஜித நடவடிக்கை முடக்கப்படுவது ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றாகும். எனவேதான், இந்தச் சட்ட முன்வடிவு அவசியம் என்று மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி. பழனிசாமி அவர்கள் கூறுகின்ற பொழுது, நில ஆர்ஜிதம் காலதாமதம் ஏன் என்று கேட்டுள்ளார். நில ஆர்ஜிதம் செய்கின்றபொழுது, காலதாமதம் ஏற்படுவதன் காரணமாகத்தான், ஸ்கீம் ஒன்றை வரையறுத்து விட்டு, அதற்குப் பிறகு நில ஆர்ஜிதம்செய்ய வேண்டுமென்று உச்ச நீதிமன்றத்திலே தீர்ப்பு கூறுகின்ற காரணத்தினால் கால தாமதம் ஏற்படுகின்றது. அதைப் போக்குவதற்காகத்தான் இந்தத் திருத்தச் சட்டமுன்வடிவே.

பிற்பகல் 1-25

அது மட்டுமல்லாமல் நஞ்சைநிலத்தைப் புஞ்சை நிலமாக்கி 3 மாதங்களில் லே-அவுட் பெற்று விடுகிறார்கள். அரசிற்கு மட்டும் ஏன் தாமதம் ஏற்படுகிறது என்றும் கேட்டார். இப்படிப்பட்ட நிலைமை, நஞ்சை நிலத்தை புஞ்சை நிலமாக ஆக்குவதில் இல்லை. அரசினுடைய உத்தரவுகூட— ஆணை கூட — நஞ்சை நிலத்தை ஆர்ஜிதம் செய்ய வேண்டுமென்றால், நஞ்சை நிலத்திலே தனியார் லே-அவுட் போடப்பட வேண்டு மென்று சொன்னால், சம்பந்தப்பட்ட துறையினரிடமிருந்து 'நோ அப்ஜெக்ஷன் சர்டிபிகேட்' வாங்க வேண்டுமென்றுகூட இருக்கிறது. ஆனால், அப்படிப்பட்ட நிலைமை இதில் இல்லை. ஏதேனும் இருந்தால், எங்களுடைய கவனத்திற்குத் தெரிவிக்கப் பட்டால் நிச்சயமாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மேலும் ஸ்திரமான கட்டிடங்கள் கட்டப்படுவதில்லை என்று கூறினார். மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, இந்த 7 மாத காலங் களிலே, இந்தத் துறையைப் பொறுத்தவரை, தேர்ந்தெடுக்கப் படுகிற நிலங்கள் ஆகட்டும், அந்த நிலங்களின் மண்ணின் தன்மையைச் சோதனை மேற்கொண்டு, அதனுடைய நிலத்தடி நீரை ஆய்வு செய்து, முறையான காண்டிராக்டர்களுக்கும், முறையான ஒப்பந்தக்காரர்களுக்கும் அந்தக் கட்டிடக் கட்டு மானப் பணியினை விட்டு, அது செவ்வனே நடந்து கொண்டிருக் கிறது. அது மட்டுமல்ல, அவர் கூறுகிறபோது, கிராம வீட்டு வசதிக் கடனைப் பற்றிச் சொன்னார். இந்தத் திருத்தச்சட்ட முன்வடிவிற்கும், கிராம வீட்டுவசதிக் கடனிற்கும் சம்பந்தம் இல்லைதான். இருந்தாலும்கூட, அவர்களுடைய கோரிக்கையை நிச்சயமாக அரசு பரிசீலிக்கும் என்று தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்ல, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கூறுகிறபோது, இந்த உச்ச நீதி மன்றத்தினுடைய தீர்ப்பை எதிர்த்து, 'ரெவ்யூ பெடிஷன்' போட்டிருக்கலாம்



என்று ஒரு வாதத்தை எழுப்பிவைத்தார். என்னுடைய தாழ்மை யான வேண்டுகோள், 'ரெவ்யூ பெடிஷன்' என்பது, இந்தத் தீர்ப்புக்கு மேலாக, எந்த நீதிபதிகள் அந்தத் தீர்ப்பைக் கொடுத்தார்களோ, அவர்களே அதை மீண்டும் ஆய்வுக்கு எடுத் துக்கொள்ள வேண்டிய சூழ்நிலைதான் 'ரெவ்யூ'. அப்படி ஒரு வாய்ப்பு இருந்தபோதிலும்கூட, இந்த 'பர்டிகுலர்' தீர்ப் பிலே (in this particular Judgment) உச்சநீதி மன்றத்தின் தீர்ப்பு, கீழே நிலுவையில் இருக்கிற வழக்குகளுக் கெல்லாம் பொருந்தும் என்று கூறியிருக்கிற காரணத்தினால், அவசரமான, அவசியமான இந்தத் திருத்தச் சட்டமுன் வடிவு இங்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவேதான், இந்தக் கருத்துக்களை ஏற்றுக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> திரு. சி. ஞானசேகரன்.

<u>திரு. சி. ஞானசேகரன் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1972 ஆம் ஆண்டு 'அலாட்' செய்யப்பட்ட நிலங்களுக்குக்கூட இன்னும் (டெவலப்மென்ட் சார்ஜ்' என்று இன்னும் 'சேல் டீட்' கொடுக்காத வகையில் அரசு போட்டுக் கொண்டே போகிறது. அதற்கு உள்ள, தடையை நீக்கி, 'புரவிஷன்' கொடுக்கப்படுமா என்றும் எத்தனையோ சட்ட மன்ற உறுப்பினர்கள் வீடு இல்லாமல், வீட்டுமனை இல்லாமல் இருக்கிறார்கள். அவர்களுக்கு ஏதாவது வீட்டுமனை வழங்கு வதற்கு, அரசு........

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> இல்லை. இது திருத் தத்திலே வராது; சட்டமன்ற உறுப்பினர்களைப் பற்றியது. இந்தச் சட்டத்திருத்தத்திலே வராது. முதல் கேள்வியை மட்டும் கேளுங்கள்.

<u>திரு. சி. ஞானசேகரன் :</u> 'அமென்ட்மென்ட்' வேண்டு மென்றுதான்........

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> 'அமென்ட்மென்ட்' முன்னே மூவ் பண்ணியிருக்க வேண்டும். இப்போது 'அமென்ட் மென்ட்' வராது. கிளாரிபிகேஷன்தான்.

<u>மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே 'சேல்டீட்' கொடுக்கப் படாததுகூட, இந்த ஆய்விற்கு ஒத்துவராததுதான். இருந் தாலும், மாண்புமிகு உறுப்பினருடைய கேள்விக்குப் பதில் கூற அரசு கடமைப்பட்டிருக்கிறது. அது சம்பந்தமாக, ஒவ்வொரு சர்க்கிளிலும் அதாவது வீட்டுவசதி வாரிய சர்க்கிளிலும்

ஆணை பிறப்பிக்கப் பட்டிருக்கிறது. வழக்குகள் எந்தெந்த நீதிமன்றங்களில் நிலுவையில் இருக்கின்றனவோ, அவற்றையெல்லாம் குறிப்பிட்டு எடுத்து, வழக்குகள் முடிந்த நிலங்களுக்கெல்லாம் 'சேல் டீட்' கொடுக்கப்பட்டு, முறையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அரசு உத்தரவு அளித்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்.

<u>திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, I want one clarification from the Hon. Housing Minister, Sir. . . . பல்லாண்டு காலம், அதாவது 1980-வது ஆண்டிலிருந்து, நிலக்கோட்டைக்கு வீடுகள் எல்லாம் 'சாங்ஷன்' பண்ணியாகிவிட்டது. இதுவரைக்கும் யாரும் நிலம் கொடுப்பதற்குத் தடை இல்லை. நாங்கள் கொடுக்கிறோம் என்று எழுதிக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அங்கே கோயில் நிலம் இருக்கிறது; அங்கு விவசாயமே இல்லாமல் இருக்கிறது. அந்த நிலத்தைக்கூட எடுத்து வீடு கட்டலாம். ஆகவே, பலமுறை சொல்லிய இந்தத் திட்டத்தை, எப்படி சிறுமலையருவி திட்டத்தை நம்முடைய ஒப்பற்ற தலைவி. . . .

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> இது இந்த 'பில்'லிலே வராது. 'பில்'லிலே வருகிறமாதிரி, வேறு ஏதாவது கேளுங்கள்.

<u>திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்:</u> நில ஆர்ஜிதம் பற்றிதான் . . . . . . . .

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> நில ஆர்ஜிதம் தான். அது இந்த 'பில்'லில் வராது.

<u>திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :</u> இல்லை, அதை ஆக்கிரமித்து வீடு கட்டுவதற்கு. . . .

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> வீடு கட்டுவதற்குக்கூட நிறைய வீடுகட்டுவதற்கான திட்டங்கள் எல்லாம் இருக்கின்றன,

<u>திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :</u> நிலத்தை ஆர்ஜிதம் செய்து, வீடுகள் கட்டுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமா நிலக்கோட்டை தொகுதியிலே என்பதை அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> இவையெல்லாம் பொது விவாதத்திலேதான் வரவேண்டியவை. மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர்.



<u>மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு பகுதியிலே வீடு கட்ட வேண்டுமென்றால், அந்தப் பகுதியிலே முறையான 'டிமாண்ட்' இருக்க வேண்டும். 'டிமாண்ட்' இல்லையென்று சொன்னால் அங்கு வீடு கட்டுவதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை. . . .

பிற்பகல் 1-30

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> பேரவையின் முன் அனுமதியோடு பேரவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது. . . . (குறுக்கீடு) இவைகளைப் பொது விவாதத்தின்போது பேசலாம். இந்த பில்லில் வராது. நீங்கள் உட்காருங்கள். திரு. ஜி. பழனிசாமி.

<u>திரு. ஜி. பழனிசாமி :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்லுகிறபோது கூட, கோர்ட் தடை பற்றிச் சொன்னார்கள். அரசாங்கம் நிலத்தைக் கையகப்படுத்தும்போது, அதைத் தைரியமாகச் செய்யவேண்டும். சட்டம் கொண்டுவந்த பின்னர், கோர்ட் தடை செய்கிறது என்று காரணம் காட்டக்கூடாது. நிலத்தைக் கையகப்படுத்த தைரியமாகச் செய்யவேண்டும். (குறுக்கீடு) பண்ணித்தான் ஆகவேண்டும், அப்போதுதான் அரசாங்கத்தால் எடுத்துக் கொள்ளமுடியும். அரசாங்கத்தின் தயக்கத்தின் காரணமாகத் தான் இதுபோன்று நடக்கிறது. உரிய நடவடிக்கைகளை அரசாங்கத்தின் மூலமாக அமைச்சர் அவர்கள் தொடர்ந்து எடுக்க வேண்டும். அப்படிச் செய்தால்தான் நல்லதாக இருக்கும். நிலத்தைக் கையகப்படுத்துவது என்பது அரசாங்கத்தின் நடவடிக்கை. அதில் முனைப்பு காட்டவேண்டும். கொஞ்சம் கூட தயக்கமே இருக்கக்கூடாது. தயக்கம் இல்லாமல் செயல்பட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க .. (ஆம்)

மறுப்போர் ''இல்லை'' என்க .. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 8 வரை திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 8 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டுமென்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. .. (ஆம்)

மறுப்போர் ''இல்லை'' என்க. .. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன் வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. .. (ஆம்)

மறுப்போர் ''இல்லை'' என்க. .. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில வீட்டுவசதி வாரிய (திருத்தம் மற்றும் செல்லத்தக்கதாக்குதல்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 7/1992) நிறைவேற்றப்படவேண்டும்''

எனக்கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. .. (ஆம்)

மறுப்போர் ''இல்லை'' என்க. .. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.



7. விதி 110-ன்கீழ் கல்வி அமைச்சரின் அறிக்கை.

கிறித்துவ நிறுவனங்கள் நடத்தும் பள்ளிகளை 13ஆம் தேதி மூட வேண்டுமென சிலர் தெரிவித்துள்ளது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள், பேரவை விதி 110-ன் கீழ் ஒரு முக்கிய அறிவிப்பைப் பேரவைக்கு அளிக்க அனுமதி கோரியுள்ளார். அதற்கு அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு கல்வி அமைச்சர்.

மாண்புமிகு திரு. இராம வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருகின்ற 13-ந் தேதியன்று, தமிழ்நாட்டில் உள்ள கிருஸ்தவ சமுதாயத்தினர் நடத்தும் பள்ளிகளை மூட வேண்டும் என்றும் அன்றைக்கு அரசின் கவனத்தை ஈர்ப்பதற்காக ஊர்வலம் ஒன்று நடத்தவேண்டுமென்றும் மரியாதைக்குரிய மேதகு டாக்டர் எம். ஆரோக்கியசாமி அவர்களும் மற்றும் மோஸ்ட் ரெவேரெண்ட் டாக்டர் கசிமீர் ஞானாதிக்கம் அவர்களும் மற்றும் பல்வேறு பகுதிகளிலே இருக்கிற கிருஸ்துவ மதத் தலைவர்களும் வேண்டுகோள் விடுத்து இருப்பதாகத் தெரிகிறது. நம்முடைய சட்டமன்றத்திலே இருக்கிற மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் இதை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். இதை நான் ஏற்கெனவே செய்திகள் தெரிந்ததற்குப் பிறகு நேற்று காலையில் மதுரையில் மரியாதைக்குரிய மேதகு டாக்டர் எம். ஆரோக்கியசாமி அவர்களை நேரிலே சந்தித்து அவருடைய குறைகள் என்ன என்பதையெல்லாம் கேட்டபோது அவர்கள் கிருஸ்தவ சமுதாயத்தினர் நடத்துகிற பள்ளிகளுக்கு அனுமதிகள் வழங்குவதிலே தாமதம் ஏற்படுகிறது; ஆசிரியர் பணியிடங்களை நிரப்புவதிலே தாமதம் ஏற்படுகிறது; யாராவது ஓய்வு பெற்றுவிட்டால் அந்த இடத்தையும் நிரப்புவதற்கு முன் அனுமதி பெறவேண்டும் என்றெல்லாம் தெரிவிக்கிறார்கள் என்று இப்படிக் குறைகளைச் சொன்னார்கள். இதைப் போன்று ஒரு மாதத்திற்கு முன்பு சென்னையிலே உள்ள மோஸ்ட் ரெவெரெண்ட் டாக்டர் கசிமீர் ஞானாதிக்கம் அவர்களும் என்னை நேரிலேயே சந்தித்து இப்படிப்பட்ட சில குறைகளைச் சொன்னார்கள்.

பிற்பகல் 1-35

அவர்களிடத்தில் எந்தெந்தப் பள்ளிகளில் இப்போது ஆசிரியர் பணியிடங்கள் நிரப்பப்படாமல் இருக்கின்றன, அதற்கான புள்ளி விவரங்களைச் சேகரித்துத் தாருங்கள் ; வேறு என்ன குறைகள் என்பதையும் அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தால் விரைவில் அதைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்; ஆசிரியர்கள் பணியிடம் நிரப்புவது என்பது பொதுவாகவே

இன்றைக்குள்ள பொருளாதார நெருக்கடியில் ஆண்டுதோறும் 5,000, 6,000 ஆசிரியர்கள் தேவைப்படுகிற ஒரு சூழ்நிலையில் ஆயிரம் ஆசிரியர்களைத்தான் அரசு அனுமதித்துக்கொண்டிருக்கிறது; ஆகவே இந்தச் சூழ்நிலைகளை எல்லாம் மனதில் எண்ணி அரசு முடிவெடுத்து உங்களுக்குத் தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்று ஒரு மாதத்திற்கு முன்பு மோஸ்ட் ரெவரன்ட் டாக்டர் கசிமீர் ஞானாதிக்கம் அவர்களிடத்தில் தெரிவித்தேன்.

நேற்று மதுரையில்—டாக்டர் எம். ஆரோக்கியசாமி அவர்கள் தான் இப்போது தமிழ்நாட்டில் இருக்கிற கிறித்துவ மதத்தின் ஒரு பிரிவைச் சார்ந்த, பெரிய பிரிவைச் சார்ந்த அந்த மதத்திற்குத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர். இந்தக் குறைகளை எல்லாம் சொன்னதற்குப் பிறகு இதை அரசின் கவனத்திற்கு இதுவரையில் நீங்கள் கொண்டுவரவில்லையே என்று நான் கேட்டேன். இல்லை, நாங்கள் அதிகாரிகளைச் சந்தித்தோம் என்று சொன்னார்கள். அதிகாரிகள் மட்டத்தில் சந்தித்தால் அவர்கள் பரிசீலித்துதான் சொல்வார்கள்; நீங்கள் கல்வி அமைச்சரைச் சந்தித்து இருக்கலாம்; அல்லது வேறு முயற்சியிலே ஈடுபட்டு எங்களைச் சந்தித்துச் சொல்லியிருந்தால் உடனடியாகத் தீர்க்கிற பிரச்சினைகளைத் தீர்த்து வைத்திருப்போமே என்று சொன்னேன். அதற்கு, நான் முயற்சிக்கவில்லை என்று அவரே ஒப்புக்கொண்டார். இப்போது என்ன குறைகள் என்று கேட்டேன். நான் முன்னாலே சொன்ன குறைகளைத்தான் சொன்னார். நான் இருக்கிற சூழ்நிலைகளை எல்லாம் சொல்லி மிக விரைவில் இதற்குப் பரிகாரங்களை அரசு காணும் என்ற உறுதி அளித்தேன்.

இதற்கிடையில் முதலமைச்சர் அவர்களைச் சந்திக்க வேண்டும்; அது எங்களுடைய ஒரு குறை என்றார். நீங்கள் இதுவரையில் முயன்றீர்களா என்று கேட்டேன். இல்லை, சந்திக்க வேண்டும் என்றார். அப்படியானால் மாண்புமிகு முதல்வரோடு தொடர்புகொண்டு உங்களைச் சந்திப்பதற்கு ஏற்பாடு செய்கிறேன் என்று சொன்னேன். அதற்குப் பிறகு இந்த 13ஆம் தேதி இப்படி ஒரு வேலை நிறுத்தம் போல் பள்ளிகளை எல்லாம் அன்றைக்கு அடைக்க வேண்டுமென்று தெரிவித்திருப்பதாகத் தெரிகிறதே என்றேன். நாங்கள் ஏற்கெனவே அறிவித்தாகி விட்டது; அது நடைபெறும் என்று சொன்னார். இது தேவையில்லாத ஒன்று என்று சொன்னதற்குப் பிறகு—இன்னொன்று, நான் மதுரையில் சென்றபோது சுவரொட்டிகள் எல்லாம் ஒட்டி அரசாங்கத்தைக் கண்டித்து இருந்தார்கள். அதற்கு என்ன காரணம் என்றால் நான் நான்கு நாட்களுக்கு முன்பு பேரவையிலே அளித்த விளக்கத்திற்குரிய நிகழ்ச்சி: கன்னியாகுமரி மாவட்டத்திலேயும் வேறு சில பகுதிகளிலேயும் 15 ஆண்டுக் காலமாக அனுமதி பெறாமல் இந்த மைனாரிட்டி பள்ளிகளில் நியமனம் செய்யப்பெற்ற ஆசிரியர்களுடைய சம்பளப் பிரச்சினை. அப்படி 15 ஆண்டுக்காலம் இருக்கிற பிரச்சினைக்கு மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் கடந்த





சட்டமன்றத் தொடரிலேயே உடனடியாக அதற்குப் பரிகாரம் கண்டு 1—6—1991 முதல் அவர்களுக்குச் சம்பளம் வழங்கலாம் என்று அறிவிக்கச் சொன்னார்கள். கொள்கை முடிவை அறிவித்து விட்டோம். அதன் தொடர்பாக நிதித்துறையோடு கலந்து பேசி அவர்கள் சுமார் 2,000 ஆசிரியர்கள் இருப்பதாகக் கணக்குத் தருகிறார்கள். நம்முடைய கணக்குப்படி சுமார் 600-க்கு மேற் பட்ட ஆசிரியர்கள் வருகிறார்கள். அவர்கள் 300-க்கு மேற்பட்ட கல்வி நிறுவனங்களிலே பணியாற்றுகிறார்கள். அவர்களுக்கு சுமார் 2 கோடியே 58 இலட்சம் ரூபாய் கொடுக்கலாம் என்று இப்போது நிதித்துறை ஒப்புக்கொண்டு, அது நிதியமைச்சருடைய ஒப்புதலுக்கும் மாண்புமிகு முதல்வருடைய ஒப்புதலுக்கும் அனுப்பப்பட்டு இருக்கிறது. விரைவில் அரசாணை பெறப்பட்டு அது அறிவிக்கப்படும் என்றும் இந்தச் சட்டமன்றத்திலேயே அறிவித்திருக்கிறோம். அதையும் நேற்று மேதகு டாக்டர் எம். ஆரோக்கியசாமி அவர்களிடத்திலே நேரிலே தெரிவித்தேன்.

பிற்பகல் 1-40

அதைப்போல் கிறிஸ்தவக் கல்லூரியினுடைய அந்த விவகாரங் களை எல்லாம் அவரிடத்திலே எடுத்துச் சொன்னபோது அந்தக் கல்லூரிக்கும் எங்களுக்கும் தொடர்பு இல்லை என்று அவர்கள் தெளிவாகவே தெரிவித்தார்கள். ஆகவே இவ்வளவு சூழ்நிலை களுக்கு இடையில் கிறிஸ்தவ சமுதாயத்தைப் பற்றிய, ஒரு சிறு பான்மைச் சமுதாயம் பற்றிய பிரச்சினையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், அரசும் இவ்வளவு அக்கறை செலுத்து கிற ஒரு சூழ்நிலையில் 15 ஆண்டுக்காலம் தீர்க்கப்படாமல் இருந்த ஒரு பிரச்சினையை இவ்வளவு நிதி நெருக்கடிக்கு இடையில் சுமார் 2 1/2 கோடி ரூபாய்க்கு மேல் உடனடியாகக் கொடுங்கள் என்று உத்தரவிட்ட இந்த முதலமைச்சரை நீங்கள் நம்பாமல் வேறு யாரை நம்பப் போகிறீர்கள் என்று கூட நான் கேட்டேன். இல்லை, இல்லை, இனிமேல் நாங்கள் நேரிலே சந்தித்து, கோரிக் கைகளைத் தருகிறோம் என்றார்கள். அப்படியானால் இந்த 13ஆம் தேதி இந்த முயற்சி தேவையில்லையே என்று சொன்னேன். இல்லை, அறிவித்தாகிவிட்டது என்று சொன்னார்கள்.

இப்போது நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்களிலே கிருத்துவ சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் மிகுந்த வருத்தத்தோடு ஒன்றைத் தெரிவித்தார்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையின் மூலமும், தமிழக அரசின் சார்பிலும், குறிப்பாக சிறுபான்மை இனத்தவருக்காக எந்தவிதமான முயற்சிகளுக்கும், எந்தவிதமான ஆதரவுகளுக்கும், எந்தவிதமான நன்மைகளுக் கும் காரணமாக உதவிக் கரத்தை நீட்டுகிற மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் சார்பிலும் அருள்கூர்ந்து, இந்த 13-ம் தேதி பள்ளிகளை மூடுவது அல்லது ஊர்வலத்தை நடத்துவது என்ற தேவையில்லாத ஒரு பிரச்சினையை நடத்த வேண்டாம் என்று நான் வணக்கத்திற்குரிய, மேதகு டாக்டர் எம். ஆரோக்கிய

[திரு. இராம வீரப்பன்] [1992 பிப்ரவரி 10

சாமி அவர்களையும் மற்றும் அதே போன்ற பொறுப்பிலே இருக்கின்ற பேராயர்கள் அனைவரையும் அதற்குப் பிறகு நேற்று பிற்பகல் 2 மணிக்கு திண்டுக்கல்லிலே, 3 ஃபாதர்ஸ், அந்த 3 குருமார்களையும் சந்தித்து அவர்கள் குறையையும் கேட்டு பேசி விட்டுத்தான் 3 மணிக்கு மேல் நான் ஈரோட்டுக்கே புறப்பட்டேன். ஆகவே அரசை, அமைச்சர்களைச் சந்திக்காமல், தங்களுடைய கோரிக்கை, குறை என்ன என்பதைத் தெரிவிக்காமல், 15 ஆண்டு காலம் தீர்க்கப்படாமல் இருந்த ஒரு பிரச்சினையைத் தீர்த்து வைத்திருக்கிற, 2 1/2 கோடி ரூபாய்க்கு மேல் உடனே வழங்குங்கள் என்று ஆணையிட்டிருக்கிற முதலமைச்சருக்கு ஆதரவு தருகின்ற வகையில் அவருடைய கரத்தைப் பலப்படுத்துகின்ற வகையில் நம்முடைய மரியாதைக்கும் வணக்கத்திற்கும் உரிய பேராயர் டாக்டர் எம். ஆரோக்கியசாமி அவர்களும், மற்றும் தி மோஸ்ட் ரெவரண்ட் டாக்டர் கசிமீர் ஞானாதிக்கம் அவர்களும் மற்றும் இதுபோன்ற கிருத்துவக் தலைவர்களும், இந்த 13 ஆம் தேதி பள்ளியை அடைப்பது, ஊர்வலத்தை நடத்துவது என்ற அந்த முயற்சியைக் கைவிடவேண்டுமென்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: Under Rule 110 Sub Rule (2) "There shall be no debate on such statement at the time it is made" ஆகவே டாக்டர் பியாட்ரிக்ஸ் டி. சோசா அவர்கள் இதன் மீது வேறு விளக்கம் எதுவும் தெரிவிக்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

## 8. அரசினர் தீர்மானம்.

### பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்தி வைக்கப் பெறுதல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம், மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பேரவையின் 25 (1)-வது விதியின்படி பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்படாமல் ஒத்தி வைக்கப் பெறலாம்"

என்ற தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.



1992 பிப்ரவரி 10] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை. தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

பேரவையின் அலுவல்கள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்படாமல் ஒத்திவைக்கப்படுகிறது. வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 1–43 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

## 9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### (அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

70. தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகத்தின் 1988–89 ஆம் ஆண்டிற்கான பதினாறாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

71. தமிழ்நாடு சரிகை லிமிடெட்டின் 1990–91 ஆம் ஆண்டிற்கான பத்தொன்பதாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

72. தமிழ்நாடு அரசின் 1988–89 ஆம் ஆண்டிற்கான நிதி நிலைக் கணக்குகள். [இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 151 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது] (ஆங்கிலம்).

73. தமிழ்நாடு அரசின் 1988–89 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கக் கணக்குகள். [இந்திய அரசமைப்புச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 151 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது] (ஆங்கிலம்).

74. தமிழ்நாடு ஜி.டி. நாயுடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் 1990–91 ஆம் ஆண்டிற்கான இருபதாவது ஆண்டறிக்கை. [தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு வேளாண்மைப் பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 8/1971), 49 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது] (தமிழ்).

75. அண்ணா போக்குவரத்துக் கழகத்தின் 1990–91 ஆம் ஆண்டிற்கான பத்தொன்பதாவது ஆண்டறிக்கை. [1956 ஆம்

[1992 பிப்ரவரி 10

ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

76. பல்லவன் போக்குவரத்துக் கழகத்தின் 1990–91 ஆம் ஆண்டிற்கான பத்தொன்பதாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது] (தமிழ் ஆங்கிலம்).

77. தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனத்தின் 1990–91 ஆம் ஆண்டிற்கான பதினாறாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

78. மருது பாண்டியர் போக்குவரத்துக் கழகத்தின் 1990–91 ஆம் ஆண்டிற்கான ஒன்பதாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

79. தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகத்தின் 1989–90 ஆம் ஆண்டிற்கான இருபத்தைந்தாவது நிர்வாகக் குழு அறிக்கையும், கணக்குகளும், [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது] (தமிழ்).

80. பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்தின் 1990–91 ஆம் ஆண்டிற்கான பதினேழாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

81. தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின் 1987–88 ஆம் ஆண்டிற்கான பதினான்காவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

82. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1987–88 ஆம் ஆண்டிற்கான நிர்வாக அறிக்கை. [1948 ஆம் ஆண்டு மின்சக்தி (வழங்கல்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 54/1948) 75 (1) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

83. தமிழ்நாடு அரசு கட்டுமானக் கழகத்தின் 1989–90 ஆம் [illegible] ஆண்டறிக்கை. [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/



1992 பிப்ரவரி 10]

1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

## ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

35. பொதுக் கணக்குக் குழுவின் முப்பதாவது அறிக்கை 1991–92.

36. பொதுக் கணக்குக் குழுவின் முப்பத்தொன்றாவது அறிக்கை, 1991–92.

37. பொதுக் கணக்குக் குழுவின் முப்பத்திரெண்டாவது அறிக்கை, 1991–92.

38. பொதுக் கணக்குக் குழுவின் முப்பத்தி மூன்றாவது அறிக்கை, 1991–92.

39. பொது நிறுவனங்கள் குழுவின் இருபத்தொன்பதாவது அறிக்கை, 1991–92.

40. பொது நிறுவனங்கள் குழுவின் முப்பதாவது அறிக்கை, 1991–92.

41. பொது நிறுவனங்கள் குழுவின் முப்பத்தொன்றாவது அறிக்கை, 1991–92.

42. பொது நிறுவனங்கள் குழுவின் முப்பத்திரெண்டாவது அறிக்கை, 1991–92.

43. பொது நிறுவனங்கள் குழுவின் முப்பத்திமூன்றாவது அறிக்கை, 1991–92.

44. பொது நிறுவனங்கள் குழுவின் முப்பத்திநான்காவது அறிக்கை, 1991–92.

45. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் (மூன்றாவது பட்டியல்) (வரிசை எண் 1 முதல் 50 வரை.)

46. உடுக்குறியிடாத வினாக்கள்—விடைகள் (நான்காவது பட்டியல்) (வரிசை எண் 1 முதல் 50 வரை.)

47. உடுக்குறியிடாத வினாக்கள் விடைகள் (ஐந்தாவது பட்டியல்) (வரிசை எண் 1 முதல் 50 வரை.)

48. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் (ஆறாவது பட்டியல்) (வரிசை எண் 1 முதல் 50 வரை.)

49. கீழ்க்காணப் பெறும் சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் அளித்துள்ள எழுத்து மூலமான சொத்து விவரங்கள் (தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை 27-8-1969 ஆம் தேதியன்று ஏற்பளித்த தீர்மானத்தின்படி பேரவையில் வைக்கப் பெற்றது.)

31-3-1991 அன்று உள்ளவாறு அளித்துள்ளவர்கள்

1. திரு. ஆ. செல்லத்துரை.
2. திரு. கே. ஆர். ராஜு.
3. திரு. சி. ஞானசேகரன்.
4. திரு. எஸ். அண்ணாமலை.
5. திரு. என். ஜி. வேணுகோபால்.
6. திரு. கே. ஏ. மனோகரன்.
7. டாக்டர் ஜெய்சன் ஜேக்கப்.
8. திரு. ப. கலியபெருமாள்.
9. திரு. தா. செழியன்.
10. திருமதி கே. எம். கலைச்செல்வி.
11. திரு. ஏ. ரவிக்குமார்.
12. திரு. கே. பாலசுப்பிரமணியன்.
13. டாக்டர் வெ. புருஷோத்தமன்.
14. திரு. எ. ஏகாம்பர ரெட்டி.
15. திரு. எஸ். எம். துரை.
16. திரு. ஆர். சிங்காரம்.
17. திருமதி மரியமுல் ஆசியா.
18. டாக்டர் ஜெ. பரந்தாமன்.
19. திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்.
20. திருமதி கவிநிலவு தர்மராஜ்.
21. திரு. எச். எம். ராஜு.
22. திரு. வே. கோபாலகிருஷ்ணன்.
23. திரு. எஸ். ஆர். ஜெயராமன்.
24. திரு. கே. ஆர். முருகானந்தம்.
25. திரு. வ. மு. சுப்பிரமணியன்.

சென்னை-600 009.
16233